உ

சிவமயம்

~பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம்~

THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

ESTD 01.03.98



சுந்தரர்



இசைஞானியார்

# பெரிய புராணமும்
# சைவ வாழ்வியலும்



நம்பியாண்டார்நம்பி



மங்கையர்க்கரசியார்



சேக்கிழார்



காரைக்கால் அம்மையார்

# பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
# THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

# 16வது மாநாடு

April 18th & 19th 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

# 16வது சைவ மாநாடு




## SIXTEENTH SAIVA CONFERENCE
## "பெரிய புராணமும் சைவ வாழ்வியலும்"

**Day 1**

**Saturday 18th April 2015**

**at 9.00 am to 8.00 pm**

Woodbridge High School

St. Barnabas Road

Woodford Green

IG8 7DQ

**Day 2**

**Sunday 19th April 2015**

**at 9.00 am to 8.00 pm**

Alperton Community School

Ealing Road,

Wembley, Middx

HA0 4JE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Affiliated Temples

**SHREE GHANAPATHY TEMPLE**
125-133, Effra Road
Wimbledon,
London SW19 8PU
**Tel : 020 8542 7482**

**Opening Times:**
Mon-Thu & Sat – Sun 9.00 am to 10.00 pm Friday
9.00 am to 11.00 pm
**Pooja Times:**
10.00, 12.00, 5.00, 8.00

---

**SRI KANAGA THURKKAI AMMAN TEMPLE**
5, Chapel Road,
West Ealing
London W13 9AE
**Tel : 020 8810 0835**

**Opening Times:**
Mon, Wed & Thu
8.00 to 3.00 & 5.00 to 10.00
Tue & Fri
8.00 to 4.00 & 5.00 to 10.30
Pooja Times
8.00, 12.00, 5.00, 8.00

---

**CRAWLEY AMMAN TEMPLE**
Unit 1B Stephensonway Three
Bridges Crawley
West-Sussex RH10 1TN
**Tel : 01293 619 918**

காலை 10.00 மணி முதல்
1.00 மணி வரை
பகல் பூசை 12.00 மணி
மாலை 6.30 மணி
முதல் 9.00 மணி வரை
இரவு பூசை 8.00 மணி



**SRI SIVAKAMI SAMETHA SITHAMBARESWARAR TEMPLE SAIVA MUNNETTA SANGAM**
2 Salisbury Road
Manor Park, E12 6AB
**Tel : 0208 514 4732**

---

**LONDON SIVAN KOVIL**
4A, Clarendon Rise
Lewisham, London SE13 5ES
**Tel : 020 8318 9844**
**Opening Times:**
Mon to Thurs
8.00 am to 2.30 pm
5.30 pm to 9.00 pm
Fri, Sat & Sun:
8.00 am – 9.00 pm
**Pooja Times:**
8.00 am, 10.00 am, 12.00noon, 5.30pm, 7.30pm, 9.00pm

---

**SHRI SITHI VINAYAGAR THEVASTHANAM**
Charisma Building
59B, Rear of Station Road
Harrow Middx
HA1 2TY
**Tel: 020 8427 5428**

**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
200A, Archway Road
London N6 BA
**Tel : 020 8348 9835**
**Opening Times:**
**Mon-Thu**
8.00 to 2.00 & 5.00 to 9.00
**Fri:**
8.00 to 3.00 &
5.00 to 10.00
**Sat & Sun:**
8.00 to 3.00 &
5.00 to 9.00
**Pooja Times:**
8.00, 11.30, 5.00, 8.00

---

**SRI RAJARAJESWARY AMMAN TEMPLE**
Dell Lane, Stoneleigh
Surrey KT17 2NE
Tel : 020 8393 8147
**Opening Times :**
Mon – Frid 8.30 to 2.00 pm
& 5.30 to 9.30 pm
W/Ends : 8.30 to 9.30 pm
**Pooja Times**
8.30, 12.00, 8.00

---

**SRI KARPAHA VINAYAGAR TEMPLE**
2-4 Bedford Road
WALTHAMSTOW
LONDON E17 4PX
Pooja Times:
9.00 am, 12.00 noon 7.30 pm
**Tel : 020 8527 3819**

---

**SRI SELVA VINAYAGAR TEMPLE**
299- 303 Ley Street,
Ilford
Essex IG1 4BN
**Tel: 0208 911 8934**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Eela Patheeswarar Temple
Pavit hall, Union Road, Off Ealing Road, Alberton,
Middlesex HA0 4AU
**Tel: 0208 902 3238**

## New Malden Murugan Temple
255 Burlington Road, New Malden, Surrey KT 3 4NE
**Tel: 0208 942 4475**

## Sri Merupuram Maha Pathiragali Amman Devasthanam
271 Forest Road, Walthamstow, London E17 4PX
**Tel: 0208 531 0872**

## Coventry Shree Maha Sithi Vinayagar
65 A George Elliot Road, Coventry CV14HT
**Tel: +44 (0) 2476 632211 | Eamil: info@sidhivinayagar.org.uk | www.sidhivinyagar.org.uk**

## London Sree Ayyappan Temple
36 Masons Avenue Harrow, Middlesex HA3 5AR
**Tel: 020 8861 5825**

## Eela Kanthan Temple
2 Lythalls Lane, Coventry CV6 6FC
**Tel: 02476663554 | Email: eellakanthan2@gmail.com**

## Liverpool Ganesh Temple
Delfby Crescent kirkby, Liverpool L32 8TN
**Tel: 0151 546 7611**

## Sri Thurkkai Amman Temple
10 A West Crescent Beeston
Nottinghamshire NG9 1QE
**Tel – 0115 967 7751 Email: beeamman@gmail.com Web - www.nottinghamamman.org**

## Shri Meenatchi Temple
Abercromby Avenue, High Wycombe, Bucks HP12 3BW

## Sri Kalpaga Vinayahar Temple
43 Addision Road, Port Talbot, SA12 6HZ
**Tel: 016397 798 72 / 07870 831 417**
Web:www.kalpaganesh.co.uk / Email:info@kalpaganesh.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K
200A Archway Road, London N6 5BA, Tel: 020 8348 9835 | Fax: 020 8482 6508
Web: www.sivafedaration-uk.org | Email: admin@saivafedaration-uk.org
Correspondence: 2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 0208 527 3819

**Chairman**
Mr. M. Gopalakrishnan
**Secretary**
Mr. T.Selvaratnam
**Treasurer:**
Mr. K. Nagarajah
**Vice Chairman**
Mr.S. Ramachandran
**Asst. Secretary**
Mr. K.V. Kanesamoorthy
**Asst.Treasurer:**
Mr. R. Kunasingam
**Committee**
Mr.S.Selvarajah, Mr.D. Rabindramohan
Dr. S. Maheswaran, Mr. K. Baskeran
Mr. M. Perinpanathan, Dr. T.G.V. Sritharan
Dr. T. Sriskandarajah, Mr. M. Mohanadas
Mr. E. Suntharalingam, Mrs. R. Surenthiran
Mr.S.Anandathiyagar

**AFFILIATED TEMPLES**

**SRI GHANAPATHY TEMPLE**
LONDON SW19 8PU.
**SRI KANAGA DURKA AMMAN KOVIL**
LONDON W13 9AE.
**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
LONDON N65BA.
**SRI RAJARAJESWARI AMMAN TEMPLE**
SURREY, KT17 2NE.
**LONDON SIVAN KOVIL**
LONDON SE13 5ES.
**CRAWLEY SRI SWARNA KAMADCHI AMMAN TEMPLE**
WEST SUSSEX, RH10 1TN.
**SRI KATPATGA VINAYAGAR TEMPLE**
LONDON E17 4PX.
**ARULMIGU SRI SIVAGAMI SAMETHA**
LONDON E12 6AB.
**LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE**
ILFORD IG1 4BN.
**SRI SITHI VINAYAGAR THEVASTHANAM**
MIDDLEX HA1 2TY.
**SHREE SAKTHY GHANAPATHY TEMPLE**
Surrey CR 7 7JJ.
**EELA PATHEESWARAR TEMPLE**
Middlesex HA0 4AU.
**NEW MALDEN MURUGAN TEMPLE**
Surrey KT 3 4NE.
**SRI MERUPURAM MAHA PATHIRAGALI AMMAN DEVASTHANAM**
London E17 4PX
**COVENTRY SHREE MAHA SITHI VINAYAGAR,** Coventry CV14H1
**LONDON SREE AYYAPPAN TEMPLE**
Middlesex HA3 5AR
**EELA KANTHAN TEMPLE**
Coventry CV6 6FC
**Liverpool Ganesh Temple**
Liverpool L32 8TN
**Sri Thurkkai Amman Temple**
Nottinghamshire NG9 1QE
**MEENAKSHI TEMPLE**
Bucks HP12 3BW
**SRI KATPAGA VINAYAHAR TEMPLE**
Port Talbot SA126HZ

# பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றிய 16வது மாநாடு

சைவமும் தமிழும் உலகம் முழுவதும் பரந்து சிறந்து விளங்குகிறது. குறிப்பாக இங்கிலாந்து நாட்டில் பல ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. பிள்ளையார், சிவன், முருகன், துர்க்கை, ராஜேஸ்வரி, முத்துமாரி, காமாட்சி, மகாலட்சுமி, ஐயப்பன், ஆஞ்சநேயர் என்று பல ஆலயங்கள் லண்டனிலும் லண்டனுக்கு அப்பால் பல ஊர்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு நித்ய நைமித்திய பூஜைகள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மக்களும் விரதங்கள் நேர்த்திகள் என்று பல வழிபாட்டை ஆலயங்களில் மிக விருப்புடன் செய்து வருகின்றனர். அத்துடன் பொங்கல், வருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, கேதார கௌரிபூஜை, தீபாவளி, கார்த்திகை தீபம், திருவெம்பாவை போன்ற பொது வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

அநேகமான ஆலயங்கள் வழிபாடுகளை பிரித்தானிய நாட்டிற்கென கணிக்கப்பட்ட திருக்கணித வாக்கிய பஞ்சாங்க முறைக்கேற்ப நிகழ்த்தி வருகின்றன. நமது தாய்நாட்டு அல்லது இந்திய பஞ்சாங்கங்கள் அப்படியே நாம் இங்கு பாவிப்பது பொருந்தாத விடயம் என்பது பொது அறிவாகும். தாய் நாடுகளில் நடக்கும் அதே நாளில் நாம் இங்கு விரத விழாக்களை செய்ய வேண்டும் என்பதும் ஒத்துவராத விடயம் ஆகும். காரணம் எமது விரத வழிபாடுகள் திதி நட்சத்திர அடிப்படையாக கணிக்கப்படுவதாகும். அத்துடன் சூரிய உதயம் அஸ்தமனம் சந்திர உதயம் போன்றவற்றோடு தொடர்புடையது. இது தாய் நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் வேறுபாடும் என்பதும் நாம் அறிந்ததே. உதாரணமாக குளிர்காலம், கோடைகாலம் போன்ற காலங்களில் பகல் நேர அளவு வேறுபாடு இதனை உணர்த்தும்.

எனவே மக்கள் மத்தியில் வழிபாடுகளை ஒரே நாளில் செய்வதற்கு எல்லா ஆலயங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் அன்புடன் வேண்டிக்கொள்கிறது.

இதனால் இறையருளும் அடியார்களின் ஈடுபாடும் அதிகம் இருக்கும் என்பது எமது நம்பிக்கை. பஞ்சாங்க வேறுபாடுகளை பிடிவாதமாக வைத்திராமல் ஒரு சில விசேட தினங்களையாவது ஒரே நாளில் பிரித்தானிய திதி நட்சத்திர பிரமாணம் செய்வதற்கு அனைவரும் ஒரே மனதாக முன்வர வேண்டும் என பணிவுடன் பதினாறாவது மகா நாட்டில் வேண்டுகிறோம்.

பல ஆலயங்களைக் கட்டி அடுத்துவரும் தலை முறையினரை உள்வாங்க ஒரே நாளில் விரத விழாக்களை செய்வதே ஒரே வழியாகும். இன்று இங்கிலாந்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்கள் இந்த நாட்டிற்கென கணிக்கப்பட்ட திருக்கணித பஞ்சாங்க நடைமுறைக்கு வந்திருப்பது நல்ல முயற்சியாகும்.

எனவே மற்றும் இணையாத ஆலயங்களும் இணைந்து சைவ சமய வழிபாடுகள் ஒரே நாளில் நடைபெற ஒத்துழைப்பார்கள் என நம்புகிறோம்.

இம்மகாநாடு சிறப்புற நடைபெற கற்பகபதி கற்பக விநாயகப் பெருமான் அருள் வேண்டி பிரார்த்திக்கிறோம்.

தலைவர்
மு.கோபாலகிருஷ்ணன்
பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம்

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

200A Archway Road, London N6 5BA, Tel: 020 8348 9835 | Fax: 020 8482 6508
Web: www.sivafedaration-uk.org | Email: admin@saivafedaration-uk.org
Correspondence: 2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 0208 527 3819

**Chairman**
Mr. M. Gopalakrishnan
**Secretary**
Mr. T.Selvaratnam
**Treasurer:**
Mr. K. Nagarajah
**Vice Chairman**
Mr.S. Ramachandran
**Asst. Secretary**
Mr. K.V. Kanesamoorthy
**Asst.Treasurer:**
Mr. R. Kunasingam
**Committee**
Mr.S.Selvarajah, Mr.D. Rabindramohan
Dr. S. Maheswaran, Mr. K. Baskeran
Mr. M. Perinpanathan, Dr. T.G.V. Sritharan
Dr. T. Sriskandarajah, Mr. M. Mohanadas
Mr. E. Suntharalingam, Mrs. R. Surenthiran
Mr.S.Anandathiyagar

**AFFILIATED TEMPLES**
**SRI GHANAPATHY TEMPLE**
LONDON SW19 8PU.
**SRI KANAGA DURKA AMMAN KOVIL**
LONDON W13 9AE.
**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
LONDON N65BA.
**SRI RAJARAJESWARI AMMAN TEMPLE**
SURREY, KT17 2NE.
**LONDON SIVAN KOVIL**
LONDON SE13 5ES.
**CRAWLEY SRI SWARNA KAMADCHI AMMAN TEMPLE**
WEST SUSSEX, RH10 1TN.
**SRI KATPATGA VINAYAGAR TEMPLE**
LONDON E17 4PX.
**ARULMIGU SRI SIVAGAMI SAMETHA**
LONDON E12 6AB.
**LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE**
ILFORD IG1 4BN.
**SRI SITHI VINAYAGAR THEVASTHANAM**
MIDDLEX HA1 2TY.
**SHREE SAKTHY GHANAPATHY TEMPLE**
Surrey CR 7 7JJ.
**EELA PATHEESWARAR TEMPLE**
Middlesex HA0 4AU.
**NEW MALDEN MURUGAN TEMPLE**
Surrey KT 3 4NE.
**SRI MERUPURAM MAHA PATHIRAGALI AMMAN DEVASTHANAM**
London E17 4PX
**COVENTRY SHREE MAHA SITHI VINAYAGAR,** Coventry CV14HT
**LONDON SREE AYYAPPAN TEMPLE**
Middlesex HA3 5AR
**EELA KANTHAN TEMPLE**
Coventry CV6 6FC
**Liverpool Ganesh Temple**
Liverpool L32 8TN
**Sri Thurkkai Amman Temple**
Nottinghamshire NG9 1QE
**MEENAKSHI TEMPLE**
Bucks HP12 3BW
**SRI KATPAGA VINAYAHAR TEMPLE**
Port Talbot SA126HZ

## செயலாளர் அறிக்கை

## சிவப்பணியில் ஓரணியில் இணைந்து சீவபணியிலும் சிறக்க மாநாடு உதவட்டும்



இலண்டன் சைவத்திருக்கோயில் ஒன்றியத்தின் 16வது மாநாடு நடைபெற திருவருள் அருளிய எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவடிகளை முதலில வணங்குகிறேன்.

கடந்த பதினைந்து ஆணடுகளும் நடைபெற்ற இம்மாநாடுகள், சிவாச்சாரியார்கள், ஆதீனங்கள், சைவப்பெரியார்கள், தமிழறிஞர்கள் இலண்டனில கூடி, சைவத்தின் பெருமைகளையும அருமைகளையும எடுத்து விளக்கிப் புலம்பெயா தமிழாகள் குறிப்பாக இளையவர்கள் சைவத்தை அறிந்திடவும், சைவசமயவழி வாழவும உதவியுள்ளன. அத்துடன் தாயக தமிழக உலகச் சைவத்தமிழ்ச்சமுகத்தின் கூட்டுறவுக் களமாகவும இம்மாநாடுகள திகழந்தன. தாயகத்தமிழாகளின் புனர்வாழ்வுக்கும சமயவளர்சசிக்கும் பலவழிகளில உதவிவருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே இம்மாநாடும் சைவவிழிப்புணர்வும இறைபக்தியும் ஞானமும் தரு இறைவனின் திருக்கொடையாக நடைபெறுகிறது

பண்ணால் பரமனைத் தொழும் பண்ணிசைப் பழந்தமிழ மரபு புலத்திலும் தொடர்வதற்கு ஒவ்வொரு சைவமாநாட்டிலும் சிறுவர்களிடை பண்ணிசைப்போட்டிகள் நடாத்தி ஊக்குவித்ததின் வளர்ச்சியாக இம்முறை சைவம் குறித்த கேள்வி பதில் போட்டிகளையும் நடாத்திப் பரிசளிக்கச் சைவமாநாடு முன்வந்தமை பாராட்டுக்குரிய முன்னேற்றம். ஏனெனில் சைவசமய அறிவு காலத்தின் தேவையாக உள்ளது. வேதாந்த அறிவு இறையியலை விளங்கிக் கொள்வதற்கான பலமாக உள்ளது. அதுபோல சைவசித்தாந்தம் சிவஞானத்தையும் தந்து சிவனடிசேர்ப்பதுடன் புலத்து வாழ்வின் மனஅழுத்தத்தையும் மனத்தாழவுகளையும் மாற்றி, அமைதியான இன்பவாழவு வாழவதற்கான சத்தியாகவும் இலங்குகிறது. இநநேரத்தில் இலண்டன் சிவன் கோயிலில் உள்ள ஓதுவாரை வைத்தே நாம் இலண்டன் முழுவதற்குமான பண்ணிசையினை வளர்த்து வரும கஷ்டமான சூழநிலையை மாற்றிட ஆலயங்கள் முன்வந்து ஓதுவார்கள் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டிய தேவையும் உள்ளது.

மேலும் பன்முக பலகலாச்சார மக்களிடை புதிய சூழலில் சைவவழிபாடுகளை நடாத்தும் பொழுது அனைத்துச் சைவக்கோயில்களும் ஒரு குடையின் கீழ சிவபணியாக இணைவதின் மூலம் சீரான முறையில் பொதுவழிபாடுகளையும் பொதுவேலைத் திட்டங்களையும் நடாத்துவதற்கு முனவருதல் சைவசமய வளாசசிககான காலத்தின் தேவையாக உள்ளது. இந்நோக்குடன் சில ஆலயங்களின் கூட்டிணைவுடன் தொடஙகப்பெற்ற சைவத்திருக்கோயில்கள ஒனறியம இன்று பல ஆலயஙகளின் கூட்டாக வளாசசியுற்று வருவது இறைவனின் திருவருளே.

மேலும் கிரகநிலைகளின் இயங்கியல தன்மைக்கு ஏறப விஞ்ஞான அணுகுமுறையுடன் கணிக்கபபடும திருக்கணித பஞ்சாஙகத்தையே எல்லாச்சைவ ஆலயஙகளும புலத்தில பின்பற்ற வேண்டும் என்று சைவத்திருக்கோயில்கள் ஒனறியம முயன்று வருகிறது. இதனை இந்நடப்பாண்டுககான செயற்திட்டமாகக் கொண்டு மற்றைய ஆலயஙகளையும திருக்கணித பஞ்சாஙகத்தைப் பின்பற்றுமாறு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இறுதியாக எல்லாம வல்ல எம்பெருமானின் திருவருளால் உள்ளஙகளிலும இல்லஙகளிலும் ஊரிலும் உலகிலும் இன்பமே பொஙக அவனருளால் அவன் திருவடி வணஙகுகிறேன்.

க.வி.கணேசமூர்த்தி

சைவத்திருக்கோயில் ஒன்றியச் செயலாளர்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ இராஜ சரவண மாணிக்கவாசக சுவாமிகள்

57வது குரு மகா சந்நிதானம்
கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம் 638 056
தமிழ் நாடு - இந்தியா



கருணையே வடிவமான முழுமுதற்கடவுள் சிவபரம்பொருள். அப்பெருமானின் அருட்கருணை கிடைத்தற்கறிய பிறவியான மானிடப்பிறவி அவ்வருளை முழுமையாகப் பெற்றிட தாயிற் சிறந்த தயைபடைத்த பெருமான் அடியார்களைத் தோற்றுவித்து அவர்கள்வழி நின்றும் அவர்கள் அருளிய தோத்திரங்களை மனமுருகப் பாடியும் அருளைப்பெற அருளினார். அப்படைப்பில் மூன்றாம் நூற்றாண்டிலே முதலாகத் தோற்றுவித்தவர் ஸ்ரீவாதவூரடிகள். இவர் பெருமானின் திருமேனியைத் தாங்கும் ஸ்ரீ நந்தியம் பெருமானே ஆவார். அவரே சைவ முதற் குருவுமாவார். அவரை இப்பூவுலகில் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானாக அவதரிக்க வைத்து திருவிளையாடல்களையும் நிகழ்த்தி திருவாசகத்தை அருளச்செய்தார். அத்திருவாசகத்தை. அவ்விறைவனே அந்தனர் வடிவில் வந்து தன் கைப்பட எழுதி திருவாதவூரான் சொல்லத் திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது என தன் கையொப்பம் இட்டார் என்றால் அதன் பெருமை அளவிட முடியாது.

மேலைநாட்டு மற்ற மதத்தைச் சார்ந்த அறிஞர் ஜி.யூ போப் திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என அனுபவித்துச் சொன்னார். திருவாசகம் அவ்வளவு சிறப்பு வாய்ந்தது.

அப்பெருமானை தரிசனம்செய்ய வேண்டும் என்று பலநாள் கனவாக நினைத்திருந்த இத்திருமடத்தின் முதல் குருமணி ஸ்ரீ மாணிக்கபண்டிதர் அவரை தரிசித்து அவருடனே அவருக்குத் தொண்டராகப் பணிபுரிந்து வந்தார். அவரிடம் ஆசிபெற்ற சுவாமிகள் ஸ்ரீ மாணிக்கவாசகர் வந்த நோக்கம் நிறைவேறி இறைவனிடம் இரண்டறக் கலக்கும்முன் அவர் பூஜித்துவந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசப்பெருமானைத் தன்தொண்டரிடம் கொடுத்து கொங்குநாட்டில் தனது பெயரிடம் மடம் அமைத்தும் தன்பெயரை உடன் வைத்துக்கொண்டும் பாரம்பரியமாக சைவப் பணிபரிபாலனம் செய்துவர அன்புக்கட்டளையிட்டார். அதன்படியே முதலில் பாடல்பெற்ற திருத்தலமான அவிநாசியில் மடம் அமைத்தும் பிறகு தற்போதுள்ள இடத்தில் மடம் அமைத்த பூஜை செய்து வந்தார். அருகிலுள்ள விஜயமங்கலத்தை ஆண்டுவந்த ஜைய மன்னனின் குதாரன் பிறவியிலேயே கூனாக இருந்ததை தன் மந்திர சக்தி வலிமையால் சரிசெய்து தந்தமையால் - கூணம்பட்டி என ஊர் பெயர் விளங்க. அம்மன்னால் அமைத்துத் தரப்பெற்ற திருமடம் தென்முகமாக அமைந்துள்ளது. இன்றும் அங்குதான் பூஜை நடந்துவருகிறது.

பற்பல அதிசயங்கள் செய்து வந்த இத் திருமடம், பாரம்பரியமாக மூத்த திருமகன் பீட்த்தில் இருந்து அருளாட்சி செய்வதெனவும், அவர்களின் நாமத்தோடு, மாணிக்கவாசகர் எனவும் சேர்த்து வழங்களாயிற்று. அப்பீடத்தின் தற்போது அருளாட்சி வழங்கும் 57வது குருபீடம், ஸ்ரீ சரவணமாணிக்கவாசக சுவாமிகள் வாரம்தோறும் வியாழன், ஞாயிறு அன்று ஆதினத்திற்கு வரும் அடியவர்கட்கு உடற்பிணி, உள்ளப்பிணி நீக்கியும், சைவப் பெருமக்கட்கு தீட்சை வழங்கியும், பற்பல கோயில் திருப்பணிகளை செய்திடவும் கோவில் அளவுகள் சிற்பசாஸ்த்திர ஆகம விதிப்படி ஆலோசனை வழங்கியும், தாமே முன்னின்று கும்பாபிஷேகம் பலவற்றை நடத்தியும், பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டும் அருளாசி வழங்குகிறார்கள்.

மேலும், ஆதினத்தில் மூலம் சிறப்பாக நடந்துவரும் வேதசிவாகம பாடசாலை, மழலையர் பள்ளி, சிவாலய உழவாரத் திருப்பணி, மாத இதழ் ஆகிய புதுமையாக சிறக்க, நல்ல திறமையான நிர்வாகிகளைக்கொண்டு அறக்கட்டளை நடத்தி வருகிறது. மேலும், அடியவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தினமும் மடத்தில் நடக்கும் யாகபூஜையோடு அவரவர்கள் தன் பிறந்த நாள், திருமன நாள், வியாபார விருத்தி, தோஷ நிவர்த்தி, உடற்பிணி நிவர்த்தி போன்றவைகளுக்கு அவர்கள் சொல்லும் நாளில் சிறப்பு பூஜைகள் முறையாகச் செய்து பிரசாதம் வழங்கிடவும், உள்ளன்போடும், நிறைவோடும் செய்துவருகின்ற திருமடத்தில் தங்களையும் ஆட்படுத்திக்கொண்டு. மேலும் தெய்வமாம் சிவபெருமானின் திருவருளையும், குருவருளையும் ஒருங்கே பெற்று இப்பிறவிப் பயனை நன்கு பெற்று நீடூழி இனிது வாழ அன்போடு அழைக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Lord Shiva** is the personification of Mercy. His Mercy is bestowed only in the birth to human beings and the Lord always renders His fullest blessing to humanity. In order to receive the blessings of the Lord any devotees are made to emerge. His blessings can be possessed by following his devotees' words and by chanting the Slogans rendered by him. The glory of organising it in the 3rd century goes on to Sri Vaadhavooradigal, SHRI NADHIYAM PERUMAAN sustained Lord Shiva's sacred body upon him. He himself is the first Saiva Guru. He was later made to emerge in the temporal world as Sri Manickavasaga Perumaan upon whom many divine plays were enacted and thus rendered the holy THIRUVASAGAM. Such a blessed Thiruvasagam has the glory of being written by the Lord himself in the guise of a Brahmin and was undersigned by the Lord himself thus through the words of Thiruvaadhavooran, written by Thiruchitrambalamudaiyaan.

G.U. Pope, the great philosopher of the western country, belonging to other religion remarked, 'If not, impressed by Thiruvasagam, one can never be passionate for any holy books' and these words stand proof for the glory of THIRUVASAGAM.

The first Guru of this holy Thirumadam, Shri Manickapandidhar has a long time dream of worshipping and blessed by Sri Manickavaasagam. He worshipped him and served him as his disciple thereafter. After fulfilling the purpose of Manickavaasagar's emerge (birth) in this world and before he could reach the infinite, the blessed Manickavaasagar bestowed the deity, Shri Meenakshi Sundareswarar which was hitherto worshipped by him, to his disciple and assigned him the mission of constructing a Mutt in Kongu Nad on his (Manickavaasagar) name and for its progress and thereby developing the mission of carrying forward the service to the Lord. Following it was constructed a Mutt in Avinasi where the first hymn of the Lord was sung in the Mutt and performed pooja daily.

On perceiving the hunch of the son of the neighbouring Jain King, the ruler of Vijayamangalam, he, by his divine power, removed his hunch and made him a healthy man and hence the place was known thereafter as KOONAMPATTI. Even today, pooja is being performed in the Thirumandapam which was built by the King.

The mentioned Mutt has performed so many wonders and was assigned to a spiritual role in the place of eldest holy son in the holy Shrine-Peed. Presently the Peed was under the care of its 57th Guru Peed SHRI SWAMIGAL who blesses the people and renders various services like serving the temple, removing physical and mental anxiety and stress especially on Thursdays and Sundays giving spiritual guidance by aagama rules and last but not the lease, renewing and rebuilding temple thereby serving the humanity.

Moreover, under the leadership guidance of Aadheenam, Paadasaasala (schools) SISHU Vidyalaya, construction works in temple, publishing monthly magazine with innovation, rendering service through efficient administrators are all carried over.

Also due to the request of the disciples, in addition to yaaga pooja, special poojas are performed on events such as birthdays, wedding days, etc., and for the purpose of business flourishing and in order to get rid of evilness and thereby be free from health related issues and consequently create positive vibration all over. Hence we call upon everyone to be blessed and experience the infinite feel.

**Email: 57thsrisivagnanguru@gmail.com**
**Web: www.srikalyanapuriadhinam.org | www.facebook.com/skadhinam**
**Cell: 0 99446 33893 | 0 94426 12056**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
தொலைபேசி : 0422-2607995,,2608678, நகலி : 2607994
webpage: www.sivasiva.in,
peruratheenam.blogsopt.com

உ



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Holy Kailasa heritage Meikandar
heritary - Kailai Guru Mani - Seervalarseer
**Santhalinga Ramasamy Adigal**
Peruraatheenam, Perur,
Coimbatore -641 010, Tamilnadu.
Telephone:0422-2607995,2608678, Fax : 2607994
Email : peruradigal@yahoo.com
: perurmutt@yahoo.com

**குருமுதல்வர் (Aatheenakarthar)**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்
(Thavathiru Santhaliga Adigalar Thirumutt)

**புரவலர் (Patron)**
உலக சைவப் பேரவை
(World Saiva Council)
தமிழகத் துறவியர் பேரவை
(Tamilnadu Saints Forum)

**தலைவர் (President)**
சத்வித்யா சன்மார்க்க சங்கம்
(Sathvidhya Sanmarga Sangam)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரிக் கழகம்
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College Kahzhakam)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி
(Thavathiru Santhalinga Adigalar Higher Secondary School)
ஞானாம்பிகை மெட்ரிகுலேஷன் பள்ளி
(Gnambikai Matriculation School)
தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ் பள்ளி
(Thavathiru Aarumuga Adigalar Tamil School)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Memorial Trust)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Sathvidhya Sanmarga Sanga Trust)

**தாளாளர் / செயலர்**
**(Correspondent / Secretary)**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரி
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College)

**உறுப்பினர் (Member)**
பாரதத் துறவியர் பேரவை
(Bharat Saints Forum)
தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உயர்மட்டக் குழு.
(Tamilnadu Govt. Hindu Religious Endowment Board Higer Level Committee)



சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

இந்துமத மாநாட்டை எழில்சேர் பாரீசுநகரன்பர்
வந்துவாழ்த்த சண்முகனார் மனைவியாருடன் மகிழ்வாய்
நந்தம் ஆதீனம்சேர்ந்து நாடியழைத்தார் அதையேற்று
சிந்தனை யாளருடன் கூட்டிச் சிறப்பாய்நடத்தி இலண்டன்தனில்

தொடங்கும் மேற்கு ஐரோப்பியநாட்டில் தூயசிவநெறி மாநாட்டில்
திடங்கொள் ஈழத்தமிழ் குடும்பத்து இளையோர் திருமுறைவழிபாடு
இடங்கொள் கோவில்களில் போற்றி இசையும்முழவும் பயின்றுயர்ந்து
நடனம் கற்று உயர்வுறவே உரைகள் நல்கவேண்டும் எனஅழைத்தார்

திருக்கோயில்கள் ஒன்றியத்தைச் சிறப்பாய் அமைத்துத் திருநெறிய
திருமுறைபாடிக் குடும்பங்கள் சேர்ந்துவழிபட்டு உயர்வுறவே
கருதிவாழ்வால் உயர்வதற்குக் கணேசமூர்த்தி சச்சிதானந்தம்
உருகிப்போற்றும் சிவன்கோயில் உற்றுவாழ்த்துரை வழங்கினோம்

சிவநெறிவளர்க்கும் அன்பர்கள் சேர்ந்துகோயில் ஒன்றியத்தால்
உவந்து பதினைந்தாண்டாக உயரும்மாநாட்டினை நடத்தி
அவனிபோற்றத் தலைமுறைகள் அருமைத்தமிழை உணர்ந்துயர
தவத்தால்சிறந்தோர் தமைப்போற்றித் தழைத்துவாழ வாழ்த்துகின்றோம்.

வேண்டுந் தங்களன்பு

அன்புள்ள,

( சாந்தலிங்க இராமசாமி அடிகள் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலைப் புனிதர்
மருதாசல அடிகள்
[illegible]
☎ +91-422 - 2607995, 📠 2607994
📱 +91-98947 61125
website : www.sivasiva.in,
www.peruratheenam.blogsopt.com



Kailai - Punithar
Dr. Marudhasala Adihal
M.A., M.A., M.Com., B.G.L., M.Phil, Ph.D., D.Lit.,
Junior Pontiff, Peruraatheenam,
Perur, Coimbatore -641 010, India
☎ : +91-422 - 2607995, 📠 : 2607994
📱 : +91-98947 61125
Email : perurmutt@yahoo.com
perumadam@gmail.com

[illegible]

**இயக்குநர்**

[illegible]

**இணைச் செயலர்**

[illegible]

**வட்டத் தலைவர்**

[illegible]

**தாளாளர்**

[illegible]

**முதல்வர்**

[illegible]

**ஒருங்கிணைப்பாளர்**

[illegible]

**உறுப்பினர்**

[illegible]

**மேலாண் உறுப்பினர்**

[illegible]

## வாழ்த்துரை

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை வானுலக வாழ்வைத்தரும் உயரிய வாழ்வில் அம்மையாகவும் அப்பனாகவும் இறைவன் விளங்குகிறான். இத்தகைய இறைவனை வழிபடும் நெறியினை 'சிவ வழிபாடு' என்றும், 'சைவ நெறி' என்றும் கூறுவர். 'சிவ வழிபாடு' உலக வரலாற்றில் மிகப்பழமையானது என்பதற்குரிய சான்றுகளை உலகம் முழுவதும் காண முடிகிறது. பல நாடுகளிலும் கண்டங்களிலும் சிவலிங்க உருவங்கள் அமைந்திருப்பதன் மூலம் சிவ வழிபாட்டினை முன்னோர்கள் மிகப்பழங்காலத்தில் செம்மையாகப் போற்றி வந்தனர் என்பதனை அறியமுடிகிறது. இவ்வாறு உலகம் முழுவதும் பரவியிருந்த பழம்பெருஞ்சமயம் சைவ சமயமாகும். உயிரானது தத்துவங்களின் நீங்கி அவை மீண்டும் தம்மைத்தொடரா வகை இறைவனை நினைந்து அவன்பால் அடைதல் வேண்டும் என்கிறார். இருள் நீங்கி ஞானம் உதித்து, மலமகன்று இறைவனைக்கூடி இன்பமடைவதற்கு உரிய நெறிகள் சைவ நெறி. இச்சைவநெறிக்குத் திருமூலர்,

"சைவம் சிவமுடன் சம்பந்த மாகுதல
சைவம் தன்னையறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவனன்றிச் சாராமல் நீங்கல்
சைவம் சிவானந்தம் சாயுச்சிய மாமே"

என்று விளக்கம் தருகிறார். மேலும் ஒத்துணர்வு உடையதாயும், விரோதமில்லாததாயும் விளங்கும் நெறியையே திருமூலர் நம் சமய நெறி என்கிறார். இதனை நமது ஆதிகுரு முதல்வர் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி திருப்பேரூராதீனம் அருள்மிகு சாந்தலிங்கப்பெருமான்,

"ஆறு நெறிக்கும் அவிரோத போதமே
தேறும் மெய்ஞ்ஞானி என்று உந்தீபற
சித்தாந்தம் ஆகுமென்று உந்தீபற" என்றும்,

"எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும்
சம்மதமே என்று உந்தீபற
தற்போத மாய்க்குமேல் என்று உந்தீபற"

என்றும் கூறியுள்ளார். தெய்வச்சேக்கிழார் பெருமானும் தம் காலத்து நிலவிய பல்வேறு சமயப்பிரிவுகளையெல்லாம் இணைத்து, 'எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர் சங்கரன்தாள் மறவாத'வரை ஒருங்கிணைத்துக் காட்டினார். இன்று நம் நாட்டில் சிவநெறியோடு தொடர்புடைய இயக்கங்கள் பல வளர்ந்து வருகின்றன.

நமது நாட்டில் மட்டுமல்லாது மேலை நாடுகளிலும் சிவநெறித் தொடர்புடைய இயக்கங்கள் தோன்றியுள்ளன. அவ்வகையில் இங்கிலாந்தில் வாழும் சைவ மக்களின் ஆன்மீக அறிவை மேம்படுத்தும் வகையில் தோன்றிய பிரித்தானிய வத்திருக்கோயில்கள் ஒன்றியம், 15 ஆண்டுகளாக மிகச்சிறந்த முறையில் சைவ மாநாட்டினை நடத்தி மேன்மை கொள் சைவ நீதியை உலக மக்களுக்கு உணர்த்தி வருகின்றனர். இவ்வாண்டும் "பெரியபுராணமும் வாழ்வியலும்" எனும் பொருண்மையில் மாநாட்டு மலர் ஒன்றினை வெளியிடவிருப்பது பாராட்டுதற்குரியது. 1998-ல் தவத்திரு அடிகளாரால் தொடங்கப்பெற்றது இன்று சீரோடும் சிறப்போடும் செம்மையுற்று ஒவ்வோர் ஆண்டும் மேலும் மேலும் பொலிவு பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலைப் புனிதர்
**மருதாசல அடிகள்**
இளையபட்டம், பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010, தமிழ்நாடு
☎ +91-422 - 2607995, 2607994
+91-98947 61125
website : www.sivasiva.in,
www.peruratheenam.biogsopt.com


சாந்தலிங்கர் தாள் மலர் வாழ்க

Kailai - Punithar
Dr. Marudhasala Adihal
M.A., M.A., M.Com., B.G.L., M.Phil., Ph.D., D.Lit.
Junior Pontiff, Peruraatheenam,
Perur, Coimbatore -641 010, India
☎ : +91-422 - 2607995, 2607994
+91-98947 61125
Email : perurmutt@yahoo.com
perurmadam@gmail.com

**குருமுதல்வர்**
அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருமடம்,
காந்தல், உதகை

**இளையபட்டம்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

**செயலர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
சத்தியா சன்மார்க்க சங்க அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
நினைவு அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கல்விக்குழு

சத்திய சன்மார்க்க சங்கம்

**இயக்குநர்**
சாந்தலிங்க அடிகளார் சமுதாயக் கல்லூரி

சீரவளர்சீர் கயிலைக்குருமணி
சமுதாயக் கல்லூரி

தவத்திரு ஏகாம்பர தேசிகர் சமுதாயக் கல்லூரி

**இணைச் செயலர்**
தமிழகத் துறவியர் பேரவை

**மாவட்டத் தலைவர்**
உலகத் திருக்குறள் பேரவை

**தாளாளர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
மேல்நிலைப்பள்ளி

தவத்திரு ஆறுமுக அடிகள்
தாய்த்தமிழ் பள்ளி

**முதல்வர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை,
அறிவியல், தமிழ்க்கல்லூரி

**ஒருங்கிணைப்பாளர்**
தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக
தொலைநிலைக்கல்வி இயக்கக மையம்

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக
சேர்க்கை மையம்

பாரதியார் பல்கலைக்கழக தொலை நிலைக்
கல்வி இயக்கக மையம்

**உறுப்பினர்**
தமிழகப் புலவர் குழு

**மேலாண் உறுப்பினர்**
ஆட்சிப் பேரவை,
பாரதியார் பல்கலைக்கழகம்

"எவரேனும் தாமாக விலாத்திட்ட திருநீறும்
சாதனமும கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது உகந்தடிமைத்
திறம் நினைந்து உவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்றுசொல்லி இரண்டாட்டாது
ஒழிந்த ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சிலுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே"

என்னும் அப்பரடிகள் திருவாக்கினை எண்ணி மேன்மேலும் நற்பணி புரிய வேண்டியும், மாநாட்டு மலர் சிறக்கவும் எல்லாம்வல்ல சந்தலிங்கப்பெருமான் இன்னருளையும், அம்பலவாணப்பெருமான் தண்ணருளையும் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி திருப்பேரூராதீனம் சீர்வளர்சீர் பேரூரடிகளாரின் குருவருளையும் வேண்டி வாழ்த்துகிறோம்.

வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள
மருதாசல அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
முதலாவது குருமகா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

அருள் வாழ்த்துச் செய்தி

..1.4./2015

சிவ தொண்டர்களே!

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள்
ஒன்றியத்தினுடைய 16ஆவது மாநாடு

சைவசமய நெறியைக் கடைப்பிடிக்கும் நாடு [illegible] லண்டனில் நடைபெறுகின்றது. உலகம் முழுவதும் பரந்து வாழும் இந்து -சைவத் தமிழ் மக்கள் நாடுகளில் ஆலயம் அமைத்து ஆலயத்தினூடாக சமயப் பணியையும் கலாசார வழிபாட்டினையும் சிறப்பான செயற்பாடுகளையும் நடைமுறைப் படுத்தி வருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். [illegible] பிரித்தானிய ஒன்றியம் மகாநாட்டை நடாத்துவது இந்து சைவமுறையினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சமயம் என்பது வாழ்வின் நெறிமுறையாகும். மனிதனின் நல்ல வாழ்விற்கு வழிகாட்டுவது நாம் வாழ்க்கை நெறி வாழ்வை மேம்படுத்தி உயர்நிலைக்கிட்டுச் செல்லும் [illegible]:—

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
தெய்வத்துள் வைக்கப் படும்."

இப் புனிதமான பணியை பிரித்தானிய திருக்கோயில்கள் ஒன்றியம் நடாத்துவதில் [illegible] பாராட்டுகின்றோம். [illegible] இன்புற்று வாழ [illegible]. "என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ
"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
குன்றக்குடி – 630206
சிவகங்கை மாவட்டம்
தொ. பேசி : 04577 – 264227



10.04.2015

# வாழ்த்துரை

பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் "பெரியபுராணமும் வாழ்வியலும்" என்ற மலரை வெளியிடுவது காலத்தின் தேவையாகும்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை" - என்றது நம் திருமுறை.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும். வாழ்வாங்கு வாழத்தான் வாழ்க்கை! அல்லவை தேய, நல்லவை வளர மனம் நல்ல எண்ணங்களால் நிரப்பப்பட வேண்டும்!

வாழ்க்கைக்குப் பொருள் தேவை!

அதைப்போல் நாம் வாழ்வதிலும் பொருள் தேவை!

செழுந்தமிழ் "வழக்கு அயல் வழக்கின் துறை வெல்ல" என்றார் சேக்கிழார்!.

தமிழ் வழக்கு என்பது பண்ணோடு கலந்த பைந்தமிழை, இசையோடு கலந்த இன்பத் தமிழை வளர்ப்பதாகும். வாழ்க்கை பொய் என்று விலகி ஓடுவதல்ல!

தானும் வாழ்வாங்கு வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பது தான் "தமிழ் வழக்கு".

நான் மறைந்து நாம் ஆக மலர்வது! ஆழ்க தீயது எல்லாம்! என்று தீமை மறைந்து

நன்மை மேலோங்குவது! மேலைநாட்டுக் கலாச்சாரச் சூழலில் வளரும் இளம் தலைமுறையினருக்கும் இம்மாநாடு எல்லா வகையிலும் சமய உணர்வையும், பக்தி நெறியையும், ஒழுக்க நெறியையும் ஊட்டி வளர்க்கும்! பிர்த்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் நடத்தும் சைவ மாநாடு வெற்றி பெறவும், "பெரிய புராணமும் வாழ்வியலும்" என்ற மலர் மலர்ந்து மணம் பரப்பவும் நல்வாழ்த்துக்கள்!

பிரித்தானிய சைவநெறித் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் சைவத் தமிழ் வளர்க்கும் பணிகள் சிறக்க நல்வாழ்த்துக்கள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

பொன்னம்பல அடிகளார்

(பொன்னம்பல அடிகளார்)

* திருக்குறளே நமது பொதுமறை * திருமுறைகளே நமது மறை *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
திருச்சிற்றம்பலம்
அருள்மிகு ஞானதண்டாயுதபாணி துணை
தவத்திரு சாதுசுவாமிகள் தாண்மலர் வாழ்க

பழனி ஆதீனம்

# பழனி, தவத்திரு சாதுசுவாமிகள் திருமடம்

## அருள்மிகு சண்முக விலாச அன்னதான சமாசம்

மேற்கு கிரிவீதி, அடிவாரம், பழனி - 624 601
தொ.பே.எண் : 04545 - 242440



சீர்வளர்சீர் திருப்பெருந் தவத்திரு சாது சண்முக அடிகளார்

நாள் : 14.4.2015

தங்கல்: பழனி

## வாழ்த்துரை

மனிதராய் பிறந்த நாம் பொன்னும் மெய்ப்பொருளும் பெற்று அதனால் விழைகின்ற அன்பும், அறனும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து இறைவன் திருவடியில் திளைக்க துணை செய்வது நமது பன்னிருதிருமுறைகள் ஆகும். அவ்வகையில் நம் வாழ்வில் சந்திக்கும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதே பெரியபுராணம் ஆகும்.

நமது பெற்றோர்களை விட மிகச் சிறந்தவர் நமது சிவபெருமான். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை பெரியபுராணம் வாயிலாக சேக்கிழார் பெருமான் எடுத்துக்காட்டியுள்ளார்.

மனித வாழ்க்கையில் பெறும் பேறுகளில் கிடைத்தற்கரிய பேறு இறையருட் பேறு அகும். அப்பேறினை பெற வேண்டுமெனில் நம் வாழ்வில் திருவருளைச் சிந்தித்தல், தாம் தேடிய புண்ணியப் பொருள் கொண்டு திருத்தலத் திருப்பணிகள் செய்தல், அதன் பயனால் இறைவனது திருமேனியைக் கண்டு வழிபடுதல், திருவடியை கண்ட ஆனந்த வெள்ளத்தால் அவனடி மறவாத திருத்தொண்டர்களை சிவனாகவே கண்டு அவர்களுக்கு அருட்பணி செய்தல், அதன் பயனாய் சிவபெருமானின் திருவடியை அடைதல் ஆகியவைகளால் மனித வாழ்க்கையில் நிகழும் வாழ்வியல் முறைகளை பெரியபுராணம் எடுத்துக் காட்டுகிறது.

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் - பெரியபுராணம்

எனவே இலண்டன், பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் சார்பில் இவ்வருடம் வெளிவரும் " **பெரியபுராணமும் வாழ்வியலும்** " எனும் மாநாட்டு மலர் இவ்வுலக மக்களுக்கு மனித வாழ்க்கையின் வாழ்வியலை அறிந்து கொள்ளும் பெட்டகமாக அமைய எமது வழிபடு கடவுளும் தண்டமிழ்க் கடவுளுமான அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருவருளையும், நமது ஆதி குருமுதல்வர் தவத்திரு சாது சுவாமிகளின் குருவருளையும் நீள நினைந்து வாழ்த்துக்கின்றோம்.

அன்புகலா

(சாது சண்முக அடிகளார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඩී. එම්. ස්වාමිනාදන්
නැවත පදිංචි කිරීම, ප්‍රතිසංස්කරණය හා හින්දු ආගමික කටයුතු අමාත්‍ය

டி. எம். சுவாமிநாதன்
மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

D. M. SWAMINATHAN
Minister of Resettlement, Reconstruction and Hindu Religious Affairs

Office
146, Galle Road,
Colombo 03, Sri Lanka.
Tel : 011 - 2395109
Fax : 011 - 2395105

Residence:
No. 125, Rosmead Place,
Colombo 07,
Sri Lanka.
Mob : 0777 352585

## வாழ்த்துச் செய்தி

பிரித்தானிய சைவக் கோயில்கள் ஒன்றியத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் பதினாறாவது சைவ மாநாட்டிற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எமது நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம், பிரித்தானியாவில் உள்ள இலங்கை மற்றும் தென் இந்தியா இந்து ஆலயங்களின் கூட்டு அமைப்பாக விளங்குகின்றது. இக் கூட்டமைப்பு பிரித்தானியாவில் வாழுகின்ற இந்துக்களின் ஆலயங்களைச் சிறப்புற பரிபாலனம் செய்யவும், ஆன்மீக, கலை கலாசார மேம்பாட்டிற்கும் சிறந்த ஒரு வழிகாட்டியாக அமைந்து செயற்படுகின்றது. மேலும் இளைய தலைமுறை இந்துக்களை ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி ஊக்குவிக்கவும் இவ்வமைப்பு பெருந்துணை புரிகின்றது.

பிரித்தானியாவில் வாழுகின்ற ஐந்து லட்சமளவிலான இந்து மக்களுக்கு இவ்வமைப்பு சிறந்த தலைமைத்துவத்தையும் சமய ரீதியான நம்பிக்கையையும் வழங்குவதில் முன்நிற்கின்றது. மூத்த தலைமுறையினருக்கான விசேட அமர்வுகள், இளையவருக்கான யோகாசனம் மற்றும் கலாசார நிகழ்வுகள் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படுவது மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவை அனைத்திற்கும் மேலாக இலங்கையில் வடகிழக்குப் பிரதேசத்தில் யுத்தத்தாலும், இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றியம் தொடர்ச்சியான ஆதரவினையும் உதவியினையும் வழங்கி வருகின்றது.

புலம் பெயர் நாடுகளில் எமது தமிழ் மக்கள் தமது கலாசார ஆன்மீக விழுமியங்களை நிலை நிறுத்திக் கொள்ளவும், தொடர்ச்சியாக அடுத்து வரும் தலைமுறையினருக்கு கையளிக்கவும் இத்தகைய பணிகள் மிக அவசியமானவை ஆகும். இதன் மூலமாகவே வெவ்வேறு கலாசாரச் சூழலில் வாழுகின்ற சிறுவர்கள் தமது பூர்வீகத்தையும் பாரம்பரியத்தையும் பண்பாட்டு வேர்களையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-2-

அந்த வகையில் பிரித்தானிய சைவத் திருக் கோயில்கள் ஒன்றியத்தின் செயற்பாட்டுக் குழு மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த பெருமிதம் கொள்கின்றேன்.

இந்த பதினாறாவது சைவ மாநாடு "பெரிய புராணமும் சைவ வாழ்வியலும்" எனும் கருப்பொருளில் நிகழ இருப்பது மிகச் சிறப்பானதாகும். பெரியபுராணம் நமது நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய வாழ்வியல் நெறியை பக்திச் சுவையோடு வெளிப்படுத்துகின்ற ஓர் அற்புதமான கருவூலம் ஆகும்.

அந்த வகையில் இம் மாநாட்டை ஏற்பாடு செய்கின்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு மாநாடு சிறப்புற நடைபெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்..

டி.எம்.சுவாமிநாதன் பா.உ.,
மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்
முகாமைத்தர்மகர்த்தா,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம்

டி.எம். சுவாமிநாதன்
மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882. ஆறுமுகம் வீதி
வட்டக்கச்சி. கிளிநொச்சி. இலங்கை.
தொலைபேசி : +94 21 3207584. +94 21 2280024
தொலைநகல் : +94 21 2221595. +94 21 2280024
கைபேசி : +94 77 6913244
மின்னஞ்சல் : shritharan08@hotmail.com
இணையத்தளம் : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me)., Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Srilanka.
Tel. : +94 21 3207584, +94 21 2280024
Fax. : +94 21 2221595, +94 21 2280024
Mob. : +94 77 6913244
E.mail : shritharan08@hotmail.com
Web : www.shritharan.com

2015.03.19

**பண்பாட்டு விழுமியங்களை காக்கும் பணி**

அமைதியும் ஆன்மீகமும் கலந்த சமுகத்தாலும் இந்த உலகத்தில் சாதிக்ககூடிய காரியங்கள் ஏராளமாவே இருக்கின்றது. இந்த உலகம் எப்பொழுதும் அமைதியை வேண்டி நிற்கின்றது. ஆன்மீகம் ஒரு இனத்தின் பண்பாட்டுக்கூறுகளோடு சேர்ந்து அளப்பரிய பணிகளை செய்கின்றது.

தமிழர் தாயகத்தில் இருந்து கடந்த பலதசாப்தகாலமாக அகதிகளாகி நாடெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் புலம்பெயர் தமிழர் கலாச்சாரத்தை மாண்பை சவால்களுக்கு மத்தியில் நிலைநிறுத்தி இன்று தாம் வாழும் நாடுகளில் அரசியல் பொருளாதார பண்பாட்டுத்துறைகளில் பங்காளர்களாக மாறியுள்ளது மகிழ்ச்சிக்குரியது. புலம் பெயர் மக்களின் இருப்பை பண்பாட்டு வெளிப்பாடுகளை நிலைநிறுத்த இந்து ஆலயங்களின் பங்கு உயர்ந்தது. இன்று பிரித்தானியாவில் உள்ள ஈழ மற்றும் இந்திய இந்து ஆலயங்களின் ஒரு பலம் வாய்ந்த அமைப்பாக பிரித்தானிய சைவதிருக்கோவில்களின் ஒன்றியம் இருப்பதில் இருந்தும் இந்த அமைப்பு நடத்துகின்ற சைவமகா நாடுகளில் மூலமும் எமது மக்களின் ஒருங்கிணைப்பு மையமாக ஆலயங்கள் அதுசார்ந்த அமைப்புக்களின் பணியின் காலப்பெறுமதியை நாம் உணரமுடியும்.

இளைய சமுதாயத்தின் மத்தியில் ஆன்மீகத்தை குறிப்பாக சைவ அறநெறியை வளர்த்தெடுப்பதில் பிரித்தானிய சைவதிருக்கோவில்களின் ஒன்றியம் செய்கின்ற பணி மிகவும் போற்றுதற்குரியது. இன்று கருணை வள்ளலாக இருக்கும் கோபாலகிருஸ்ணன் அவர்களின் வழி நடத்தலின் கீழ் இந்த அமைப்பு திறம்பட செயற்படுவது மகிழ்ச்சி தருகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக தாயகத்தில் போரால் பாதிக்கப்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரித்தானிய சைவத்திருக்கோவில்களின் ஒன்றியம் வழங்கியிருக்கும் பேருதவிகளுக்கும் பொருண்மியத்தை கட்டியெழுப்ப வழங்கியிருக்கும் உதவிகளுக்கும் நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் இலண்டன் வோல்தம்ஸ்ரோவ் கற்பக விநாயகர் ஆலயம் தாயகத்தில் கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு உள்ளிட்ட பகுதிகளில் கற்பகா கணிணி பயிற்சி நிலையங்கள் கற்பகா ஆடைத்தொழிற்சாலைகள் என்பவற்றை நடத்தி மக்களுக்கு நிறைந்த பணி செய்வதுடன் வாழ்வாதார உதவிகளையும் வழங்கிவருவதை இங்கு குறிப்பிடுவது பொருத்தம். இறைபணி என்பது ஏழைகளுக்கும் வலிசுமந்த மனிதர்களுக்கும் துன்புறும் மானுடத்துக்குமானது என்பதை மெய்ப்பிக்கும் பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் இந்து ஆலயங்களுக்கும் அதனை வழிநடத்தும் கருணை உள்ளம் கொண்ட உயந்த உள்ளம் கோபாலகிருஸ்ணன் பரிபாலன சபை தலைவர்கள் தர்மகர்த்தாக்கள் நிர்வாகிகள் அடியார்கள் அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**சி.சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பேராசிரியர், இலக்கிய கலாநிதி கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா



## பெரிய புராணம் கூறும் சைவ வாழ்வியற் சிந்தனைகள் உலகெங்கும் பரவுவதாகுக!

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் இவ்வருடம் தனது 16வது சைவ மகாநாட்டினை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18 மற்றும் 19ஆம் திகதிகளில் "பெரியபுராணமும் வாழ்வியலும்" என்ற கருப்பொருளில் நடாத்தவிருப்பதையிட்டும் அம்மகாநாட்டினைக் காலந்தோறும் நினைவு கூரத்தக்க வகையில் மகாநாட்டு சிறப்பு மலரொன்றினை வெளியிடவிருப்பதையிட்டும் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இம்மகாநாட்டு அமைப்பாளர்களுக்கும் மலர்க்குழுவினர்க்கும் எமது மனமுவந்த நல்லாசிகளுடன் கூடிய வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒன்றியத்தோடு தொடர்புடைய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகுக.

திருக்கோயில்கள் எமது பண்பாட்டின் உறைவிடம். இக்காரணத்தினாலேயே பேரரசர்களும் அருட் செல்வர்களும் முறையே திருக்கோயில்களை நிர்மாணிப்பதிலும் அவற்றை நன்கு பேணிப் பாதுகாப்பதிலும் பக்தியுணர்வுடன் அரிய பணியாற்றினர். அது ஒரு புனிதமான வரலாறாகும். திருக்கோயில்களைப் பேணும் இவ்வரிய பணியின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாக அமைவது பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் அரிய பணிகள் எனில் மிகையில்லை. திருக்கோயில்களில் திருத்தொண்டினை மேற்கொண்ட அருளாளர்களின் வரலாற்றினைப் பக்தி பூர்வமாகக் கூறும் திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம் கூறும் வாழ்வியற் சிந்தனைகள் இம்மகாநாட்டின் தொனிப்பொருளாக அமைவது சாலப்பொருத்தமானது. இதனை ஒழுங்கு செய்த அனைவரும் சைவ உலகுக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். சைவத்திருமுறைகளில் பன்னிரெண்டாம் திருமுறை எனப் போற்றப்படும் பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழார் சிவபரத்துவதையும் சிவனடியார் பெருமைகளையும் சைவத்தின் மேன்மையையும் சைவ வாழ்வியலையும் அற்புதமாகத் தமது நூலில் சித்தரித்துள்ளார். அவை தொடர்பான சிந்தனைகளை பல்வேறு கோணங்களில் அறிஞர்களால் இம்மகாநாட்டில் ஆராயப்படவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இருபது வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இவ்வொன்றியம் மிகவும் பெருமை மிக்க சமயப் பணிகளை ஆற்றி வருவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். சமயம் மாத்திரமன்றி பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுப்பதிலும் இவ்வமைப்பு தன்னை ஈடுபடுத்தியுள்ளது. இளந்தலைமுறையினர் எமது சைவஞ்சார்ந்த விழுமியங்களை அறிந்து தமது சமய வாழ்வில் நலம் பெற வேண்டுமென்ற உயர் லட்சியத்தை பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேன்மை கொள் சைவ நீதியை உலகெங்கும் பரவச் செய்யும் வகையில் அரிய பணியாற்றும் ஒன்றியத்திற்கு அனைவரும் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கி தொடர்ந்தும் அவ்வமைப்பின் பணிகள் சிறக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இம்மகாநாடு அத்தகைய அரிய பணிகளின் வெளிப்பாடாக அமைகின்றமை குறிப்பிடற்பாலது.

மகாநாடும் மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற்று வெற்றி பெற தில்லைக் கூத்தனின் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். ஒன்றியத்தின் அனைத்து முயற்சிகளுக்கும் எம்பெருமானின் திருவருள் துணை நிற்பதாகுக!

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!
என்றுமின்பம் பெருகுமியல்பினால்
ஒன்று காதலித்துள்ளமு மோங்கிட
மன்னுளாரடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்.

யாழ்ப்பாணம்

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEPARTMENT OF HINDU CIVILIZATION
## University of Jaffna - Jaffna, Sri Lanka



## வாழ்த்துரை

உலகமெங்கும் "மேன்மைகொள் சைவநீதி" விளங்க வேண்டும் என்னும் உயரிய உளப்பாங்குடன் செயற்பட்டு வரும் பிரித்தானிய சைவத்திருக்கோயில் ஒன்றியத்தின் பன்முகப் பணிகளைப் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். இவ்வொன்றியத்தின் பதினாறாவது சைவ மாநாடு பெரியபுராணத்தினைக் கருப்பொருளாகக் கொண்டு இவ்வருடம் சித்திரைத் திங்கள் 18-19.04.2015 சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் லண்டன் மாநகரில் நடைபெறவிருப்பதை அறிந்து மனமகிழ்வு அடைகின்றோம்.

"சைவத்தின் மேல் சமயம் வேறில்லை. அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் வேறில்லை" என்ற செம்பொருட் துணிவை உலகமெங்கும் நிலைநிறுத்தும் பணியில் பிரித்தானிய சைவத்திருக்கோயில் ஒன்றியம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக சைவ மாநாட்டை வெற்றியுடன் நடாத்தி அது தொடர்பான விழா மலர் ஒன்றையும் வெளியிடுவது பாராட்டுதற்குரியது.

பெரியபுராணத்தில் சேக்கிழார் கூறும், "புனிதர் பேரவை" போன்று பிரித்தானிய சைவத்திருக்கோயில் ஒன்றியத்தினர் ஒருமைப்பாட்டுடன் ஒன்றிணைந்து சைவநெறி வளர்ப்பது வரவேற்கத்தக்கது.

சிவநெறி சிறப்புறச் சிவத்தொண்டு புரியும் அனைவரும் என்றும் இன்பமாக வாழ வேண்டுமென வாழ்த்துவதோடு, பதினாறாவது சைவமாநாடு எல்லா வகையிலும் சிறப்புடன் நடைபெறத் தில்லை நடராஜரின் பொன்னார் திருவடிகளைப் பணிந்து போற்றுவோம்.

பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்,
தலைவர், இந்துநாகரிகத்துறை, இணைப்பாளர்,
சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கைநெறி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாக சபைத்தலைவரும் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும் யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபருமாகிய செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் வழங்கிய ஆசிச்செய்தி

இங்கிலாந்து சைவத்திருக்கேவில்கள் ஒன்றியத்தின் சைவமாநாடு குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன்.

ஆண்டுதோறும் இவ் ஒன்றியம் அர்த்தமுள்ள மாநாட்டினை மிகவும் சிறப்பாக நடாத்தி வருவது பெருமைக்குரிய விடயமாகும். அரியதோர் நமசிவாயம் ஆதி அந்தம் ஆனதும் ஆறிரண்டு நூறுதேவர் ஆன்றுரைத்த மந்திரம் அரியதோர் எழுத்தை உன்னிச் சொல்வேன் சிவவாக்கியம் தோடதோட பாவமாயை தூரதூர ஓடவே சிவவாக்கியர் என்ற சித்தர் பாடலுக்கு அமைய தெய்வீகத்தை வளர்த்து சைவத்தின் மேன்மையை வளர்க்கும் இத்திருத்தொண்டு போற்றுதலுக்குரியது. இங்கிலாந்திலுள்ள சைவத்திருக்கோவில்கள் சைவ முன்னேற்றச் சங்கம் போன்ற சமய நிறுவனங்கள் ஆற்றும் சமய சமூகப்பணிகள் என்றும் நன்றிக்குரியவை. சைவசமயத்தின் பாரம்பரியங்களை அடுத்த தலைமுறை பேணிப்பாது காப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்திட்டங்களையும் இப்பெரு மாநாட்டில் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். நல்லறிஞர்களின் கருத்துக்களை ஏற்று, மாநாட்டின் பயனை நிலை நிறுத்த வேண்டும்.சர்வதேசத்திலுள்ள அனைத்து சைவ நிறுவனங்களையும் இணைக்கும் பாலமாக இங்கிலாந்து சைவத்திருக்கோவில் ஒன்றியம் விளங்க இறையருளை வேண்டி வாழ்த்தி நல்லாசி கூறி அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தமிழருவி த.சிவகுமாரன்
(ஸ்தாபகர், வவுனியாத் தமிழ்ச்சங்கம்,
போஷகர், அகில இலங்கை சேக்கிழார் மன்றம்,
போஷகர், அகில இலங்கை கச்சியப்பர் கழகம்)



பிரித்தானியா சைவத்திருக்கோவில்கள் ஒன்றியத்தின் சைவ மாநாட்டையும் அதற்காக வெளிவரும் மலரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நினைத்துப் பார்க்கிறேன். 1998 ஆம் ஆண்டில்தான் பிரித்தானியா சைவத்திருக்கோவில்கள் ஒன்றியத்தின் முதல் சைவ மாநாடு வெகுசிறப்பாக லூஷியம்,கற்வேட் பிறிஜ் கலையரங்கத்தில் இரண்டு நாட்கள் இடம்பெற்றது. இந்த மாநாட்டிற்காகவே இலங்கையிலிருந்து அழைக்கப்பெற்று நானும் இரண்டு நாட்களும் சிறப்புரையாற்றினேன். எனவே பிரித்தானியா சைவத்திருக்கோவில்கள் ஒன்றியத்தின் முதலாவது சைவ மாநாட்டிலேயே கலந்துகொண்டவன் என்ற பெருமை எனக்கு எப்போதுமுண்டு. அந்த முதலாவது மாநாட்டின் தலைவராக அமரர் இரட்ணசிங்கம் அவர்களும் செயலாளராக சைவத்திருமணி ந.சச்சிதானந்தன், பொருளாளராக திரு.ம.கருணைலிங்கம் அவர்களும் செயற்பட்டார்கள். அந்த மாநாட்டைத்தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இடம்பெற்ற மேற்படி மாநாடுகளில் தொடர்ச்சியாக ஏழு மாநாடுகளில் நான் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறேன். இதுவும் எனக்கு கிடைத்த பெருமையே.

ஒவ்வொரு ஆண்டும் இடம்பெறும் பிரித்தானியா சைவத்திருக்கோவில்கள் ஒன்றியத்தின் சைவமாநாடுகளால் இங்கிலாந்து மாநகரில் வாழ்ந்துவரும் எமது சைவப்பெருமக்கள் இலங்கை, இந்தியா, மலேசியா, தென்னாபிரிக்கா, இன்னும் பல ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல அறிஞர் பெருமக்களை, ஆன்மீகத் தலைவர்களை, ஆதீனங்களின் முதல்வர்களை சந்தித்து அவர்களின் உரைகளைக்கேட்டு தம் வாழ்வுபற்றிச் சிந்தித்து வருகிறார்கள். இங்கிலாந்தில் எழுச்சி கண்டுவரும் இளைய தலைமுறையினர் இந்த சைவமாநாடுகளால் எவ்வளவோ பயனடைந்துவருகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சைவமாநாட்டை நடத்துவதற்கு சிறப்பான ஆற்றல் மிக்க, நிவாகக்குழுவினர் அமைக்கப்படுவது வழக்கம். அதேபோல் இவ்வாண்டும் சிறப்பான ஆற்றல் மிக்க, நிவாகக்குழுவினர் இந்த சைவமாநாட்டை நடத்த முன்வந்திருக்கின்றனர். குழுவின் தலைவர் திரு.மு.கோபாலகிருஸ்ணன் உள்ளிட்ட அனைவரையும், இந்த சைவமாநாட்டையும் வாழ்த்துவதோடு "பெரிய புராணமும் வாழ்வியலும்" என்ற கருப்பொருளில் பல பயன்தரு விடயங்களைத் தாங்கிவரவுள்ள சைவமாநாட்டு மலரையும் மலராசிரியரையும் வாழ்த்தியமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

**(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)**

| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| Chairman of the Board of Trustees | President: | Hony. General Secretary: | Hony. Treasurer: |
| வி. கயிலாசபிள்ளை | கந்தையா நீலகண்டன் | முத்தையா கதிர்காமநாதன் | வே. கந்தசாமி |
| *V. Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Muthiah Kathirgamanathan* | *V. Kandasamy* |
| *Phone:2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2582139 (Res)* | *Phone: 2586620 (Res)* |
| *Fax : 2575472* | *2371100 (Off) - Fax : 2371111* | *Fax: 2593997* | *Mobile: 071-5349150* |
| *hariomak@gmail.com* | *neela@mnlaw.lk* | *mknathan21@yahoo.com* | *vkandasami@gmail.com* |


## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரார்த்தனை



பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், இங்கிலாந்து மண்ணில் வாழும் சைவப்பெரும் மக்களின் ஆன்மீக அறிவையும், உணர்வையும் மேன்படுத்தும் நல்ல நோக்கத்துடன் கடந்த பதினைந்து ஆண்டுகளாக சைவ மாநாடுகளை நடாத்தி வருகின்றது.

இந்த வருடத்தில் "பெரியபுராணமும் வாழ்வியலும்" என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத்து மாநாட்டில் சிறப்பு மலரும் வெளியிடப்படுகிறது என்பதனை அறிந்து மகிழ்கிறோம்.

பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பெருங் கவிஞர் எனச் சேக்கிழார் பெருமானைக் கற்றறிந்த கல்விமான்கள் போற்றியிருக்கிறார்கள். சேக்கிழார் பெருமான் சைவப் பேருலகுக்குத்தந்த பெருஞ் செல்வமான பெரியபுராணம் பன்னிருதிருமுறைகளில் பன்னிரண்டாவதாகச் சிறப்புப் பெற்றுள்ளது.

நாயன்மார்களும், தொகையடியார்களும் செயற்கரிய செயல்களை இறையருளால் செய்த சிறப்புக்களையும் அச் சிறப்புக்களின் அருள் பெருமையைகளையும் சைவப் பெருமக்களின் மேன்மையையும் எடுத்துக்கூறும் தெய்வீக இலக்கியம் பெரியபுராணம்.

சட்டம், மருத்துவம், தாவரவியல், உளவியல், இசை என்பன போன்ற பல்வேறு துறைகள் தொடர்பான கருத்துக்களையும் பெரியபுராணம் கொண்டுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் எடுத்துரைப்பதும் குறிப்பிடற்பாலது.

உலகப் புகழ்பெற்ற இலண்டன் மாநகரில் எமது பெரியபுராணத்தின் சிறப்பை பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் பறைசாற்றுகின்ற பெருமையைப் பாரெல்லாம் வாழும் சைவ பெருமக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இளைய தலைமுறையினருக்கும் இப்படியான அரிய பொக்கிஷத்தின் நன்மை சென்றடைய நாங்கள் எல்லோரும் உழைக்கவேண்டும். அவ்வழியில் 15 ஆண்டுகளுக்கு மேல் "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" வெளியீட்டைப் பிரசுரித்து வந்த அகில இலங்கை இந்து மாமன்றம் இன்றைய தேவைகருதி அதே அடிபடையில் A COMPENDIUM FOR HINDUS எனும் ஆங்கில சைவ வழிபாட்டுமுறை மஞ்சரியை எமது சைவசித்தாந்த முறையில் இம் மாதம் வெளியிட ஒழுங்கு செய்திருக்கிறோம்.

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் மாநாடு சிறப்பாக இடம்பெற எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தி மகாநாட்டிற்கு எம் பெருமானின் திருவருள்கிட்ட இலங்கை வாழ் இந்து மக்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

இறைபணியில்

**கந்தையா நீலகண்டன்**
தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்


தலைமையகம்: இல.91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02, இலங்கை.

**Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.**

தொ.பேசி/Phone : 2434990 | www.hinducongress.lk | தொ.நகல்/Fax : 2344720

hinducongress@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்
කොළඹ සයිව මුන්නේට්ට සංගම්
COLOMBO SAIVA MUNNETTA SANGAM
101/70, KEW ROAD, (JALAN PADANG) COLOMBO-02. TEL : 011-2300053
Regd பதிவு S.254
Bankers: Bank of Ceylon (Metropolitan Branch), Indian Overseas Bank, National Savings Bank (Kotahena Branch)
BRANCH SOCIETIES: UNITED KINGDOM

# பதினாறாவது இலண்டன் சைவமாநாடு வாழ்த்துச் செய்தி



தொன்மைச் சிறப்பும் தனித்துவமும் கொண்டது சைவசமயம். இப்போது மேலை நாடுகளிலும், அங்குள்ள மதங்களுள் ஒன்றாக சைவசமயமும் மேலோங்கி வருவதைக் காணமுடிகிறது. இந்த வகையில் ஒன்றாக பெரிய பிரித்தானியாவில் பல சைவ ஆலயங்கள் தோற்றம் பெற்றிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம். இலங்கையிலிருந்து பல்வேறு துறைசார் கல்விமான்களும், புலம்பெயர்ந்து சென்ற சைவத்தமிழ் மக்களும் ஒன்றிணைந்து பல சைவ ஆலயங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். இவை இறைபணிக்கும் மேலாக சமூகநல சேவைகளிலும் பங்களிப்புச் செய்து வருவது போற்றத்தக்க விஷயமாகும். பெரிய பிரித்தானியாவிலுள்ள இருபதுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களை ஒன்றிணைத்து பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் என்ற பெயரில் ஒரு அமைப்பாக நீண்டகாலமாக செயற்பட்டு வருவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்த ஒன்றியமானது சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பணியில் மட்டுமல்ல, அங்குள்ள சைவத்தமிழ் மக்களிடையேயும், குறிப்பாக இளம் சந்ததியினரின் இறைபக்தியையும், ஆன்மீக சிந்தனைகளையும் கலாசார விழுமியங்களையும் தோற்றுவிக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் பெரும்பங்கு வகித்து வருவதை காணமுடிகிறது.

சமய அபிமானமும், ஆன்மீகப் பற்று மற்றும் சேவையுணர்வும் கொண்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வரும், பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் வருடாந்தம் சைவமாநாடுகளை நடத்தி வருவதை ஒரு காத்திரமான செயற்பாடாகவே கருத வேண்டும். இளம் சந்ததியினர் மத்தியில் சமய சிந் தனைகளை வளர்த்துக் கொள்ளும் வகையிலும், அத்துடன் இளைஞர் அரங்கில் பல பயனுள்ள கருத்தரங்குகள் இம்மாநாட்டில் நடைபெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அனைவரும் வழிபாட்டுப் பாரம்பரியத்தின் ஊடாக இறையான்மையும், பக்தியுணர்வையும் தொடர்ந்து பின்பற்றும் வகையிலும் சைவமாநாடு முதலான நிகழ்வுகள் மிகவும் பேருதவியாக இருப்பதை சிறப்பாகச் சொல்லலாம். இதற்கும் மேலாக திருக்கோயில்கள் ஒன்றியம் சமூகநல செயற்பாடுகளுடன் மாணவர்களது கல்வி மேம்பாடு, வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பத்தினர்களுக்கு சுயதொழில் முயற்சிகளுக்கான உதவி போன்ற பல செயற்திட்டங்களை இலங்கை போன்ற சர்வதேச நாடுகளிலுள்ள மக்களுக்கு நடைமுறைப்படுத்தி வருவதன் மூலம், அதன் உன்னதமான பணி பலராலும் போற்றப்படுகிறது. பெரிய பிரித்தானியாவிலுள்ள மேலும் பல சைவ ஆலயங்களும் இந்த ஒன்றியத்துடன் இணைந்து செயப்படுவதன் மூலம், அதன் பணிகளை மேலும் முன்னெடுத்துநச் செல்வதற்கு உதவியாக இரக்கும் என்பது பலரினதும் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்துடன் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆலயம் ஓர் அங்கத்துவமாக இணைந்திருப்பதன் ஊடாகவும், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் அதன் தாய்ச் சங்கமாக அமைந்திருப்பதனாலும் பிரித்தானிய திருக்கோயில்கள் ஒன்றியத்துடனான எங்களது தொடர்புகள் நெருக்கமானவையாகும். அந்த வகையில் வழிமைபோல இம்முறையும் ஏற்பாடு செய்துள்ள இலண்டன் சைவ மாநாடு சிறப்பாகவம் வெற்றிகரமாகவும் நடந்தேறவேண்டும் என வாழ்த்துவதுடன், மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக பாராட்டுதல்களையம் தெரிவித்து, அனைத்து நிகழ்வுகளும் நல்லவகையில் அமைந இறையருள் துணை நிற்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

சின்னத்துரை தனபாலா
தர்மகர்த்தா - கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shree Ghanapathy Temple

125 – 133 Effra Road, London SW19 8PU
Tel: +44 (0)20 8542 7482 / 8542 4141
www.ghanapathy.co.uk

9th March 2015

On behalf of the priests, Management Committee and devotees of the Shree Ghanapathy Temple, I would like to send our best wishes to the Federation of Saiva Hindu Temples, on the occasion of their 16th Saiva Conference.

The Ghanapathy Temple has been associated with the Federation since its inception and it has proved to be a great support network over the years.

Every year, the Saiva Conference provides a much needed boost for us to explore different aspects of our Saiva religion and how it can be expressed in today's changing world. It is a valuable chance for us to refocus and recharge our spiritual batteries, through listening to the wisdom of excellent speeches and discourses from local and international delegates. And the theme of this year's Conference – Periya Puranam & the Saiva Way of Life will be a particularly pertinent one for all of us.

As with previous years – encouraging the youth and children is central to the Conference, as they will be the ones who take Saivaism forward into the future life of Hindu Saivites here in the UK. The Children's Competition, in particular, is one of the most effective methods of encouraging children to learn about their great religion and culture. And, although there can only be a few official winners, the mere fact that they learn the speeches and sing the Pann Isai for these competitions ensures that all who take part will grow in their love and knowledge of their Saiva faith.

Last year was a year of great change for us at the Ghanapathy Temple, as we embarked on the complete reconstruction of the Temple's sacred spaces. We would like to take this opportunity to thank all those temples who helped us with advice, messages of support and sent priests to help with the Maha Kumbhabishekham in January this year. It was particularly emotional for us, as we marked our 33rd year since the Temple's first consecration ceremony and we were truly overwhelmed by the many thousands of devotees who came to share these special 5 days with us.

May Lord Ghanapathy shower His choicest blessings upon all who have worked to organise this 16th Saiva Conference. May He continue to bless you all in your continuing good work and may the Federation continue to be a source of strength, support and inspiration for all its member Temples.

In Humble Service to our Beloved Lord Ghanapathy,
**Dr. S. Maheshwaran**
Co-ordinator,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Shree Ghanapathy Temple - Maha Kumbhabishekham - 25th January 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

Love is God

# LONDON SIVAN KOVIL TRUST

## இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை

Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Mr. T. Arulthas

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharaj

**Treasurer:**
Mr. S. Sukumar

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Rajasundaram

**Community Service. Sub Committee Chairman**
Mr. N.Sivasubramaniam

**Cultural Activity Sub Committee Chairman**
Mr. S.Yogarajah

K V. Kanesamoorthy
Dr. S.Navaratnam
Dr. S.Sivathasan
Dr.(Mrs.) V.M.Karunaharan
Mr. S.Parameswaran
Mrs. R.Sritharan
Mr. S. Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc Dartford Branch
2. Lloyds Bank plc Billericay Branch
3. Natwest Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co



I am very much humbled and blessed to provide this message on behalf of the London Sivan Kovil Trust for the Sixteenth Saiva Conference.

Over the last eighteen years, the Saiva Federation and its associated temples have taken the responsibility of ensuring Saiva devotees are able to practice their faith, enhance their bhakti, learn about their culture and divine language. We as a community should be pleased with the progress we have made together over these years.

The Saiva Federation has now grown to more than fifteen Saiva Temples, and expected to grow further in number in the near future. This growth has served to ensure that the majority of devotees, especially those based in South East of England, are able to easily practice and balance the demands of Western society whilst also nourishing their soul by visiting an established temple relatively close by.

The London Sivan Kovil has witnessed a rise in attendance since its Maha-kumbhabishekham on 12th June 2011. The feeling of connection and association with the temple has grown in the hearts of many devotees of our beloved Lord Arunachaleshwara. The interest in attending temple festivities, functions and activities has highlighted a real desire of our community to make the temple an integral part of their life.

Despite everything that has been achieved across Southeast England over the last eighteen years, we still have a big task ahead of us to ensure that the Saiva faith, practice and interest in our community is maintained and taken to the next level of understanding.

Although we have a high attendance of devotees across Southeast England we still need to tackle the challenge which is to ensure our community of devotees, especially those classified as youth, have a solid understanding of our rich Saiva traditions. Youngsters and young Saiva families must be helped to understand our religion and history. The reality is that if we were to survey all 'youth' who attend our temples', and questioned "what is Saivisim and who are the Nayanmaars?" we would most likely get a muted response, "I don't know". This is the reality and we need to take seismic measures to change this situation.

To achieve greater understanding of Saivisim across Southeast England would require a co-ordinated effort across our society. The necessary change can't be achieved solely by the efforts of the Federation of Saiva Temples. It is absolutely imperative that we embrace all the Tamil Schools across Southeast of England and harness their regular structured interaction with our Saiva youth. We also need to embrace all the music examination boards and teachers across Southeast England to help us to raise greater awareness and understanding of the Saiva tradition.

We have yet to show our Youth the treasures of Saivism, and how its divine teachings/techniques can help them in a practical way in this lifetime and guide them on their spiritual path.

With the grace of Lord Arunachala we will be able to work together and achieve His divine will.

With Regards,
**Dr T Sriskandarajah,**
**President of London Sivan Kovil Trust.**

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities,Weddings and Cultural functions - Free Education for Language, Music & Culture - Funeral Religious Services.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
Love is God

# LONDON SIVAN KOVIL TRUST

## இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை

Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Mr. T. Arulthas

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharaj

**Treasurer:**
Mr. S. Sukumar

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Rajasundaram

**Community Service. Sub Committee Chairman**
Mr. N.Sivasubramaniam

**Cultural Activity Sub Committee Chairman**
Mr. S.Yogarajah

K.V. Kanesamoorthy
Dr. S.Navaratnam
Dr. S.Sivathasan
Dr.(Mrs.) V.M.Karunaharan
Mr. S.Parameswaran
Mrs. R.Sritharan
Mr. S. Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc Dartford Branch
2. Lloyds Bank plc Billericay Branch
3. Natwest Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

அகில புவன நாயகராக விளங்குகின்ற சிவபெருமான் ஆன்மாக்கள் மீதுள்ள அளப்பெரும் கருணை காரணமாக திருவுருவத் திருமேனி தாங்கி கோயில் கொண்டருளி ஆன்மாக்களுக்கு இன்னருள் பாலித்து வருகிறார்.

அவ்வகையில் இலண்டனில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி நிற்கும் லூயிஷம் பகுதியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் சேர்ந்துள்ள சிவபுரம் என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் அழகிய கருங்கற்களினால் அமைக்கப்பெற்ற திருக்கோயிலில் ஸ்ரீ அபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாலே ஸ்வரப் பெருமான் வீற்றிருந்து அருள் பாலித்து வருகிறார். இவ்வாலய மஹா கும்பாபிஷேகமானது கரவருஷம் வைகாசி மாதம் 29ம் நாள் (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை இறைவனது திருவருள் துணையுடன் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மஹோற்சவம் பதினெட்டு தினங்களோடு சிறப்பாக நடைபெற்றது. முதல் ரதோற்சவத்திற்கு எம்பிரான் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து அருளகாட்சி வழங்கினார். அதன் பின்பு இவ்வருடம் இரண்டாவது மஹோற்சவம் எம்பிரானது கிருபையினால் சிறப்பாக நடைபெற்றது. விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானுக்கும் ஒரு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பெற்று தேர் உறம் கோலாகலமாக இடம்பெற்றது. ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்ற நாளிலிருந்து ஆறுகாலப் பூஜை கிரமமாக நடைபெற்றுவருகிறது. அத்துடன் பிள்ளையார், சிவன், அம்மன் முருகன், நாராயணன், பைரவர் நவக்கிரகம் போன்ற தெய்வங்களுக் குரிய விசேஷ தினவழிபாடுகள் யாவும் குறைவின்றி நடைபெற்று வருகின்றன.

ஐரோப்பாக் கண்டத்திலே அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய திருவுருவங்கள் இருப்பது இவ் ஆலயம் ஒன்றே தான். அத்துடன் ஒவ்வொரு நாயன்மார்களது குரு பூஜையும் சிறப்பாக குறிப்பிட்ட நாட்களில் நடைபெற்று வருகிறது. அத்துடன் அறுபத்து மூவரின் வரலாற்றினைக் கூறும் பெரிய புராணத்தொடர் சொற்பொழிவு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலைப் பூஜையுடன் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்துடன் இவ்வாலயத்தில் கடமையாற்றும் ஓதுவார் அவர்களினால் பண்ணோடு இறைவனுக்குப் பாமாலை சூட்டப்படுகிறது. அத்துடன் பெரியவர்கள் சிறியவர்கள் யாவரும் பண்ணிசை பயின்று வருகிறார்கள். அத்துடன் வேத ஆகமங்களில் கூறப்பட்டுள்ள சகல விதிமுறைகள் யாவும் இவ்வால்ய சிவாச்சாரியார்களினால் பின்பற்றப்பெற்று ஆலய வழிபாடுகள் யாவும் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. பக்தர்களின் வேண்டுகோளின் பிரகாரம் வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை ஆலயக் கதவுகள் திறந்திருக்கினறன. மேலும் ஆலயத்தில் தமிழ்ப்பாடசாலைகள் நடாத்தப்படுகின்றன. அங்கு பண்ணிசை, தமிழ் சமயம், கலைப்பாடங்கள் என்பன மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் ஈழநாட்டில் மக்களுக்கு ஏற்பட்ட இயற்கை அழிவின்போது அதற்குரிய நிவாரணமாக ஆலயம் பல வழிகளில் உதவிகளைச்செய்துள்ளது.

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Free Education for Language, Music & Culture - Funeral Religious Services.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
Love is God

**LONDON SIVAN KOVIL TRUST**
**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

மட்டக்களப்பு பகுதியில் இலண்டன் சிவன் இல்லம் அமைக்கப்பெற்று பிள்ளைகளை அங்கு ஆதரித்துப் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றது. பாடசாலைப் படிப்புக்குரிய வகுப்புகள் மேலைத்தேய இசை, கராட்டி போன்ற வகுப்புகளும் இங்கு நடைபெறுகின்றன. சகல வசதிகளோடு அமைக்கப்பட்டுள்ள திருமண மண்டபத்தில் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, வகுப்புகள், அரங்கேற்றம், இசை நிகழ்ச்சிகள், பொது மக்களுக்குரிய சந்திப்புக் கூட்டங்கள் இவ்வாறாகப் பல நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. பஜனை மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர், வெளியூர்வாசிகள் இங்கு வந்து சிவன் ஆலய அமைப்பினையும் அழகினையும் ஆலயம் இயங்கும் முறைமையையும் பார்த்து மகிழ்ந்து பாராட்டியுள்ளார்கள்.

இவையாவும் எங்களுக்கு உரியதல்ல. எல்லாமே அருணாசலப் பெருமான் செய்வித்துள்ளார். இதில் எதுவித சந்தேகமும் இல்லை. தன்னை நினைப்வர்களையும் நாடி வருபவர்களையும் தனது திருவருளினாலே ஆட்கொண்டு சகல வரங்களையம் அருளி காப்பாற்றிக் கொண்டிருக்கும் எம்பிரானது கிருபையை எழுத்தில் எழுத முடியாது. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என்ற தெய்வ வாக்கின்படி நாம் எழுதுவதற்கு வார்த்தையில்லை. இறைவனது கருணையினால் நாளுக்கு நாள் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பதும், பக்திப் பிரவாகம் நிறைவாக இருப்பதை நாம் காண்கிறோம். இந்நாட்டில் ஆலயங்கள் மூலம் எம்பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட்டு எம் வருங்காலச் சந்ததியினருக்கு அவை சென்று சேர வேண்டும்.

எமது காலத்தோடு மாத்திரமின்றி காலங்காலமாக பாரம்பரியங்கள் வாழ்வதற்கு ஆலயங்களே தேவையாக இருக்கின்றன. எனவே இவ் ஆலயத்தை பொறுத்தவரை இறைவன் அருளால்யாவும் நிறைவாக நடைபெறுகின்றன. எனவே இவ்வாலயம் மேலும் மேலும் வளர்ச்சி பெறவேண்டும். எல்லோருக்கும் எம்பிரான் ஸ்ரீ அருணாசலப் பெருமான் திருவருள் எப்பொழுதும் குறைவின்றி கிடைக்கவேண்டும் என நாம் சிவபெருமானைப் பிரார்த்தனை செய்கிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
Love is God

# LONDON SIVAN KOVIL TRUST

இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை

Charity Registration No. 1051516
4a. Clarendon Rise, Lewisham. London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
Love is God
**LONDON SIVAN KOVIL TRUST**
**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

உ

வித்யாபூஷணம், சிவப்பிரதிஷ்டா ஞானதிலகம், குருமணி.
சிவாகமரத்தினம், ஜோதிடமணி
சிவஸ்ரீ சபா. மகேஸ்வரக்குருக்கள் (B.A.) அவர்கள்
(பிரதம சிவாச்சாரியார்)
இலண்டன் அருள்மிகு ஸ்ரீ சிவன் திருக்கோயில், தாயகம்

ஆசியுரை

சைவத் திருக்கோயில் ஒன்றியம் என்கின்ற பேரமைப்பு ஆரம்பமாகி இவ்வாண்டு பதினாறு வருடமாகிறது. ஒன்றியமானது ஒவ்வொரு வருடமும் மகாநாட்டை நடாத்தி அதன்மூலம் பல அறிஞர்களை இங்கு வரவழைத்து ஆன்மீகச் சொற்பொழிவுகளை நடாத்தி அன்னியதேசமாகிய இந்நாட்டில் ஆன்மீகத்தை நிலைபெறச் செய்துள்ளது. இதேபோன்று எமது இளஞ்சிறார்களும் சமயம், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு போன்ற துறைகளில் ஈடுபட்டு சிறப்புப் பெற்றுள்ளனர். அந்த வகையில் இவ்வாண்டு ஒன்றியம் தனது பதினாறாவது மகாநாட்டினை நடாத்தவிருப்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இம்மாநாட்டில் ஆன்மீகச் சிந்தனையும், சிறந்த கலை நிகழ்வுகளும் நடைபெறவிருப்பது மாநாட்டுக்கு மகுடம் வைத்தாற் போல அமைகிறது. இவ்வகையில் சைவத்திருக்கோயில் ஒன்றியத்தின் பதினாறாவது மாநாடு சிறப்பாக நடைபெற வேண்டும் எனவும், இதேபோன்று பல ஆக்கபூர்வமான நிகழ்வுகளை ஒன்றியம் நடாத்தி அதன்மூலம் எமது பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு இறைவனது திருவருள் துணை நிற்கவேண்டும் எனவும், இவ்வுலகம் எங்கும் அன்பும், சமாதானமும் நிலவ வேண்டும் எனவும் எல்லோருக்கும் இறைவனது திருவருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும் எனவும் இலண்டன் ஆலயம் சிவபுரம் பதியில் கோயில் கொண்டருளியிருக்கும் ஸ்ரீ அபிராமி சமேத ஸ்ரீ அமலேஸ்வரப் பெருமானது திருவடிகளைப் பிரார்த்தித்துப் போற்றி வணங்கி எனது மனமார்ந்த நல்லாசியினைக் கூறுகின்றேன்.

சுபமங்களம்

சிவஸ்ரீ சபா. மகேஸ்வரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SRI RAJARAJESWARY AMMAN TEMPLE
## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்
**Parasakthi Hindu Temple Trust**
**No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17**

ஓம் சிவமயம்
பிள்ளையார் துணை

## பதினாறாவது சைவமாநாட்டு வாழ்த்துச் செய்தி

**இ.குணசிங்கம்**

ஆறு வகைச்சமயங்களுக்கும் முதல்வனாக விளங்கும் சிவப்பெரும் பழம்பொருளான எம்பிரானை" பிறப்பிலி இறப்பிலி என்றும், பிறவா யாக்கைப் பெரியோன்" என்று சிலப்பதிகாரத்தை தந்த சமணத்துறவி இளங்கோவடிகளும், "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி" என்று மாணிக்கவாசக சுவாமிகளாலும், "முதிராத் திங்களொடு சுடரும் சென்னி" என்று பாரதம் பாடிய பழம்தேவனாரும், "தோடுடைய செவியன்" என்று திருஞானசம்பமூர்த்தி நாயனாரும், "ஓசை யொலியெலா மானாய் நீயே, உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே" என்று திருநாவுக்கரசு நாயனாரும், "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "துத்தம் கைக்கிழை விளரி தாரம் ஊழை இளி ஓசை பண் கெழும்பாடி" என்று காரைக்கால் அம்மையாரும், "உலகெலாம் உணந்தோர்ந்தோதுதற் கரியவன்" என்று சேக்கிழார் சுவாமிகளாளும் பாடித் துதிக்கப்பட்ட சிவனுக்கு, ஜனநாயகத்தின் இதயமாக விளங்கும் இலண்டன் மாநகரில் ஆண்டுதோறும் விழாவெடுத்து, அவன் ஆன்மாகள் உய்யும் பொருட்டு, அவன் அருளால் அருளாளர்களால் அருளிச் செய்த, தோத்திர நூல்களான திருமுறைகளையும், சாஸ்திர நூல்களான பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களையும் புலம் பெயர்ந்து வாழும் சைவத்தமிழ் மக்கள் அறிந்து ஒழுகுவதற்கு சைவ ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பதினாறாவது மாநாடு சிறப்பாக அமைய முதற்கண் இராஜராஜேஸ்வரி அம்பாள் அருளைத் துணை கொண்டு எம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

பசி நோயும் உடல் நோயும் அகலுவதற்கு முறையே உழைப்பும், மருந்தும் உறுதுணையாவன. உழைப்பிற்கு நாட்டு நலம் பெருகுதல் வேண்டும். மருந்துக்கு கல்வியும், ஒழுக்கமும் சிறந்திருத்தல் வேண்டும். உடற்பிணியை நீக்கும் கல்வி உயிர்ப்பிணியை நீக்கும் நெறியிற் செலுத்தும். அக்கல்வி அனைவருக்கும் தெய்வ நாட்டத்தையும், தெய்வ வழிபாட்டையும் சிறப்புறச் சேர்க்கும். அதனால் வேற்றுமையும் பகையும் தோன்றாது. ஒற்றுமையும் நட்பும் பெருகும். இதனால் நல்லொழுக்கமும் நல்வாழ்வும் நாளும் வளரும். இதை வளர்க்கவே சைவத்தமிழ் இலக்கியங்கள் வழிவகுக்கின்றன.

சைவ இலக்கியங்கள் சாத்திர நூல்கள் எனவும், தோத்திரப் பாக்கள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன. தோத்திர நூல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. புலம் பெயர்ந்த மண்ணில் வாழும் எம் தலைமுறையினர் தேவார திருவாசகங்களை தினமும் சைவக் திருக்கோயில்களில் பண்ணோடு பாடி வருவது போற்றுதற்குரியது. சமய ஆசாரங்கள், நியமங்கள் ஆகியவற்றை நாம் பிறந்த மண்ணில் அறிந்தவற்றை ஒழுக்கநெறி நின்று ஒழுகி இந்த மண்ணில் வாழும் எம் தலைமுறையினர் கடைப்பிடித்து வாழ வழிவகுப்பதே இந்த மாநாடுகளின் நோக்கம். மேன்மை கொள் சைவநெறி இன்று உலகெல்லாம் படர்ந்து வியாபித்துள்ளது. தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடுகளைப் போற்றும் வேற்றவர்கள் அதை மனதார விரும்பி படித்து, விளக்கம் பெற்று அதன்படி ஒழுகத் தலைப்பட்டுள்ளமை, இந்த மாநாட்டுக்கு ஒரு வெற்றி எனலாம். மக்களால் ஏற்படுத்தப்பட்ட மனுதர்மத்தை கடைப்பிடித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ சைவசமயம் வழி செய்யும் என்பதில் எனக்கு எத்துணை ஐயமுமில்லை. தமிழ் மொழியும், தமிழ்ப்பண்பாடும் தரணியில் தழைத்திருக்கும் காலம் வரை சைவசமயம் நிலைபெற்று நிற்கும்.

புலம் பெயர்ந்து இம்மண்ணில் வாழையடி வாழையாக வாழும் சைவத் தமிழ் மக்கள், எதிர்காலத்தில் அவர்களின் பரம்பரையால் இம்மண்ணில் வித்திட்டு பயிரான தமிழர் விழுமியங்களை, பண்பாடுகளை காலத்தால் அழியாது காக்கும் சைவ ஒன்றியமும், சைவ ஆலயங்களும் சிறப்பாக இயங்க அன்னை இராஜராஜேஸ்வரி அப்பாள் அருளை நாமும் யாசிப்போம். வாழ்க பதினாறாவது சைவமகாநாடு.

இ.குணசிங்கம்
தலைவர்
இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தேவஸ்தானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர்வாசற்குன்று முருகன் கோவில்



BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST
Registered Charity No: 269067
200A Archway Road N6 5BA
Telephone No: 020 8348 9835, Fax No: 020 8482 6508
Email: admin@highgatehillmurugan.org
Web: highgatehillmurugan.org

**ADVISORY COUNCIL**
**EXECUTIVE COMMITTE**

Chairman:
Mr. K. Nithiananthan
Secretary:
Dr.K.Ravendran
Asst. Treasurer:
Mr. S.Sothilingam
Construction Committee
Vice Chairman
Mr.K.Thirurasa

Asst. Secretary
Mr. K. Sivakumaran

Membership Committee
Vice Chairman
Mr. L. Dhayalan
Assistant Secretary
Mr. S.Pathmanathan
Religious & Edu.Committee
Vice Chairman
Mrs. S. Sabaaratnam
Asst. Secretary
Mr. M. Srikantha
Social & Cultural Committee
Vice Chairman
Mr. S. Ravendran
Asst. Secretary
Mr.T.R.Gnanalingam

Committee Members
Mr. N.Balasubramaniam
Mr. R. Chandramoorthy
Mr. T.Kankeyan
Mr. Lavan Sundarathasan
Mr.T. R. Nageswaralingam
Mr. K.Sathiananthamoorthy

BOT Secretary:
Mr C. Canagasundaram
BOT Treasurer
Mr. A. Vairavamoorthy
BOT Members
Mr. S. M. Srikantha
Dr. V.P. Narayana Rao
Mr. K. Nagarajah
Mr. M. Perinpanathan
Bankers:
Nat West Bank plc
Barclays Bank plc
State Bank of India
Solicitors
M/S Wimal & Co



பெருமைக்கும் மகாராணியின் ஆட்சிக்கும் அமையப்பட்ட பெரிய பிரித்தானியாவில் சைவத்தையும் தமிழையும் அலங்கார அரியணையில் அமர்த்திடவும், அனைத்து சைவக் கோவில்கள் ஒன்றாக இணைந்து செயல்படவும் 1998 ஆண்டு விம்பிள்டன் விநாயகர் ஆலய ஸதாபகர் அமரர் இரத்தினசிங்கம் அவர்களின் பெருமுயற்சியாலும் ஐந்து ஆலயங்கள் ஒன்று இணைந்து காலத்தின் தேவை கருதி உருவாக்கப்பட்டு, இன்று பதினேழு அகவையில் பதினாறாவது விழா கோலத்தை கிழக்கு மேற்கு இலண்டனில் சித்திரை 18, 19, திகதிகளில் காணுவதை இட்டு மகிழ்ச்சி அடைவதோடு பாரட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்நிய மண்ணில் வாழ்ந்தாலும் வரும் கால சிறார்கள் சைவத் துறவிகள், பல தமிழ் விரிவுரையாளர்கள் எல்லோரும் சேர்ந்து வோலத்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் பெருபான்மையான ஆலயங்களை அரவணைத்து பெருவிழா எடுப்பதை இட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம்.

எம் இனம் தமிழ் சைவக் கலாச்சாரத்துடன் மாற்றார் மண்ணில் தலைநிமிர்ந்து நிற்பதற்கு வழிகாட்டி ஒன்றியக் கோவில்கள் வீறு நடை போட்டுக் கொண்டிருந்தாலும் இன்னும் தவழும் குழந்தையாகவே இருக்கின்றது.

அந்நிய நாகரீகம், மக்களைத் திசை திருப்பும் மத மாற்றங்கள், பலவித சமுதாய பழக்க வழக்கங்கள் இவை போனறவற்றில் அடிமையாகாமல் இருக்க, இது போன்ற மகா நாடுகள் நடாத்தி அனைவரையும் நல்வழியில் கொண்டு வருவதுடன் நில்லாமல் ஈழத்தாயக மண்ணில் வாழும் நம் இனத்துக்கு உதவி செய்து அவர்களையும் நல் வழியில் வைத்திருப்பது எமது தலையாய கடமையாக விரிவடைய எமது வாழத்துகள்.

எதிர் காலங்களில் சைவத்தமிழர்கள் எந்த வேறுபாடின்றி ஒரே தினங்களில் அனைத்து சைவத்தமிழ் சாஸ்திர சம்பிரதாய விழாக்கள் பண்டிகைகள் கொண்டாட சைவத் திருக்கோவில் ஒன்றியம் பாரிய பொறுப்பை எடுத்து நடத்த எல்லாம் வல்ல உடன் அமர் உயர்வாசற்குன்று முருகன் அருள் ஆசி புரிய பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

பசி நோக்கார், கண் துஞ்சார், என்பதற்கு ஏற்ப காலமேனப் பாராது உள்ளத்தால் சைவத் தமிழை வளர்ப்பதே குறிக்கோளாக கொண்டு பதினாறாவது சைவத் திருக் கோவில் மகாநாடு சிறப்பாக நடக்கவும் குருச்சேவைகள் மென் மேலும் வளரவும் அதன் மூலம் சைவ தமிழ் கலை கலாச்சார பண்பாடு உலகம் எல்லாம் பரவவும் சைவத் திருக்கோவில் ஒன்றியும் பல பாதைகளில் மென்மேலும் வளரவும் முதலாவதாக ஐரோப்பிய நாடுகளில் காட்சி தந்த உயர்வாசற்குன்றில் வள்ளி தெயவானையுடன் அமர்ந்து அருளை வாரி வழங்கி கொண்டிருக்கும் தமிழ் கடவுள் அருள்புரிய வணங்கி வாழ்த்துகின்றோம்.

வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசியிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே. (திருமூலர்).

அடிபிசகாமல் முடி மாறாமல் கைவீச்சு நெகிழாமல் தொடர்ந்து சேவை செய்வீர்களாக.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

அன்பின்
செ. கனகசுந்தரம்
அறங்காவலர் காரியதரிசி. - பிரித்தானிய இந்து கோவில் அறக்கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Aum Muruga

# BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST

## உயர்வாசற்குன்று முருகன் கோவில்

Established 1974, Registered Charity No : 269067
200A Archway Road, London N6 5BA.
Tel : 020 8348 9835. Fax : 020 8482 6508.
E-mail : admin@highgatehillmurugan.org Web : www.highgatehillmurugan.org

### வருடாந்த மகோற்சவ மற்றும் ஏனைய நிகழ்ச்சிப் புகைப்படத் தொகுப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* *TEL: 0208 - 810 0835*
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*
www.ammanealing.org Email: info@ammanealing.org

**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr Mrs S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.Raj Paramakumar

**Treasurer**
Mr. K Sarvananthan

**Asst Treasurer**
Mr. S Ragunathan

**Committee Members**
Mr P Kanapathipillai
Mr A Rajakariar
Mr S Thedchanamoorthy
Dr S Mayooran

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. S. Premachandra

**Secretary**
Dr. V. Paramanathan

Mr. S. Abayalingam
Mr. R. Kanesharajah
Mr. T. Thevaraajan
Dr. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Solicitor**
Mrs. G. Kathirgamanathan

**Our Motto for 2014-2015**
Commitment and Respect



செ. இராமச்சந்திரன்
தலைவர் – நிருவாகசபை
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன ஆலயம்
ஈலிங் - லண்டன்

சைவத் திருக்கோவில்களின் ஒன்றியத்தின் தொடர்ச்சியான பதினாறு ஆண்டுகால தொய்வற்ற வளர்ச்சி என்மனதில் மட்டற்ற அகமகிழ்ச்சியினை தருகின்றது.

புலம்பெயர்ந்த நாட்டிலே சைவ மாகாநாடுகளை நடத்தி சைவத்தையும், தமிழையும் ஒன்றியம் வளர்த்துள்ளது. எமது இளைய தலைமுறையினருக்கு சமைய அறிவைப் பரீட்சைகள் மூலமாக ஒன்றியம் முன்னெடுத்துச் சென்றுள்ளது மிகவும்போற்றத்க்க விடயமாகும். ஈழத்து தமிழக அறிஞர்கள், ஆதியின் முதல்வர்கள் ஆகியோர் இங்கு வரவழைக்கப்பட்டு அவர்தம் முத்தான கருத்துக்களை செவிமடுக்கும் பாக்கியத்தையும் ஒன்றியம் தந்துள்ளது. இவையெல்லாம் சைவ திருக்கோயில் ஒன்றியத்தின் நற்பணிகளாகும்.

இன்னும் ஏராளமான பணிகளை இன்றைய காலகட்டத்தின் தேவைகளை கருத்திற் கொண்டு திறம்பட செயல்படுத்தி வருவதுடன் இளைஞர்களையும், சிறுவர்களையும், ஊக்குவிக்கும் முகமாகவும் எமது பாரம்பரிய கலை, கலாச்சாரங்கள் மறைந்துபோகாமலும், தமிழும், சைவமும் தழைத்து ஓங்க அவர்களிடையே தேவாரமும், திருமுறைகள், சொற்பொழிவு போன்றவற்றில் போட்டிகள் முலம் ஈடுபடவைத்து தமிழ், சமய அறிவையும் வளர்த்து வரும் அரும்பணியைச் செய்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

சைவத்திருக்கோவில்களின் ஒன்றிணைந்த திருக்கோவில் ஒன்றியம் இன்னும் பல நூற்றாண்டுகள் கொண்டாட இருக்கின்றது. இம்மாகாநாடு சிறப்பாக அமையவும், அறிஞர்கள் பல கருத்துக்ளைக் கூறி சைவம் வளரவும் இம்மகாநாட்டையொட்டி வெளிவரும் இம்மலரும் சிறந்து பொலிந்திடவும், அனைத்துக் குறிக்கோள்களும் வெற்றி பெறவும் எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனை வணங்கி மனதார வாழ்த்துகின்றேன்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











திருமதி.சிவஞானம் அமிர்தவல்லி
முனைக்காடு தெற்கு,
கொக்கட்டிச்சோலை.



சந்திரசேகரம் சோதிலட்சுமி
5ம் குறுக்கு,
விநாயகபுரம், வாழைச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)
# Shri Sithi Vinayagar Thevasthanam (Harrow)

59B, Rear of Station Road, Harrow, Middlesex HA1 2TY
Est. in 2001 • Registered Charity No: 1145206
Email: sithivinayagarharrow@gmail.com • Web: harrowsithivinayagar.org
**Tel: 020 8427 5428**

**Board of Trustees**

**President:**
Mr. M. Mohanadas
Tel: 020 3674 4859

**Vice-President:**
Mr. V. Sriranjithan
Tel: 020 8429 8449

**General Secretary:**
Mrs. C. Thanapalasingam
Tel: 020 8863 5176

**Asst. Secretary:**
Mr. A. Sivapalan
Tel: 020 8997 5324

**Treasurer:**
Mr. P. Sahadevan
Tel: 020 8424 9051

**Asst. Treasurer:**
Mr. T. Kiritharamohan
Tel: 020 8863 2222

Mr. M. Vijayakumar
Tel: 020 8581 8542

**Bankers:**
NatWest Bank plc
High Road
Harrow Weald
Middx. HA3 5ER

**Auditors:**
PKP & Company
1 Forum House
Empire Way
Wembley HA9 0AB

**Solicitors:**
Amirthan & Suresh
Solicitors
150-152 Ealing Road,
Wembley HA0 4PY

## தலைவரின் செய்தி

பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் கடந்த 15 வருடங்களாக பெரும் பாலான சைவக் கோவில்களை ஒருங்கிணைத்து, சிறந்த முறையில் மகாநாட்டை நடாத்தி வருகிறீர்கள். இவ்வருடம் பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தில் இன்னும் பல ஆலயங்கள் இணைந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இளம் சந்ததியினரை உள்ளத்தில் கொண்டு எதிர்காலத்தில் உங்கள் பணி சிறக்க எமது வாழ்த்துக்கள்.

ஹறோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் 2001 ஆம் ஆண்டில் ஆரம்பித்து, 2005 ஆம் ஆண்டு தைப்பொங்கலன்று தற்போதைய இடத்தில் நிரந்தரமாக ஸ்தாபித்து, 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 24.10.2010 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் 48 நாட்கள் நடைபெற்ற மண்டலாபிஷேகத்தைத் தொடர்ந்து தினமும் நான்கு சாமப் பூஜை (காலை 9.00 மணி, மதியம் 12.00 மணி, மாலை 5.00 மணி, இரவு 7.30 மணி அல்லது 8.00 மணி) நடைபெற்று வருகின்றது.

ஆங்கில ஆண்டு January 1 ஆம் நள்ளிரவு பூஜையுடன் ஆண்டு தோறும் நடைபெறும் தைப்பொங்கல், மகாசிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, 11 நாட்கள் வருடாந்த ஆவணி அலங்காரத் திருவிழா, புரட்டாதி விரதம், நவராத்திரி பூஜை, கேதாரகௌரி விரதம், கந்தசஷ்டி விரதம், பிள்ளையார் கதை, திருவெம்பாவை பூஜை முதலியன மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மாதந் தோறும் சங்கடஹர சதுர்த்தி, சுக்கில சதுர்த்தி, கார்த்திகை விரதம், தைப்பூசம், மாசி மகம் பூஜை நடைபெறும் காலங்களில் சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

சைவ சமய நித்திய பூஜைகளோடு நில்லாமல், எமது தாய்நாட்டில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவியும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் மெசின் போன்ற உதவிகளும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவியும் செய்து வருகின்றோம். அத்துடன் கடந்த 2½ வருடங்களாக போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த 24 பெண் பிள்ளைகளையும், 6 ஆண் பிள்ளைகளையும் யாழ்/ஸ்ரான்லிக் கல்லூரி விடுதியில் தங்கவைத்து, அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேற்குறிப்பிட்ட பிள்ளைகளை அவர்கள் A/L படிப்பு முடியும் வரை பராமரிப்பதென நிர்வாகம் முடிவுசெய்துள்ளது. அப் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு மாதா மாதம் £750 அனுப்பி வைக்கப்படுகிறது. விடுதியில் வாழும் பிள்ளைகளுக்கு படிப்பு மாத்திரம் போதாது, விளையாட்டு, பொழுதுபோக்கு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு சகல விளையாட்டு உபகரணங்கள், TV, Video, Computer போன்றவற்றை வாங்குவதற்கும், சித்திரைப் புத்தாண்டு அன்று புத்தாடை வாங்குவதற்கு மார்ச் மாதம் £4000 அனுப்பியுள்ளோம்.

எமது ஆலயத்தில் இருந்து வரும் வருமானத்தில் 98% தமிழ் அடியார்கள் மூலம் வருவதால் எம்மால் இயன்றளவு தாய் நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறோம்.

**"மக்கள் சேவையே மகேசன் சேவை"**

இறைபணியில்,
ம. மோகனதாஸ்
தலைவர், ஸ்ரீ. சி. வி. தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)
# Shri Sithi Vinayagar Thevasthanam (Harrow)

Rear of 59B, Station Road, Harrow, Middlesex HA1 2TY
Est. 2001 • Registered Charity No: 1145206
Email: shrisithivinayagar01@gmail.com • Web: harrowsithivinayagar.org
**Tel: 020 8427 5428**

31-01-2015



உ
சிவமயம்

## ஹறோ ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானக் குருக்கள் சிவாச்சாரியமணி சிவஸ்ரீ ம. பராபரக் குருக்களின்

# ஆசிச் செய்தி

எல்லாம் வல்ல விநாயகர் பெருமான் திருவருள் முன்னிற்க,

புலம் பெயர்ந்த நாடுகளிலே சைவ சமய பாரம்பரியங்களை எடுத்தியம்பி, எதிர்காலச் சந்ததியினர்கள் நல் வழி காட்டும் சைவ நீதி உலகெங்கும் சிறந்து விளங்குவதற்கு ஏதுவாக பல இந்து சமய செயற்பாடுகளை செய்து, மக்களின் நன் மதிப்புப் பெற்று திகழுகின்ற பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் வருடாவருடம் நடாத்திவரும் "சைவ மாநாடு" இவ்வருடமும் சிறந்தோங்க பலருக்கும் பயனுறவும் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் பாதம் பணிந்து வாழ்த்தி ஆசீர்வதித்து,

இந்துக்கள் எங்கெல்லாம் தம் கால் பதிக்கின்றார்களோ அங்கெல்லாம் தமது இறைவனையும், ஸ்தாபித்து கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றோடு மட்டும் நின்றுவிடாது, தம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த சமய நம்பிக்கைகளையும் தம்மோடு வளர்த்து வருவது பெருமைக்குரியது.

உடல் வளம், பொருள் வளம், மன வளம் மூன்றும் இன்றியமையாதது. முதல் இரண்டும் இலகுவாக பெற முடியுமெனினும், மன வளம் பெறுவது சவாலாகவே இருக்கின்றது. மன வளம் உள்ள சந்ததியே ஒரு இனத்தின் உண்மையான சொத்து. மன வளத்தை "மக்கட் பண்பு" என்று திருக்குறளில் கூறப்பட்டுள்ளது. "அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்"என்று வள்ளுவர் கூறுகின்றார். செழிப்பான மொழி, இலக்கியம், பக்தி போன்ற சிறப்புடைய தமிழரின் சந்ததி. இவற்றை ஊக்குவிக்கும், எடுத்துரைக்கும் சிறப்புப் பெற்றதாக சைவமாநாடு விளங்குகின்றது.

சைவ சமயமும் தமிழ் மொழியும் மிக்க தொன்மையானவை. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அவை உன்னத நிலையில் இருந்துள்ளன என்பதை பல நூல்கள் வாயிலாக அறிகின்றோம். அவ்வப்போது பல சித்தர்கள், ஞானிகள் தோன்றி இவற்றின் பெருமைகளை மக்களுக்கு எடுத்தியம்பியிருக்கிறார்கள். தற்காலத்திலே சைவ மாநாடு, சைவ நற்சிந்தனை மூலமாக மக்களுக்கு எடுத்தியம்பி, வளர்ந்து வரும் எதிர்கால சந்ததியினர் மிகவும் பயனுறும் வண்ணம் பல பேச்சுப் போட்டிகள், கருத்தரங்கு, பட்டிமன்றம், நாடகம், தேவார, திருவாசகப் போட்டிகள் எல்லாம் ஏற்படுத்தி பலரும் மகிழ்வுற்று பாராட்டும் வண்ணம் "பிரித்தானியா சைவ திருக்கோயில்கள் ஒன்றியம்" சைவ மாநாடு சிறப்பிதழாக மலரும் சமயக் கட்டுரைகள் பலருக்கும் பயனுறும் வண்ணம் பெருமை பெற்று விளங்கவும் விநாயகர் திருவருள் பெற்று எல்லோரையும் ஆசீர்வதித்து வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Weddings
Babies Blessings
Thivasams
Punyavaachanams



திருமணம்
குழந்தைகள் ஆசீர்வாதம்
(41வது நாள்)
திவசம்
புண்ணிய யாகம்

## SHRI SITHI VINAYAGAR THEVASTHANAM (HARROW)
## ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)

Rear of 59B, Station Road, Harrow, Middx. HA1 2TY
(Est. 2001) • Registered Charity No: 1145206

### ஆலயம் வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்

திங்கள், புதன், வியாழன், சனி, ஞாயிறு தினங்களில்
காலை 9.00 - பி.ப. 2.00 மணி, பின்னர் மாலை 5.00 - இரவு 9.30 மணி
செவ்வாய், வெள்ளி தினங்களில்
காலை 9.00 - பி.ப. 2.00 மணி பின்னர் மாலை 5.00 மணி - இரவு 10.00 மணி

### பூஜை நடைபெறும் நேரங்கள்:

தினமும் காலை 9.00 மணி, மதியம் 12.00, மாலை 5.00 மணி, இரவு 8.00 மணி
(விசேட தினங்களில் இரவு 7.30 மணி)

### திருமண வைபவ ஒழுங்குகள்:

ஆலயத்தில் திருமணம் நடாத்த விரும்புவர்களுக்கு சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

### பிரயாண விபரங்கள்:

பஸ்: 140, 182, 186, 258, 340. Underground: Harrow & Wealdstone (Bakerloo Line, British Rail)

நம் நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வகையிலும் ஆலய நிர்வாகம் உதவி புரிந்து வருகிறது. கடந்த சித்திரை மாதம் 2013 தொடக்கம் போரினால் பெற்றோரை இழந்த 16 மாணவர்களையும், 14 மாணவிகளையும் யாழ்/ஸ்ரான்லிக் கல்லூரி விடுதியில் தங்க வைத்து அவர்களுடைய கல்விக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து வருகிறது.

மேலும் அடியார்கள் நிதி உதவிசெய்ய முன்வந்தால் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் இருந்து பெற்றோரை இழந்த 20 மாணவ மாணவிகளை யாழ்/ஸ்ரான்லிக் கல்லூரி விடுதியிலும், 20 மாணவ மாணவிகளை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விடுதியிலும் தங்க வைத்து பராமரிக்க முடியும். போரினால் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு நிதி உதவி செய்ய விரும்புவோர் தயவுசெய்து ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம் - ஆலய நிர்வாகம்.

### வாகனத் தரிப்பு விபரம்:

Civic Centre Car Park
(Free parking
Mon-Fri. after 5.30 pm,
Sat & Sun all day)

Entrance via
Nibthwaite Road







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LONDON SRI SELVA VINAYAGAR TEMPLE

## இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் - இல்பேர்ட்

299-303 Ley Street, Ilford, Essex 1G1 4BN Tel : 0208 911 8934



பிரித்தானிய நாட்டில் சைவத்திருமக்கள் ஒன்றுகூடி மாநாடு நடாத்துவதையிட்டுப் பெருமைப்படுகின்றேன். அத்துடன் இம்முறை மேலும் 12 ஆலயங்கள் ஒன்றியத்துடன் இணைந்தமை ஒன்றியத்திற்கு வலிமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

பிரித்தானியாவில் பல ஆலயங்கள் திருக்கணித பஞ்சாங்கத்தை உள்வாங்கி அவற்றைப் பின்பற்றி வருவது எதிர்கால சந்ததியினருக்கு சைவத்தின் மேல் குழப்பமில்லாத சூழ்நிலையை உருவாக்கும். அத்துடன் அனைத்து ஆலயங்களும் ஒரே நேரத்தில் விசேட தினங்களை கொண்டாடுவதும் சைவ மக்களுக்கு ஆரோக்கியமானதாகும்.

நடைபெற இருக்கும் 16வது சைவ மாநாடு இனிதே நிறைவேற எம்பெருமான் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானை வேண்டுவதோடு, மாநாட்டுக்கு பின்னர் தமிழ் நாட்டிலும், தமிழ் ஈழத்திலும் இருந்து வரும் அறிஞர் பெருமக்களோடு இங்குள்ள பெரியவர்களும் சேர்ந்து பல நல்ல சேவைகளை முன்வைக்க வேண்டும்.

அத்தோடு ஆலயங்கள் ஆன்மீக வளரச்சியில் மட்டும் கவனம் செலுத்தாமல், சமூக வியலிலும் ஈடுபாடு காட்டி வேண்டும் என்பது எமது விருப்பம், அதன் ஒரு பகுதியாக எமது ஆலயம், மற்றைய ஆலயங்களின் வழிகாட்டலில் பல திட்டங்களை முன்னெடுக்கின்றது. அவற்றின் இன்றைய சூழ்நிலையில் எமது தாயகத்தில் துன்பத்தில் துவளுகின்ற மக்களுக்கு வேண்டிய நேரத்தில் தன்னால் ஆன உதவிகளைச் செய்து வருகிறோம். அந்த வரிசையில் கடந்த ஆண்டில் இருந்து, ஆலய வருமானத்தின் ஆலயத்துக்கான செலவுகள் தவிர்ந்த அனைத்து நிதியும் எமது மக்களுக்கான உதவிகளுக்கு பயன்படுத்தப்படும் என்கின்ற திட்டத்தின் கீழ் ஒரு பெரும் திட்டத்தினை ஒழுங்கு செய்து வெற்றி கண்டுள்ளோம்.

அதாவது கூட்டுறவு சமாசத்தின் மூலம் வழங்கப்படும் சிறுகடன் உதவி மூலம் வெற்றிலைக்கேணி என்கின்ற மிகவும் பாதிக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட கிராமத்தில் உள்ள 52 பெண் தலைமைத்துவ குடும்பங்களை முதல்படியாக பொறுப்பெடுத்து நிரந்தரமாக தமது காலில் நிற்கக் கூடிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுப்பது. இது ஒரு நிலைத் திட்டமாக தெரிந்தாலும் இதில் மிக அனுபவம் வாய்ந்தவர்கள் எமக்கு வழிகாட்டியாக அமைவதாலும், நாம் கொடுக்கும் உதவி திரும்பத்திரும்ப சுழற்சி முறையில் பயன்படுத்துவதாலும் மற்றைய திட்டங்கள் எல்லாவற்றையும் விட அதிக பலன் பெறக்கூடிய திட்டமாக இருப்பதால் இதை நாம் முன்னெடுத்துச் செய்து வருகின்றோம்.

மகேசனுக்கு தொண்டு செய்வதன் மூலம மக்களையும்
மக்களுக்கு தொண்டு செய்வதன் மூலம் மகேசனையும் குளிரவைப்போம்

நன்றி

செல்வா செல்வத்துரை
ஸ்தாபகர், அறங்காவலர்
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**LONDON SRI SELVA VINAYAGAR TEMPLE**

இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் – இல்பேர்ட்

299-303 Ley Street, Ilford, Essex 1G1 4BN Tel : 0208 911 8934

உ

சிவமயம்

## இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் பிரித்தானிய சைவ மாநாட்டிற்கு வாழ்த்தி வழங்கிய மடல்

அகில உலகமெல்லாம் போற்றும், இலண்டன் மாநகரில் இல்போரட் ஸ்தலத்தில் வலம்புரி விநாயகராக வீற்றிருக்கும் அகார, உகார, மகர ஓங்கார ஸ்வரூபமாக சகல செல்வங்களையும் அள்ளித்தரும் விநாயகப்பெருமானின் பரிபூரண கடாட்சமும் ஆலய குருமார்களின் ஆசிகளும் ஆலய நிர்வாகத்தினரின் பேரன்போடு இந்தச் சைவ மகாநாடு மிகச் சிறப்பான முறையில் நடைபெற வாழ்த்துகிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்
ஆலய குருமார்கள்
திரு. சுவாமிநாதக் குருக்கள்
திரு. முத்துக்குமாரசுவாமிகள்
திரு. பாஸ்கரக் குருக்கள்
திரு. சாமிநாதன் குருக்கள்
மற்றும் ஆலயத்தினர்களும் நிர்வாகத்தினர்களும்

நன்றி

நிர்வாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDON SRI SELVA VINAYAGAR TEMPLE

## இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் - இல்பேர்ட்

299-303 Ley Street, Ilford, Essex 1G1 4BN Tel : 0208 911 8934







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்குளம் இலவச கணணி பயிற்சி நிலையம்



இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தினால்
முன்னெடுக்கப்படும் மற்றும் பல திட்டங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SREE KARPAGA VINAYAGAR TEMPLE
# ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

**Telephone: 020 8527 3819**
2-4 BEDFORD ROAD WALTHAMSTOW LONDON E17 4PX

**BOARD OF TRUSTEES**

**Mr. M.Gopalakrishnan**
Hon President

**Dr.C.P.Thiagarajah**
Hon Secretary

**Mr. S. Rajeeve**
Hon Asst. Secretary

Treasurer

**Mrs.A.Sakthivel**
Hon Asst.Treasurer

**Ministers of Religion**
1.Sivasri. Athithan Uruthiramoorthy Sarma

2.Sivasri.Sarveswara Sarma Balasubramania Iyer

3.Sivasri.Ganenan Parameswara Kukukal

4.Sivasri.Pranava Somaskantha Sarma

கற்பகபதி

அற்புத அருள்புரி கற்பக கணபதி பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்

சமய வளர்ச்சியின் பெரும் பகுதியை வகிப்பது ஆலயங்களாகும். ஆலயங்களில் நடை பெறும் வழிபாடுகள், அபிசேகங்கள், திருவிழாக்கள் என்பன ஒருபுறம் நடை பெற்றாலும், சமூக நலனும் அடங்கியிருக்க வேண்டும். குறிப்பாக ஏழை மக்களுக்கு உதவ வேண்டும். கல்வி வளங்களுக்கு உதவ வேண்டும். இந்த வகையில் பல ஆலயங்கள் விழாக்கால வருமானங்களில் ஒரு பகுதியை தாயக மக்களின் நலன் கருதி ஆதரவு அற்ற மக்களுக்கு ஆதரவு நல்கி அனுப்பி வைப்பது நல்ல பணியாகும். ஒவ்வொரு ஆலயமும் தமது திருவிழா முடிவடைந்த உடன் ஒரு பகுதியை ஏதாவது ஒரு நற்பணிக்கு தாயகத்திற்கு வறியவர்களுக்கு சென்று ஒழுங்கான முறையில் சேரும் வண்ணம் அனுப்புவது மிகநன்று. அத்துடன் சைவ சமய உண்மைகள் மரபுகள் சம்பிரதாயங்கள் என்பன பற்றிய விளக்கங்கள் மக்கள் மத்தியில் பரவ வேண்டும் என்றால் இவ்வாறான கருத்தரங்குகள் மகாநாடுகள் நடத்தப்பட வேண்டும். வருடா வருடம் சைவத்திருக்கோவில் ஒன்றியம் விடாமுயற்சியாக இதனை செய்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் புதிய சிறார்கள் தேவாரப்போட்டி பேச்சுப்போட்டி என்பவற்றில் இணைகிறார்கள். ஏதோவொரு வகையில் இவை பலனைத் தரும்.

தற்போது பதினாறாவது மகாநாடு நடைபெறும் இவ்வேளையில் பல ஆலயங்கள் ஒன்று சேர்வது வரவேற்கத்தக்கது. பொதுவான விரத விழாக்களை ஒன்றாகச் செய்ய வேண்டும் என்பது வருடா வருடம் விடப்படும் வேண்டுகோள்கள். ஒன்றாக விரதங்களை செய்யும் ஆலயங்களும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

ஆலயங்கள் தோறும் பண்ணிசை மரபு பரவ வேண்டும் என்ற விருப்பமும் பல ஆலயங்களுக்கு உண்டு. எமது ஆலயத்திலும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை தோறும் பண்ணிசை வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது. பல சிறார்கள் ஆர்வத்துடன் கற்று வருகின்றனர். அதேபோல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் மூத்தோர் அமைப்பினர் ஒன்று கூடுவார்கள். பல்வேறு விதமான சமய சிந்தனைகள் ஆரோக்கிய வாழ்வு சம்பந்தமான கலந்துரையாடல்கள் மூலம் மன அமைதி பெறுகின்றனர்.

இவ்வாறு பல ஆலயங்கள் தங்கள் சூழலில் உள்ள இளையோரையும் பெரியோரையும் இணைத்து நல்ல முறையில் சைவ சமய சம்பிரதாயங்களை கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

புலம் பெயர்ந்து நாம் வாழ்ந்தாலும் தமிழ் மொழி சைவ சமயம் என்ற பண்பாட்டு வட்டத்திற்குள் வாழ ஆலயங்களும் சைவ சமய நிறுவனங்களும் பெரிதும் உதவுகின்றன.

மேலும் மேலும் இவ்வாறான மகாநாடுகள் கருத்தரங்குகள் நடைபெறவேண்டும். இளைய சமுதாயம் இணைய வேண்டும் என்று வாழ்த்தி மகாநாடு சிறப்புற கற்பக பதி கற்பக விநாயகப் பெருமான் கழலடி போற்றுவோம்.

*தலைவர்*
*நிர்வாகத்தினர்*
*சிவாச்சாரியார்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டம் 2 – கணனி நிலையம் – உதயநகர் – கிளிநொச்சி











## அனர்த்த நிவாரணம் – மட்டக்களப்பு.






## ராமநாதபுரம் ஆடை உற்பத்தி நிலையம்















அகிலாண்டேஸ்வரி சிறுவர் இல்லம்
(102 குழந்தைகள்)
வவுனியா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மகாதேவ ஆசிரமம்





கணனி பயிற்சி நிலையம் – மட்டக்களப்பு









செஞ்சோலை சிறுவர் காப்பகம்

WALTHAMSTOW SHREE KARPHAHA VINAYAGAR TEMPLE

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3000 வருமானம் குறைந்த மாணவர்களுக்கான புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டபோது.




தையல் பயிற்சி நிலையம் – செட்டிப்பாளையம் – மட்டக்களப்பு.



இலவச மருத்துவ முகாம் வன்னி.






மகாதேவ ஆசிரமம் (70 சிறார்கள்) – வன்னி.

WALTHAMSTOW SHREE KARPHAHA VINAYAGAR TEMPLE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச ஆங்கில கல்வி நிலையம்







## திட்டம் 6 – இலவச கணனி பயிற்சி நிலையம் – முலம்காவில்.








## திட்டம் 6 இலவச கணனி பயிற்சி நிலையம் – ராமநாதபுரம் – கிளிநொச்சி







WALTHAMSTOW SHREE KARPHAHA VINAYAGAR TEMPLE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
**Saiva Munnetta Sangam (UK)**
*"Community Service Through Saiva (Hindu) Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel / Fax: 020 8514 4732
**Registered Charity No: 292085**
www.saivamunnettasangam.com E.mail: smsukinfo@gmail.com

*38th Year Management Committee*

*Vice- Patrons*
Dr. (Mrs) Indra Siva-yoham
Dr. V Balasegaram
Mr R Pathmanathan

*President & Trustee*
Mr Sathasivam Anandathiyagar

*Vice-President & Trustee*
Mr D Rabindramohan

*Hon. General Secretary & Trustee*
Mr M Indusegaran

*Hon. Treasurer & Trustee*
Mr S Niranjan

*Hon. Assist. Gen. Secretary & Trustee*
Mr V R Loganathan

*Trustees*
Mr S Balasingam
Mr W Nagaratnam
Mr S R Pasupathy
Mr V C Vamanananthan

*Building Project Secretary*
Mr G Parameswaran

*Examination Secretary*
Mr V Jegendirabose

*Membership Secretary*
Mr C Sithamparapillai

*Overseas Project Secretary*
Mr V R Ramanathan

*Publication Secretary*
Mr V Sivanarutchelvar

*Religious Secretary*
Mr M Ravindradas

*Social Service Secretary*
Mrs P Sabaratnam

*School Secretary*
Mr S Kugarajah

*Assistant Treasurers*
Mr S Thamboo

*Committee Members*
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mrs Vasantha Mahadevan
Mr S.Ratnarasa
Mrs Sri Ponnuthurai
Mr S Subramaniyam
Mr M Yasotharan

## சைவத்தமிழர்களின் கடமைகளை உலகிற்கு உணர்த்தும் பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் சைவ மாநாடு

சைவத்திருக்கோயில்களின் ஒன்றியம் கடந்த 18 வருடங்களாக (1998ஆம் ஆண்டிலிருந்து) சைவசமயத்தின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக சைவ மாநாடுகளை நடத்தி வருவது சமயத்தினூடாக சமூகத்திற்கு செய்யும் சேவைகளில் ஒன்றாக கருதி பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

இன்று மேலை நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் அவர்களுடைய சந்ததியினருக்கும் சைவசமய கோட்பாடுகளை அறிந்து, திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடக்கூடிய வகையில் திருமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், சைவசமய வினா-விடைப் பரீட்சைகள், பண்ணிசைகளையும், பேச்சுப் போட்டிகளையும் மட்டும் நடாத்துவதுமல்லாமல், அறிஞர்களையும் சைவப்பெரியார்களையும் வரவழைத்து அவர்களின் சொற்பொழிவுகள் மூலம் எமது மக்களுக்கு சைவ சமயத்தின் பெருமையையும் ஆன்மிகத்தின் அவசியத்தையும் அனைவரும் அறியும் வண்ணம் வழமைபோல இந்த மாநாடு வழிகோலும் என்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"ஊர் கூடி வடம் பிடித்தால் தேர் நகரும்" என்ற முதியோர் வாக்கிற்கமைய இலண்டனில் உள்ள சைவத்திருக்கோயிலகள் ஒன்றியம் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற அருள் வாக்கியத்தின் பொருளை எமது இளம் சமூகத்தினர்க்கு உணத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

உயர்ஞானமும் உண்மையான உழைப்பும் இனத்தின் மேம்பாட்டிற்கு தேவையான நிபந்தனைகளாகும். இதனை வழிநெறிப்படுத்தும் பணியை திருக்கோயில்களின் ஒன்றியம் ஏற்று செய்து வருவதால் எதிர்வரும் காலங்களில் மேலும் பல நல்ல காரியங்களை செய்ய இந்த மாநாடு ஊன்று கோலாக அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

பிரபஞ்சத்தை ஆளும் இறைவன் கொண்டிருக்கும் பேராற்றலை நாம் உணர்வதற்காக பல உருத்திருமேனியாகவும், மகான்களாகவும் உருவமாகி எம்மையும் இவ்வுலகையும் காத்து நிற்கும் இறைவன் வாழும் ஆலயங்கள் ஒன்றாகச் சேர்ந்த சைவத்திருக்கோயில் ஒன்றியம் நடாத்தும் 16வது ஆண்டு மாநாடு சிறப்பாக நடைபெற சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரரின் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

மா.இந்துசேகரன்
கௌரவ பொதுச்செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலந்தனில் வந்த நீள் கழல்கள்

## அருள்மிகு சிதம்பரேஸ்வரர் ஆலயம்



மதுரை நகர்த் தெருவெல்லாம் விண்ணோரும் போற்றும் திருவடி நோக விறகு விற்ற பெருமான், வைகைநதிக் கரை வெய்யிலில் மண் சுமந்த மெய்யன் எங்கள் அன்புக்குக் கட்டுண்டு சங்கக் கட்டடத்தில் பொன் வேய்ந்த அழகு மண்டபத்தில் ஆனந்தக் கூத்தனாக இருந்து அருள் செய்து வருகிறான்.

'வாசித்துக் காண ஒணாதது பூசித்துக் கூட ஒணாதது வாய்விட்டுப் பேச ஒணாதது நெஞ்சினாலே மாசர்க்குத் தோண ஒணாதது' எனத் திருப்புகழில் புகழப்படும் இறைவன் அடியார் விரும்பி அழைத்தால் தானே வந்து எமது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்யும் தன்மையன் என்பதற்குச் சான்றாகத் திகழ்வது சங்கத்தின் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் ஆலயம்.

'சுந்தர வேடத்து ஒருமுதல் உருவுகொண்டு இந்திர ஞாலம் போல் வந்தருளி' என மணிவாசகர் அதிசயிக்கும் சிவபெருமான் எம்மிடையே கோயில் கொண்டு எங்கள் வழிபாட்டை ஏற்று அருள் செய்யும் திருக்கோயிலாகத் திகழ்கிறது எங்கள் சங்க ஆலயம்.

ஒரு குழந்தையின் கையில் பொற் கிண்ணம் போல் இவ்வரிய திருவருள் திறத்தை அறியாமலும், இங்கு சிறப்பாக இடம் பெற்று வருகின்ற ஆறு நடேசர் அபிஷேகங்களை இன்னும் காணாமலும் அடியார்கள் இருக்கின்றார்களே என நினைந்து மனம் வருந்தி உங்களை இச்சந்நிதிக்கு அன்புடன் அழைக்கின்றோம்

"மை இலங்கு நல் கண்ணி பங்கனே
வந்து எனைப் பணிகொண்டபின் மழக்
கை இலங்கு பொன் கிண்ணம் என்று அலால்
அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்
மெய் இலங்கு வெண் நீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார்
பொய்யில் அங்கு எனைப் புகுதவிட்டு நீ
போவதோ சொலாய் பொருத்தம் ஆவதே" (திருவாசகம், ஆனந்தா கீதம்)

மெய்ம்மை அன்பர்கள் மெய்ப் பொருள் நாடுவது போல் நாமும் நாடிப் பெறுவோம் நடராஜப் பெருமானின் ஆனந்தத் திருவருளை, வாருங்களென உங்களை அழைக்கின்றோம்.

ச. ஆனந்ததியாகர்
சதாசிவம் ஆனந்ததியாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவொளி வளையம்

# ENLIGHTENMENT CIRCLE

"Empowering Humanity Through Yoga"

2 Salisbury Road, Manor Park, London E12 6AB

**Enlightenment Circle is an arm of Saiva Munnetta Sangam (UK) (Charity Ref. 292085) with an aim to provide basic awareness of the science of Yoga to the fellow human beings. We also strive to serve people in need of basic help for day to day living in any part of the world. Types of projects successfully completed in the north and east of Sri Lanka to date with the indicative number of beneficiaries.**

## Tube Wells



In Vannei over 3,000 people benefited

## Cataract Operation Camp



In Vannei over 100 people benefited

## School Library facility



In Vannei over 1,200 children benefited

## A/L Students Education Assistance



In Kalmuni 10 children benefited

## Flood Relief Effort in the North & East



In North & East over 3,300 people benefited

## Bicycles for School Children



In Vannei over 10 students benefited



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Food for Mentally Challenged Children



In Vavunia 100 children benefited

## Poultry Farming for Widows



In Vannei over 5 families benefited

## Water Pumps for Widows



in Vannei over 20 families benefited

## Poultry Farming for Elders



In Vannei Over 40 families benefited

## Solar Lamps



In Vannei 50 families benefited

## Cloths Distribution



In North & East over 2,000 people benefited

## Tailoring Initiative for Women



In Vannei over 5 families benefited

## Educational Materials for Students



In Vannei over 100 children benefited



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SRI MERUPURAM PATHIRAKAALI AMMAN TEMPLE
# ஸ்ரீ மேருபுரம் மஹா பத்ரகாளி அம்மன் தேவஸ்தானம்

வோல்தம்ஸ்ரோ, இலண்டன்.
271 Forest Road, Walthemstow, London E17 6HD

## சைவ மகா நாடு மேன்மேலும் சிறக்க.......



மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

சகல புவன மாதாவாக விளங்குகின்ற எனதன்னை ஸ்ரீ மேருபுரம் மஹா பத்ரகாளி அம்பாளின் திருவடிகளை பணிந்து.

பிரித்தானியாவில் சைவசமயத்தின் பலத்தினை ஓர் நிழலில் நிறுத்தி அளப்பெரும் சேவையினைச் செய்து வருகின்றது சைவத்திருக்கோவில் ஒன்றியம். ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை இயன்றளவு சிறார்களை சைவசமயத்தில் ஈடுபடுத்தி அவர்களுக்கிடையிலான போட்டிகளை நடாத்தி ஊக்குவிப்பது மட்டுமல்லாது, சைவப் பெரியோர்களை கௌரவித்தல், மற்றும் சைவ மாநாடு நடாத்துதல் போன்ற கைங்கரியங்களை செய்வதில் பெருமையடைகின்றனர்.

நாம் எமது பாரம்பரியங்களையும், மரபுகளையும் பேணுவதைக் கட்டாயமான கட்டுப்பாடாக்கிச் செயற்பட வேண்டும். இயந்திர வாழ்க்கையில் உள்ள நாம், ஆன்மீக சேவையையும் பெரும்பணியாகக் கருதி, சேவையை ஆற்றுகின்ற சைவத்திருக்கோவில் ஒன்றியத்தின் செயற்பாடுகளை அறிந்து அவர்க ளோடு இணைந்து நாமும் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சைவத்திருக்கோவில் ஒன்றியத்தின் சைவமாநாடு சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல எனதன்னை ஸ்ரீ மேருபுரம் மஹா பத்ரகாளி அம்பாளின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து.

கயிலை, காளிதாஸன்
சிவஸ்ரீ லிங்க லோகநாதக்குருக்கள்
பிரதமகுரு, ஆலய ஸ்தானீகர்.
ஸ்ரீ மேருபுரம் மஹா பத்ரகாளி அம்மன் தேவஸ்தானம்
வோல்தம்ஸ்ரோ,
இலண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**
**என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)
61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org **Charity No: 1143043**

## வாழ்த்துரை

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருள் துணைநிற்க

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 16வது சைவமாகாநாட்டை நடத்துவதை முன்னிட்டு வாழ்த்துக் கூறுவதில் அகமகிழ்வு அடைகின்றோம். சைவ மகாநாட்டிற்கு வருகை தரும் தாயகத்து பேராசிரியர்கள், தமிழகத்து பேச்சாளர் பெருமக்களையும் வாழ்த்துகின்றோம். இம்மகாநாட்டினூடாக நடாத்தப்படும் சிறுவர்களுக்கான சைவசமய அறிவுப் போட்டியினூடாக நம் இளம் சந்ததியினரிடையே சமயம் சார்ந்த நல்லறிவும் தெளிவும் ஏற்படும் என்பது திண்ணம். புலம் பெயர் நாடுகளிலுள்ள அனைத்து ஆலயங்களும் விரத நாட்களை ஓரே நாளில் வேத சிவாகம மரபுகளுக்கேற்ப பஞ்சாங்க திதிகளை பின்பற்றுதல் ஓர் உயர்ந்த சிந்தனையாக அமையுமென்பது பலரின் விருப்பமாகும். அவ்வவ் நாடுகளிலுள்ள சூரிய உதய நேரங்களை எந்த பஞ்சாங்கம் சரியாக கணிக்கிறதோ அந்தப் பஞ்சாங்கத்தை அனைவரும் பின்பற்றுதல் யாவர்க்கும் நலமாகும். இம்மாநாட்டின் ஊடாக இதற்கான நல்லதொரு தெளிவை பெறமுடியுமென எதிர்பாக்கின்றோம்.

பஙசாங்கம் என்பது ஐந்து அங்கங்களை கொண்டது. விரத நிலமங்களை கணிக்கும் போது வேத சிவாகம விதிகளை உள்வாங்கியே விரதங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டும். அவ்வகையில் இதனை நன்கு ஆராய்ந்து பின்பற்றுதல் நலமாகும். பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் நடாத்தும் 16வது சைவ மகாநாடு சிறக்க என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்

என்பீல்ட் நாகபூசனி அம்பாள் ஆலயம்
சிவாச்சாரியர்கள்

தெய்வீகத் திருப்பணியில்
இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஈழபதீஸ்வரர் ஆலயம்
# Eelapatheeswarar Aalayam

**Charity No: 1125884**
Union Road, Wembley, Middlesex HA0 4AU
Tel: 0208 902 3238


## ஆசிச் செய்தி



லண்டனில் சைவமாநாடு ஒவ்வொரு ஆண்டும் இறைவனுடைய திருவருளினால் வெற்றிகரமாக இடம்பெறுகிறது. அந்தவகையில் 2015 ஆம் ஆண்டும் நடைபெறும் இந்த நிகழ்வு தமிழ் மக்களும் சைவமும் தளைத்தோங்க வித்திடும். ஒவ்வோர் மனிதனும் தன் சமயத்தையும் தன் மொழியையும் உயர்த்துவதிலும் முதன்மை பெற வைப்பதிலும் நாட்டம் கொள்கின்றான்.

அந்த வகையில், நமது செம்மொழியான தமிழ் கல் தோன்றா கடல் தோன்றாக்காலங்களின் முன்பு தோன்றியது. சைவசமயம் தன்னிகரற்றதும் தனிச்சிறப்பும் வாய்ந்தது. எந்த சமயத்திலும் இல்லாத வகையில் சைவசமயத்தில் பல நூல்கள் உள்ளன. புராணம் பதினெட்டு (18); உபபுராணம் பதினேழு (17). ஆகமம் (28), வேதம் நான்கு (4) இப்படி நம் சமய நூல்களை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அதுமட்டுமன்றி, சமய குரவர்கள் 63 பேர் பல பாடல்கள் மூலம் சமயத்தின் பெருமைகளை தேவாரத்திருமுறையாக பறைசாற்றியுள்ளனர். இந்தப் பெருமைகள் தமிழ் மக்களிடத்திலே விழிப்பு உணர்வை ஏற்படுத்தி மக்கள் அனைவரும் சைவத்தின் சிறப்பை அறிவதற்கு இந்த சைவமாநாடு ஊன்றுகோலாக அமைகிறது. இதனால் இச்சைவமகாநாடு பெரியளவில் மக்கள் மத்தியில் நடைபெற நாம் இன்னும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பல சைவ ஆலயங்களை புனரமைப்பதில் மட்டும் சைவத்தை உயர்த்தி விட முடியாது. ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் உணர்ந்து ஆன்மீக உலகில் பிரவேசித்தால் மட்டுமே சைவம் தளைத்து செழிப்புறும். சைவமாநாடு இம்மலரை வெளியிட்டு எமது தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் உலகமெங்கும் பரப்பவும் அதன் பெருமைகளை எடுத்து இயம்பவும் எனது மனமார்ந்த ஆசி செய்திகளை கூறுகிறேன்.

இங்கனம்.

**சிவாகம கிரியாநிதி, பிரதிஷ்டா சிவாகமபனு**
**சி சிவப்பிரம்ம ஸ்ரீ சுரேஸ்வர குருக்கள்**
அல்வாய் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
லண்டன் ஈழபதீஸ்வரர் குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழபதீஸ்வரர் ஆலயம்
# Eelapatheeswarar Aalayam

Charity No: 1125884
Union Road, Wembley, Middlesex HA0 4AU
Tel: 0208 902 3238

## சிறந்த கொடையாளி

பழங்காலத்தில் புகழ் பெற்ற சூதாடி ஒருவன் இருந்தான். சூதாடும் இழிதொழில் செய்து வந்த அவன் தேவர்களையும் அந்தணர்களையும் நிந்தித்து வந்தான். அவன் உலகின் எல்லாக் கெட்ட பழக்கவழக்கத்தையும் கைவரப் பெற்றவனாக இருந்தான்.

ஒருமுறை சூதாட்டத்தில் அதிக அளவில் பொருள் பெற்றான். இதனால் மனமகிழ்வுடன் ஒரு விலைமாதின் வீட்டிற்குச் சென்றான். திடீரென வழியில் விழுந்து நினைவிழந்தான். அவனுக்கு நினைவு திரும்பியதும் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தை உணர்ந்தான். தன் தீய வாழ்க்கையை எண்ணி வருந்தி மனத்தெளிவு பெற்றான். தூய மனதுடன் தன் கையிலிருந்த பொருட்களை சிவனுக்கு அர்ப்பணித்து விட்டு வீடு திரும்பினான். இதுவே அவன் தன் வாழ்க்கையில் செய்த புண்ணிய செயலாகும்.

காலம் தன் வேகத்தில் சென்று கொண்டிருந்தது. சூதாடியும் எமனுலகத்திற்கு அழைக்கப்பட்டான். அங்கு யமதர்மராஜன் அவனைப்பார்த்து "நீ நரகத்தில் மிகவும் கடுமையான வேதனைகளை அனுபவிக்க தகுந்தவன்" என்று கூறினார். அதற்கு சூதாடி "சுவாமி! நான் ஏதாவது புண்ணியம் செய்திருக்கக் கூடும் அல்லவா? தயவு செய்து அதன் பயனைப் பார்த்து தீர்ப்பு கூறுங்கள் என்று வேண்டிக்கொண்டான். சித்திர குப்தன் : "நீ இறப்பதற்கு முன் சிவலிங்கத்திற்கு சந்தனம் அளித்துள்ளாய். அதன் பயனாக மூன்று நாளிகை நேரம் சுவர்க்கத்தின் அரியணையில் இருக்க தகுதி பெறுகின்றாய்" என்றான்.

சூதாடி அப்படியானால் அதை முதலில் அனுபவிக்கின்றேன். பின் நரக வேதனையைக் கொடுங்கள் என்றான். இந்திரன் அரியணையை விட்டு இறங்கவே சூதாடி தேவலோகத்திக்கு அதிபதியானான். "இன்னும் மூன்று நாளிகை இருக்கிறதே!" சூதாடி சிந்தித்தான். சிவபெருமானை தவிர வேறு புகலிடம் இல்லை என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான். அவனுக்கு பொருள் மீது இருந்த நாட்டம் போய் தனது அதிகாரத்திக்கு உட்பட்ட பொருள்களை தானமளிக்கத் தொடங்கினான்.

சிவபக்தனான சூதாடி, ஐராவதம் என்ற யானையை அகஸ்தியருக்கும் உச்சைச்ரவா என்ற குதிரையை விசுவாமித்திர முனிவருக்கும் காமதேனு எனும் பசுவை வசிஷ்ட மகரிஷிக்கும் வழங்கினான். இது மட்டுமில்லாமல். சிந்தாமணி என்றும் இரத்தினத்தை காலவ மகரிஷிக்கும் கல்ப தருவை பறித்து கௌண்டின்ய முனிவருக்கும் அளித்து விட்டு இறங்கி சென்றான்.

இதனால் தேவேந்திரன் ஆத்திரமடைந்து யமதர்மராஜனிடம் இதை பற்றி முறையிட்டான். அதற்கு யமதர்மராஜன் "தேவேந்திர! தங்களுக்கு வயது அதிகமானதால் கிழவராகி விட்டீர்கள் ஆனாலும் அரசாங்க பற்று இன்னும் விட்டு போகவில்லையே! சூதாடியின் இச்செயலால் அவனுக்கு கிடைத்திருக்கும் புண்ணியம் நீங்கள் செய்த நூற்றுக்கணக்கான வேலைகளை விடவும் அதிகமாகிவிட்டது. தன் வசம் மிக பெரிய அதிகாரம் ஒப்படைக்கப்பட்டும் சிறிதளவும் கர்வம் ஏற்படாமல் நற்காரியங்கள் செய்வதில் ஈடுபடுபவனே மேலானவன்.

சூதாடி தான் முன்பு செய்த பாவபலனாக ஏற்பட்ட நரக வாழ்க்கையிலிருந்து விடுபட்டான். அடுத்த பிறவியில் அவன் மகாதபஸ்வியும் கொடையாளியுமான விரோசனனுக்குப் பலி என்ற பெயரில் மகனாகப் பிறந்தான்.

இங்ஙனம்
சி.சுரேஸ்வர குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SORNA KAMADCHI AMMAN TEMPLE-GREAT BRITAIN**
**சொர்ண காமாட்சி அம்மன் ஆலயம்-குறோளி-பிரித்தானியா**
**THE SIVA TRUST LTD – EST 2005**
**Unit B Stephenson Way, Three Bridges, Crawley RH10 1TN (01293619918)**

சைவசமயத்தினை வளர்ப்பதற்கு இசை ஒரு முக்கிய காரணியாக இருந்ததினை நாம் எமது மரபு வழியாக அறிந்துள்ளோம். சைவ அடியார்கள் யாவரும் இசையோடு பாடல்களை பாடி கோவில்களில் இறைவனை வழிபட்டார்கள். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் சம்பந்தன்" என திருஞான சம்பந்தர் போற்றப்பட்டார். "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என திருநாவுக்கரசர் பாடியிருந்தார். ஒன்பதாம் திருமுறையான "திருவிசைப்பா" பெயரியிலேயே இசையினைக் கொண்டிருந்தது.

இவைகளை கருத்திற் கொண்டு இம்முறை பிரித்தானிய சைவதிருக்கோவில்களின் 16வது வருட மகாநாட்டிற்கு இசையுடன் இணைத்து சைவ சமய சிறப்பினை எமது இன்றைய தலைமுறையினரிடம் எடுத்துச்செல்லும் நோக்குடன் பிரபல இசையமைப்பாளர் கங்கை அமரனையும், பிரபல கர்நாடக பாடகி நித்திய சிறி அவர்களையும் அழைத்து இம் மகாநாட்டினை சிறப்புறச் செய்யும் பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றிய அமைப்பின் அனைத்து முயற்சிகள் யாவும் சிறப்புடன் அமையவேண்டுமென குறோளி காமாட்சி அம்மன் அறங்காவலர் சபையின் சார்பாக வாழ்த்துகின்றோம்.

க. ஜெயரட்ணம்
செயலாளர்
சிவா அறக்கட்டளை சார்பாக

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Newmalden Murugan Temple

255 Burlington Road
kt3 4ne
Newmalden

02089424475
07972593664

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் தனது பதினாறாவது ஆண்டில் கால் பதிக்கும் இந்தத் தருணத்திலே அதனுடைய சேவைகளை மனதாரப் பாராட்ட வேண்டிய கடமைப்பாடு எங்கள் அனைவருக்கும் உள்ளது.

சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக அரும்பாடு பட்டுவரும் இவ் ஒன்றியம் ஈழவள நாட்டில் இருந்தும் இந்தியா போன்ற நாட்டில் இருந்தும் மிகப் பெரிய மேதாவிகளை இங்கு அழைத்து சொற்பொழிவுகள் பண்ணிசைகள் என சிறுவர் முதல் பெரியோர் வரை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு திறம்பட நடத்தி வருவது மிகவும் பாராட்டப்படக்கூடியது. அத்துடன் சமயப் போட்டிகள் பலவற்றை நடத்தி சிறுவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்து வருகின்றது.

பிரித்தானியாவில் இயங்கும் அநேகமாக ஆலயங்களை ஒன்றிணைத்து செயற்படும் இவ் ஒன்றியத்தின் பணி மென்மேலும் வரை வேண்டுமென நியூ மோல்டன் முருகனை வணங்கி எனது நல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்.
ஆலயம் சார்பாக
சிவஸ்ரீ சிவஞான இராஜசேகரக் குருக்கள்
(ஆலய ஸ்தாபகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF
TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407
www.londonsrimurugan.org

BOARD OF TRUSTEES
Mrs. L. Sivajoti (Chairman)
Mr. V.E. Palaniappan
Mr. G. Ramadass
Mr. R.C.A. Anpananthar
Mr. S. Narashiman

PRESIDENT
Mr. S. Sampathkumar

VICE PRESIDENTS
Mrs. S. Krishnasamy
Mr. R. Renganathan

SECRETARY
Mr. P. Dakshinamoorthy

ASST. SECRETARY
Mr. R. Panneerselvam

TREASURER
Mrs. P. Raguvaran

ASST. TREASURER
Mr. G. Sathiamoorthy

EXECUTIVE COMMITTEE
Mr. A. Gopal
Mrs. M. Gopalnathan
Mrs. Malliga Ramadoss
Mr. I. Muthu
Mr. R. Narayanan
Mr. G. Poominathan
Mrs. R. Ramachandran
Mr. Ravi Ramasamy
Mrs. R. Sekaran
Mr. M Sivam
Mr. R. Sukumaran
Miss. V. Thambyrajah
Mr. M. Thenappan
Mr. P. Uthayakumar

25.02.2015

Mr M Gopalakrishnan
Chairman
The Federation of Saiva (Hindu) Temples UK
200A Archway Road
London
N6 5BA

திரு கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு.

மனிதவாழ்க்கை செம்மையாய் நடைபெற்று ஆன்மாக்கள் பேரின்பமடைந்து முக்திபெற வழிவகுப்பது சமய கோட்பாடுகளாகும்.

மனதையும் உடலையும் நெறிப்படுத்தி நன்மை தீமைகளை ஆராய்ந்து பகுத்தறியச் செய்து பக்குவப்படுத்தும் சமயநெறிகள் வாழ்க்கையில் இன்றியமையாதவை.

இறைவன் உறைந்து அருள் சுரக்கும் ஆலயங்கள் வாயிலாக சமய உணர்வு மேலோங்கி வாழ்க்கை சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இலண்டனில் சமயப்பணியாற்றும் பல ஆலயங்கள் ஒன்றிணைந்து ஆண்டுதோறும் நடத்தும் சைவ மாநாட்டில் ஆன்மிகப் பெரியோர்களும் அருந்தமிழ் பேராசிரியர்களும் மக்களிடையே சமய நற்கருத்துக்களை எடுத்துரைத்து தெளிவுபடுத்தி வருகின்றனர்.

எதிர்வரும் 18.04.2015, 19.04.2015 தேதிகளில் நடைபெறும் 16வது சைவ மாநாடு சிறப்பாக நடைபெற்று மக்களுக்கு ஆன்மீக சிந்தனைகளை தூண்டி தெளிவுபடுத்தி பயன்பெற வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்

சி.சம்பத்குமார்

சிசம்பத்குமார்
தலைவர்
இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாக குழுவினர் சார்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF
TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407
www.londonsrimurugan.org

இறைவனால் அருளப்பட்ட மனித வாழ்க்கையிலே சரியை, கிரியை, யோகம் ஞானம் ஆகிய நான்கு வழிகளிலே இறையருளை அனுபவிப்ப தற்கும் இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்தை நுகர்வதற்கும் நாம் முயல வேண்டும்.



அறியாமையை அகற்றி ஆழ்ந்து சிந்தித்து மெய்யறிவால் தெளிவு பெற்று ஞான வழியிலும், ஆன்மார்த்த வழிபாடு, பரார்த்த வழிபாடு, பஞ்ச பூத தத்துவங்கள் கலந்த ஆலய வழிபாட்டு முறைகள் இல்லற துறவற வாழ்க்கையிலே அனுசரிக்கின்ற சடங்குகள். உலக நன்மைக்கான பெருவேள்விகள் தான தர்மங்கள் இவைகளால் கிரியை வழியிலும் உடலை வருத்தி தவமியற்றி ஆன்மீக சிந்தனைகளைப் பெருக்கி மனதை ஒரு நிலைப்படுத்தி இந்திரியங்களை அடக்கி ஞான ஒளிபெற்று பிரகாசிக்கச் செய்யும் யோக வழியிலும், இல்வாழ்க்கையிலே மாயையில் உழன்று "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என சிற்றின்ப வேட்கை தணிவித்து வாழும் பொழுதும் தான் கொண்ட நற்கொள்கையிலே மாறாமல் நின்று பஞ்சத்தின் கொடுமையினாலும் பசியில் வாட்டத்தினாலும் விதியின் சதியாயினும் வேந்தனின் ஆணையினாலும் தடைகள் பலவந்த போதும், பிறர்க்கு உதவுவதையும் தெய்வீக காரியங்கள் செய்வதையும் நிறுத்தாமல் உயிர் போனாலும் கொண்ட கொள்கை மாறாமல் வாழ்கின்ற சரியை வழியிலம் இறைவனைக் கண்டு அவனருளை அனுபவித்து அவன் திருவடிகளில் நிலைத்து நிற்பதே நாம் பெறும் பாக்கியமாகும்.

சைவ சமயத்தில் முக்திக்கு திறவுகோலான நான்கு வழிகளிலே தொண்டிற்கு சிறந்த சரியை மார்க்கத்திலே தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என ஔவையார் போற்றும் அளவிற்கு சிவனடியை எப்போதும் சிந்தித்து ஆலயத் துப்புரவியிலிருந்து அகத்திலேயே கோயில் கட்டி குடமுழுக்கு கண்டது வரையிலும். மலைமகள் முலைப்பால் உண்டு, முதலை உண்ட பாலனை மீட்டு, சுண்ணும்புச்சூளையில் சுட்டபோதும் ஐந்தெழுத்தின் பெருமை பாடி, பெற்ற மகளை அரிந்து சமைத்து, சேற்று மண்ணையே திருநீறாகக் கண்டு, பூஜைக்கான புஸ்பத்தை நுகர்ந்த மூக்கினை அறிந்து, குதிரை வாங்க வேண்டிய பொருளில் கோயில் கூட்டி மகிழ்ந்து, சிவனுக்காக சிவனடியாருக்காக சிவஞானத்திற்காக சிவசமயமாகிய சைவ சமயம் மேலோங்குவதற்காக ஜீவனையே அர்ப்பணித்து மகிழ்ந்த அடியார்களின் அருள் வரலாறே திருத்தொண்டர் தொகை விரிந்த பெரிய புராணமாகும்.

சைவ சமய வாழ்வியலே அற்ப சுகத்திற்கு இடமில்லை. ஆழ்ந்த அனுபவத்திற்கே பேரிடம். செய்வதை திருந்தச் செய்து பலனை எதிர்பாராது பக்திகொண்டு அன்பே சிவமாக எல்லாம் சிவமயமாக எத்தொண்டும் சிவத்தொண்டாக எக்கதியும் சிவகதியாக எவ்வழியும் சிவவழியாக வாழ்ந்து சிவனடி சேர்வதே பேரின்மாகும். பெரிய புராணத்திலே சிவனடியார்கள் எதிர்கொண்ட பெரும் சோதனைகளைக் கண்டு மலைப்போர் ஏராளம். ஆனால் வேதனைகளை தாங்கி சோதனைகளை வென்று நாதனையே நம்பி சாதனைகளை படைத்ததே அடியார்களின் சாதனைகளாகும்.

நாகரீகம் என்ற பெயரில் மேலைநாட்டு மாயையில் மயங்கி மூழ்கித் தவிக்கும் நாம் எல்லோரும் எதிர்வரும் 18ம் 19ம் திகதிகளில் நடைபெறவுள்ள சைவ மாநாட்டில் கலந்து அறிவுரைகளை மேட்டு சைவ சமய வாழ்வியலை அறிந்து புரிந்து தெளிந்து வாழ்வின் மேம்பட்டு சிறப்புற வேண்டி எல்லாம் வல்ல லண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் 16வது சைவ சமய மாநாடு சிறப்பாக நடைபெற்று அருளாளர்கள் மற்றும் ஆன்மீகப் பேரறிஞர்களின் ஆழ்ந்த தெய்வீக சிந்தனைகள் மக்கள் மனதிலே பதிந்து அனைவரின் வாழ்க்கையும் மேலோங்கவேண்டி எல்லாம் வல்ல லண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

**இறைபணியில்**
**கைலை சிவஸ்ரீ நாகநாதசிவம் சிவாச்சாரியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LAKSHMI NARAYANA TRUST
### London Sri Mahalakshmi Temple

**Charity Reg. No: 292677**
272 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8552 5082 Fax: 020 8552 5315
Web: www.srimahalakshmitemple.net
e.mail : info@srimahalakshmitemple.net

By Serving the devotees
we serve God

**Patron**
Sri P.R. Ramasubrahmaneya Rajha

**Senior Advisor**
Mr. S.N Perumal

**Board of Trustees**
**Senior Trustee**
Mr. V.N.Alagirisamy

**President**
Dr Radhakrishnan V

**Vice-President**
Mr. Thayalasamy S

**Chairman**
Mr. A Rengamannar

**Vice-Chairman**
Mr. K Sreenivasan
Mr. Subburam S

**General Secretary**
Mr. K. Sivarupan

**Assistant Secretary**
Mr. Sethuraman S

**Treasurer**
Mr. S. Vijayakumar

**Assistant Treasurer**
Mr. Navaneethakrishnan R

**Public Relations Officers**
Mr. S.Seetharaman

**Cultural Secretary**
Ms. Kumari Selliappan

**Temple Office Manager**
Mr. R. Mohanaprakas

**Communications**
Mr. J.Thiyagarajan
Mr. R. Kannan
Mr. M. Sudarsanan

21-03-2015

Mr M. Gopalakrishnan
Chairman
The Federation of Saiva (Hindu) Temples U.K

இங்கிலாந்து இந்து சைவ கோவில்களின் கூட்டமைப்பு நடத்தும் பதினாறாவது சைவ ஆண்டு மாநாடு இந்த வருடம் ஏப்ரல் 18ம் தேதி மற்றும் ஏப்ரல் 19ம் தேதி வெகு சிறப்பாக நடைபெற எமது ஆலயத்தின் ஸ்ரீ மகாலட்சுமி நாராயணரை வேண்டி வணங்குகிறோம். இந்த சைவ மாநாட்டில் பெரியபுராணம் மற்றும் சைவ வாழ்வியல் குறித்த கருத்தரங்கம் நடைபெற உள்ளது மிகவும் மகிழ்ச்சிகரமான விஷயம் சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில் எம்பெருமான் சிவன் குறித்து புகழும் போது

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அழகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

என மிகவும் அருமையாக எல்லோரும் பாடி மகிழ எழுதி இருக்கிறார். இந்து சமயத்தில் சைவமும் வைணவமும் இரண்டு கண்கள் போன்றவை எனினும் அன்புதனை கற்பிக்கும் ஒரே சிந்தனை கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. கச்சியப்ப சிவாச்சாரியார் சைவ நீதி உலகெமெல்லாம் சிறப்புற்று இருக்க வேண்டும் என இந்த கீழ்க்கண்ட பாடலில் சொல்லும்போது இவ்வுலகின் மக்கள் அனைவரின் நலனுக்காகவும் வேண்டுவது வெகு சிறப்பு

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்


இலண்டன் ஸ்ரீ மகாலட்சுமி புதிய ஆலய நிர்மாணப்பணி

இதுதான் சைவம் சொல்லும் வாழ்வியல் "எல்லா உயிரும் இன்புற்று இருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றும் யாமறியேன் பராபரமே" என்பது உலக உயிர்களின் மீதான அன்பின் வெளிப்பாடு அத்தகைய பல சிறப்புகள் பெற்று விளங்கும் சைவ நீதி குறித்த மாநாடு வெற்றிபெற வாழ்த்தும் இத்தருணத்தில் ஒரு மகிழ்வான விஷயத்தை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். எமது புதிய ஆலய நிர்மாணப்பணி அனைத்து பக்தர்கள் உதவியால் வெகுசிறப்பாக கடந்து ஒரு வருடமாக நடந்து வருகிறது இந்த புதிய ஆலய நிர்மானப்பணி தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெறவும் இந்த புதிய ஆலய நிர்மானப்பணியில் தங்கள் ஒவ்வொருவரது பங்களிப்பு இருக்க வேண்டும் என அனைத்து ஆலய நிர்வாகிகள், பக்தர்கள் ஆதரவை வேண்டி உலக மக்கள் மற்றும் அனைவரும் அமைதியுடன் எல்லா வளமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

V Radhakrishnan
Dr Radhakrishnan V
President
Lakshmi Narayana Trust

LAKSHMI NARAYANA TRUST
London Sri Mahalakshmi Temple
Charity Reg. No: 292677
272 High Street North, Manor Park, London E12 6SA, UK
Tel: +44 20 8552 5082 Fax: +44 20 8552 5315



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Shree Sakthy Ghanapathy Temple

**Board of Trustees**

**Chairman**
**K Kanendran**

**Vice Chairman**
**T Pangayetselvan**

**Secretary**
**C Kailaya – Vasan**

**Asst. Secretary**
**K Jeyakumar**

**Finance**
**K Paramanathan**

**Temple Opening Hours**

**Sunday - Thursday**

**8.30am – 2.00pm &**
**5.00pm – 9.00pm**

**Friday & Saturday**

**8.30am – 9.00pm**

**Address**

**21 Brigstock Road**
**Thornton Heath**
**Croydon**
**Surrey**
**CR7 7JJ**

**Tel: 020 8689 3466**

**Chief Priest**

**K Prakash Kurukkal**

**Registered Charity**
**No: 1141833**



Chairman
The Federation of Saiva (Hindu) Temples UK
2-4 Bedford Road,
Walthamstow,
London E17 4PX

## வாழ்த்துச் செய்தி

***"திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்***
***பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்***
***ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை***
***காதலால் கூப்புவர் தம் கை"***

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களால் மறக்கமுடியாத ஒன்று தெய்வ வழிபாடுதான். தமிழ் மக்கள் தாங்கள் வாழும் பகுதியில் ஆலயம் அமைத்து வாழ்பவர்கள்.

அந்த வகையில் பிரித்தானிய ஆலயங்களை ஒன்று சேர்த்து தனது 16வது சைவ மகாநாட்டை கொண்டாடும் பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டும் இவ் வேளையில் அவர்கள் பணி மேலும் தொடர தங்களுக்கு எல்லாம் வல்ல சக்தி கணபதி என்றும் துணை நிற்பார் என வாழ்த்துகிறோம்.

க பரமநாதன்
அறங்காவலர் சபை, செயற்பாட்டுக் குழு & சிவாச்சாரியார் சார்பாக
05 ஏப்ரல் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் - நொட்டின்கம்

Sri Thurkkai Amman Temple - Nottingham
10A West Crescent, Beeston, Nottinghamshire, NG9 1QE, United Kingdom
Tel – 0115 967 7751 Email - beeamman@gmail.com Web - www.nottinghamamman.org

**Chairman:**
Mr.J.Balasundaram

**Secretary:**
Mr.S.Krishanand

**Treasurer:**
Mr.M.Vijayathas

**Asst. Secretary:**
Dr.N.Balendran

**Asst. Tresurer:**
Mr.P.Thiyagarajah

**Committee Advisor:**
Mrs.V.Balendran

**Bank:**
Natwest Bank Plc

28/03/15

சைவ மக்கள் தாங்கள் செல்லும் இடங்களில் தங்களது வழிபாட்டு தொடர்புகளையும் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர். மேலை நாட்டு வாழ்கையின் நெருக்கடிகளுக்குள் மன நிம்மதி தருவது ஆலயங்கள் என்பது பொதுவான முடிபாகும்.ஒவ்வொருவரும் சந்தித்து ஆன்மீக ஒன்றுகூடலை ஏற்படுத்துவதுடன். தங்களை அறிமுகம் செய்து இன்ப துன்பங்களை பரிமாறும் இடமாகவும் ஆலயங்கள் அமைகின்றன.

இந்த வகையில் நொட்டிங்காம் என்னும் அழகிய கிராமத்தில் துர்க்கை அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் நித்திய நைமித்திய வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.அத்துடன் லண்டனில் உள்ள பல ஆலயங்களுடன் இணைந்து விரத நாட்களையும் ஒன்றாக செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தில் லண்டனுக்கு என கணிக்கப்படும் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி வழிபாடுகளை உரிய முறையில் நடத்தி வருகிறோம்.

சைவ மக்களுக்கு தேவையான நல்ல கருத்து பரிமாற்றம் உள்ளடங்கிய மகா நாட்டினை பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் நடத்துவதையிட்டு பெருமை அடைகிறோம்.இந்த பதினாறாவது மகாநாடு சிறப்புற நடைபெறுவதுடன் அனைத்து ஆலயங்களும் ஒரே நாளில் பிரதான விரதங்களை பண்டிகைகளை செய்து மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டு துர்க்கையம்மன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கிறோம்

ஆலய நிர்வாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழக்கந்தன் திருக்கோவில்

## EELLAKKANTHAN THIRUKKOVIL

2, Lythalls lane, Coventry, CV6 6FG, Tel; 02476663554

Charity No 1145652 Email; eellakanthan 2 @gmail.com

பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியத்தின் பதினாறாவது சைவ மகாநாடு நடைபெறுவதை முன்னிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.ஆலயங்கள் பல இருந்தாலும் அவை எல்லாம் ஒரே நாளில் விரத விசேடங்களை செய்ய வேண்டும் என்னும் முயற்சியில் தமது பணியை சைவத் திருக்கோவில் ஒன்றியம் தொடர்ந்து செய்து வருகிறது.நாமும் இந்நாட்டிற்கு என்று கணிக்கப்படும் திருக்கணித பஞ்சாங்க முறையைப் பின்பற்றி எமது ஆலயத்திலும் விசேட தினங்களை செய்து வருகிறோம்.

எமது சைவ சமய ஆலய வழிபாடுகள் அதற்கான காரணங்கள் போன்றவைகளை நாம் எல்லோரும் அறிந்து கொள்வதற்கு இவ்வாறான மகாநாடுகள் பெரிதும் உதவுகின்றன.இம்மகாநாடு சிறப்படையவும் வருங்காலத்தில் இளைய சமுதாயம் சைவ சமய ஈடுபாட்டுடன் தமது வாழ்வை வளம்படுத்தவும் ஈழக்கந்தன் இன்னருள் வேண்டுகிறோம்.

இவ்வண்ணம்

ஆலயநிர்வாகத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

# Coventry Shri Sidhi Vinayagar Devasthanam

Registered Charity in England and Wales Number: 1144183
Registered Office: 65A George Elliot Road, Coventry, CV1 4HT, United Kingdom



**Board of Manegement**

**Chirman**
**Mr.S.Raveendran**

**Vice Chirman**
**Dr.S.Bavananthan**

**Secretary**
**Mr.A.Pathmanathan**

**Vice Secretary**
**Mr.K.Selvsratnam**

**Tressurur**
**Mr.S.Peranantham**

**Temple Supervicer**
**Mr.K.Kanesalingam**

**Culturul Actievities**
**Mr.V.Raveendran**

**Chief priest**
**VeeS.S.Kumaragurukkal**


சிவனேயச்செல்வர்களே!

பெரியபிரித்தானியாவின் மத்திய பிரதேசமாய் விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க கொவன்றி மாநகரின் நடுவில் கொவன்றி ஆற்றங்கரையோரமாய் "ஸ்ரீ சித்திவிநாயகர்" என்ற திருநாமம் பூண்டு பெருந்திடகாத்திர ரூபமாய் வேண்டுவார்க்கு வேண்டுவதை அருளும் திருக்கோலத்தில் விநாயகப்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ளார்.

2010ம் ஆண்டு ஆரம்பமான இத்தேவஸ்தானம் இன்று தனக்கென ஒரு பாதையை வகுத்துக்கொண்டு சமய சமூக நல்லினக்க சேவைகளைச் செய்துவருகின்றது பெரியபிரித்தானியாவின் அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையான இத்தேவஸ்தானத்தால் வாரந்தோறும் இலவச சைவத்தமிழ் வகுப்புக்கள் நடைபெறுவதோடு கலை வகுப்புக்களும் கலாச்சார விழாக்கங்களும்,பட்டறைகளும துறைசார் போட்டிகளும்,கலைவிழாக்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

சித்திரைமாதத்தில் பத்து தினங்களும் பிரம்மோற்சவமும் தேரோட்டமும் மிகச்சிறப்பாக நடைபெறும் .பண்டிகைகளில் பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி முதலியனவும் விரதங்களில் மஹாசிவராத்திரி,, ஆடிப்பூரம்,,, கௌரிவிரதம் ,வரலஷ்மி,, .கந்தசஷ்டி,ஐயப்பமண்டலபூஜை, பிள்ளையார் கதை , நவராத்திரி, ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி. திருவெம்பாவை முதலியன அனுஷ்டிக்கப்படுவதுடன், ஆவணி விநாயகர் சதுர்த்தி மிகக்கோலாகலமாக கொணடாடப்படும். தினமும் ஐந்து காலப்பூஜையுடன் மாதாந்த வழிபாடுகளும் சிறப்பாக நடைபெறும்வதுடன் ஆவணியில் ஏகதின இலட்சார்ச்சனையும்.புரட்டாதியில் மஹாசண்டிஹோமமும் பக்தி பூர்வமாக நடைபெறும்.

இன்று மத்திய பிரித்தானியாவின் முன்னோடியான கொவன்றி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம் பிரித்தானியாவின் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்துடன் இனைந்தது செயல்படுவதையும் மிகப்பெருமையாகக்கொள்கின்றது. ஒனறியத்தினால் முன்னெடுக்கப்படும் சேவைகள் மிகப்பாராட்டுக்குரியனவே. ஆண்டுதோறும் நடாத்தப்படும் மஹாநாடு போற்றுதற்குரிய சிந்தனை மட்டுமன்றி மஹாநாட்டு மலர் காலத்தின் பதிவுத்தேவையுமாகும்.

சைவமஹாநாடு தொடர்ந்து தடையின்றி நடைபெற்றவும் 16வது சைவமஹாநாட்டு மலர் சிறப்புறவும் எம்மையன் கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர்ப்பெருமானின் பாதம்பணிந்து வாழ்த்து கூறுகின்றோம்.

'சித்தி விநாயகனைச் சிந்தையில் நினைக்க செயல்கள் யாவும் சித்தியாகும்'

சுபம்

.. இவ்வண்ணம்

தேவஸ்தான குருக்கள்

அறங்காவலர்கள், பரிபாலனசப அடியவர்கள்

Telephone: +44(0) 2476 632211 Email: info@sidhivinayagar.org.uk www.sidhivinayagar.org.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# லிவர்பூல் விக்னவிநாயகர் ஆலயம்

# LIVERPOOL GANESH TEMPLE

**Gate between No 11 and 15, Delfby Crescent, Kirkby L32 8TN**
**Tel:-01515467611 | www.liverpoolkirkbyganeshtemple.org.uk**
CHARITY REG. NO.1147647

பிரித்தானியாவின் மத்திய பிரதேசமாய் விளங்கும் சிறப்பு மிக்க லிவர்பூல் மாநகரிலே கெர்பி என்னும் இடத்தில் **பிரித்தானியாவின் மத்திய பிரதேசமாய் விளங்கும் சிறப்புமிக்க லிவர்பூல் மாநகரிலே கெர்பி என்னும் இடத்தில் உலகமக்களாகிய அடியார்களுக்கும் மற்றும் உலக ஜீவராசிகளுக்கும் பத்துக் கைளோடு தசபுஜ விநாயகர் என்ற திருநாமத்தோடு எழுந்தருளி கேட்பவர்க்கு கேட்டபடி கேட்டதையெல்லாம் வாரி வழங்கி அருள்பாலித்து கொண்டிருக்கும் விக்னவிநாயகர் ஆலயத்தில் மே மாதத்தில் பதினொறு நாட்கள் திருவிழாவும், வருடப்பிறப்பு, பொங்கல், கந்தசஷ்டி, கௌரி நோன்பு, மகா சிவராத்திரி, விநாயகர் கதை, ஆவணி விநாயகர் சதுர்த்தி என அனைத்து விசேடங்களும் செவ்வனே நடைபெற்று வருகிறது. அத்துடன் இரண்டுகால நித்திய பூஜைகளும், மாத வழிபாடாகிய கிருத்திகை, சதுர்த்தி, பிரதோஷ பூஜைகளும் நடைபெறுகின்றது.** இவ்வாறு பல வழிபாடுகளை லண்டனில் உள்ள பல ஆலயங்களுடன் சேர்ந்து இந்நாட்டு பஞ்சாங்க கணிப்புக்கு ஏற்ப நாமும் செய்வதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

குறிப்பாக திருக்கணித பஞ்சாங்க கணிப்பினை நாமும் பின்பற்றி சரியான முறையில் விரத அனுஷ்டானங்களை பின்பற்றுவதை விரும்புகிறோம்

லண்டனில் உள்ள ஆலயங்களுடன் லண்ட னுக்கு வெளியில் உள்ள ஆலயங்களும் சேர்ந்து பிரித்தானிய சைவ திருக்கோவில் ஒன்றியமாக இணைந்து சிறப்பாக நடைபெறும் பதினாறாவது சைவ மகாநாடு நற்பலன் அளிக்கவும் இளைஞர்களுக்கு நல்வழி சமய அறிவு முதலியன வளர்க்கவும் வாழ்த்தி மகிழ்கிறோம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
வேல்ஸ் ஸ்ரீ கல்பகவிநாயகர் தேவஸ்தானம்
WALES SRI KALPAGA VINAYAKAR DEVASTHAANAM
UNIT 43, ADDISON ROAD, PORT TALBOT, SA12 6HZ
TELEPHONE : 01639779872 / 07870831417
Wales Sri Kalpaga Vinayagar Temple
Web: http://kalpaganesh.co.uk/
கற்பகத்தின் கருணை பெற பொற்பதத்தை நாடுமின்!
கல்பகா
Sri Kalpaga Hindu Cultural Association

சைவ மாநாட்டு ஆசி செய்தி

ஆண்டுதோறும் சைவத்தின் பெருமையையும் தொன்மையையும் உலகிற்கும் நம் எதிர்கால சந்ததிக்கும் பறைசாற்றுகின்ற அருமந்த அறப்பணியை பிரித்தானிய சைவத்திருக்கோயில் ஒன்றியத்தினரால் காலத்தின்தேவை கருதி செய்யப்படும் ஒரு நற்பணியாகும் அதிலும் இந்த ஆண்டு பெரிய புராணமும் சைவ வாழ்வியலும் என்ற தலைப்பில் புராணங்களின் புரிதலை இளம்சமுதாயத்திற்கு ஏற்படுத்தும் வகையில் நடாத்துவது இறையருளேயாகும் அப்படியான இந்த மாநாடானது சிறப்பாக நடைபெற வேல்ஸ்ஸ்ரீ கல்பக விநாயகர் பாதம் பணிந்து நல்லாசிகூறி மகிழ்கிறோம்

மேன்மைகொள்சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இறைபணியில்

சிவஸ்ரீ ச குமாரசாமி
லம்போதரக்குருக்கள்

வேல்ஸ்ஸ்ரீ கல்ப்பக விநாயகர் ஆலய ஸ்தாபகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டில் இதனைச் செய்வோமென ஆண்டவனுக்கு அறிக்கையிடுவோம்!

க.வி. கணேசமூர்த்தி – செயலாளர், சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம்

சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் எல்லாச் சைவக்கோயிலுக்குமான பொதுமையான வழிபாட்டு முறைமை ஒன்றைப் பின்பற்றுவதற்காக சைவஆலய அறங்காவலர்கள் சிலர் சேர்ந்து தொடங்கிய சிவப்பணி. வேறு விதமாகச் சொன்னால், எல்லாச் சைவக்கோயில்களும் ஒருங்கிணைந்து சைவத்தையும் தமிழையும் புலத்தில் வளர்ப்பதற்கான நோக்குகளையும் போக்குகளையும் திட்டமிடவும் செயற்படுத்தவும் தோற்றுவிக்கப்பட்ட குடைஅமைப்பு (Umbrella Organisation). இலண்டன் சைவத்திருக்கோயில் ஒன்றியம். அன்று ஒருசிலரின் முயற்சியால் ஒருசில கோயில்களுடன் தோற்றுவிக்கப்பட்ட இவ்வமைப்பு இன்று பலரின் முயற்சியுடன் பல ஆலயங்களின் இணைப்புடன் பலம்பெற்று வருவதும் இறையருளே.

அன்புற்றமர்தலே சிவம் என்று தன்னலமற்ற அன்பினை வெளிப்படுத்துவதுதான் சிவத்தை அடைவதற்கான ஒரேவழி என்று திருமூலர் வகுத்த இலக்கணத்திற்கு தெய்வச்சேக்கிழார் இயம்பிய இலக்கியம்தான் பெரியபுராணம். எனவே பெரியபுராணத்தின் வழியான சைவவாழ்வின் முதலடியே இந்த நான் என்கிற அகங்காரத்தை ஒடுக்குவதற்கு ஒவ்வொருவரும் இறைவனைச் சார்ந்து வாழப்பழகுவதாக அமைகிறது. நான் என்றில்லாது நாங்கள் என்கிற நிலையைத் சைவத்திருக்கோயில் ஒன்றியத்தில் இணைவது ஏற்படுத்துவதால் இந்த ஒன்றிய அமைப்பே நான் என்ற அகங்காரத்தை ஒடுக்குவதற்கான இறையாற்றலை எமக்களிக்கிறது. அதேவேளை தனிமனித வாழ்விலும் பொதுமனிதவாழ்விலும் கூடிவாழ்தலின் கோடி நன்மையை வளர்க்கிறது.

பெரியபுராணத்தைச் சேக்கிழார்வழி இறைவன் அருளியதன் நோக்கமே உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் ஆகிய இறைவனை அறிந்து, அவனருளால், என்றும் இன்பம் பெருகும் பெருவாழ்வு உலகெலாம் நிலவவேண்டும் என்பதற்காகவே என்பதனைப் பெரியபுராணத்து முதலாவது பாடலும், கடைசிப்பாடலும், மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்றன. இங்கு உலகெலாம் என்ற சொல் ஆகுபெயராக உலகெலாம் வாழும் மக்களைக் குறிக்கிறது. எனவே பெரியபுராணம் உலக மக்கள் தொகுதி முழுவதற்குமான இறையன்பை இறைநம்பிக்கையை இறைதொண்டை, மனிதாயத்தை, உண்மையை, நன்மைத்தனத்தை, அழகுவாழ்வைக் குறித்தே பேசுகின்றது. பௌத்தமதத்தில் இருந்தவாறே நாயனாராக மாறிய சாக்கிய நாயனாரையும், சைவத்தின் பெருமைபேசிக்கொண்டே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலநாயனாரையும் பற்றிய குறிப்புக்களை விளக்கமாகத் தந்த நூல் பெரிய புராணம்தான். ஆகவே பன்மொழி பல்கலாச்சாரச் சூழலில் வாழும் நாமும் சேக்கிழார் காட்டிய வழியில் சைவத்தில் உறுதியாக நின்று கொண்டு அனைத்து மக்களையும் சாதி, மத, மொழி, நிற பிரதேச வேறுபாடுகளைக்கடந்து ஆண்பெண் என்கிற பால்நிலைப்பேதங்களைக் கடந்து உள்ளவர் இல்லாதவர் என்கிற வர்க்கபேதங்களைக் கடந்து, படித்தவர் படிக்காதவர் என்கிற பாகுபாடுகளை விடுத்து அன்பே சிவம் என்ற உணர்வுடன் நம்மை வாழப்பழக்குவதுதான் சைவவாழ்வு.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆணவமறைப்பால் எதனையும் நானே செய்தேன் என்னும் அகங்கார நிலையில் வாழ்தலே அவனால் கடவுளை உணர முடியாததிற்கு முதற்காரணம். இதில் இருந்து விடுபடுவதற்குச் சேக்கிழார் வாயிலாக எம்பெருமானே அருளிய நூல் பெரிய புராணம். இந்த நான் என்ற அகங்காரத்தை ஒடுக்கிடுவதற்கு இறைவன் ஒருவனைச் சார்தல் மட்டுமே வழியென்பதை எடுத்துச்சொன்ன நூல், இதனை மையப்படுத்திச் சைவவாழ்வைச் சிந்திக்கையில் நாம் ஒவ்வொருவரும் எந்த அளவுக்கு நான் என்கிற அகங்காரச் செயற்பாட்டினைக் குறைத்துள்ளோம். இன்னும் குறைப்பதற்கு எந்த அளவுக்கு இறைவனைத் துணைக்கு அழைத்து வாழ்கின்றோம் எனச் சிந்திக்கும் நேரம் இம்மாநாட்டுக் காலம்.

மேலும் எனது என்று சொந்தங்கொண்டாடும் மமகாரத்துடன், எதனையும் நானே அனுபவிக்க வேண்டும் என்பதே எந்த மனிதனுக்கும் பேராசையாகவும் முடிவற்ற தேவையாகவும் மாறுகிறது. இதுவே சமுகஅமைதியீனங்கள் தனிமனிதவாழ்விலும் பொதுவாழ்விலும் இடம்பெறுவதற்கு அடிப்படைக்காரணமாகிறது. தனிமனித நிலையிலும் சமுகநிலையிலும் இதில் இருந்து வெளிவருவதற்கும், வழிகாட்டுவதற்காகவும், தமிழ் மண்ணில் சிவோகம்பாவ நிலையில் வாழ்ந்த அருளாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பி அருளியதே திருத்தொண்டர் திருவந்தாதி. சேக்கிழார் பெருமானின் இந்த சிவனடியார்களின் திருத்தொண்டர் புராணம் என்பது திருத்தொண்டர் தொகைக்குப் புடைநூலாகவும், திருத்தொண்டர் அந்தாதிக்கு வழிநூலாகவும் அருளப்பட்ட நூல். இது நாம் மரபினைப் பேணி தொன்மையின் தொடர்ச்சியாக வாழவேண்டும் என்கிற நம்முன்னோர் வழியினை நமக்குத் தெளிவாக்குகிறது.

ஆலயவழிபாட்டில் முக்கியமான பகுதி பொதுவழிபாடு. இதனை இந்நேரத்தில்தான் செய்ய வேண்டும் என்பது பஞ்சாங்கங்களின் வழி விதிக்கப்பட்ட நெறிமுறை. நாசா விண்வெளி ஆய்வின் விளைவாகக் கோள்களின் நிலை நிரந்தரமற்றது இயங்குத்தன்மையானது என்பது விஞ்ஞான விளக்கம். இதனை அன்றே வெளிப்படுத்திக் கணிக்கப்பட்ட விஞ்ஞான அணுகுமுறையுடன் கூடிய பஞ்சாங்கம் தான் திருக்கணித பஞ்சாங்கம். இலங்கையிலேயே 1960களை அடுத்து இந்தப் பஞ்சாங்கத்தின் முக்கியத்துவம் குறித்து நிறையவே பேசப்பட்டன. இந்த அனுபவ அறிவின் அடிப்படையில் சிவாச்சாரியார்களின் வழிகாட்டலில் புலத்தில் இந்தத் திருக்கணிதப் பஞ்சாங்கத்தின் படியே பொதுவழிபாடுகள் நடத்தப்படல் வேண்டும் என்பது சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்து முடிபாக உள்ளன. இதனை எல்லாக் கோயில்களும் ஏற்றாலே வழிபாட்டில் ஒரு சீரான தன்மை காணப்படும். எனவே இத்திருக்கோயில்கள் ஒன்றிய மாநாட்டிலும் புலத்தில் வாழும் சைவத்தமிழ்ச் சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொண்டு புலத்தின் அனைத்துச் சைவாலயங்களையும் பொதுவழிபாட்டிற்குத் திருக்கணிதப் பஞ்சாங்கத்தையே பழக்கமாக்கி வழக்கமாக்குமாறு பணிவன்பாக வேண்டுகிறேன்.

பண்ணிசை இறைவனே தமிழால் பாடுமாறு பணித்த இன்னிசை. இதனை வளர்ப்பதற்கு இன்று புலத்தில் இலண்டன் சிவன்கோயில் ஓதுவாரே தனியொருவராகப் பணியாற்றி வருவதை நாமறிவோம். எல்லாச் சைவக்கோயில்களும் ஓதுவார்கள் தொகை இலண்டனிலும் ஐக்கிய இராச்சியத்திலும் பெருகிட இயன்றது செய்தாலே பண்ணோடு இறைவனைப்பாடல் என்கிற அற்புதமான பக்திமுறைமையை எம் தமிழ் இளம் சமுதாயம் இழந்திடாது காத்திட முடியும். சைவமாநாடுகளில் நாம் பண்ணிசைப் போட்டிகளை வைத்து பண்ணிசை வளர்ச்சியை ஊக்கப்படுத்தி வருவது பெருமைக்குரிய விடயம் என்றாலும் அதற்கு அப்பால் நாளாந்த வாழ்வில் பண்ணிசையின் பலத்தை வளத்தை மக்களுக்கு அளிக்க நாம் ஆவன செய்ய வேண்டியது அவசியம். பண்ணிசை வளரும் பொழுதே தமிழால் வழிபாடுகளைச் செய்வதற்கான சத்தியும் அதிகரிக்கும். இப்பொழுது சில ஆலயங்களில் தமிழாலும் வழிபாடுகள் நடத்தப்பெற்றாலும் இன்னும் அதிக அக்கறையும் ஆர்வமும் இதில் எடுக்கப்படல் வேண்டும். வேதத்திற்குப் பதிலீடாகவோ அல்லது வடமொழிக்குப் பிரதியீடாகவே தமிழைப்பயன்படுத்த நினைப்பது அரசியல் தன்மையானதே தவிர ஆன்மீகத் தன்மையானதல்ல. தொன்மையையும் மரபையும் பேணிய நிலையில் நாயன்மார்கள் வளர்த்த தமிழ்வழிபாட்டை ஆழ்வார்கள் போற்றிய தமிழ்வழிபாட்டை நாமும் அவர்கள் வழியில் வளர்த்திடுவதற்கான வேகப்படுத்தல் காலத்தின் தேவையாக உள்ளது. சைவம் தமிழர்களுக்குச் சமயம் என்பதற்கு அப்பால் அவர்களின் இனஅடையாளமாகவும் உள்ளது என்ற உண்மையை உளங்கொண்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்பதே சைவஅருளாளர்கள் காட்டிய சைவவாழ்வாக உள்ளது. சைவம் எழுச்சியுற்ற காலங்களிலேயே தமிழும் தமிழரும் உயர்ச்சியுற்று விளங்கினர் என்பது வரலாறு. ஆகவே தாயகத்தில் தாங்கொணாத்துன்பங்களைத் துயரங்களை வாழ்வாகக் கண்டு நிற்கும் நம்தமிழினம் தன்மான இனமானத்துடன் தன்னிகரில்லா இனமாக மீளவும் வளர்ச்சியுற எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளை அவர்களுக்குப் பெற்றுத் தரும் சைவக்கல்வியும் அவனருளைக் கொண்டாடும் தமிழ்க்கல்வியும் காலத்தின் தேவையாக உள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் யாழ்ப்பாணச் சைவநிலை என்னும் தன் நூலில் அன்று சொன்ன அத்தனையும் இன்றைய புலத்தின் சைவநிலையாக உள்ளமை வேதனையான உண்மை. இதனை மாற்ற அன்று அவர் சொன்ன சமய அறிவை வளர்க்கும் கல்வி நிலையங்களே ஒரேவழி. சிறுவர்களுக்கான சைவசமய அறிவை வளர்ப்பதில் கடந்த பதினைந்து ஆண்டுகாலமாக மாநாடுகளில் நாம் முயன்று வந்துள்ளோம். இம்முறை சைவசமயக் கேள்வி பதில் போட்டியாக அதனை வளர்த்துள்ளோம் என்பதும் பெருமைக்குரிய விடயம். ஆயினும் சைவத்தின் ஆன்மீகமாக உள்ள சைவசித்தாந்தம் குறித்த கல்வியை நாம் வளர்க்க வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகிறது. புலத்துத் தமிழ் மக்களிடை மனஅழுத்தங்கள் உளவியல் நோய்கள் எல்லா வயதினரிடையிலும் அதிகரித்துச் செல்கிறது என்பது பலதமிழ் வைத்தியர்கள் சுட்டிக்காட்டும் விடயமாக உள்ளது. இதற்கு மாற்றுவழி சைவசித்தாந்த வேதாந்த அறிவுகளை வளர்த்தலேயாகும். சைவசித்தாந்த திருமந்திரத் திருக்குறள் வகுப்புகள் வழி இலண்டன் சிவன் கோயில் கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சைவசித்தாந்த அறிவை வளர்த்து வருகிறது. சைவமுன்னேற்றச் சங்கமும் இதில் கடந்த மூன்று ஆண்டுகளாக முயன்று வருகிறது. மற்றைய ஆலயங்களும் சைவசித்தாந்தக் கல்வியை முறைசார் கல்வியாக மாணவர்கள் மட்டுதலல எல்லாவயதில் உள்ள சைவமக்களும் ஆர்வமுள்ள அனைத்து மக்களும் வாழ்நாள் கல்வியாகக் கற்றிட நாம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமய அறிவை வளர்ப்பதில் கடந்த பதினைந்து ஆண்டுகாலமாக மாநாடுகளில் நாம் முயன்று வந்துள்ளோம். இம்முறை சைவசமயக் கேள்வி பதில் போட்டியாக அதனை வளர்த்துள்ளோம் என்பதும் பெருமைக்குரிய விடயம். ஆயினும் சைவத்தின் ஆன்மீகமாக உள்ள சைவசித்தாந்தம் குறித்த கல்வியை நாம் வளர்க்க வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகிறது. புலத்துத் தமிழ் மக்களிடை மனஅழுத்தங்கள் உளவியல் நோய்கள் எல்லா வயதினரிடையிலும் அதிகரித்துச் செல்கிறது என்பது பலதமிழ் வைத்தியர்கள் சுட்டிக்காட்டும் விடயமாக உள்ளது. இதற்கு மாற்றுவழி சைவசித்தாந்த வேதாந்த அறிவுகளை வளர்த்தலேயாகும். சைவசித்தாந்த திருமந்திரத் திருக்குறள் வகுப்புகள் வழி இலண்டன் சிவன் கோயில் கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சைவசித்தாந்த அறிவை வளர்த்து வருகிறது. சைவமுன்னேற்றச் சங்கமும் இதில் கடந்த மூன்று ஆண்டுகளாக முயன்று வருகிறது. மற்றைய ஆலயங்களும் சைவசித்தாந்தக் கல்வியை முறைசார் கல்வியாக மாணவர்கள் மட்டுதல்ல எல்லாவயதில் உள்ள சைவமக்களும் ஆர்வமுள்ள அனைத்து மக்களும் வாழ்நாள் கல்வியாகக் கற்றிட நாம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நடனமும் இசையும் இறைவனை அடைவதற்கான இரு சிறந்த வழிகள். எனவே புலத்தில் இதனை உணர்ந்து சைவத்தை வளர்க்கும் வகையில் நடனக்கலையும் இசைக்கலையும் வளர்க்கப்படல் வேண்டும்.

அவ்வாறே மாணிக்கவாசக சுவாமிகள் காட்டிய மிகப்பெரிய முன்னுதாரணம் மக்களுக்கு இடையில் வழக்கில் இருந்த விளையாட்டுக்கள் வழி 15 திருப்பதிகங்களைத் திருவெம்பாவை முதல் திருப்பொன்னூசல் வரை பாடியருளியது. நாமும் எமது இளையவர்களிடை பிரபல்யமாக உள்ள கராத்தே வர்மக்கலையை ஆலயங்கள் வழியாகவும் வளர்க்க நாம் முயல்தல் வேண்டும். இது தெய்வீகத்தன்மையானது என்பதினால் இதனைத் திருமூலரும் போகரும் உலகெலாம் பரப்பிய வரலாறு தெரிந்தும், உளஉடல் தற்காப்புக்கும் ஒழுக்கத்தில் திடம்பெறவும் உடலில் பலம் பெறவும் உதவும் இவ்வர்மக்கலை வழி நாம் சைவத்தை இளையவர்கள் ஆர்வமுடன் அறியவும் சைவக்கோயில்களின் நிகழ்வுகளுக்கு அவர்கள் உடன் உதவிகள் செய்வதற்கும் ஏற்ப வளர்க்க வேண்டும். இவ்வர்மக்கலையின் நுட்பமான மருத்துவ முறைகள் கைவிடப்பட்ட பல நோயாளிகளின் உயிரைப் பாதுகாக்கும் ஆற்றல் கொண்டவை என்பதையும் நாம் மறத்தலாகாது. இது சைவம் வாழ்வை வளமுடன் நலமுடன் பலமுடன் வாழ்ந்துதான் இறைவனை அடைய அழைக்கிறது என்பதை இளையவர்கள் இதயத்தில் பதிக்கவும் உதவும். முதியவர்களுக்குக் கூட வர்மக்கலையின் இணைக்கல்வியான யோகாசனங்கள் பலவழிகளில் அவர்களின் உளஉடல் துன்பங்களைத் தீர்க்கும் வழியாக உள்ளது. யோகக்கலையினைத் தனியே உளஉடல் ஆரோக்கியத்திற்கான வழியாகக் காட்டாது சிவோகம்பாவநிலையினை எய்துவதற்கான சைவநெறி என்ற நிலையிலும் வளர்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம். முதியவர்களுக்கான வாழ்நாள் கல்வி இளையவர்களுக்கான சைவக்கல்வி பெண்களுக்கான சைவக்கல்வி சிறுவர்க்கான சைவக்கல்வி எனப் பலவழிகளில் நாம் சிந்தித்துச்செயற்பட்டால் புலத்தில் அவர்களுக்கு உளவளத்துணையாகவும் அமையும். மேலும் புலத்தில் சைவ இளையவர்கள் சந்திக்கும் வேலையின்மை உயர்படிப்புக்களைத் தொடர்வதில் உள்ள சிரமங்கள், திருமணத்தின் முன்னும் பின்னுமான பிரச்சினைகள், பிள்ளைகளை வளர்த்தலில் உள்ள பிரச்சினைகள், பெற்றோர் பிள்ளைகள் கால இடைவெளிப்பிரச்சினைகள் குடிவெறி போதைப் பழக்கப் பிரச்சினைகள் குடிவரவு குடியகல்வுப் பிரச்சினைகள் வீடின்மை தனிமை வெறுமை வறுமைப் பிரச்சினைகள் போன்றவற்றுக்குச் சைவாழ்வில் அவர்களை உள் அழைப்பதே ஒரேவழி என்பதைப் பெரிய புராணத்தின் வழி நாம் மக்களுக்கு எடுத்துரைத்து, கோயில்களை வெறுமனே கும்பிடும் இடமாக மட்டுமல்லாது தமிழினத்தின் தவச்சாலைகளாக அறப்பள்ளிகளாக அன்னதான மடங்களாக ஆதரவு இல்லங்களாக மாற்றிட நாம் முயல்வதே உண்மையான சைவவாழ்வினை உணரவும் உணர்த்தவும் விளங்கவும் விளக்கவும் உதவும். இதற்கு எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளை வேண்டி ஓதுதல் ஓதுவித்தல் கேட்டல் கேட்பித்தல் சிந்தித்தல் சீவபணிக்காகச் சிவனருளைப் பெற்றுத் தரும் வழிகள் என்பதினால் ஆலயங்களிலும் தனிமனித வாழ்விலும் இறைவனை மையமாக வைத்த வழிபாடுகளை மனிதநேயத்தை வளர்க்கும் பணிகளைச் செய்ய திருவருள் வேண்டி அவனருளாலே அவன்தாள் பணிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை 18.04.2015 – நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 9.00 | மங்கள விளக்கேற்றல் | |
| 9.05 | நந்திக்கொடியேற்றல் | |
| 9.15 | திருமுறை ஓதுதல் | கற்பக விநாயகர் ஆலய,<br>வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்க மாணவர்கள் |
| 9.30 | வரவேற்புரை | திரு செல்வராஜா<br>தலைவர், செல்வ விநாயகர் ஆலயம் |
| 9.35 | ஆசியுரை | செல்வ விநாயகர் ஆலய சிவாச்சாரியார் |
| 9.40 | ஆசியுரை | கைலை சிவஸ்ரீ நாகநாதசிவம் சிவாச்சாரியார் |
| 9.45 | தலைமையுரை | திரு கோபாலகிருஷ்ணன், தலைவர்,<br>பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்,<br>தலைவர், கற்பக விநாயகர் ஆலயம் |
| 9.50 | மாநாட்டு மலர் ஆய்வு | திரு ச.ஆனந்ததியாகர் தலைவர், சை.மு.சங்கம் |
| 10.00 | வெளியீடு | திரு. வ. சிவசுந்தரம், அதிபர், வெஸ்டர்ன் ஜீவலர்ஸ் |
| 10.05 | செயலாளர் உரை | திரு வி.கணேசமூர்த்தி, செயலாளர்,<br>திருக்கோயில்கள் ஒன்றியம் |
| 10.10 | சிறப்புரை | பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்<br>தலைவர் - இந்து நாகரிகத்துறை- யாழ்.பல்கலைக்கழகம் |
| 10.30 | சிறப்புரை | திரு இந்துசேகரன், பொதுச் செயலாளர்- சை.மு.சங்கம் |
| 10.35 | பேருரை | கூனம்பட்டி ஆதீன முதல்வர்<br>இராஜ சரவண மாணிக்கவாசக சுவாமிகள் |
| 11.05 | இசையும் உரையும் | திரு கங்கை அமரன், இசையமைப்பாளர் |
| 12.00 | பண்ணிசை | சைவ முன்னேற்ற சங்க முதியோர் |
| | | மதியபோசனம் |

## பிற்பகல் நிகழ்ச்சி

தலைமை Dr.T.ஸ்ரீஸ்கந்தராசா, தலைவர், லண்டன் சிவன் ஆலயம்

| | | |
|---|---|---|
| 13.30 | | திருமுறை ஓதல், ஆங்கில பேச்சு கேள்வி பதில்,<br>போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்வழங்குதல். |
| 14.30 | பேச்சு | Lee Scot – Ilford North MP |
| 14.50 | சிறப்புரை | டாக்டர் அன்பரசன், பொதுச்செயலாளர்,<br>சைவசமயப்பேரவை, மலேசியா |
| 15.15 | சிறப்புரை | திரு சி.யோகேஸ்வரன், தலைவர், இந்துமாமன்றம்,<br>மட்டக்களப்பு |
| 15.40 | சிறப்புரை | சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா.வசந்தன் குருக்கள் |
| 16.00 | A Compenium Book release | Dr.S.தனபாலா, உப தலைவர்,கொழும்பு இந்துமாமன்றம், |
| 16.15 | கருத்தரங்கம் | தலைமை திருமதி மாதவி சிவலீலன் |

## மாலை நிகழ்ச்சி

தலைமை C.கனகசுந்தரம், செயலாளர், உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்

| | | |
|---|---|---|
| 17.20 | நாடகம் - இலங்கேஸ்வரர் | நால்வர் தமிழ் பாடசாலை |
| 17.40 | பரதநாட்டியம் | அபிரா ராமதாஸ் (திருமதி தயந்தினி மகேஸ்வரனின் மாணவி) |
| 18.00 | நன்றியுரை | திரு நாகராசா, பொருளாளர்,<br>சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் |
| 18.10 | வீணை இசை | திருமதி மாலினி தனபாலசிங்கம் அவர்களின் மாணவிகள் |
| 18.30 | Keyboard கர்நாடகம் | செல்வன் நிகேஷ் நிறஞ்சன் |
| 18.50 | இன்னிசை நிகழ்ச்சி | கர்நாடக இசைக்குழு பத்மஸ்ரீ நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்கள் |
| 20.25 | நந்திக் கொடி இறக்கல் | |
| 10.30 | இராப்போசனம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16th Saiva Conference Woodbridge High School - Saturday 18.04.2015

### Morning Programme:

| | | |
|---|---|---|
| 09.00 | Lighting of The traditional Oil Lamp | |
| 09.05 | Prayer & Hoisting of Nanthi Flag | |
| 09.15 | Thirumurai Recital | Students of Karpaha Vinayagar Temple & Waltham Forest Tamil Sangam |
| 09.25 | Salutation | |
| 09.30 | Welcome Speech | Mr S.Selvarajah, Chairman, Selva Vinayagar Temple |
| 09.35 | Blessing | Sivachariar from Selva Vinayagar temple |
| 09.40 | Blessing | Kailai Sivasri Naganatha sivam Sivachchariar |
| 09.45 | Chairman Speech | Mr M.Gopalakrishnan, Chairman, The Federation of Saiva Hindu Temples U.K., Chairman, Sri Karpaha Vinayagar Temple, Chairman, Ahilan Foundation |
| 09.50 | Book Review | Mr S.Ananthathiyager, Chairman, Saiva Munnetta Sangam, |
| 10.00 | Book Release | Mr V.Sivasundram, Director, Western Jewellers |
| 10.05 | Secretary's Speech | Mr V.Ganeshamoorthy, Secretary, The Federation of Saiva Hindu Temples U.K |
| 10.10 | Special Speech | Dr M.Vethanathan, Head - Hindu Cultural Department, University of Jaffna |
| 10.30 | Special Speech | Mr.Inthusekaran, Secretary, Saiva Munnetta Sangam |
| 10.35 | Blessing Speech | His Holyness Rev Saravana Manickkavasaga Swamigal, Koonampatti Aatheenam |
| 11.05 | Speech & Music | Gangai Amaran, Music Director |
| 12.00 | Pan Isai | Elders of Saiva Munnetta Sangam |

Lunch

### Afternoon Programme

Chair: Dr.T.Sriskantharajah, Chairman, London Sivan Temple

| | | |
|---|---|---|
| 13.30 | Presentation of Prizes & Certificates, Winning Speeches & Thirumurai Recital | |
| 14.40 | Speech | Lee Scott, Ilford North M.P. |
| 14.50 | Special Speech | Dr. Anaprasan, Secretary, Saiva Council, Malasiya |
| 15.15 | Special Speech | Mr C.Yogeswaran, Chairman, Inthu mamantram, Batticaloa |
| 15.40 | Special Speech | Sivisri Vasantha Sivachchariar, Karpaha Vinayagar Temple |
| 16.00 | A Compenium Book Release | Dr S.Thanabala Vice Chair, Colombo Inthu Mamantram |
| 16.15 | Discussion | Chair: Mrs Mathavi Sivaleelan, |

### Evening Programme

Chair: Mr C.Kanagasundaram, Secretary, Highgatehill Murugan Temple

| | | |
|---|---|---|
| 17.20 | Drama - Elangeswarar | Nalvar Tamil School |
| 17.40 | Barathanatyam | Abira Ramathas(Student of Thayanthini Mageswaran) |
| 18.00 | Vote of Thanks | Mr.Nagarajah ( Treasurer, The Federation of Saiva Hindu Temples U.K.) |
| 18.00 | Veena Gaanam | Students of Mrs Malini Thanabalasingam |
| 18.30 | Keyboard | Master Nikash Niranjan |
| 18.50 | Carnatic Concert | Pathmasri Nithyashree Mahadevan |
| 20.50 | Lowering Nanthi Flag & prayer | |
| 21.00 | Dinner | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிற்றுக்கிழமை 19.04.2015 – நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 9.00 | இறைவழிபாடு | நந்திக்கொடியேற்றல் |
| 9.10 | மங்கள விளக்கேற்றல் | |
| 9.20 | திருமுறை ஓதுதல் | ஈழபதீஸ்வர ஆலய மாணவர்கள் |
| 9.35 | வரவேற்புரை | திரு N. சச்சிதானந்தன் |
| 9.40 | ஆசியுரை | சிவஸ்ரீ சுரேஸ்வரக்குருக்கள், ஈழபதீஸ்வர ஆலயம் |
| 9.45 | ஆசியுரை | சிவஸ்ரீ பராபரக் குருக்கள், சித்திவிநாயகர் ஆலயம் |
| 9.50 | மலர் வெளியீடு | திரு ம.பேரின்பநாதன், அறங்காவலர் உயர்வாசற்குன்று ஆலயம் |
| 10.05 | பேச்சு | சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள், நாகபூசணி அம்மன் ஆலயம் |
| 10.20 | பேச்சு | Mr. Virendra Sharma MP, Ealing South |
| 10.30 | பேச்சு | Barry Gardener M.P. |
| 10.40 | சிறப்புரை | திரு சூ.யோ. பற்றிமாகரன் சித்தாந்த ஆசிரியர் ஆய்வாளர் |
| 11.00 | சிறப்புரை | திரு சீ. யோகேஸ்வரன் M.P. தலைவர் மட். மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஒன்றியம். |
| 11.10 | சிறப்புரை | பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன் தலைவர் - இந்து நாகரிகத்துறை- யாழ்.பல்கலைக்கழகம் |
| 11.25 | பேருரை | தவத்திரு இராஜ சரவண மாணிக்கவாசக சுவாமிகள், கூனம்பட்டி ஆதீனம் |
| 12.05 | இசையும் பேச்சும் | திரு கங்கை அமரன் இசை அமைப்பாளர் |

மதியபோசனம்

பிற்பகல் நிகழ்ச்சி

தலைமை Dr. மகேஸ்வரன், இணைப்பாளர், விம்பிள்டன் கணபதி ஆலயம்

| | | |
|---|---|---|
| 13.30 | | திருமுறை ஓதுதல், தமிழ் பேச்சு ஆங்கில பேச்சு, கேள்வி பதில், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். |

மாலை நிகழ்ச்சி

தலைமை திரு இரத்தினசிங்கம் தலைவர் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயம்

| | | |
|---|---|---|
| 14.55 | சிறப்புரை | Dr. அன்பரசன் பொதுச்செயலாளர் சைவசமயப்பேரவை, மலேசியா |
| 15.20 | பேச்சு | திரு கந்தையா தியாகமூர்த்தி |
| 15.30 | பேச்சு | திரு நகுலேஸ்வரன் |
| 15.45 | கருத்தரங்கம் | திரு. கணேஸ்குமார் தலைவர், சர்வதேச இந்து இளைஞர் பேரவை |
| 16.15 | சமூகசேவைப்பாராட்டு | திரு. நித்தியானந்தன் தலைமையில் தலைவர், உயர்வாசற்குன்று முருகன் ஆலயம் திரு க. சிவகுருநாதபிள்ளை, திரு. த. உதயகுமார், திரு வி. ஆனந்தகுமார் திரு சி. தம்பு, திரு. க. சுந்தரலிங்கம் |
| 16.45 | வாய்ப்பாட்டு | சௌமியா ஆனந்த நடேசன் அவர்களின் மாணவிகள் |
| 17.05 | வீணை இசை | திருமதி சிவதாரணி சகாதேவன் அவர்களின் மாணவர்கள் |
| 17.25 | வயலின் கச்சேரி | ஆனந்தலயா மாணவர்கள் |
| 17.45 | வாய்ப்பாடு | |
| 18.05 | பரதநாட்டியம் | திருமதி வாசுகி அவர்களின் மாணவிகள் |
| 18.25 | வாத்திய சங்கம் | |
| 18.45 | நன்றியுரை | திரு க.வி.கணேசமூர்த்தி செயலாளர் |
| 18.55 | கர்நாடக இசைக்கச்சேரி நந்திக்கொடியிறக்கம் | பத்மஸ்ரீ ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16th Saiva Conference Alperton Community School - Sunday 19.04.2015

### Morning Programme:

| | | |
|---|---|---|
| 09.00 | Lighting of The traditional Oil Lamp | |
| 09.05 | Prayer & Hoisting of Nanthi Flag | |
| 09.20 | Thirumurai Recital | Students of Eelapatheeswarar Temple |
| 09.32 | Salutation | |
| 09.35 | Welcome Speech | Mr N.Sachithananthan |
| 09.35 | Blessing | Sivasri Sureshvarar Sivachchariyar, Eelapatheeswar Temple |
| 09.40 | Blessing | Sivasri Parapara Sivachchariar, Sithi Vinayagar Temple |
| 09.50 | Book Review | Mr.M.Perinpanathan, Trustee, Highgatehill Murugan Temple |
| 10.05 | Special Speech | Sivasri Kamalanatha Sivachchariar, Enfield Nagapooshani Temple |
| 10.20 | Special Speech | Mr.Virendra Sharma MP, Ealing South |
| 10.30 | Special Speech | Barry Gardener M.P |
| 10.40 | Special Speech | Mr S.J.Fattimaharan, Journalist |
| 11.00 | Special Speech | Mr.C.Yogeswaran, M.P., Batticaloa |
| 11.10 | Special Speech | Dr M.Vethanathan, Head - Hindu Cultural Department, University of Jaffna |
| 11.25 | Blessing Speech | His Holyness Rev Saravana Manickkavasaga Swamigal, Koonampatti Aatheenam |
| 12.05 | Speech & Music | Gangai Amaran, Music Director |

Lunch

### Afternoon Programme

Chair: Dr.S.Maheswaran, Co-ordinator, Wimbledon Ganapathy Temple

13.30 Presentation of Prizes & Certificates, Winning Speeches & Thirumurai Recital

### Evening Programme

Chair: Mr Ratnasingam, Chairman, Sri Kanaga Thurkkai Amman Temple

| | | |
|---|---|---|
| 14.55 | Special Speech | Dr. Anaprasan, Secretary, Saiva Council, Malasiya |
| 15.20 | Special Speech | Mr Kandiah Thiyagamoorthy |
| 15.30 | Special Speech | Mr Naguleswaran |
| 15.45 | Discussion | Mr Ganeshkumar, Chair, International Youth Forum |
| 16.15 | Appreciation for their Community Service | Chair by: Mr Nithiyananthan, Highgatehill Murugan Temple<br>Receivers: Mr K. Sivagurunathapillai,Mr T.Uthayakumar Mr V.Ananthakumar, Mr C.Thampoe, Mr K.Suntharalingam |
| 16.45 | Vocal | Students of Ms Soumiya Ananthanadesan |
| 17.05 | Veena Gaanam | Students of Mrs Sivatharani Sahathevan |
| 17.25 | Violin | Students of Ananthalaya |
| 17.45 | Vocal | |
| 18.05 | Barathanatyam | Students of Ms Vasuki |
| 18.25 | Orchesta | |
| 18.45 | Vote of Thanks | Mr.K.V.,Ganeshamoorthy, Secretary, The Federation of Saiva Temples U.K. |
| 18.55 | Carnatic Concert | Pathmasri Nithyashree Mahadevan |
| 20.50 | Lowering Nanthi Flag & prayer | |
| 21.00 | Dinner | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியா சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம்

சைவசமயப் போட்டிகள்-பெறுபேறுகள் 01.03.2015

| | | |
|---|---|---|
| **திருமுறை ஓதல்**<br>5வயதுக் கீழ்<br>முதலாவது இடம்<br><br>துலக்சா சுதர்சன் | **திருமுறை ஓதல்**<br>5வயதுக் கீழ்<br>இரண்டாவது இடம்<br><br>துர்கா கோகிலதாஸ் | **திருமுறை ஓதல்**<br>5வயதுக் கீழ்<br>மூன்றாவது இடம்<br><br>கீனிசா சஜீபன் |
| **திருமுறை ஓதல்**<br>5-7 வயது<br>முதலாவது இடம்<br><br>கபீனா விக்னேஸ்வரன் | **திருமுறை ஓதல்**<br>5-7 வயது<br>இரண்டாவது இடம்<br> <br>றியா றாஜ்குமார் வினுசா சுதர்சன் | **திருமுறை ஓதல்**<br>5-7 வயது<br>மூன்றாவது இடம்<br><br>சரஸ்வதி ஜனகன் |
| **திருமுறை ஓதல்**<br>8-10 வயது<br>முதலாவது இடம்<br><br>ஆயகி தவராசகுமார் | **திருமுறை ஓதல்**<br>8-10 வயது<br>இரண்டாவது இடம்<br><br>தணிகா பாலேந்திரன் | **திருமுறை ஓதல்**<br>8-10 வயது<br>மூன்றாவது இடம்<br><br>அனுர்சன் ராகுலன் |
| **திருமுறை ஓதல்**<br>11-13 வயது<br>முதலாவது இடம்<br><br>தேனுகா சிவநேசராசா | **திருமுறை ஓதல்**<br>11-13 வயது<br>இரண்டாவது இடம்<br> <br>தர்சன் ஞானலிங்கம் தனுசன் பாலேந்திரன் | **திருமுறை ஓதல்**<br>11-13 வயது<br>மூன்றாவது இடம்<br><br>ஜானவி சண்முகநாதன் |
| **திருமுறை ஓதல்**<br>14-17 வயது<br>முதலாவது இடம்<br><br>மாதங்கி ஜெகதீஸ்வரன் | **திருமுறை ஓதல்**<br>14-17 வயது<br>இரண்டாவது இடம்<br><br>அமிதா பத்மநாதன் | **திருமுறை ஓதல்**<br>14-17 வயது<br>மூன்றாவது இடம்<br><br>டக்சா செயோன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவ வினாவிடை**
5வயதுகுக் கீழ்

முதலாவது இடம்



கஜீனா பத்மறூபன்

**சைவ வினாவிடை**
5வயதுகுக் கீழ்

இரண்டாவது இடம்



கவின் மச்சாகாந்தன்

**சைவ வினாவிடை**
5வயதுகுக் கீழ்

மூன்றாவது இடம்



கவினயா தேவகாந்தன்

**சைவ வினாவிடை**
5-7 வயது

முதலாவது இடம்





அரிசன் நரேந்திரதேவ் ரோகிசன் பத்மறூபன்

**சைவ வினாவிடை**
5-7 வயது

இரண்டாவது இடம்



அட்சயா சுகிர்தன்

**சைவ வினாவிடை**
5-7 வயது

மூன்றாவது இடம்



கஜன் கோகுலன்

**சைவ வினாவிடை**
8-10 வயது

முதலாவது இடம்



லிஸானி சிவசங்கர்

**சைவ வினாவிடை**
8-10 வயது

இரண்டாவது இடம்



தர்சிகா ஞானலிங்கம்

**சைவ வினாவிடை**
8-10 வயது

மூன்றாவது இடம்



ஆயகி தவராசகுமார்

**சைவ வினாவிடை**
11-13 வயது

முதலாவது இடம்



தேனுகா சிவநேசராசா

**சைவ வினாவிடை**
11-13 வயது

இரண்டாவது இடம்



தர்சன் ஞானலிங்கம்

**சைவ வினாவிடை**
11-13 வயது

மூன்றாவது இடம்



சேதுஜா கெங்காதரன்

**சைவ வினாவிடை**
14-17 வயது

முதலாவது இடம்



சாமினி சந்திரன்

**சைவ வினாவிடை**
14-17 வயது

இரண்டாவது இடம்



நிலோஜி ஸ்ரீபத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் பேச்சு**
**5வயதுகுக் கீழ்**

**முதலாவது இடம்**



கஜீனா பத்மரூபன்

**தமிழ் பேச்சு**
**5வயதுகுக் கீழ்**

**இரண்டாவது இடம்**



துர்கா கோகிலதாஸ்

**தமிழ் பேச்சு**
**5வயதுகுக் கீழ்**

**மூன்றாவது இடம்**



சகீனா பத்மரூபன்

**தமிழ் பேச்சு**
**5-7 வயது**

**முதலாவது இடம்**



கஜன் கோகுலன்

**தமிழ் பேச்சு**
**5-7 வயது**

**இரண்டாவது இடம்**



கரிசன் ஆரூரன்

**தமிழ் பேச்சு**
**5-7 வயது**

**மூன்றாவது இடம்**



அதிசயா பாலகுலேந்திரன்

**தமிழ் பேச்சு**
**8-10 வயது**

**முதலாவது இடம்**





மீனாட்சி தனசிங்கம் ஆயகி தவராசகுமார்

**தமிழ் பேச்சு**
**8-10 வயது**

**இரண்டாவது இடம்**



கவீரன் உதயகுமார்

**தமிழ் பேச்சு**
**8-10 வயது**

**மூன்றாவது இடம்**



விஸ்ணுவர்தசர்மா ராமநேசன்

**தமிழ் பேச்சு**
**11-13 வயது**

**முதலாவது இடம்**



தர்சன் ஞானலிங்கம்

**தமிழ் பேச்சு**
**11-13 வயது**

**இரண்டாவது இடம்**



நிலோஷன் சாந்தகுமரன்

**தமிழ் பேச்சு**
**11-13 வயது**

**மூன்றாவது இடம்**



தேனுகா சிவநேசராசா

**தமிழ் பேச்சு**
**14-17 வயது**

**முதலாவது இடம்**



கோவர்தன் ராமநேசன்

**தமிழ் பேச்சு**
**14-17 வயது**

**இரண்டாவது இடம்**





நிலோஜி ஸ்ரீபத்மநாதன் சாமினி சந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **ஆங்கிலம் பேச்சு**<br>5வயதுக்குக் கீழ்<br>முதலாவது இடம்<br><br>அனீசா கணபதி | **ஆங்கிலம் பேச்சு**<br>5வயதுக்குக் கீழ்<br>இரண்டாவது இடம்<br><br>கவினயா தேவகாந்தன் | **ஆங்கிலம் பேச்சு**<br>5வயதுக்குக் கீழ்<br>மூன்றாவது இடம்<br><br>சிவறூபா சத்தியறூபன் |
| **ஆங்கிலம் பேச்சு**<br>5-7 வயது<br>முதலாவது இடம்<br><br>நிர்த்தனா ராகுலன் | **ஆங்கிலம் பேச்சு**<br>5-7 வயது<br>இரண்டாவது இடம்<br> <br>றோகிசன் பத்மறூபன் சன்ஜித் சயந்தன் | **ஆங்கிலம் பேச்சு**<br>5-7 வயது<br>மூன்றாவது இடம்<br>Awaiting Photo <br>வைணவி வினோத் கஜன் கோகுலன் |
| **ஆங்கிலம் பேச்சு**<br>8-10 வயது<br>முதலாவது இடம்<br><br>மீனாட்சி தனசிங்கம் | **ஆங்கிலம் பேச்சு**<br>8-10 வயது<br>இரண்டாவது இடம்<br><br>சாருஜன் தவராஜா | **ஆங்கிலம் பேச்சு**<br>8-10 வயது<br>மூன்றாவது இடம்<br><br>கவீரன் உதயகுமார் |
| **ஆங்கிலம் பேச்சு**<br>11-13 வயது<br>முதலாவது இடம்<br><br>விபுசன் லோகநாதன் | **ஆங்கிலம் பேச்சு**<br>11-13 வயது<br>இரண்டாவது இடம்<br> <br>கஜன் கைலாயநாதன் ஜானவி சண்முகநாதன் | **ஆங்கிலம் பேச்சு**<br>11-13 வயது<br>மூன்றாவது இடம்<br><br>யனுசா பத்மநாதன் |
| **ஆங்கிலம் பேச்சு**<br>14-17 வயது<br>முதலாவது இடம்<br><br>சமிந்தா தவராசா | **ஆங்கிலம் பேச்சு**<br>14-17 வயது<br>இரண்டாவது இடம்<br><br>சாமினி சந்திரன் | **ஆங்கிலம் பேச்சு**<br>14-17 வயது<br>மூன்றாவது இடம்<br><br>அமிதா பத்மநாதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிச் செல்வவிநாயகர் ஆலயத்தில் சிவப்பணி தொடங்கி இலண்டன் சைவத்திருக்கோயில் ஒன்றியத்தால் 'சமுகசீலர்' ஆக மதிப்பளிக்கப்படும்

*திரு சிவஞானசுந்தரம் தம்பு*



'தம்பு' என அன்பாக அனைவராலும் அழைக்கப்படும் திரு. சிவஞானசுந்தரம் தம்பு அவர்கள் இலண்டன் சைவஉலகிலும், தமிழ் உலகிலும் சேவையாளராகப் போற்றப்படுபவர். பொன்னரங்கம் சுன்னாகத்தில் 1958ல் பிறந்து கண்டி புனித சில்வஸ்ரர் கல்லூரியில் தனது உயர்தரவகுப்புவரைபடித்தவர். இவர் அக்காலத்தில் கல்லூரியின் இந்து மாணவர் சங்கத்தின் செயலாளராகத் திகழ்ந்தார். திரு சிவஞானசுந்தரம் தம்பு, தனது பெரியப்பா திரு தம்பு சிவபாலசுப்பிரமணியம் அவர்களின் ஆன்மிக வழிகாட்டலால் ஈர்க்கப்பட்டுத் தனது எட்டாவது வயதில் கண்டி செல்வவிநாயகர் கோவிலில் சிவனடியார்கள் உடன் சிவவழிபாடு தொடங்கி, 22வயது வரை கண்டியிலும், தொடர்ந்து இலண்டனிலும், 49 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் சிவப்பணியாற்றி வருகின்றார்.

சிவனருளால் இவர்க்குக் கிட்டிய மனைவி, முத்துராணி அவர்கள் சிதம்பரத்தில் சிவப்பணி பலசெய்து அங்கு மடம் ஒன்றையே நிறுவிட உதவிய புண்ணியன்னாச்சியார் அம்மையார் பரம்பரையைச் சேர்ந்தவராக அமைந்தார். முத்துராணியவர்கள் இளவயதிலேயே நாவலர் விழாக்களில் பரிசுகளைப்பெற்றுச் தனது பரம்பரைக்கேற்பச் சிவஞானத்தில் வளர்ந்து வந்தவர். முத்துராணி அவர்களை 1995ல் திருமணம் செய்த தம்பு சிவஞானம், அவர்களுக்கு தரிசனா, ஜஸ்வினி என்னும் இரு பெண்குழந்தைகள், திருவருளால் கிடைக்கப்பெற்று கலையுடனும் தமிழுடனும் சைவநெறியில் இலண்டனில் வளர்ந்து வருகின்றனர். 2013ம் ஆண்டில் தரிசனாவின் நடனஅரங்கேற்றம், இலண்டனில், போரூர் இளையபட்டம் மருதாசல அடிகள் தலைமையில், சிவமணம் கமழச் சிறப்பாக இடம்பெற்றது.

திரு தம்பு சிவஞானசுந்தரம் அவர்கள், மின்சார மேற்பார்வையாளராக (CGEE Alsthom) நிறுவனத்தில் பணியாற்றத் தொடங்கி, புலமைப்பரிசிலில் லிபியா சென்று அங்கு 1982முதல் 1985 வரை வேலை செய்த காலத்திலும், பின்னர் சவூதிஅரேபியாவில் 1986முதல் 1990வரை சவூதி அரேபியாவில் ஓபரே'ன் அன்ட் மெயின்டெனன்ஸ் கம்பெனி (Saudi Operation & Maintenance Co) இல் வேலைசெய்த வேளையிலும், சைவப்பெருநெறி தவறாத வாழ்வினை வாழ்ந்தவர்.

1991ல் இலண்டன் வந்து, காசாளராக வேலைசெய்யத் தொடங்கி, முகாமையாளராகிச் SHELL பெற்றோல் நிலைய (SHELL Petrol Station) தனி உரிமையாளராக வளர்ச்சி பெற்று, தற்பொழுது இலண்டனின் பிரபல வர்த்தகர்களுள் ஒருவராக விளங்குகின்றார்.

1992முதல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கததின் சிவப்பணியில் இணைந்து கொண்டார். 2002முதல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பணியாற்றத் தொடங்கிய திரு சிவஞானசுந்தரம் தம்பு, இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் வெளியீட்டுச் செயலாளராகி (Publication Secretary), தொடர்ந்து 2010ல் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் உபதலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். தற்பபொழுது துணைப்பொருளாளராகத் தொடர்ந்து பணிசெய்து வருகின்றார். இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் கலசம் சஞ்சிகை சிறப்பாகத் தொடர்ந்து வெளிவருவதற்கு பலவழிகளில் இவர் அரும்பணியாற்றி வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் தொடங்கிய காலம் முதல் அதன் வளர்ச்சியில் பங்கேற்ற திரு சிவஞானசுந்தரம் தம்பு அவர்கள் 2010ல் இலண்டன் திருக்கோயில் ஒன்றியத்தின் முகாமைத்துவக்குழு உறுப்பினராகவும் சிறப்புப் பணியாற்றினார். இவரின் சிவப்பணிகளாலும் தமிழ்ப்பணிகளாலும் இக்காலகட்டத்தில் இலண்டன் தமிழ்ச்சமுதாயத்தின் அன்பையும் மதிப்பையும் பெற்றார். தமிழகத்தின் குன்றக்குடி ஆதீனம், மதுரைத் திருஞானசம்பந்த ஆதீனம், தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், போரூர் ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், பழனி ஆதீனம், சிதம்பரம் மௌனகுரு ஆதீனம், கௌமார மடம் உட்படப் பல தமிழக ஆதீனங்களாலும் சைவநிறுவனங்கள் சைவப்பெரியார்களாலும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு கருணாநிதியாலும் போற்றி மதிப்பளிக்கப்பட்ட பெருமைக்குரியவர் திரு சிவஞானசுந்தரம் தம்பு அவர்கள். தாயகத்திலும், தமிழகத்திலும் இலண்டனிலும் இவர் எழுதிய கட்டுரைகள் வழங்கிய வாழ்த்துச் செய்திகள் சைவமாநாடுகள், சைவவிழாக்களில் இடம்பெற்றுள்ளன. பழனி திருச்செந்தூர் போன்ற அறுபடைவீடுகளில் பலஇலட்சக்கணக்கான மக்கள் முன் சிவனருளால் இவர் மதிப்பளிப்புக்களைப் பெற்றார். இலண்டனில் செய்யும் சிவப்பணிகளுக்காகவும் தமிழ்ப்பணிகளுக்காகவும் பழனிஆதீனம் "சிவநெறிச் செல்வர்" என்னும் சிறப்புப்பட்டத்தை 2010ல் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் முன்பாக வழங்கினார். சென்ற வருடம் சர்வதேச இந்து இளைஞர் மன்றம் இலண்டனால் 'சைவசமயச் சுடரொளி' என்னும் பட்டம் வழங்கப்பெற்று இவர் கௌரவிக்கப்பட்டார்.

இவர் தாயகத்தில் நல்லை ஆதீனம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், சுன்னாகம் மயிலணி சிவன் கோயில், சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் கோயில், சுன்னாகம் சிவபூதராயர் கோயில் என்பவற்றுடன் பலவழிகளில் நெருங்கிப் பணியாற்றிச் சிவப்பணி செய்து வருகின்றார். நகுலேஸ்வரம் திருப்பணிக்காக இலண்டனில் தொடங்கப்பெற்ற கீரிமலை சிவன் கோவில் அறக்கட்டளையின் இணைப்பாளராக இயங்கி நகுலேஸ்வரம் தலைமைக்குருக்களுடன் மிகநெருக்கமாக இணைந்து பணியாற்றி கோயில் புனருத்தானத் திருப்பணிகள் முடிவுற்றுத் குடமுழுக்குவிழாச் சிறப்பாக இடம்பெறப் பலஉதவிகளைச் செய்தார். கொல்லம் கலட்டி ஒன்றியத்தின் காப்பாளராக ஊர் துன்பதுயரங்களில் நின்று மீண்டெழவும் உதவி வருகின்றார் .குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பலம் அடிகளாரின் வேண்டுகோளை ஏற்று குன்றக்குடி ஆதீனத்தின் உலகத் திருக்குறள் பேரவையினை 2013ல் இலண்டனில் முதன் முதல் நிறுவி அதன் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார். இவ்வாண்டு தமிழ்ப்பல்கலைகழகம் தஞ்சாவூரிலிருந்து பேராசிரியர் கோ. ப. நல்லசிவம் அவர்களை வரவழைத்து திருக்குறள் ஆண்டுப்பிறப்பைச் சிறப்பாக இலண்டன் தமிழர்கள் கொண்டாட அனுசரணையாக இருந்தார்.

இவ்வாறு இவர் செய்து வரும் சிவப்பணிகளையும் தமிழ்ப்பணிகளையும் மதித்துப்போற்றும் இலண்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் தனது 16வது இலண்டன் சைவமாநாட்டில் இவருக்குச் "சமுகசீலர்" என்னும் விருதுப்பட்டத்தினை வழங்குவதற்கு சிவனருள் கைகூடியுள்ளது. கண்டி செல்வவிநாயகர் கோவிலில் சிவப்பணி தொடங்கிய திரு சிவஞானசுந்தரம் தம்பு அவர்களுக்கு, இலண்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 16வது மாநாடு நடைபெறும் வேளையில், 'சமுகசீலர்' என ஞானவடிவான விநாயகர் அருள் அழைத்திட வைப்பது, மற்றொரு சிறப்பாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## SIVA PILLAI (K SIVAGURUNATHAPILLAI)

**1981 to date Present**
Visiting Lecturer -Community Languages at Goldsmiths, University of London, and International speaker in Language teaching and development using ICT

1981-2011

- Was as Computer Officer/Lecturer (ICT) University of London Goldsmiths College, University of London and Southwark College London UK respectively. (retired)

**Currently**

- Regularly speaks at international conferences aimed at raising awareness of new opportunities created by ICT Information and Communication Technology
- Chief Examiner London Edexcel iGCSE-Tamil Examination (International)
- Assessor for Cambridge University iGCSE Tamil Examination (International)
- Principal Examiner Cambridge University ASSET-Tamil Examination Board
- Director of Tamil Academy of Language and Arts- Community language based Sydenham Girls School-London
- **Chair British Tamil Examination Board UK**
- Chair London Borough of Lewisham Ethnic Minority Group LEMP
- **Winner of European Languages Award 2007**
- 1972 – 1980 Thames Polytechnic (Greenwich University) Departmental Assistance in Computing
- Chair person of INFITT –E-group ( Europe Group) International Forum For Information Technology in Tamil. - 2010

**EDUCATION AND QUALIFICATIONS**

- Qualified as Post Graduate in Education, Nottingham University, (UK).
- Reader in Early learning
- Winner of "European Award *for* Languages 2007"

**Coordinator:**

- Development of National Curriculum for Tamil Language –
- NUFFIELD Project– London. – 2003-2006
- Community Language project developer in IT

**Publications**

- Nuffield Project -Tamil Language Framework for UK (2003-2006)
- 46 bilingual books. 2000-2004 (Mantra Publications).
- Developed WEB-site for language learning techniques.
- Released CD "Daily Readings " by Swami Satchidanantha and DR N Mahalingam's publications on a CDs 1999.
- Released CALL CD Computer Assisted Language Learning (English - Tamil) 1998.
- Released CARE CD (Computer Assisted Religious Education English Tamil-French-Germany) 1997.

**Conferences & Papers**

**2015** **International Conference "Inovations and Initiatives in Teacher Education" Kongunadu College of Education Trichy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **2015** | 9th INTERNATIONAL CONFERENCE - SEMINAR ON TAMIL STUDIES 2015. **World Tamil Conference Malaysia Presented the paper in Language teaching** |
| **2015** | **Tamil Research Centre Conference Chennai presented paper Tamil Culture** தமிழர் கலை, கலாசாரம், பண்பாடு |
| **2015** | **Trichy Bharathyar University** "மின் ஊடகங்களில் சங்க இலக்கியச் சொல்லடைவுகளும் அகராதி தொகுத்தலும்" |
| **2014** | **Mauritius International Conference Teaching Tamil for Diaspora** **"The Hindu"** Indian national paper praised his language teaching covered in the Fornt page head line on 26-June 2010 - ஜேர்மனி மாநாடு 2010. |
| 2004-2012 | 2004/2006/2008/2010/2012 South Indian Tamil Teachers - **World Tamil Teachers Conference-** UK Tamil Syllabus and Language Frame work |
| Oct 2011 | INFTT conference in Californai ICT in Language Teaching |
| Nov 2006 | UKCF- Chinese Federation – ICT in Chinese Language teaching |
| July 2005 | Thirumarai Mannram-Singapore –ICT in Religious Education |
| Aug 2005 | ICT in Education Colombo Hindu College SriLanka |
| Sept. 2003 | Singapore Tamil Teachers –Conference. ICT in Language Teaching |
| Aug 2003 | Tamil Inaya Conference - Chenai-India "Tamil Curriculum development in the west". |
| Jul 2002 | Presented paper. Tamil Inayam 2002 California USA: Role of ICT in Community language teaching. |
| Aug. 2001 | Multimedia: A developing trend in language teaching - Tamil Inayam 2001 Conference (Malaysia). |
| Sept 2001 | Presented paper World Tamil teachers Conference held in Singapore Sept.2001 –"Using Powerpoint in Community Language teaching". |
| Jul 2000 | Presented a paper and gave demonstration at TamilInayam2000 held in Singapore July 2000- "Role of Information and Communication Technology in Community Languages. |
| Aug 1999 - | World Shiva Conference Canada "CARE Computer Assisted Religious Education". |
| Sept 1997 | OSLO Hindu Centre (Oslao Norway) Title of the paper: Computers and Religion. |

**Media**

| | |
|---|---|
| 2006 | DEEPAM- TAMIL TV- Tamil Curiculum development in UK |
| 2005 Jul | Radio –Ceylon ICT in Language teaching |
| 2004 Jul - | Radio Ceylon – Srilanka - New Curriculum Development using ICT. |
| 2004 Jul | National Television Srilanka - Using ICT in Education. |
| 2002 Sept | Deepam Tamil TV-UK Using Computers to Learn Tamil. |
| 2000 Jul | Singapore TV- Importance of Computer technology for Tamil Language teaching. |
| 2000 Jul | TV presentation st Srilanka (SAKTHI) TV Learning Tamil using internet. |
| 2000 Aug | Sunrise Radio interview- Development of Tamil Curriculum in UK |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nallathambi Suntharalingam ("Yogi Ram Sunthar")



இலங்கை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நல்லதம்பி யோகம்மா தம்பதிகளின் பதினொரு பிள்ளைகளில் எட்டாவது பிள்ளையாக சுந்தரலிங்கம் 1951ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை வண்ணார்பண்ணையில் உள்ள நாவலர் பாடசாலையிலும் தொடர்ந்து யாழ். இந்துக்கல்லூரியிலும் தனது கல்வியை மேற்கொண்டு பின் இங்கிலாந்தில் உள்ள North London Poly இல் Reading Science of information Technology இல் படித்து பட்டம் பெற்றார். அவர் மெலனி(Mellani) என்ற பெண்ணை மணந்து சொக்கன், மீனாட்சி என்ற பிள்ளைகளுக்குத் தந்தையானார்.

இவர் யோகி ராமையாவை Highgate Murugan Temple இல் சந்தித்ததன் பயனாக Babaji Kiriya Yoga and Yoga Therapy ஐ 1978 இலிருந்து பயின்று அதில் ஆசிரியராக கடமையாற்றியபோது இந்தியா சென்று யோகி ராமையாவின் ஆசிரமத்தில் 1989-1995 வரையுள்ள காலப்பகுதியில் மேலும் கிரியா யோகக்கலையை பயின்றதுடன் Yoga Sadhana in Himalaya Mountains இல் பயிற்சி செய்தார். யோகி ராமையாவுடன் கும்பமேளா நிகழ்விலும் பங்குபற்றியிருந்தார்.

அதைத் தொடர்ந்து இந்தியாவில் உள்ள யோகி ராமையாவினுடைய Yoga Therapy clinic ஐ பொறுப்பேற்று நிர்வகித்து வந்தார். அதே நேரம் இவர் ஆச்சிரமத்தில் மாணவர்களுக்கு யோகா பயிற்சியில் ஆசயனம், பிரணாயனம் போன்றவற்றைச் சொல்லிக் கொடுத்த நாட்களில் யோகி ராமையா 2006ஆண்டில் சமாதியடைய குண்டலினி யோகா பயிற்சியையும் சொல்லிக் கொடுக்கும் வாய்ப்பைப் பெற்றார். இவர்கள் 18 சித்தர்களையும் வழிபடுபவர்களானபடியால் இவர்களின் பயிற்சி Babaji Kiriya யோக மார்க்கத்தை சார்ந்ததாகும்.

இவர் இலண்டன் சைவமுன்னேற்றச்சங்கத்தின் அறிவொளி வளையத்துடன் (Enlightement Circle) இணைந்து யோகா வகுப்புக்களையும் Natural Healing ஐயும் நடத்தி வருகின்றார். அவர் Enlightment Circle மூலம் இதுவரை 2000 ற்கும் மேற்பட்டோர் பலனடைந்திருக்கிறார்கள். அதனைவிட 10000 ற்கு மேற்பட்டோர் இவரிடம் யோகக் கலையயை பயின்று பலனடைந்திருக்கிறார்கள். இவர் தன்னிடம் பயிலும் 25 மாணவர்களை இரண்டு கிழமை யாத்திரையாக Mount Kailash ற்கு அழைத்துச் சென்று வந்திருக்கிறார். இலங்கை, இந்தியா, நோர்வே, போர்த்துக்கல், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் இவருடைய பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றது. இவர் Yoga Meditation Astram in Thiruvannamalai, Tamilnadu India இல் 2010 ஆண்டிலிலும் Laid down foundation for ashram in Portugal to promote Vasi yoga and meditation in 2014 இலும் நிறுவ வழிவகுத்தார். இவர் யோகா பயிறிசியில் Kundalini, Piranayama Technics ஐ பயிற்றுவிப்பதோடு தெற்கு இலண்டனிலும் இவர் யோகா பயிற்சி நிலையம் ஒன்றையும் நடாத்தி வருகின்றார். இவருடைய மனைவி மெலனியும் இவருடன் சேர்ந்து யோகா பயிற்சியளிக்க உதவி வருகின்றார்.

பத்தாந் திருமுறையான திருமந்திரத்தில் உள்ள மூன்றாம் தந்திரத்தில் கூறப் பட்டுள்ளதுபோல் திருவருளின் வழிகாட்டலையும் இவருடைய யோகா பயிற்சிகள் சார்ந்து நிற்கின்றது.

இவர் "Babaji's Five Fold of Path of Yoga" என்ற நூலை சைவமுன்னேற்றச்சங்க அறிவொளி நிலையத்தின் மூலம் வெளியிட்டுள்ளார். இவர் சித்தர்களின் வழிகாட்டலை சைவசமய பேச்சுக்களின் மூலமும் யோகா பயிற்சியின் ஊடாகவும் advocates healthy nutritious food & propagating vegetarianism for all. இதனால் எல்லா மக்களும் திடகாத்திரமாகவும மனநிம்மதியுடனும் வாழ்வைப் பெற வழியமைத்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Social Activist

*Mr.Thambirajah Uthayakumar, MSc (IT & Business)*



To begin with, Mr.Thambirajah Uthayakumar is an intense devotee of Lord Shiva and he is a great Social Activist. He came to UK during 1984 and based in Lewisham. He had his higher studies with Southbank University and London School of Accountancy. He worked as an accountant for various institutions in London including Immigration Advisory Services (IAS).

He was one of the founder members of Lewisham Poopalam, used to make regular donations to organisations such as Tharisanam foundation, mainly for blind and vision impaired young children in Batticalo and Jaffna hospital in Srilanka. Poopalam also organises annual sports and cultural activities to Tamil youth and parents in and around Lewisham area to encourage them to perform extra activities.

He was also one of the UK branch office bearers and activist of TECH, which was formed and lead by former Vice Chancellor of Jaffna University, late Professor. A. Thurairajah. The TECH was functioning from Vanni with the mission of empowering under privileged people. Indeed he is a team member of coordinators of Lewisham Sivan Temple volunteers group. The Sivan temple volunteers have rendered their great help to various temple activities, especially helped to run the annual Chariot festival successfully for the last four years.

As part of the project of keeping our children occupied and be physically fit, he has been associating with Henshou Issinryu Karate Academy to promote exercise and self-defence to our youngsters, at present engaging over 100 students in Lewisham area alone.

I like to conclude this by saying that we are honoured and proud to recommend the Social Activist award to a person who deserves it by his involvement with our community in London and Tamils home land in Srilanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Mr. Vidhuvasingham Anandakumar** hails from Jaffna, was educated at Union College Thellipallai, and then went to Madras College of Engineering to gain his Diploma in Civil Engineering. He continued his travels around the world by becoming a Desig n Teacher for the Makurdi Education Department in Nigeria, coming to the UK in the early 1980's to work as an Independent Financial Consultant and then going back to his engineering roots to work in the Window and Conservatory Design industry. Yet, throughout his travels, his deep rooted faith and spirituality kept him searching for ways in which he could help his fellow Hindus. He got involved in local temples and looked at ways to help promote our religion and culture.

When he came to settle in the UK, this took the form of becoming a co-founder of the Sree Ayyappa Seva Sangam in London in 1989 and it's Secretary from 1989 until 2002, which subsequently became the Ayappan Temple in Harrow. He also became a volunteer at Stoneleigh Amman Temple in 1996 and became a dedicated servant of the Divine Mother from then onwards.

Mr Anandakumar created his London Hindu Temples blog and website at a time when no other individual was doing this. It was a unique idea that he created in order to help those who could not come to Temples, because of age, infirmity or illness etc. to still feel part of the Temple and religious ceremonies that took place there. He also enabled Temples to have a visual record of their festivals and ceremonies, which was really important, especially for most Temples who don't have expensive audio-visual recording to do so themselves. Through this unique voluntary work that he does, he has created precious and lasting memories for all those involved with Temples – trustees, committees, priests and devotees. Memories that can be archived and stored for posterity to document the development of Saiva Temples and the Saiva religion here in the UK.

Through his website, he gives an idea of what is happening in temples all over London and other parts of the UK, as well as world-wide, inspiring other temples and devotees to incorporate best practise within their own temples.

He has inspired others to do a similar service of recording events in other parts of the UK and in other countries, so that our religion and traditions are being recorded in a positive way throughout the world. His website also gives valuable and inspiring information on other aspects of our culture and traditions, holistic medicine, health and well-being in a way that is easily accessible to all. He enables the children growing up here in the UK to connect with the traditions and Temples back in Sri Lanka and India, and helps them to see practical examples of what they are learning in their Hinduism classes. And they are inspired by watching the Carnatic music and Bharathanatyam programmes that he puts on his website also.

With the unstinting support of his wife and teenage son, he has harnessed the best of what is offered by modern technology and social media, which is what the youth of today love best and use every day. And he has used this to promote the best of what our ancient religion, culture and traditions have to offer to a worldwide audience of Saivites and non-Saivites, exemplifying the prayer that:

"Meynmaikhol Saiva Neethi Vilangkuha Ulaham Ellam "
"May the eternal Saivite philosophy enlighten all throughout the world"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணமும் வாழ்வியலும்

*தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்*

பேசுவதற்கு அரிய தொண்டர்களின் பெருமை பற்றி பேசப்படுவதால் "பெரியபுராணம்" என்று அழைக்கப்படுகிறது. இது திருத்தொண்டர்களின் புராணம் என்றும் அழைக்கப்படுகிறது. வாழ்வாங்கு வாழ்ந்த நற்றமிழ் சான்றோர்களின் சரிதம்தான் "பெரியபுராணம்". தொண்டையே உயிர் மூச்சாகக் கொண்ட அடியார்களின் வரலாற்றை விரிவாகப் பேசுகின்றது.

தொண்டலால் உயிர்க்கு ஊதியம் இல்லை என்று வாழ்ந்த அடியவர்கள்தான் பெரியபுராணத்து அடியவர்கள்! பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள் அவர்கள்!

உள் ஒன்று, புறம் ஒன்று என்று வாழாத உண்மை அடியவர்கள் பெரியபுராணத்து அடியவர்கள்! அவர்களுக்குக் கேடும் ஒன்றுதான்! ஆக்கமும் ஒன்றுதான்! இன்பமும், துன்பமும் ஒன்றுதான்!. வாழ்வும் தாழ்வும், ஏற்றமும் இறக்கமும், நன்மையும் தீமையும், சொர்க்கமும், நரகமும் ஒன்றுதான். அந்த அடியவர்களைப் பற்றி சேக்கிழார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்;

தொடர்ந்து சேக்கிழார் பாடுகின்றார்.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலாது ஒன்றுஇலார்;
ஈர அன்பினர்; யாதும் குறைவுஇலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?

அடியவர்களின் அடையாளம் உருத்திராக்கமாலை, திருநீற்றுப்பூச்சு, கிழிந்த கந்தலாடை, இதயம் ஈசன் (சிவன்) பணியையே சிந்திக்கின்றது. நானும் பொய், என் நெஞ்சும் பொய் என்று இதயம் ஈரம் நிறைந்த அன்பினால் கசிந்து உருகுகின்றது.

செல்வம், அதிகாரம், எதற்கும் அஞ்சாத வீரமும், இதயத்தில் சிவன் பணியை சிந்திக்கும் ஈர அன்பும் உடைய அடியார்கள் பற்றிச் சேக்கிழார் விரிவாக விளக்கமாக தருகின்றார். அவர் காட்டும் அடியார்களில் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்ற அடியொற்றி வாழ்ந்த அடியார்கள் உண்டு. "தன்னைத் துறந்து தொண்டை உறவாய்க்" கொண்டு வாழ்ந்த அடியார்கள் உண்டு.

"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு" என வாழ்ந்த அடியவர்தாம் "இளையான்குடி மாறநாயனார்" என்ற அடியவர். தம் இல்லம் வரும் அடியவர் அனைவருக்கும் அவர்தம் பசி ஆற்றி அனுப்புவதை ஆற்று ஒழுக்கான கடமையாய்க் கொண்ட கர்மவீரர்!

சிறப்பாய்ச் செல்வம் இருந்தபொழுது வற்றாது நடைபெற்ற பசிப்பிணி நீக்கும் திருப்பணி, வறுமை வந்தபோதும் தடைப்படவில்லை. மழைக்காலம் ஒன்றில் வறுமை வந்தபொழுதும் அடியவர் ஒருவர் பசியோடு வந்த பொழுது, அந்தப் பணியை இடையறாது நிறைவேற்றினார்.

"வீட்டில் நெல் இல்லை! அரிசி இல்லை! காய்கறி இல்லை! விறகு இல்லை! எதுவுமற்ற நிலையில் வறுமையின் உச்சத்தில் இளையான்குடி மாற நாயனார் இருந்தார்.

உலகிற்கு உணவு அளிக்கும் பசிப்பிணி மருத்துவர் சிவபெருமான் அடியார் திருக்கோலம் பூண்டு இளையான்குடி மாற நாயனார் இல்லம் வந்தார்! வளம் இருந்தபொழுது வாரி வழங்கிப் பசிப்பிணி தீர்த்த நாயனாருக்குப் பெருஞ்சோதனை! தானே கடும்பசியால் சோர்ந்திருந்தார். அந்த அடியவருக்கு அமுது (உணவு) அளிக்க ஆயத்தமானார். நாயனாரின் இல்லத்தரசி மறுகி நின்றார்.

வறுமையின் உச்சம்! வீட்டில் அரிசி, மளிகை, காய்கறி இல்லை. அடுப்பு எரிக்க விறகு கூட இல்லை. இந்நிலையில் கடன் கொடுப்பார் எவரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுப் பெறவும் நேரம் இல்லை! அம்மையார் அரிய யோசனை ஒன்றைச் சொன்னார்! வீட்டில் நெல், அரிசி இல்லை. இன்று தான் நாம் விதை நெல்லை விதைத்திருக்கின்றோம். அதை அரித்துக் கொண்டு வந்து கொடுத்தால் அமுதாக்கி விடலாம் என்று கூறினார். நாயனார் பெருஞ்செல்வம் பெற்ற மகிழ்ச்சியைப் போல் எல்லை இல்லா மகிழ்ச்சி அடைந்தார். மழை பொழியும் நள்ளிரவில் நாயனார் ஒரு கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு வயல் நோக்கிப் புறப்பட்டார். கால்களினால் தடவி தடவிச் சென்றார். வயலை அடைந்து மழை நீரில் மிதந்த நெல் முளைகளை கோலிவாரி அவைகளை கூடைகளில் நிரப்பித் தூக்கி வந்தார்.

நாயனார் வரவைப் பேராவலோடு எதிர்பார்த்திருந்த நாயகியார் கூடையை அன்புடன் இறக்கி நெல்முளைகளை கழுவி, நாயனாரைப் பார்த்து "விறகு இல்லையே" என்றார். நாயனார் தம் இல்லத்தின் வரிச்சுகளை அறுத்துத் தள்ளி விறகாக்கினார்.

"காய்கள் இல்லையே" என்று அம்மையார் சொல்ல, தம் வீட்டுப் பின்புறம் சென்று புன்செய்க் குறும்பயிர்களைத் தடவிப் பிடுங்கிக் கொடுத்தார்.

வழிவரும் இளைப்பி னோடும்
வருத்திய பசியி னாலே
'அழிவுஉறும் ஐயன்' என்னும்
அன்பினின் பொலிந்துசென்று,
குழிநிரம் பாத புன்செய்க்
குறும் பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்து அவை கறிக்கு நல்க. என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

உயிரின் பாசத்தினை (ஆணவத்தின் மூலத்தை) அறுத்து தவஞான நிலையில் அன்பினில் பொலிந்து நிற்கின்றார் இளையான்குடி மாறநாயனார்.

இளையான்குடி மாறநாயனார் தம் இல்லத் துணையோடு நடத்திய இல்லறம் அன்பின் வழிப்பட்ட நல்லறம், பண்பின் வழிப்பட்ட பேரறம், இறைவனை அடியவராக்கி அவர் இல்லம் நோக்கி அழைத்து வந்தது. உலகின் பசிப்பிணி மருத்துவர் பசி ஆற்றிய பேரன்பின் பிறப்பிடம் இளையான்குடி மாற நாயனார் இல்லம்!

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்

என்ற அருங்குறளின் இலக்கணம் இளையான்குடி மாற நாயனார் இல்லம்!

அந்த இளையான்குடி மாறநாயனார் இல்லத்திற்கு அஞ்சலக முகவரி இல்லை. அடியவர் அடிவயிற்றுப் பசித்தீயை அணைக்கும் அந்த இல்லத்திற்கு **அன்பின் முகவரி**தான் உண்டு!

இன்று பெரியபுராணம் காட்டிய அன்புத் தடம் எப்படி தடம் மாறி இருக்கின்றது? பொருள் ஈட்டும் சமூகத்தின் போக்கில் இல்லங்களின் மனித இதயங்கள் வாழாது இயந்திரங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பெற்றோர்களும், குழந்தைகளும் காப்பகங்களில் வாழ்ந்து வருகின்றனர். வளர்ந்து வரும் சிற்றுண்டிச்சாலைகளும், தங்கும் விடுதிகளும் விருந்து ஓம்பும் பண்பு நம்மிடம் இருந்து விடைபெற்று விட்டதைக் காட்டுகின்றன.

நாயன்மார்கள் வாழ்ந்த நற்றடம் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

'இல்லை' எனாது வழங்கிய **இயற்பகை நாயனார்**

தம் இல்லத்தில் பசிப்பிணி தீர்ப்பதையே வாழ்வாய்க் கொண்ட **இளையான்குடி மாற நாயனார்**, நாவுக்கரசு பெருமான் காட்டிய நற்றொண்டு, கண்ணப்பர் காட்டிய பக்தி வாழ்க்கை வேண்டும்.

தொண்டும், உறவும், துறவும், தோழமையும், அன்பும் பெரியபுராணம் காட்டிய பக்தி வாழ்க்கை. அந்த வாழ்க்கை நெறியை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்.

நாயன்மார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம்!
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்!

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

# பெரியபுராணமும் வாழ்வியலும்

- மருதாசல அடிகள்

வாழ்க்கை என்பது உயிர் வளியை உள்ளிழுத்து கரிவளியை வெளியிடும் ஒரு மூச்சுப்பயிற்சி அன்றி அஃது ஒரு நெறியாகும். இது மானுடன் மறைந்த பின்னும் மறையாது நிற்பதாகும். அதனால் தான் மக்கள் வாழ்க்கையை 'வாழ்க்கை' எனவும் பிற உயிர்களின் வாழ்க்கையை 'இயக்கம்' எனவும் சுட்டப்படுகிறது. மக்கள் வாழ்க்கையை வாழ்வியல், வாழ்வியல் நெறி எனவும் கூறுவர். இதனை வள்ளுவர், 'வாழ்வாங்கு' எனும் தொடரால் குறிப்பிடுவார். வாழவேண்டிய நெறிப்படி வையத்து வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக வைத்துப் போற்றப்படுவான் எனும் கருத்தை வெளிப்படுத்துகிறார். தமிழ் இலக்கியங்கள் யாவும் வாழ்வியல் நெறிகளை அறிவுறுத்துவனவாக உள்ளன. அவ்வகையில் பெரிய புராணம் உணர்த்தும் வாழ்வியலைத் தொகுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இயற்கை ஈந்திடும் வாழ்வியல்:**

இயற்கை கற்பிக்கும் வாழ்வியல் பேருண்மைமிக்கது. தனக்குக்கீழ் மாறுதல் ஏற்பட்டாலும் நிலைமாறாத்தன்மை கொண்ட வானம், தான் கொண்ட கொள்கையை விடாமல் கடைப்பிடிக்கும் வாழ்வியல் நெறியை உண்ர்த்துகின்றது. கதிரவன், தீயோருக்கும் நன்மை புரிதலையும் யாவரையும் சமமாகக் கருதும் பண்பையும் கற்பிக்கின்றது. சந்திரன், தான் வளர்ந்தாலும், தேய்ந்தாலும் பிறருக்கு ஒளி வழங்கத் தவருவதில்லை. ஆதலால், சந்திரன் பிறர் நலத்தைப் பெரிதாகப் பேணும் வாழ்வியல் நெறியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இவ்வாறு ஒவ்வொரு இயற்கையும் ஒவ்வொரு வாழ்வியல் உண்மைகளை வகுத்துக்கூறிக்கொண்டே இருக்கின்றன.

**குறிக்கோள் வாழ்வியல்**

சைவ அருளாளர்கள் பலரும் வெவ்வேறு காலத்தவர்கள். வெவ்வேறு நிலையினர்கள். குலத்தாலும் நிலத்தாலும் ஒன்றுபட்டவரும் உண்டு. வேறுபட்டவரும் உண்டு. ஆயினும், இவர்கள் குறிகோளினால் ஒன்றுபட்டவர்கள். வாழ்வியலுக்கு ஒரு இலட்சியமும் அதனைப்பெறுவதற்குரிய நெறியில் ஊன்றி நிற்றலும் வேண்டப்பெறும். அப்பரடிகள், "குறிக்கோளிலாது கெட்டேன்" என்று பிறர் நிலையில் வைத்துப்பாடியிருப்பினும் உயரிய குறிக்கோளுடன் வாழ்ந்தவர்.

**தொண்டரைப் பரவுதல்:**

இறைவனுக்கு ஆற்றும் பணியினும் அடியவர்க்குப்புரியும் தொண்டு சமய வாழ்க்கையின் முதன்மைக்கடமையாகாக் கொள்ளப்பெறுகின்றது. இறைவனைப்பாடுதற்கென்றே எழுந்த திருமுறைப்பாடல்களில் அடியார்களைப்பரவும் பாடல்கள் விரவி வருதல் காணத்தக்கது. சமயக்குரவர்கள் அனைவரும் அடியார் சீரினைப் பரவியிருப்பினும் அவருள்ளும் சுந்தரர் தனித்துக்காணப்படுகிறார். பன்னிரண்டாம் திருமுறையாக அமையும் பெரியபுராணம் திருத்தொண்டர் புராணமாக விரிவு பெற்றுத்தொண்டின் பெருமையினையும் தொண்டர்களின் சிறப்பினையும் வாழ்வியலையும் பழம்பெருமையினையும் பரம்பொருளின் அருட்செயலையும் போற்றிப்பரவுகின்றதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அளவி லாத பெருமைய ராகிய
அளவிலா அடியார் புகழ் கூறுகேன்"

என்று பாடலடிகளால் திருத்தொண்டரின் மாண்பினைப் போற்றிப்பரவுகின்றார். இங்கு தொண்டர்களில் மாண்பினைப் போற்றும் வாழ்வியல் வெளிப்படுகிறது.

பிறவி மாண்பினை உணர்த்தல்:

உலகில் பல்வகை உயிரினங்கள் உள்ளன. தொல்காப்பியர் ஒரறிவு உயிர் முதல் ஆறறிவு படைத்த மனிதர் வரை பல்வகை உயிர் இனங்களை மரபியலில் சுட்டியுள்ளார். மணிவாசகப்பெருமானும்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி "

எனும் சிவபுராணப் பகுதியில் தாம் புகுந்து வந்த நீண்ட பிறவிப் பயணத்தைச் சுட்டியுள்ளார். எனினும் மனிதப்பிறவியே பரம்பொருளை உணர்ந்து வழிபட்டு உய்திபெறுதற்கு ஏற்புடையது என்ற கருத்து அருளாளர்கள் பாடல்களில் இடம் பெற்றுள்ளது. எனவே தான் அப்பர் பெருமான்

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்ற கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை எண்ணி மதித்துப் பயன் வாய்ந்தாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்று அறிவுறுத்தினார். பல்வகைச் சாதனைகளுக்கும் உலக வளர்ச்சிக்கும் மனிதப்பிறவி காரணமாக அமைகிறது. பயன்மிக்க வாழ்வினை மேற்கொள்ளுவதற்கே இப்பிறவியைப் பெற்றுள்ளோம் என்பது அருளாளர்கள் எண்ணமாகும்.

நமக்கு இறைவனால் வழங்கப்பெற்ற உடம்பையும் நுகர்ச்சிப்பொருள்களையும் வெறுத்து ஒதுக்கும் பிறசமயத் தன்மையைத் திருமுறைகள் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. மலபரிபாகத்தின் பொடருட்டே இப்பிறவி கிடைத்துள்ளது. அதனை அறிந்து ஈடேறுவதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே அருளாளர்களின் குறிக்கோளாகும். திருஞானசம்பந்தர்

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை"

எனத்தொடங்கும் பாடலில் திருவருள் நெறிநின்று மாந்தர் நல்ல வண்ணம் வாழ்தற்கு ஆற்றுப்படுத்தியுள்ளார். இறைவனை எண்ணிக் கடமைகளை ஆற்றும் பொழுது ஆற்றலும் ஊக்கமும் பெறுகிறோம். இறைவனைப்பரவும் நாட்கள் எல்லாம் பிறந்த நாளைப் போலச் சிறந்த நாட்கள் என்பது அப்பர் பெருமானின் கொள்கையாகும். இத்திறத்தினைப்,

"பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

என்றும்,

"துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை யேத்தும் நாள்கள் என்பாரும்"

என்ற தேவாரப் பகுதிகள் தெளிவுறுத்துகின்றன. பணிசெய்வதே வாழ்க்கையின் குறிக்கோள். இறைப்பணியாளர் மக்கள் தொண்டராகவும் விளங்குதல் வேண்டும் என்பது திருமுறை வழங்கும் செய்தியாகும். திருநாவுக்கரசர்,

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அடக்கமாகக் கூறும் அருள்மொழி அனைவரையும் விரும்பச்செய்வதாகும். எதனையும் எதிர்பாராமல் திருத்தொண்டர்கள் பணிபுரிதல் வேண்டும். இறைவன் பணிபுரிவதனையே வேண்டினார் என்பதனைச் சேக்கிழார் பெருமான்,

"வித்தகம் பேசவேண்டாம் பணிசெயல் வேண்டும்"

என்று குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.

வாழ்நாளை நல்ல முறையில் பயன்படுத்துதல் வேண்டும். பயனற்ற வெறும் நாளாகப் பொழுதைப்போக்குதல் பிறவி நோக்கத்தை அறியாதவரின் பேதைமைச்செயலாம். இறைவனை முன்னிலைப்படுத்தியே நாட்கடமைகளைச் செய்யத் தொடங்குதல் தமிழர் பண்பாடு ஆகும். புலர்காலையில் எழுந்து நீராடி, வழிபாடாற்றுவதனை,

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றோரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் போரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே"

என்ற பாடல் வரிகளில் விளக்கியுள்ளார்.

## அச்சமிலாப் பெருமிதப்பொலிவு

இறைப்பணி நிற்பவர் அச்சமிலராய், பெருமிதப்பொலிவுடன் ஒளிவீசுவர். உண்மையில் உரைத்து நிற்பவர் மெய்மையைக்கண்டு கலங்க வேண்டியதில்லை. இத்தகைய மனத்திட்பத்தினை நமது அருளாளர்கள் வாழ்வியலிலிருந்து உணர முடிகின்றது. அப்பரடிகளும்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியரியோம் பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"
"உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் யாதொன்றும் இல்லை"

என்று பெருமிதப்பொலிவு தோன்றக் கூறுதல் கருதத்தக்கது. மாணிக்கவாசகர்,

"யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்"
"எங்கெழில் என் ஞாயிறு எமக்கு"

என்று பெருமிதம் தோன்ற உரைத்தல் ஆன்மபலத்தின் விளைவாகும். அப்பரடிகள்,

"வான் துளங்கிலென் மண்கம்பம் ஆகிலென்"

என்று நெஞ்சுறுதியுடன் முழங்குவதற்கும் அருள்திறமே காரணமாகும். உண்மை அடியார்கள் உலகியல் நிலைக்கு ஆட்படமாட்டார்கள். அஞ்சாமை என்பது அஞ்சத் தேவையில்லாதவற்றிற்கு அஞ்சாமல் இருப்பதைச் சுட்டுவதாகும். திருவள்ளுவர், 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்று கீழோர் இயல்பினைச்சுட்டுகிறார். ஆதலின், மேலோரின் ஆசாரம் அஞ்சாமை என்பதும் அது அருள் உள்ளத்தில் சுரப்பது என்பதும் அப்பர் வாழ்வியலால் அறியலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினை நீக்கத்தினை உணர்த்தும் வாழ்வியல்

உழைப்பிலும் தொண்டிலும் இறையுணர்விலும் அழுந்தி இருக்கும் அன்பர்களை வினைகள் வந்து நலியாது என்று திருமுறை ஆசிரியர்கள் பாடியுள்ளனர். ஈசனடியார்கள் மாசற்றவர்கள். "பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்". பழவினைப்பயனை மெய்த்தொண்டர்கள் வென்று வீற்பெறுதல் முடியும் என்பதே அடியார்களின் முடிந்த கருத்தாகும். கழிந்ததனை எண்ணி மனம் அழிந்து சோம்பித்திரியாமல் திருவருளினைப் பெரிதும் பற்றி உய்தல் வேண்டும் என்பது திருமுறை நெறியின் நோக்கமாகும்.

அடியார் கூட்டத்தில் இணங்கிநின்று ஈசன்பணியும் மக்கட்பணியும் செய்தொழுகும் சீலர்கள் வினையை வென்று விளங்குவர் என்பது திருமுறைத்தெளிவாகும். நன்னெறி நிற்பவருக்கு நாயன்மார்களின் வாழ்வியல் நம்பிக்கையூட்டி, வாழ்வாங்கு வாழவைக்கும்.

சமுதாயத்தொண்டு

நமது அருளாளர்களும் அடியார்களும் சிறந்த சமுதாயத் தொண்டர்கள். புலன் அழுக்கு அற்றவர்கள். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகியவர்கள். ஆதலின், அவர்தம் பாடல்களில் சமுதாயப்பிரிவுகளால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சமதரும சமுதாயத்தை அமைக்க முற்பட்டனர். சிவ பரம்பொருளைச் சிந்தனை செய்து வந்தனை புரியும் சமுதாய நிலையில் இனப்பாகுபாடு கடியப்பட்டது. எவ்வுயிரையும் ஒப்பநோக்கும் அருளுணர்வும் மனித நேயமும் அடியார்களிடம் சிறந்தோங்கியது.

பிறப்பினால் வேறுபாடற்ற சமுதாயத்தைக் காணவிழைந்த திருமுறையாசிரியர்கள் பொருளாதார ஏற்றத்தாழ்வினைப்போக்க எண்ணினர். அறவழியில் அவர்கள் போதனை அமைந்தது. இருப்பவர்கள் இல்லாதவர்கட்கு இயன்ற மட்டிலாவது ஈகை புரிதல் வேண்டும் என்றும், அதுவே இறைவனுக்கு உவப்பானது என்றும் அறிவுறுத்தினர். பசிப்பிணி போக்கும் பேரறத்தைப் பேணினர்.

இன்னார் இனியர் என்று பேதம் விசாரியாது பிறருக்குக் கொடுத்துப்பின்னரே உண்ணுதல் வேண்டும் என்பது நல்லறம். இரப்பவர்க்கு இல்லை என்னாது ஈதல் வேண்டும் என்பதற்காகவே இறைவன் பொருளை வழங்குகிறான் என்பதைப் பெரியபுராண அடியார்களின் வாழ்வியலால் அறியமுடிகின்றது.

ஆதலின், "நலம் வளர்க", "இன்பமே எந்நாளும்", "என்றும் இன்பம் தழைக்க", "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்", 'உலகம் வாழ்க" என்று திருமுறை வழங்கும் நற்செய்தி யாவருக்கும் இன்பம் பயக்கும் என்பதைத் தெளிவாக்குகிறது. மேலும், வாழ்க்கையில் நெறிப்பிறழ்வுகள் இல்லாமல் வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்து வளம்பல பெற்றிட வாழ்வியல் கல்வியைப்புகட்டும் திருமுறைகளும், பெரியபுராணமும் சாலச்சிறந்த ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**B. Vasantha Gurukkal BA (Hons)**
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்**
கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ.
Home: 02085233802
Temple: 02085273819 Mob: 07903707878 Email: Vasanthan@live.co.uk



# பெரியபுராணத்தில் வைதிக நெறி

சைவ சமயத்தில் பல நூல்கள் ஞானிகள் ஆன்றோர்கள் சான்றோர்கள் என்பவர்களால் எமக்கு தரப்பட்டுள்ளது. எல்லாவற்றிலும் மேலாக வேதங்கள் இறைவனால் தரப்பட்டவை என்பதை எல்லா நூல்களும் அருளியுள்ளன.

வேத நெறி என்பதே வைதிக நெறியாக போற்றப்பட்டது. திருஞான சம்பந்தருடைய அவதாரம் வேத நெறி தழைத்தோங்க எனவும், பரசமய தருக்கொழிய சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க சிவம் பெருக்கும் திருஞான சம்பந்தப்பிள்ளையார் திருஅவதாரம் செய்தார் எனவும், அண்டர் குலம் அதிசயிப்ப அந்தணர் ஆகுதி பெருக அவதாரம் செய்தார் எனவும் பெரிய புராணம் கூறுகிறது. வேதங்கள் நான்கு என்பதும் அதன் அங்கங்கள் ஆறு என்பதும் பொதுவாக திருமுறைகளில் கூறப்படுகிறது. அதேபோல் வேதியர்களுடைய கடமைகள் ஆறு எனவும் பல இடங்களில் கூறப்படுகிறது.

குறிப்பாக சோதிடம் வேத அங்கங்களில் ஒன்றாக விளங்குகிறது. வேதம் ஓதுதல், ஓதுவித்தல், யாகம் செய்தல், செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் பெறுதல் போன்ற ஆறு வகைப்பட்ட நிலைகளில் வேதியர் கடமையாற்றுதல் பற்றியும் பல திருமுறைகள் குறிப்பிட்டுள்ளன.

பெரியபுராணத்தில் நாயன்மார்களுடைய வரலாறு மட்டுமின்றி சமய வாழ்வு மரபு பண்பாடு வேள்விகள் யாகங்கள் வேத மந்திரங்கள் என்பன பற்றி பல இடங்களில் எடுத்தாளப்படுகிறது. வேதமும் வேள்வியும் பல இடங்களில் காட்டப்பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனாரை கூறும்போது மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்துள் தோன்றி என்பதால் வேதம் ஓதும் பரம்பரை வேதியர் குலமாக பெரியபுராணம் ஒப்பிடுவதை அவதானிக்கலாம்.

திருஞான சம்பந்த சுவாமிகள் நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் ஆக இருந்தாலும் பல இடங்களில் நான்மறைகள் பற்றி கூறியிருப்பதுடன் அவரது உபநயனம் விவாகம் போன்றவை வைதிக நெறியில் நடைபெற்றதாகவே சேக்கிழார் கூறுகிறார். உபநயனத்தின்போது குருவானவர் வேத மந்திரங்களை சீடனுக்கு சொல்லிக்கொடுப்பார். ஆனால் சம்பந்த சுவாமிகளுக்கு ஓத வைக்கும்போது சீடனாகிய சம்பந்த சுவாமிகள் மேலும் பல வேதங்களை தாமாகவே ஓதினார்.

பொருவிறப்ப ஓதினார் புகலிவந்த புண்ணியனார் எண்ணிறந்த புனித வேதம் என்கிறது பெரியபுராணம்.

மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் திருமண விழா நடைபெறும் போது பூணுல் தரித்தல் பவித்திரம் அதாவது கையில் தர்ப்பை அணிதல் போன்ற வைதிக காரியங்கள் நடைபெற்றதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம் எடுத்துரைக்கிறது.பால்முறை முன்னூல் மின்னப் பவித்திரம் சேர்ந்த கையன் எனவே உபநயனம் போன்ற வைதிக நெறி பேணப்பட வேண்டும். அத்துடன் சம்பந்தப் பெருமானை திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்பவர்கள் காரணத்தை பின்வருமாறு சொன்னார்கள். அதாவது முறைப்படி வேத வேள்வி செய்ய வேண்டுமென்றால் திருமணம் செய்ய வேண்டும். கோதில் மறை நெறிச் சடங்கு காட்டவரும் வேள்வி பல புரிவதற்கு ஓர் கன்னிதனை வேட்டருள வேண்டும். இதுவும் வைதிக ஆகம நெறி சார்ந்ததாகும். பொது வேள்விகள் செய்பவர்கள் திருமணம் செய்து இருக்க வேண்டும் என்பது சைவ மரபு. இன்னுமொரு இடத்தில் ஆளுடைய பிள்ளையாரை பின்வருமாறு கேட்பதாக பெரிய புராணம் கூறுகிறது.இருநிலத்து மறை வழக்கம் எடுத்தீர் நீர் ஆதலினால் வருமுறையால் அறுதொழிலின் வைதிக மா நெறி ஒழுகும் திருமணம் செய்தருளுதற்கு திருவுள்ளம் செய்யும். இங்கு வேத முறைமையும் ஆறு தொழில் சம்பந்தமான விடயமும் வைதிகத்தின் சிறப்புடன் கூறப்படுகிறது.

மற்றுமொரு சிறப்பான முறை திருமணச் சடங்கின் போது வைதிக நெறியில் உள்ளது. அது சமாவர்த்தனம் எனப்படும் நிகழ்வு. அதாவது பிரும்மச்சார்ய வாழ்க்கையை நிறைவு செய்து இல்லற வாழ்க்கைக்கு புகும் முன் உள்ள பகுதி. இதனை சேக்கிழார் பகரும் வைதிக விதிச் சமாவர்த்தனப் பான்மை திகழ முற்றிய செம்மலார் என்கிறார்.

பெரிய புராணத்தில் பெரும்பகுதி சம்பந்தப் பெருமான் பற்றியது. அதிலும் நூறு பாடல்களுக்கு மேல் வைதிக திருமணம் தொடர்பான பாடல்கள் என்பது கவனிக்கத்தக்கது. மற்றும் ஒரு விடயம் வைதிக அல்லது ஆகமம் சார்ந்த விவாக நடைமுறையில் காப்புக் கட்டுதல் முக்கிய இடம் பெறும். இதனையும் சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஆர்வம் மிக்கெழும் அன்பினால் மலர் அயன் அனைய சீர் மறைத் தொழில் சடங்கு செய் எனத்தொடங்கி சார்பொழிப்பவர் திருக்கையில் காப்பு நாண்சாத்த என்றார். சம்பந்தப் பெருமான் திருமணத்தில் வேதியர்கள் பலர் வேத ஒலி முழங்கினார்கள்.வேதியர் வேத வாய்மை மிகுமொலி ஒருபால்.

அடுத்து ருத்திரம் என்பது வேதங்களில் முக்கியமாக யசுர் வேதம் சார்ந்தது. இன்றும் ஆலயங்களில் இவ்வேதம் ஓதப்பட்டு வருகிறது. நாயன்மார்களுள் உருத்திர பசுபதி நாயனார் இவ்வேதத்தை இடைவிடாது ஓதிமுத்தி பெற்றார் என்ற வரலாறும் பெரிய புராணத்தில் உண்டு. இதனால் வேதங்களின் அவசியத்தை அறியலாம்.

ஆதிசைவர் எனப்படும் சிவாச்சாரியார்கள் ஆலய வழிபாட்டில் தங்களை பரார்த்த நன்மைக்காக அதாவது எல்லோரதும் நலனுக்காக ஈடுபடுத்தினார்கள் என்பதை எப்போதும் இனியபிரான் இன்னருளால் என்று தொடங்கி முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவர் என்கிறார் சேக்கிழார். இங்கு முதற்சைவர் என்பது தான் ஆதி சைவராகும்.

அத்துடன் வேத வழிசார்ந்த மரபு அறுதொழில் சிறப்பு என்பதை இன்னுமொரு பாடலில் வலியுறுத்துகிறார். மறுவிலா மரபில் வந்து எனத்தொடங்கி அறுதொழில் ஆட்சியாலே அருங்கலி நீக்கியுள்ளார் எனவும் போற்றுகிறார்.

அடுத்து சிவவேதியர்கள் அர்ச்சனை செய்வதற்கு உரியவர்கள் என்பதை வழி வழியே திருத்தொண்டின் விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன அப்பெரும் தகையார் குலப்பெருமை ஆம் புகழும் பெற்றியதோ என்றும் மரபு வழி சார்ந்த பெருமைகளை கூறுகிறார்.

ஆகவே சைவ சமய வழிபாடில் வேதங்கள் அவற்றின் வழி வரும் வைதிக நெறிகள் சிவ வேதியர்கள், யாகங்கள் என்பன மரபு வழி சார்ந்த பெருமையுடையவை என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகளும் பிரதானமாக பெரியபுராணமும் கூறுவதால் பன்னிரு திருமுறையை மதிப்பவர்கள் இவற்றையும் மதித்து வைதிக சமயம் பரவ முன்வரல் வேண்டும்

# பெரியபுராணம் காட்டும் வாழ்க்கை நெறி

**சிவஸ்ரீ இரகு. கமலநாதக் குருக்கள் BA (Hons)**
பிரதமகுரு, என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்



ஓர் உயர்ந்த விழுமிய பக்தி நெறியில் நின்று வாழ்க்கையின் குறிக்கோள் செம்மையாக நிறைவேற்றியவர்கள் இறையடியார்கள். இவ்வடியார்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறியை சுட்டிக்காட்டுவதே பெரியபுராணம் ஆகும்.

சமணம், பௌத்தம், காளாமுகம் எனப் பல்வேறு மதங்கள் தோன்றி மக்கள் குழப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில் சம்பந்தரும், அப்பர் சுவாமிகளும் ஊர் ஊராகச் சென்று கோவில்கள் தோறும் இறைவனை வழிபட்டு பாடல்களைப் பாடி மக்களை ஒன்றிணைத்து சைவ சமயத்தின் பெருமைகளை மீண்டும் நிலைநிறுத்தினர். இவர்களைப் பின்பற்றிய அடியவர்கள் இறைவனுக்குத் தொண்டு செய்தல் பக்தி செலுத்துதல் என்று ஏதேனும் ஒரு குறிக்கோளை செம்மையாக நிறைவேற்றிய இறையடியார்களின் வரலாற்றை இனிதே எடுத்துரைப்பது பெரியபுராணம் ஆகும். இப்பெரியபுராணத்தை "பக்தி சுவை நனி சொட்ட சொட்ட பாடிய கவி வல்லவர்" சேக்கிழார் எனப்படுவார். இடைக்காலத்து இலக்கியங்களின் நாட்டு மக்களின் வாழ்க்கை பற்றித் தெரிவிக்கும் வழிகாட்டி நூலாக விளங்குகிறது பெரியபுராணம். சேக்கிழார் காட்டும் இறையடியார்கள் தம் மேனி மேல் பூசும் நீறு போல் உள்ளும் புனிதர்கள் அவர்கள் ஐம்பூதங்கள் தம் நிலையில் கலங்கினாலும் இறைவனின் மலர்த்தாள் மறவாதவர்கள் கோதிலாத குணப்பெருங்குன்றனையவர், ஈர அன்புளர், ஈசன் பணி அல்லது பக்தி வழிபாடு தவிர முத்தியையும் மதித்து நாடாத பெருமிதமான மனப்பான்மை உடையவர்கள்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்
கடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்று அவர்களைப் போற்றி பாடுகின்றார் சேக்கிழார். இத்தகைய அடியவர்களைப் பாடும் பெரியபுராணம் இவ்வடியார்களின் வழி சமுதாயத்திற்கு, மனிதனுக்கு வாழும் நெறிமுறைகளைக் காட்டிச் செல்கிறது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு உயரிய மொழிகளைக் கூறி நிற்கிறது.

பெரிய புராணம் கூறும் அடியார்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர் அல்லர், ஒரே ஊரில் பிறந்தவரும் அல்லர், ஒரே பிரிவினையைச் சேராதவர்கள். அப்பட்டியலில் அரசனும் உண்டு. ஆண்டியும் உண்டு. பெரும் வணிகரும் உண்டு. மட்பானை செய்து எளிய வாழ்வு வாழும் வணிகரும் உண்டு. அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் சூத்திரர் என பல்வேறு சாதியினர் உள்ளனர். ஆனால் இவர்கள் அனைவரும் சிவனடியார்கள் சிவன் மீது அதீத பற்று கொண்டவர்கள் என்ற ஒற்றுமையைத் தாண்டி மற்றொன்றும் இவர்களை பிணைத்து வைத்துள்ளது அதுதான் குறிக்கோள்.

ஒவ்வொரு சிவனடியார்களுக்குள்ளும் ஒரு குறிக்கோள் உடையவராக விளங்குகின்றார்கள். தாம் கொண்ட தொண்டை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற முனைப்பு உடையவர்களாக விளங்குகின்றார்கள். பெரியபுராணத்தில் பக்தியும் உண்டு. சமயமும் உண்டு என்றாலும் இவை அனைத்தையும் தாண்டி மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்றால் குறிக்கோள் இறை உணர்வு தொண்டு என்ற மூன்றும் வாழ்வில் தலைதூக்கினால் அன்றி ஓரினம் சிறந்த வாழ்வைப் பெற முடியாது என்பதே பெரிய புராணத்தின் உயிர் நாடியாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்திலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

எனப் பாடியுள்ள திருமூலரின் வாக்கிற்கு அமையவே பெரிய புராணம் அமைந்துள்ளது. "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என வள்ளலார் பாடுகின்றார். இறையடியார்கள் என்னிலையில் உள்ளவராயினும் எக்குலத்தவர் ஆயினும் எல்லோரையும் இணைத்து நிற்பது அன்பு நெறியாகும். இறைவன் மீது கொண்ட அன்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே பெரியபுராணம். உள்ளத்தில் உள்ள அன்பே அன்றி புறத்தோற்றங்கள் எதுவும் இறை அன்புக்குத் தடையாகாது என்பது பெரியபுராண சிந்தனை.

வெட்டு, குத்து, கொல்லு என நாளும் வாழும் வேடர்குலத்தில் பிறந்த கண்ணப்பநாயனார் மலையில் குடுமித்தேவர் என அழைக்கப்பட்ட இறைவனைக் கண்ட உடன் காதலாகி அவர்மீது பற்றுக் கொண்டு பிற எல்லாவற்றையும் மறந்து வாழ முற்படுகின்றார். தான் வேட்டையாடிய விலங்குகளைப் பதப்படுத்தி, சுவை பார்த்து, இலையில் எடுத்துக்கொண்டு, மலர்களைத் தலையில் தாங்கி, நீரை வாயில் சுமந்து, அன்பு உமிழ்வது போல் நீரை இறைவன் மீது உமிழ்ந்து அவர் கண்ணில் வரும் குருதியை நிறுத்த தன் கண்ணைத் தருகிறார். ஒரு தாயைப் போல் மனம் உருகும் அவர் செயலை கண்டு

" அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வரமென்றும்
அவனுடைய நிலையில் வாற் அறினி என்று அருள் செய்வார்."

என இறைவன் திருவாக்காக சேக்கிழார் கூறுகின்றார். இதனால் தான் மாணிக்கவாசகரும் திருத்தோம்பியில் " கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்று கண்ணப்பர் உடைய அன்பு தனக்கு இல்லையே என வருந்துகின்றார்.

பெரியபுராணம் அன்பு நெறியே இறைவனை அடையும் என்பதனை அழுத்தமாகக் கூறும் ஓர் உயர்ந்த சமய நூலாகும். கடவுளை நம்புதல், இன்ப அன்பே தவமாதல், திருத்தொண்டில் இன்பம் ஆறுதல் ஆகிய அனைத்து உலகிற்கும் பொதுவான கொள்கைகளையே அடியவர்களின் வாழ்க்கை நெறி ஊடாகக் காட்டுகின்றது.

பௌத்தராக பிறந்தவராயினும் சாக்கியநாயனார் சிவநெறியே மெய்ந்நெறியென்ற உய்ந்து புறத்தே பௌத்தராகவும் அகத்தில் சிவபெருமானை வழிபாடு ஆற்றி கற்களை மலராக எறிய அதனை இறைவன் அன்பின் செயலாக ஏற்கின்றார்.

" என்னிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர் சங்கரன் தாழ் மறவாமை பெருளென்றே
துன்னிய வேடன் தன்னை துறவாதே தூய சிவன்
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்."

என அவரது அன்பு நிலையைக் கூறுகின்றார். நெஞ்சமே கோவிலாக நினைவே சுகந்தமாக அன்பே மஞ்சன நீராக என்பதனை பூசலார் வாழ்வைக் காட்டுகின்றார். நல்லதொரு குறிக்கோளை வரையறுத்துக்கொண்டு அக்குறிக்கோளை நெகிழ விடாமல் உயிர் போனாலும் அதைக் காப்பாற்றுவது என்று வாழ்கின்ற மனநிலையே உயர்ந்த மனநிலை ஆகும். அக்குறிக்கோள் சிவபெருமானை எங்கும் கண்டு வழிபடும் வகையில் சிவனுக்கும் சிவனடியாருக்கும் ஏதேனும் தொண்டு செய்து வாழ்ந்தார்கள்.

இவ்வாறு பல்வேறுபட்ட நிலையில் அடியார்கள் வாழ்ந்த வாழ்வைக் கூறும் பெரியபுராணம் ஓர் சமய நூல் மட்டுமன்று ஒரு சமுதாய நூலும் கூட. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வாய்மொழியை மெய்ப்பித்துக் காட்டுவது பெரியபுராணம். சாதி சமயங்களைக் கடந்து அன்பும் தொண்டுமே சமுதாயத்திற்கு, அதில் வாழும் மக்களுக்கு இரு கண்கள் எனக் காட்டுவது பெரியபுராணம் ஆகும்.

வாழ்க வளமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணம் வரலாற்றின் தேவை சைவவாழ்வு மனிதாய மீட்சியின் தேவை

'செந்நெறிச் செல்வர்' சூ.யோ.பற்றிமாகரன்
BA,Special Diploma (Oxford), BSc,MA(Politics of Democracy) MA (Tamil)

## முன்னுரை

இலண்டனில் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் தனது 15வது மாநாட்டை "பெரியபுராணமும் சைவவாழ்வியலும்" என்பதை மையக்கருவாகக் கொண்டு நடாத்துகின்றார்கள். "உலகம் உய்யவும் சைவம் நின்று ஓங்கவும்" (பெ.பு. பாடல் 50). செய்யும் திருவருள் செயலாக இது அமைகிறது. "உலகெலாம்" (பெ.பு. பாடல் 1) என " வெருள் இல் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய" வழி சேக்கிழார் பெருமான் பாடியமையால் தெய்வீகத் திருநூலாகப் போற்றப்படும் நூல் பெரியபுராணம். அவ்வகையில் பெரியபுராணத்தை நினைத்தலும் போற்றலும் பேசலும் வளர்த்தலும் ஞானபூசையாகவே விளங்கி எல்லா நலங்களையும் மாநாட்டின் பயனாக உலகிற்கு வழங்கும் என்பது உறுதி. இதற்காக இத்தலைப்பை மையப்பொருளாக மாநாட்டுக் குழுவினரைத் தேர்ந்தெடுக்க வைத்தமைக்கு முதற்கண் எல்லாம் வல்ல .இறைவனுக்கு நன்றிகள்.

இச்சிறு ஆய்வுக்கட்டுரை வரலாற்றின் தேவையாகப் பிறந்த பெரியபுராணம் எமக்கு ஏன் தேவையாகிறது? சைவவாழ்வு மனிதாய மீட்சிக்கு எவ்வாறு உதவ முடியும்? என்பதை எடுத்தாராய்வதைத் தனது நோக்காக் கொண்டமைகிறது. இறையுணர்வும் இறையடியாரைப் போற்றுதலுமான பெரியபுராணத்தின் போக்கை இக்காலப்போக்காக மாற்றுவதற்கான சிந்தனைகளை மீட்டுவதே இக்கட்டுரையின் போக்காக அமைகிறது.

இந்தக்கட்டுரை யாருக்கு என்ற கேள்விக்கு? இருதரப்பினருக்கு என்பது விடையாகிறது. ஒன்று பெரியபுராணமோ கி. பி 1113க்கும் 1150க்குமிடை கிட்டத்தட்ட 900ம் ஆண்டுகளுக்கு முன் 2ம்குலோத்துங்க சோழன் எனப்பட்டத்துப் பெயரும் அநாபயச் சோழன் சிவபாதசேகரன் எனச் சிறப்புப் பெயர்களும் கொண்ட மாமன்னர் காலத்தில் இராமதேவன் என இயற்பெயரும் சேக்கிழார் எனக் குலப்பெயரும் அருண்மொழித்தேவர் எனப்புராணப்பெயரும் கொண்டவரால் பாடப்பட்ட ஒன்று. சைவவாழ்வியல் என்பதோ வரலாற்றுக்கு முற்பட்ட தமிழர்கள் தொடங்கிய ஆன்மீகம் சார்ந்த வாழ்வியல் முறை. இவற்றை நாம் கவா கிரகத்தில் (GAFA Planet) கவாபிளனட் என்பது கூகுல், அப்பிள், பேஸ்புக், அமசன் என்னும் தரவுச்சேகரிப்பு பரிமாற்ற சேவையாளர்களால் நாம் இயக்கப்படுவதைக் குறிக்கிறது. உலகின் 50வீதமான மக்களைக் கடந்த 22 ஆண்டுகளில் தகவல் வலைப்பின்னலால் இணைத்து, உலக அரசாங்கங்கள் பெறாத 300 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருவாயாகப் பெற்று உலகின் சந்தைப்பொருளாதாரத்திற்கே புதிய வடிவுகொடுத்து நிற்பது .இந்த காவாக்கிரகம். வாழுகின்ற இக்காலத்தில் எமக்கு எடுத்துரைக்க வேண்டிய தேவை என்ன? என்று கேட்பவர்களுக்கு. அடுத்தது "அவர்சொன்னார் இவர் சொன்னார் என்று சொல்வதை நான் ஏன் ஏற்கவேண்டும்?, அவர் வாழ்வு சிறந்தது, இவர் வாழ்வு சிறந்தது என்பதால் எனக்கு என்ன பயன்?, சான்றுண்டானால் சொல்லுக நம்பிக்கைதான் என்றால் செல்லுக" என்கிற பின்நவீனத்துவ (Post Modernity) உலகில் வாழ்பவர்களுக்கு.

இக்கட்டுரையின் பயன், சிவனடியார் போல, குறிக்கோள், இறையுணர்வு, தொண்டு உடையவர்களாக, வாழ்ந்து, நான் எதனையும் செய்யவில்லை அவனே செலுத்துகிறான் என எதனையும் விருப்பு வெறுப்பின்றி ஏற்று வாழ்ந்து, அவனே தானாகியமையை உணரவைப்பது.

## மார்க்சியமும் விஞ்ஞானமும் சைவத்தின் தன்மையினை ஏற்கின்றன

ஐரோப்பாவில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவரான கார்ள் மார்க்ஸே, சைவத்தைப் புகழ்ந்து உண்மையாகவே சைவதத்துவங்கள் கடைபிடிக்கப்படுமானால் அங்கு பொதுவுடமைத் தத்துவம் அவசியமில்லை எனக் கூறினார் என்பது மார்க்சிசம் பேசுகிற பலருக்குத் தெரியாத ஒன்று. அதே போல கார்ள்மார்க்ஸ் கூறும் மறு உற்பத்தி என்பது சமூக அரசியல் பொருளாதார .ஆன்மிகம் உட்பட மனிதனின் எல்லாநிலைகளுக்கும் உரியது. அதாவது வாழ்வு முழுமையாக மறு உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதே மார்க்சிய இயங்கியல் வாதமாக உள்ளது. எனவே பெரியபுராணத்தைச் சைவத்தை அவை காட்டும் வாழ்வியலைக் குறித்த மீள்வாசிப்பு ஒன்றை இம்மாநாடு ஏற்படுத்துவது என்பது சமயவளர்ச்சிக்கு அப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சமுதாயத்தின் எழுச்சிக்கு மானிடத்தின் உயர்ச்சிக்கான பணியாகவும் அமைகிறது. கம்பன் "எடுப்பாரும் கொடுப்பாரும் இல்லாத உலகை" உலகின் முதல் பொதுவுடைமைக் குரலை எழுப்பவும், "குலையும் தனிஅன்று பொது" என்று உலகமயமாக்கலைப் பேசவும் ஆழ்வார்களுடன் பெரியபுராணம் காட்டும் சிவனடியார்கள் வாழ்வும் காரணமாக அமைந்தன. எங்கள் தாயகத்தின் மெய்ஞ்ஞான அறிஞரும் தோரியத்தைக் கண்டறிந்த விஞ்ஞானியுமாகிய, கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் நடராஜர் திருவுருவமே உயிர்களில் மட்டுமல்ல சடப்பொருட்களிலும் இறையதிர்வு உள்ளது என்ற உண்மையை 1915ல் சான்றுகளுடன் சிவநடனம் என்னும் நூலில் பெரியபுராணத்துச் சிவனடியார் பாடல்களின் பின்னணியில் எழுதியதை ஒரு நூற்றாண்டுக்குப்பின் சுவிசில் அமைந்துள்ள உலக நுண் துணிக்கைகள் ஆய்வுமையம் 'கடவுள்துணிக்கையை' கண்டறிந்ததின் மூலம் ஏற்று. நடராஜப்பெருமானின் திருவுருவை தங்கள் உலக நுண் துணிக்கைகள். ஆய்வுகூடத்தின் முன் நிறுவியுள்ளமை சிவம் குறித்த விஞ்ஞான ரீதியான ஏற்புடைமைக்கான முன்னோட்டமாக அமைகிறது. .இவ்வாறாக தமிழர்களின் தொன்மையைத் தான்மையை உலகு அடையாளம் காண்பதற்கு உதவும் பெரியபுராணத்தையும் சைவ வாழ்வையும் மையப்படுத்திய இம் மாநாடு இளையோர் மத்தியில் தங்கள் சமயத்தின் மொழியின் விஞ்ஞான மெய்ஞ்ஞான அறிவுகளை வளர்க்க உதவவும். தமிழினத்தின் அரசியல் அடையாள அரசியலாக மாறியுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரத்தில் தமிழர்களின் குறிப்பாக எங்கள் தயாகத்தின் தளைமீட்புக்கு உதவவும் எல்லாம் வல்ல இறைவனருள்வானாக

## பெரியபுராணம் வரலாற்றின் தேவை இம்மாநாட்டில் அது எம்தேவையாகிறது

தமிழக வரலாற்றில் சமணசார்பு இலக்கியமான திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணி. அதன் அழகுநடை காரணமாக பலரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருந்த பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அதில் அநாபயச் சோழனும் பெரிதும் ஆர்வம் காட்டிய நேரத்தில், சிவசரித்திரமே இம்மை மறுமை வீடு அளிக்கும் தன்மையானது மற்றையவற்றைப் படித்தல் காலத்தையும் வாழ்நாளையும் வீணடிக்கும் செயல் என அநாபயச்சோழனின் முதலமைச்சர் சேக்கிழார் இடித்துரைத்தார். அந்நேரம் சிவபுண்ணியம் தரத்தக்க சிவசரித்திரம் யாது? என்ற அநாபயச் சோழனின் ஆய்வுத்தேடலுக்கு அவனுடைய முதலமைச்சராக இருந்த சேக்கிழார் தந்த விடைதான் மாக்காதை என்ற பெயரில் அவர் அருளிய திருத்தொண்டர் புராணமாம் பெரியபுராணம். இந்த வரலாற்றுக் குறிப்பு எமக்கும் நாம் மனிதாயத்தை மறந்து, பயன்படுத்தி விட்டுத் தூக்கி வீசும் பொருள் போல குடும்பம் முதல் உறவினர் நண்பர்கள் உற்றார் ஊரவர் என்ற அத்தனை தனி மனித உறவுகளிலும், சமுக பொருளாதார அரசியல் ஆன்மிகப் பொதுவாழ்விலும் மனிதனை மனிதனே தூக்கி வீசும் கலாச்சாரத்தில் (out throw culture) இருந்து வெளிவர உதவட்டும். இந்த இன்றைய தூக்கி வீசும் கலாச்சாரத்திற்குக் காரணமாக அமையும் அனுபவம் வாயிலாக மனக்கருத்தை வளர்க்க விடாது, ஊடகங்கள் வழியாக மனக்கருத்தை உற்பத்தி செய்யும் (Manufacturing Concern), வாழ்வில் இருந்து விடுபட்டுச் சிவசிந்தையுள்ளவர்களாகவும், சிவனடியார்களைத் தொழுதேற்றும் சிவப்பணியினை மையமாகக் கொண்ட சைவவாழ்வு வாழ்பவர்களாகவும் மாறிட அன்று உலகெலாம் என சேக்கிழாருக்கு வான்நிழலாக அடியெடுத்துக் கொடுத்த எல்லாம் வல்ல இறைவனே இன்றும் எமக்கு அருளிட வேண்டுமென வேண்டுவோமாக..

## சிவனடியார் என்பார் யார்? சைவவாழ்வு என்றால் என்ன?

நாம் தொழத்தக்க சிவனடியார் என ஒருவரை எவ்வாறு இனங்காணலாம் என்பதற்குத் தெய்வச் சேக்கிழார் அகநிலையில்," கேடும்ஆக்கமும் கெட்டதிருவினர் - ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார் - கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி - வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" எனவும், புறநிலையில் "ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே - பாரம் ஈசன் பணி அலதொன்றிலர் - ஈர அன்பினர் யாதுங் குறைவிலார் - வீரம் என்னால் விளம்புந்தகையதோ!" எனவும் எடுத்துரைக்கின்றார். அதாவது அகநிலையில் "நன்மை தீமைகள் இரண்டையும் ஒன்றாகவே நோக்கும் இருவினை ஒப்பு மனநிலையும், மண்ணையும் செல்வத்தையும் சமமாகப் பார்க்கும் மாயையில் மயங்கா உறுதியும், இறைவனுடன் கூடுதல் வேண்டும் என்ற உணர்வில் கும்பிடும் உயர் உள்ளமும் - இல்லை உன் நன்மைத்தனத்திற்கு முத்தி தாரேன் என்றாலும் அது வேண்டாம் உன் திருவடியே வேண்டும் என்னும் இரண்டல்ல ஒன்றுமல்ல என்ற சுத்தாத்துவித நிலையில் இறைவனில் தாள்தலையாகப் பொருந்தும் குறிக்கோளும்" கொண்டவர்களே சிவனடியார்கள். இவர்களால் வெளிப்படுத்தப்படும் வாழ்வே சைவவாழ்வு. அவ்வாறே " உருத்திராட்சை மாலையும் சிவசின்னங்களும் தாங்கி, கந்தை ஆடையில் மனத்திருப்தியுற்று, இறைவனுக்குப் பணிசெய்தலே தம் கடன் அல்லாது வேறொன்றில்லை என இறையன்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்து வாழ்ந்து – நெஞ்சிலே எவ்வுயிர்க்கும் தொண்டு செய்யும் பெருங்கருணையைச் சற்றும் குறையவிடாது. – அறத்திற்கே அன்பு துணையென்பார் மறத்திற்கும் அஃதே துணை" என்பதனை மறவாது அடக்குமுறைக்கு ஒடுக்குமுறைக்கு எதிராக நீதிக்கான செயற்பாடாக வீரத்தை வெளிப்படுத்தி வாழ்பவர்களே" சைவவாழ்வு வாழ்பவர்கள் என்கிற பெருநிலைக்குரியவர்கள். சரியை என இறைவன் மேலான அன்பால் தொண்டுகள் செய்து, கிரியை என இமைப்பொழுதும் நெஞ்சில் நின்று நீங்காளை உள்ளத்தால் ஏத்தித்தொழுது, அவனுடன் கலப்பதற்கான உறுதியில் யோகத்தில் நிலைத்து நிற்கையில் இறைவனே தந்தருள வந்தருளும் தெய்வமாக வந்து ஆட்கொள்வான் என்பதே 63 நாயன்மார்களின் வாழ்வும் எமக்கு உணர்த்துகின்றன.

## முடிபுரை: சேக்கிழார் வாழ்க்கைச் செய்திகளும் சைவவாழ்வு வாழ்வதற்கான சத்தி தருவனவே

நூல்தந்த ஆசிரியர் சேக்கிழாரின் புத்திஜீவித்தனம் குறித்து சபாபதி நாவலரின் சிதம்பர சபாநாத புராணம் அழகிய செய்தியொன்றைத் தருகிறது. குன்றத்தூர்க்கிழான் என்னும் குலப்பெயர் உடைய சேக்கிழாரின் தந்தை அரசவைக்குச் சென்றிருந்த வேளை அங்கு, அரசன், மலையிற் பெரிது எது? மண்ணிற் பெரிது எது? கடலில் பெரிது எது? என்று வினாத் தொடுத்தான். பலராலும் உரிய பதிலளிக்க இயலாத நிலை கண்டு வீடு திரும்பிய குன்றத்தூர் கிழானுக்கு அவர் மகன் சேக்கிழார், "நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் - மலையின் மாணப் பெரிது (குறள் 124), "காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும் - ஞாலத்தின் மாணப்பெரிது" (குறள் 102), "பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் - நன்மை கடலின் பெரிது" ( குறள் 103), என்னும் மூன்று குறள்களையும் பதிலாகச் சொன்னார். அதாவது ஒரு வெற்றி அல்லது சாதனை வரும்பொழுது நான் செய்தேன் என அதற்கு உரிமைபாராட்டி மகிழாமலும் ஒரு தோல்வி அல்லது வேதனை ஏற்படும் பொழுது இது என்னால் ஏற்பட்டது என மனம் கலங்கி மன அழுத்தத்திற்கு உள்ளாகி (stress) உள்ளம் தளராமலும் (depression). இவற்றின் வழி ஏற்படும் வெகுளியை, அடக்கமுடைமையில் வள்ளுவர் கா கா என ஐந்து முறை எச்சரித்த "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற் - சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்பதை மறவாது, எல்லாம் அவன் செயல் என்று மனஉறுதியுடன் யார் இருக்கின்றானோ அவன் மனது மலையை விட உறுதியில் சிறந்ததாக அமையும். இதனையே பாரதியும் "உறுதி உறுதி உறுதிக்கோர் உடைவுண்டாயின் இறுதி இறுதி இறுதி" என்று குயிலோசையாக எழவைத்தான். மேலும் காலங்கருதி ஒருவர் செய்த உதவி சிறியதாக இருப்பினும் அது உலகத்தை விடப்பெரியது ஏனெனில் அந்த உதவிதான் காலம் ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து கடவுள் போல் காத்த ஒன்றாக அமையும். இனி தன்னலமற்ற முறையில் தான் செய்த உதவிக்கான பயனை எவர் எதிர்பாராது செய்தாரோ அந்த உயர்ந்ததன்மையை எடுத்து நோக்கும் பொழுது அது கடலிலும் பெரிதான ஆழத்தை வெளிப்படுத்துவதைக் காணலாம். சேக்கிழாருக்கு அவர் அளித்த இந்த விடைதான் சோழநாட்டின் முதலமைச்சர் என்ற சிறப்பினை ஏற்படுத்தியது. சேக்கிழார் தந்த பெரியபுராணத்து நாயன்மார்கள் அவர் கூறிய இந்த மூன்று குறளுக்கும் உதாரணமாகத் தங்களுக்கு உள உறுதியை, நன்றிபாராட்டுதலை, அடக்கத்தைத் தந்த ஆண்டவனுக்கே பணியாட்களாக நின்ற பெருமையைக் காண்கின்றோம். இதனைப் படிக்கும் எமக்கும் இந்த மூன்று குறள்களும் வாழ்வாங்கு வாழவைக்கும் சத்தியாக மாற எல்லாம் வல்ல இறைவன் அருள்செய்வானாக.

*உசாத்துணை நூல்கள்*

*01. இராமசுப்பிரமணியம் வ.த. ( 2008) பெரிய புராணம் எனப் பெறும் திருத்தொண்டர் புராணம் மூலமும் தெளிவுரையும், தொகுதி 1, 2, 3, 4 திருமகள் நிலையம்.*

*02. இராமலிங்கம் அ (2005), தெய்வச் சேக்கிழார், திருவாசக- திருமந்திர அறக்கட்டளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணத்திற் சைவ நீதி



சேக்கிழார் பெருமானின் பெரியபுராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் கதைகளை மட்டும் கூறவில்லை. அக்கதைகளினூடாகத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்களது பண்பாட்டு விழுமியங்களையும் சைவசித்தாந்தக் கருத்துக் களையும் சேக்கிழார் விளக்குகின்றார்.

சைவ சித்தாந்தத்தின் தளம் தருமம். சிவபெருமான் எப்பொழுதும் தரும தேவதையாகிய விடைமீதிலிருந்தே அடியார்களுக்குக் காட்சி தருவது வழக்கம். தருமத்தின் உயிர் நீதி. சிவபெருமான் தாமாகவும் தமது அடியார்கள் வாயிலாகவும் தருமத்தை நிலைநாட்டக் கடைப்பிடிக்கும் நீதிக்குச் சைவநீதி என்று பெயர்.

சைவநீதியில் ஒரு சிறப்பு என்னவென்றால், அது மக்களுக்கு மட்டுமல்லாது எல்லா உயிர்களுக்கு மாயிருப்பது. இதனைப் பராணத்தின் தொடக்கத்திலேயே திருவாரூர்த் திருநகரச் சிறப்பிலே வலியுறுத்துகின்றார் சேக்கிழார் பெருமான்.

பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழன்

திருவாரூர் சோழநாட்டின் நகரங்களில் ஒன்று. தியாகராசப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் சிறப்புடையது. இந்நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த மனுநீதிச் சோழன் என்னும் மன்னன் தன் ஆட்சிக்குட்பட்ட எல்லா உயிர்களையும் கண்போன்று பாதுகாத்து வந்தான். அவனது அரண்மனை வாயிலிலே ஓர் ஆராய்ச்சிமணி கட்டப்பட்டிருந்தது. அந்த மணியை அடித்துக் குறைகுற்றங்களை மன்னனுக்கு யாராயினும் எந்த நேரத்திலாயினும் தெரிவிக்கலாம் என்ற நிலையிருந்தும் அதனை அடிக்கும் தேவை எவருக்கும் ஏற்படவில்லை. அந்த அளவுக்கு நீதி வழுவா நெறிமுறை சார்ந்த ஆட்சியே நாட்டில் நிலவி வந்தது.

ஆயினும் ஒருநாளும் ஒலிக்காத அந்த மணி ஒருநாள் ஒலித்தது. மன்னன் திகைத் தெழுந்தான். மணியை மக்கள் எவரும் அடிக்கவில்லை. ஒரு பசு அடித்திருக்கிறது நீதி கேட்டு. பசுவின் கன்று இறந்துவிட்டது. இறப்புக்குக் காரணம் வேறுயாருமல்ல, மன்னனின் ஒரே மகன் வீதிவிடங்கனே. விடயத்தை விசாரித்து அறிந்த வித்துவ அமைச்சர் ஒருவர் மன்ன னுக்குச் செய்தியை இவ்வாறு விளக்குகின்றார்:

வளவநின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில் தேர்த் தானை சூழ
அரசுலாந் தெருவில் போங்கால்
இளைய ஆன் கன்று தேர்க்கால்
இடைப்புகுந்து இறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை என்றான்.

இவ்விதம் தெரிவிக்கின்றபொழுது, வீதிவிடங்கனிற் குற்றமில்லை என்கின்ற தொனியில் அமைச்சர் பேசுகின்றார். ஷஉனது மைந்தன் பெரிய தேரிலே தனக்குரிய தெருவிலே சென்றான். அவனுக்குரிய காவற் படையும் அவனைச் சூழ்ந்து சென்றது. அப்பொழுது ஆன் கன்று ஒன்று வழிமாறி வந்து தேர்ச் சில்லுகளுக்கிடையிற் புகுந்து இறந்துவிட்டது. அதனாற் கவலையுற்ற தாய்ப்பசு வந்து மணியை அடித்தது' என்கிறார் அமைச்சர்.

இருப்பினும் எல்லா உயிர்களுக்கும் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல நீதி வழங்கும் மனுநீதிச் சோழன் மற்றோர் அமைச்சரை நோக்கி பசுக் கன்று எந்தவகையில் இறந்ததோ

அந்த வகையில் தேர்ச் சில்லால் நெரித்துத் தன் மகனைக் கொல்லுமாறு கட்டளை யிட்டான். கட்டளையை நிறைவேற்ற மனமில்லாத அந்த அமைச்சர் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறார். அதனை அறிந்த மன்னன் தானே மகன்மீது தேரைச் செலுத்தி முறையிட்ட பசுவுக்கு நீதி வழங்குகின்றான்.

அப்படிச் செய்கின்றபொழுது குற்றவாளி தனது மகன் என்றோ, தனக்கு ஒரேயொரு மகனே உள்ளான் என்றோ மன்னன் கருதவில்லை. பந்த பாசத்துக்கு இடமளிக்கவில்லை. முறைசெய்து காப்பாற்றும் மன்னவனின் திறத்தைச் சேக்கிழார் இவ்விதம் வியந்துரைக்கின்றார்:

ஒருமைந்தன் தன்குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன் வழிச்செய்கை கடன்என்று தன்மைந்தன்
மருமந்தன் தேர் ஆழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற்(று) எளிதோதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வித நீதியோடு நாயன்மார்களின் வரலாறுகளைச் சொல்லத் தொடங்கும் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர்களாக விளங்கிய பிற மன்னர்களின் நீதிவழுவா நெறிமுறை களையும் ஆங்காங்கு விவரிக்கின்றார்.

## பகைவனுக்கு அருளிய மெய்ப்பொருள் நாயனார்

மெய்ப்பொருள் நாயனார் சேதி நன்னாட்டு வேந்தர் பெருமான். ஷஅரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல்' குடிகளைக் காத்தவர். அடியவர் திருவேடத்தையே மெய்ப்பொருள் எனக் கொண்டு சிவதொண்டு புரிந்தவர். அவரை எதிர்த்துநின்று வெல்ல முடியாத முத்தநாதன் என்ற பகையரசன பொய்யாகச் சிவனடியார் வேடந்தாங்கிக் கொல்கின்றான். அதுகண்ட மெய்க்காப்பாளன் தத்தன் முத்தநாதனைக் கொல்லச் செல்கின்றான். அப்பொழுது குற்றுயிராகக் கிடந்த மன்னன், ஷதத்தா! அவர் நம்மவர். ஒன்றுஞ் செய்யாதே!' என்று தடுக்கின்றார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. நாட்டின் எல்லைவரை முத்தநாதனைப் பாதுகாப்பாகக் கொண்டுசென்று விடவேண்டும் என்றும் பணிக்கின்றார். தத்தனும் அவ்விதமே செய்து, மீண்டு வந்து பகைவனைப் பாதுகாப்பாக அனுப்பிய விவரத்தைக் குற்றுயிராய்க் கிடந்த மன்னனுக்குத் தெரிவிக்கின்றான். அந்த நல்ல செய்தியைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் தத்தனைப் பாராட்டிச் சிவனது திருவடிகளைச் சிந்தை செய்து உயிர் துறக்கின்றார்.

## குற்றஞ் செய்த குடிமகனைக் கும்பிட்ட கோமான்

மற்றுமொரு நிகழ்வு கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த புகழ்ச்சோழ நாயனார் காலத்தில் நடந்தது. நீராடியபின் வீதிவழி வந்துகொண்டிருந்த அவரது பட்டத்து யானை சிவகாமியாண்டார் என்ற தொண்டர் கோயிலுக்குக் கொண்டு சென்ற பூக்கூடையைத் தட்டி விழுத்திவிடுகின்றது. ஷசிவபெருமானே! உனது வழிபாட்டுக்குக் கொண்டுவந்த மலர்களை இந்த யானை சிந்தலாமா?' என்று ஓலமிட்டு முறையிடு கின்றார் தொண்டர். அவரது ஓலம் அடியவர்களின் ஆபத்துக்கு உதவும் எறிபத்தர் செவிகளில் ஏறுகின்றது. எறிபத்தர் சிவப்பணிக்கு இடையூறு விளைத்த யானையையும் எதிர்த்த பாகர்களையும் தனது மழுப்படையாற் கொன்றுவிடுகிறார்.

செய்தியை அறிந்த புகழ்ச்சோழ நாயனார் சினங்கொண்டு சேனைகளுடன் யானை கொல்லப்பட்ட இடத்தை அடைகின்றார். அங்கே மழுவேந்தி நிற்கும் எறிபத்தர்தான் யானையையும் பாகர்களையும் கொன்றார் என்பதை அறிந்து மன்னரின் கோபந் தணிகிறது.

எறிபத்தர் சிவபத்தர். யானை ஏதோ பிழை செய்திருக்க வேண்டும். அதனாலேதான் அவர் அதனைக் கொன்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்.

'தேவரீருக்கு யானை செய்த தீங்கை அறியேன்' என்கிறார். எறிபத்தர் நடந்ததைக் கூறுகின்றார். அதனைக் கேட்ட புகழ்ச்சோழர் ஷஇறைவனுக்கும் அவன் அடியாருக்கும் இழைத்த குற்றத்துக்குத் தாங்கள் அளித்த தண்டனை போதாது. எனது ஆட்சியில் நடந்த குற்றத்துக்கு நானும் உடந்தையாவேன். என்னையும் தாங்கள் கொல்லவேண்டும்' என்று கூறித் தனது உடைவாளைக் கொடுக்கின்றார்.

வெந்தழல் சுடர்வாள் நீட்டும்
  வேந்தனை நோக்கிக் கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்(கு)
  அளவின்மை கண்டேன் என்று
தந்தவாள் வாங்க மாட்டார்
  தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற் றஞ்சி
  வாங்கினார் தீங்கு தீர்ப்பார்.

வாளை வாங்காது போனால் மன்னன் தன்னையே அந்த வாளால் கொல்லக்கூடும் என்று அஞ்சி எறிபத்தர் வாளை வாங்குகின்றார். பின்னர் ஷஇத்தகைய சிவபத்தருக்கா தீங்கு செய்தேன்' என்று வருந்தி அவ்வாளால் அவர் தன்னை அறுக்க முயன்றபோது மன்னர் அவர் கையைத் தடுக்கின்றார். அவ்வளவில் சிவபெருமான் திருவருளால் இறந்தவர் யாவரும் எழுகின்றனர்.

## பண்டாரத் திருடரைக் கொண்டாடிய பண்பாளர்

குடிமகன் ஒருவன் செய்த குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் நீதிக்கு மற்றுமோர் உதாரணம் இடங்கழி நாயனார் ஆட்சியில் இடம்பெற்றிருக்கின்றது.

இடங்கழி நாயனார் கோனாடு என்னும் வளநாட்டை ஆண்டுவருங் காலத்தில் சிவனடியார் களுக்குத் திருவமுது வழங்குவதை நியமமாகக் கொண்ட தொண்டர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒருமுறை அமுது செய்வதற்குரிய பொருட்கள் எங்குங் கிடைக்க வில்லை. வேறு வழியில்லாது அந்நாட்டு மன்னர் இடங்கழியாரது களஞ்சிய அறையில் இரவிற் புகுந்து நெல்லைத் திருடினார். காவற்காரர் அவரைப் பிடித்து அரசன்முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தினர். விசாரித்தபோது ஷசிவனடியார்களுக்கு உணவளிக்கும் எனது பணி முட்டுப் பட்டமைமையாலே இவ்வாறு செய்ய நேர்ந்தது' என்றார். அதனைக் கேட்ட இடங்கழி நாயார் ஷஇவரன்றோ எனக்குப் பண்டாரமாவார்' எனவுருகி அடியவரை விடுதலை செய்ததோடன்றி ஷஎல்லாப் பண்டாரங்களிலிருந்தும் வேண்டியவற்றை மக்கள் எடுத்துக்கொள்ளலாம்ஷ என்று கட்டளையையும் பிறப்பித்தார்.

## சைவத்திற் சாதிபேதம் கிடையாது

இவ்விதமாகத் திருத்தொண்டர் புராணத்தில் சைவநெறிநின்ற அரசர்களின் நீதிவழுவா நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் சேக்கிழார் பெருமான் சமூகநீதியையும் தெளிவுபடுத்தத் தவறவில்லை. அவர் நிலைநாட்ட முனையும் சமூகநீதிகளுள் மிகவும் முக்கியமானது சைவத்தில் சாதிபேதம் இல்லை என்பது.

ஆதித் தமிழகத்திற் சாதிப் பிரிவுகள் இருக்கவில்லை. ஆரியர் வருகையால் தமிழர் மத்தியில் அவை படிப்படியாக வளர்ந்து நாயன்மார் காலத்தில் பொது வழக்காகி இருந்தன. எனினும் நாயன்மார்கள் சாதிவேறுபாடுகளுக்கு அடிமையாகவில்லை. அவர்கள் வெவ்வேறு குலத்தவராயினும் எல்லோரும் எல்லாரையும் சமனாகவே மதித்து நடந்தனர். ஒரு நல்ல உதாரணம் திருஞானசம்பந்தர் - திருநீலகண்ட யாழ்ப்பாணர் உறவு.
திருஞானசம்பந்தர் அந்தண குலத்தவர். யாழ்ப்பாணர் பிறப்பால் தீண்டத்தகாதவர் என்று கருதப்பட்டவர். முதற் சந்திப்பிலேயே சம்பந்தர்,

அளவிலா மகிழ்ச்சியினார்
தமைநோக்கி 'ஐயர்நீர்
உளம்மகிழ இங்கணைந்த
உறுதியுடையோம்' என்றே

மிகுந்த மதிப்போடு யாழ்ப்பாணரை வரவேற்கின்றார்.

பின்னரும் யாழ்ப்பாணரை விளிக்கின்றபோதெல்லாம் ஷஐயரே என்று மதிப்பாக அழைப்பதே சம்பந்தரின் வழக்கம் என்றும் சேக்கிழார் கூறுகின்றார்.

சொல்லளவிலன்றிச் செயலளவிலும் சம்பந்தர் தமது சமரச மனப்பான்மையை நடைமுறைப்படுத்தியிருக்கின்றார். தமது பாடல்களுக்கு இசை அமைக்கும் பொறுப்பை யாழ்ப்பாணருக்கு வழங்கித் தாம் செல்லு மிடமெல்லாம் யாழ்ப்பாணரையும் அவரது துணைவியாரையும் அழைத்துச் செல்கின்றார். கோயில்களுக்குள் அவர்கள் சம்பந்தருடன் சென்றுவந்ததை மற்றைய அந்தணர்களும் ஏற்றுக்கொண்டனர் என்பதையுங் கவனித்தல் வேண்டும்.

மேலும் திருநாளைப் போவாரைத் தில்லைவாழ் அந்தணரும் 'ஐயர்' என்று அழைத்தனர் எனக்கூறிச் சைவ சமூகத்தில் தாழ்ச்சி உயர்ச்சி பார்க்கலாகாது என்ற உன்னத கருத்தை சேக்கிழார் பெருமான் வலியுறுத்துவதைப் பார்க்கின்றோம்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருமணம் மிகவும் புரட்சிகரமானது. சிவவேதியர் குலத்திலே அவதரித்த அவர் முதலிலே மணந்து கொண்டது பரத்தையர் குலத்துப் பரவையாரை.
பின்னர் திருமணஞ் செய்தது வேளாளர் குலத்திலே பிறந்த சங்கிலியாரை.

திருத்தொண்டர்கள் 'பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்'; 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார். அவர்கள் போலிகளை எதிர்த்தவர்கள். உண்மையை நிலைநாட்டப் போராடியவர்கள். மக்களை மதித்தவர்கள். சமுதாய ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்தவர்கள்.

அவர்கள் வாழ்க்கையிற் கடைப்பிடித்த நீதிக்குப் புராணத்தில் முதன்மை இடந் தருகின்றார் சேக்கிழார் பெருமான். அவரது வாக்கால் நாம் அறியக் கிடக்கும் நீதியே சைவநீதி. சைவ நீதியை 'மேன்மைகொள் சைவ நீதி' என்று போற்றுகிறார் கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார்.

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

மேன்மைகொள் சைவ நீதியைப் பேணித் தருமத்தை வளர்த்துப் பிறந்த பயனைப் பெற்று உய்வோமாக!

**- வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணத்தில் பக்தி

தமிழ் மண்ணில் பிறந்து, வாழ்ந்து, பக்திநெறி தழைக்கச் செய்த நாயன்மார்களைப் பாடிய பெருங்காப்பியம் பெரியபுராணம். இதன் ஆசிரியர் சேக்கிழார் ஆவார். சேக்கிழார் என்பது குடிப்பெயர். இவரின் இயற்பெயர் அருள்மொழித்தேவர். இவர் தொண்டை நாட்டைச் சார்ந்த புலியூர்க்கோட்டத்து குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். காலம் 12ம் நூற்றாண்டு. அப்போது சோழ நாட்டை ஆண்ட மன்னன் 2ம் குலோத்துங்கன். சேக்கிழாரின் புலமையை வியந்த மன்னன் அவரைத் தன் முதல் அமைச்சராக ஆக்கி "உத்தம சோழப் பல்லவராயன்" என்னும் பட்டமும் அளித்து மகிழ்ந்தான். அமைச்சராக இருக்கும் காலத்திலேயே மன்னனுக்கு பத்திச் சுவை சொட்ட சொட்ட பக்தியில் மூழ்கித் திழைத்த சிவன் அடியார்கள் வரலாறுகளைக் கூறி வந்தார். பின்னர் மன்னன் வேண்டுகோளுக்கிணங்க பெரியபுராணத்தைப் பாடத் தொடங்கினார்.

சேக்கிழார் கல்வெட்டுச் செய்திகளை, பக்திப் பாடல்களைத் திரட்டினார். தேவையான குறிப்புகளுடன் தில்லை சென்றார். இறைவனே "உலகெலாம்" என்று அடி எடுத்துக் கொடுத்தார் இறைவனின் அருட்திறத்தைக் காப்பியம் முழுவதும் மணம் வீசச் செய்தார். சேக்கிழார் நூலை முடிக்கும் போதும் "உலகெலாம்" என முடித்துள்ளார்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

நம்பியாரூரர் தமது திருத்தொண்டத் தொகையிலே ஒவ்வோர் அடியவர் பெருமையையும் ஒரு அடியில் கூறுகிறார். இதனைத் தொகைநூல் என்பர். இதனைத் விரித்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத் திருவந்தாதி இயற்றினார். ஓர் அடியாரின் சிறப்பை ஒரு பாடலால் விளக்குவது. இதனை வகைநூல் என்பர். இந்த இருநூல்களையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு அடியாரின் சிறப்பை ஒரு புராணத்தால் (கதையால்) விளக்குவது பெரிய புராணம். இதனை விரிநூல் என்பர். சேக்கிழார் இதற்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். பிற்காலத்தில் இதன் பெருமை கருதிப் பெரியபுராணம் என வழங்கல் ஆயிற்று. இதில் 2 காண்டங்களும், 13 சருக்கங்களும் உள்ளன. மொத்தப்பாடல்களின் எண்ணிக்கை 4281ஆகும். இக்காப்பியத்தில் இடம்பெறும் அடியார்கள் அறுபத்துமூவர், தொகை அடியார்கள் ஒன்பது பேர்.

சேக்கிழார் பழுத்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் செந்தமிழ்ச் சுவையும் பத்திச் சுவையும் ஒரு சேர வழங்கும் காப்பியம். சேக்கிழார் செந்தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்குகின்றார். சேக்கிழாரின் கவிதைத் திறனும் கவிதை நலன்களும் நாடறிந்தவை. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிவனருளில் தோய்ந்தவர். சிவனடியார்களின் புகழொளியில் தம் தூய ஆன்மாவை, சிந்தனையை முழுதுமாக ஈடுபடுத்தியவர். சேக்கிழார் சிவனையே சிந்திக்கும் ஞானம் கைவரப் பெற்றவர். திருத்தொண்டர்கள் வரலாற்றினை நினைத்து நினைத்து அகமகிழும் இயல்பினர். அதனால் சேக்கிழாரின் பெரிய புராணக் காப்பியம் முழுவதும் சிவனருள், அடியார்கள் பெருமை, தன்னலமறுப்பு, தியாகம், பக்தி, நோன்பு முதலியன பேசப்படுகின்றன.

பெரிய புராணத்திலே எடுத்துக் காட்டப்பட்ட அடியவர்களது வாழ்க்கை முறையைச் சிறிது கவனித்தால் ஆண்டவனுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் சேவை செய்த அடியவர்களைக் காணலாமேயன்றி தம்மை ஆண்டவனாக எண்ணிய எந்த அடியவரையும் பெரிய புராணம் அறிமுகம் செய்து வைக்கவில்லை. இறையருள் கிடைத்த பின்னரும் தம்மைச் சிறியவர்களாக எண்ணிய சிவனடியார்களைப் பெரியபுராணம் விவரிக்கிறது. அடியவர் இலக்கணத்தைக் கூற வந்த சேக்கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய் என்று.
(தடுத்தாட்கொண்ட புராணம் பாடல் 342)

என்று பாடுகிறார்.

பண்பட்ட மனத்தில் தான் பக்திச்சுவை உருவாகும். பண்பட்ட மனதை உடைய சேக்கிழாரது பெரிய புராணம் முழுவதும் பக்திச்சுவை பரவி எல்லையற்றுச் செல்கிறது. தமிழில் பக்திக்கு ஒரு நூல் பெரிய புராணம் என்பதில் ஐயமில்லை. அதனால்தான் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தம் நூலாகிய "சேக்கிழார் பிள்ளைத் தமிழில்" "பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று சேக்கிழார் பெருமானைப் போற்றுகிறார். மாதவச்சிவஞான சுவாமிகளும் "எங்கள் பாக்கியப் பயன்" சேக்கிழார் என்று போற்றுகின்றார். பக்திக் காவியம் ஒன்றைப் படைக்கத் தமிழ்ப் புலமை மட்டும் இருந்தாற் போதாது. பக்தியில் முற்றாகத் திளைத்து அதனால் விளையும் தெய்வீக அருள் நிலையில் நின்று படைக்கும் பாடல்களே அருட் பாடல்களாக மிளிரும். பக்தி அல்லது அன்பு என்பது கடவுளிடம் செலுத்தப்பட்டாலும் மக்களிடம் செலுத்தப்பட்டாலும் ஒன்றுதான். அன்பு பொறி புலன்களை அடக்கி, விலங்கு உணர்ச்சியை ஒடுக்கி மனத்தில் அமைதி தருகிறது. அடியார்கள் வாழ்வும் வரலாறும் எங்கள் சமயநெறியை, அன்புநெறியை-பக்திநெறியை வளர்த்தன. அடியார்களின் பொதுத் தன்மையைக் கூறும் பகுதிக்குத் திருக்கூட்டச் சிறப்பு என்று பெயரிட்டார். அதில் உள்ள பதினொரு பாடல்களில் 2 பாடல்கள் முக்கியமானவை. சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் புரிந்து கொள்வதற்கு இந்த இரண்டு பாடல்களும் திறவு கோல்கள் ஆகும்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். (பெ. பு. 143)

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலது ஒன்று இலார்
ஈர அன்பினர், யாதும் குறைவு இலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ. (பெ. பு. 144)

என்று திருக்கூட்டச் சிறப்பில் வரும் இவ்விரு பாடல்களில் அடியார்கள் பெருமையைச் சேக்கிழார் வர்ணிக்கிறார். உலக மக்களிடை வாழ்ந்தும் தனித்துவம் பெற்று விளங்கும் அடியார்கள் என்ன தனித்துவத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதை உபநிடத வாக்கியங்கள்போல் மிகச் சுருக்கமாகச் சொல்கிறார், சேக்கிழார். வறுமை (கேடு), செல்வம் (ஆக்கம்) இரண்டும் இல்லையேனும் மனநிறைவு அமைதி என்பவற்றை நிறைவாகப் பெற்றுள்ள இவர்களைச் செல்வர்கள் (திருவினர்) என்று கூறுகிறார். சேக்கிழார், இந்தமனநிலை எவ்வாறு வந்தது என்ற வினாவிற்கு விடை கூறுவார்போல அடுத்த அடியைப் பாடுகிறார். இது மண்ஓடு, இது செம்பொன் என்ற வேறுபாடு அவர்கள் மனத்தில் பதியாமையால் இரண்டையும் ஒன்றாகவே பார்க்கின்றார்கள் என்று கூறுகிறார். பொன்னால்வரும்மகிழ்ச்சியும்வறுமையால்வரும் துன்பமும் இவர்கள்பால் இல்லையென்றால் வாழ்க்கையில் வேறு ஏதோ ஒரு குறிக்கோள் யாது என்று சேக்கிழார் கூறுகிறார். மோட்சம் என்று சொல்லப்படும் வீடுபேற்றைக்கூட வேண்டாம் என்று சொல்லும் நெஞ்சுரம் படைத்த இவர்கள் வாழ்க்கையின் குறிக்கோள் யாது? அது கூடும் அன்பினில் கும்பிடுவதே ஆகும். இவர்களைப் பொறுத்தவரை மானிடப் பிறவி துயரம் தருவதோ வெறுக்கத்தக்கதோ அன்று. இந்தப் பிறவி இருப்தால்தான் கும்பிட முடிகிறது. ஏனையோர் இறைவனைக் கும்பிட்டு உலக இன்பங்களையும் வீடுபேற்றையும் பெற விரும்புவர். இக்கூட்டத்தார் கும்பிடுவதற்குப் பயனாக வீடுபேற்றைக்கூட விரும்புவதில்லை. கும்பிடுவதன் பயன் இன்னும் கும்பிடுவதே ஆகும். அடுத்த பாடலில் அடியவர்களது தோற்றத்தை வர்ணிக்கிறார். இவர்களுடைய புறத்தோற்றம் எளிமையானது. கழுத்தில் அக்கமணிமாலை, இடுப்பில் ஒரு கந்தை இது புறத்தோற்றம். இனி அவர்களுடைய உள்ளத்தில் புகுந்து பார்த்தால் ஈர அன்பு நிறைந்திருப்பதைக் காணலாம். இந்த அன்பு இறைவன் மாட்டும் அவன் படைப்புகளாகிய உயிர்கள் மாட்டும் செலுத்தப்படுவதாகும். உள்ளத்தில் நிறைந்திருக்கும் ஈர அன்பு எப்படி வெளிப்படுகின்றது தெரியுமா? ஈசன் பணி செய்வது தவிர, வேறு ஒன்றையும் இவர்கள் செய்வது இல்லை. இதற்கு உதாரணமாக இளையான்குடி மாறநாயனார் வாழ்க்கையைக் கூறலாம்.

இளையான்குடி மாறநாயனார் தான் ஏற்றுக் கொண்ட அறவாழ்க்கை காரணமாக வறியர் ஆகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாவது தம் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணம் இருந்து வந்தது. அனைவரிடமும் இறை பக்தி-அன்பு நிறைந்திருந்தது. பல காலங்களில், பல இடங்களில் வாழ்ந்த இவர்களிடையே இருந்த
இறைபக்தி, தொண்டுள்ளம், குறிக்கோள் பொதுத்தன்மையாக இருந்தன என்பதைச் சேக்கிழார் கண்டு கொண்டார்.

இந்த மானிடப் பிறவி கிடைத்ததால்தான் திருத்தொண்டத்தொகை பாடிய சுந்தரரை வணங்க முடிகிறது என்ற மகிழ்ச்சியில் தன்னுடைய பிறப்புக்கு முதல் வணக்கம் செய்கிறார். இந்த உலகம் உய்வதற்காக அடியார்களின் பெருமையை முதன் முதலாக வரிசைப்படுத்தியவர் சுந்தரர் அல்லவோ? அந்தப் பெருமானை வணங்குவதற்கு இந்தப் பிறவி பேருதவி செய்வதால் தம்முடைய பிறப்புக்கே ஒரு வணக்கத்தைச் செலுத்துகிறார் சேக்கிழார்.

சுந்தரமூர்த்தி நாயனார் துதி

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லாஉயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். (பெ. பு. 1265)

என்று பாடுவதால் சுந்தரர்பால் சேக்கிழார் கொண்டிருந்த பக்தியின் ஆழம் விளங்கும்.

நாயன்மார்கள் வரலாற்றில் ஆணி வேராக இருக்கும் இறையன்பு (பக்தி) சுவையில் ஈடுபட எல்லாக் கவிஞருக்கும் இயன்றிருக்காது. சேக்கிழார் ஒருவருக்கு மட்டுமே அச்சுவையில் ஈடுபடும் தனித்தன்மை இருந்தது என்பதை அவரது எடுத்துக் காட்டுகள் மூலம் அறியலாம்.

பத்தியோடு கலந்த சிறந்த கற்பனைத் திறன் இருத்தலால் சிறந்த காட்சிகளை மனக்கண்முன் காட்டுகிறார் சேக்கிழார். திருநாவுக்கரசு சுவாமிகள், சம்பந்தர் ஆகியோர் 7ம் நூற்றாண்டிலும், சேக்கிழார் 12ம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள். பக்தி மேலீட்டால் திருநாவுக்கரசர் நடந்து வரும் காட்சியை பின்வரும் பாடல்களில் வர்ணிக்கிறார். சேக்கிழார் நாவுக்கரசரை நேரில் காணவில்லை என்பது தெரிந்ததே, ஆனாலும், தம் பாடல் மூலம் இன்று வாழ்கின்ற நாம் எல்லோரும் கூட அவரைக் காணுமாறு செய்து விடுகின்றார்.

தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்பு நீர்பொழி கண்ணும், பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே. (பெ.பு. 1405)

மார்புஆரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும், மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளுஞ், செம்பொற் றாளே
சார்வான திருமனமும், உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார். (பெ.பு. 1490)

திருத்தோணிபுரத்தில் ஞானப்பால் ஊட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் தவமுதல்வர் சம்பந்தர் ஞானம் பெற்ற தன்மையை விளக்குமிடத்திற் பாடிய

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில். (பெ.பு. 1973)

என்ற பாட்டில் ஞானவாய்மை பற்றி விளக்குகிறார்.

சேக்கிழாரின் கண்கள் இமைக்கவில்லை. பனிக்கின்றன. கைகள் உச்சிமேற் குவிகின்றன. இதுவரை காலமும் தமது அகக்கண்ணால் கண்டு களித்து - ஆனால் பொருத்தமான பாத்திரங்கள் இன்மையால் காவியமாக்காது இருந்த அந்தத் தெய்வீகக் காட்சியை மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் கண்டு களிக்கும் காட்சியாகப் பாடுகிறார் சேக்கிழார். அவ்வருளாளர் திருவாயிலிருந்து வெளிவந்த 728 ஆவது பாடல் இது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்." பெரிய புராணம் 2626

சேக்கிழாரது அகக்கண்ணில் சம்பந்தப்பெருமானுடைய மனம், வாக்கு, காயம் (உள்ளம், மொழி, உடம்பு) எனப்படும் மூன்று கரணங்களும் எவ்வாறு தோற்றமளித்தன என்பதைக் கூறும் சிறந்த திருப்பாடல் இது.

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் இருந்த நிலையைத் திருஞானசம்பந்தர் புராணம் பாடும்பொழுது அதில் தெளிவாகக் கூறுகிறார் சேக்கிழார். வடமேற்குத் திசையில் தோன்றிய வைதிக சமயமும், வடகிழக்குத் திசையில் தோன்றிய பௌத்தம், சமணம், சாக்தம் என்ற கொள்கைகளும் தமிழகத்தில் ஊடுருவி நின்றன. ஆட்சியோ பல்லவருடையது. அவர்கள் போற்றிய மொழியோ வடமொழி. அவர்கள் பின்பற்றிய சமயமோ வைதிகம், சமணம், என்பவைகளாகும். இந்தச் சூழ்நிலையில் திருஞானசம்பந்தர் தோன்றித் தமிழ்மொழி ஆதிக்கத்தை நிலைநாட்டிச் சிவசம்பந்தம் உடைய சைவசமயத்தை நிலைநாட்டினார். திருஞானசம்பந்தர் தமிழ் மொழியின் சிறப்பைக் கூறித் தமிழில் பாடும் பாடல்கள் மூலமே இறைவனை அடைய முடியும் என்பதை எடுத்துக் காட்டி வழிகாட்டியதுடன் தமிழுக்கு அன்று வரை இல்லாத மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுத் தந்தார். தாம் பாடிய நானூறுக்கும் மேற்பட்ட பதிகங்களில் இரண்டு பதிகங்கள் தவிர எஞ்சிய அனைத்துப் பதிகங்களிலும் இறுதிப்பாடலில் முத்திரை அடியாகத் தம் பெயரைப் பதியும் போதும் "தமிழ் ஞானசம்பந்தன்", "தமிழ் விரகன்", "சம்பந்தன் செந்தமிழ்" என்பன போலத் தமிழுடன் சேர்த்தே தம் பெயரைக் கூறியுள்ளார். எனவே "திசை அனைத்தின் பெருமை எலாம் தென்திசையே வென்று ஏற" என்று சேக்கிழார் பாடுகின்றார்.

"செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்ல" என்ற அடி, தமிழ் வழக்கில் வேரூன்றி நின்ற பக்தி வழியும், கிரியைகள் முதலியவற்றில் ஈடுபாடு கொள்ளாமல் இறைவன் புகழ் பாடுதல் மூலமே அனைத்தையும் பெறலாம் என்ற தமிழ் வழக்குகள் பிற வழக்குகளை வென்றன என்று சேக்கிழார் நிறுவுகிறார். சீர்காழியில் தோன்றிய ஒரு தெய்வக் குழந்தையால் இவை அனைத்தும் நடைபெற்றன என்று சேக்கிழார் வலியுறுத்துவதை பின்வரும் பாடல் மூலம் அறியக் கூடியதாயிருக்கிறது.

"திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனி வெல்ல
அசைவில்செழுந் தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலை பெருக.
(பெரிய புராணம்.- 1922)

இறைவன் ஒருவனே. அவன் நாம் வணங்குந் தன்மையன். அவன் எம்மை ஆளுடையான். அவனை உள்ளன்போடு வணங்குதலே அவனருள் பெறுதற்கு உரிய நெறி என விதந் துரைத்த புராணமாக பெரிய புராணம் விளங்குகிறது. மறவாமையால் மனக்கோயில் அமைத்த பூசலார் நாயனார் இறைவன் எங்கே உள்ளான் என அனைவருக்கும் நிரூபித்துக் காட்டியதை நாம் மறக்கலாமா? பத்தராய்ப் பணிவாரும், பரமனையே பாடுவாரும், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தாரும், முப்போதும் திருமேனி தீண்டுவாரும், முழுநீறு பூசியோருமாக எமது சிந்தையில் நிறைந்து முந்தைவினை போக்க உதவும் மெய்யடியார் கதை கூறும் புராணம் தமிழ் மொழியில் மட்டும் உண்டு. அதுவே பெரியபுராணம் என அழைக்கப்படுகிறது என்றால் அந்தப் புராணத்துக்கு ஏன் அவ்வளவு பெருமை என ஒருசமயம் எண்ணாதிருக்க முடியவில்லை.

இல்லையே என்னாத இயற்பகையாரைச் சந்திக்கும்போது, செயற்கரிய செய்வர் பெரியார் என்பதற்கு அவர் ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியதை நினைத்தல் வேண்டும். வறுமையில் செம்மை பேணிய இளையான்குடி மாறன் என்பவர் இன்று உலகியல் வாழ்க்கையில் எண்ணிறந்த இன்னலுக்கு உள்ளாகும் இல்வாழ்வான் ஒவ்வொருவருக்கும் நல்ல எடுத்துக் காட்டு.

எம்மால் செய்ய முடியாத செயல், எமது கண்ணை இழக்கவும், அதைப் பிறருக்குக் கொடுக்கவும் நாமாக முனைவது கண் தானத்துக்கு முன்னோடியாக, ஆறு நாட்கள் பழகியபின் "ஊனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்'' என்ற சத்திர வைத்திய விதிப்பிரகாரம் தன் கண்ணாற் காளத்தியர் கண் சரி செய்யப்பட்டதும் கண்ணப்பியவர் நிலை எப்படி? தனது கண்ணை இடந்து அப்பியதினால் கண்ணப்பர் எனப் பெயர் பெற்றவரை எமக்கு அறிமுகம் செய்து அன்புடையார் என்பும் உடையார் பிறர்க்கு என்பதை மெய்ப்பித்த வரலாற்றை இன்று படிக்கும்போது பெரியபுராணத்தின் பக்திநெறி எந்தளவு என்பதை அறியமுடியுமல்லவா?

> "நின்றசெங் குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
> குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும் ஆடி
> நன்றுநான் செய்த இந்த மதியென நகையுந் தோன்ற
> ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போல மிக்கார்." (பெ. பு. 823)

பூரணமான இறைபக்தி மீண்டும் தலையெடுக்க வேண்டும். பெரியபுராணக் காலத்தும் எம்மைப் போல மனிதர்கள் இறைபக்தியுடன் இறையருள் பெற்றனர். பேரின்பப் பெருவாழ்வு அவர்களுக்குக் கிட்டியது. பெரிய புராணத்தைப் பொருள் உணர்ந்து படிப்பதனால் எமக்கு ஏற்படும் பயன் மிகப் பெரிது. பன்னிரு திருமுறை முற்றோதலில் இறுதியாக இடம்பெறுவது பெரியபுராணம். தமிழ் மொழியிலே பக்தி நெறியினாலே முத்தியின்ப நிச்சயத்தை எமக்கு எடுத்து விளக்கும் புராணம் பெரிய புராணம் எனின் மிகையாகாது. மெய்கண்ட தேவர் அருளிச் செய்த "சிவஞானபோதம்" என்னும் சைவ சித்தாந்த நூல் பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. அதில் பன்னிரண்டாவது சூத்திரம் அடியவர் பெருமைபற்றிக் குறிப்பிடுகிறது. "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே" என்பது சைவ சித்தாந்தத் துணிபு. "இறைவனோ தொண்டர் தம் உள்ளத்துள் ஒடுக்கம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பார் ஔவைப் பிராட்டியார். அத்தகைய பெருமை வாய்ந்த திருத்தொண்டர் வரலாறு கூறும் பெரியபுராணம் சைவ உலகிற்குக் கிடைத்தற்கரிய பெருஞ் செல்வமாகும். பயில்தோறும் பத்திச் சுவை பெருகும். இறையருள் கிட்டும், தெய்வ நம்பிக்கை உருவாகும். வையத்து வாழ்வாங்கு வாழும் வகையினை நன்கு அறியும் வாய்ப்பு உண்டாகும். உலகியல் நிலையாமை பற்றிய தெளிந்த உணர்வு ஏற்படும். உலகத்தவருடன் அன்பாக வாழ்ந்து தம்மை இறையருளில் ஈடுபடுத்தும் நெறியினை அறிந்து உண்மையான தவ வாழ்வினை மேற்கொள்ள உதவும் ஒரேயொரு நூலாக எமக்குக் கிடைப்பது பெரிய புராணம்.

இந்த உலகம் சிவன் அருள் பெறுதற்குரிய இடமாக அமைந்து காணப்படுகிறது. இறையருள் பெறுவதற்கு அனைவரும் அருகதையுடையவர்கள், ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற பரந்த மனப்பான்மையை எடுத்து உலகறியச் செய்யும் பெரிய புராணம் உலகத்து வாழும் மனிதர்கள் அனைவரும் பேரின்பப் பெருவாழ்வு பெற வேண்டும் என்னும் சீரிய கருத்தினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம். அன்பே சிவம்.

**சிவநெறிச்செல்வர் தி. விசுவலிங்கம்**
**தலைவர்,**
**கனடா சைவசித்தாந்த மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய வாழ்வியலில் பெரிய புராணத்தின் பங்கு

❖ சைவமும், தமிழும் தழைத்தோங்கச் செய்வதற்காக இறைவனால் காலாகாலங்களிலே அனுபூதிமான்கள் தோற்றுவிக்கப்படுகின்றார்கள். இந்த வகையில் சைவத்தையும், தமிழையும் மேன்படுத்துவதற்காகவும், சைவத்தையும் தமிழையும் வளர்த்த இறையருள் பெற்றவர்களில் தெய்வீக வரலாறுகளை எம் சமூகத்திற்கு வழங்குவதற்காகவும் இத்தரணியில் 12ம் நூற்றாண்டில் அவதரித்தவரே சிவநேயச்செல்வர் சேக்கிழார் அவர்கள்.

இவர் தொண்டை நாட்டில் குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் சேக்கிழார் குடியில் பிறந்து 'அருண் மொழி தேவர்' எனும் இயற்பெயருடன் வாழ்ந்து வந்தார். இவரது திறமையால் கவரப்பட்ட அநபாயன், அபயன், திருநீற்று சோழன் முதலிய பட்டப் பெயர்களைக் கொண்ட 2ம் குலேத்துங்க சோழன் இவரை முதல் அமைச்சராக அவரது அவையில் அமர்த்தி 'உத்தம சோழப் பல்லவன்' என பட்டமும் சூட்டி வித்தான்.

இவ்வேளை குலோத்துங்க சோழன் உட்பட அப்பகுதி மக்கள் திருதக்க தேவரால் இயற்றப்பட்ட 'சீவக சிந்தாமணி' எனும் இலௌகீக காவியத்தின் இரசனையில் ஊறியதுடன், சோழனது வித்துவ சபையும் ஈடுப்பாடு கொண்டிருந்தது. சமண காவியமான 'சீவக சிந்தாமணியை' போற்றி படித்துக் காலத்தைப் போக்கிய சோழனுக்கும், ஏனையோருக்கும் சிவகதையாக சேக்கிழார் பெருமான் இலக்கிய இரசனையோடு கேட்போரெல்லாம் மகிழும் படியாக திருத்தொண்டர் வரலாறுகளை எடுத்துக் கூறினார்.

பரசவமுற்ற சோழமன்னன் இதனைக் காப்பிய வடிவில் ஆக்குமாறு சேக்கிழாரைப் பணிக்க அப்பணியை சிரமேல் கொண்டு சேக்கிழார் தில்லை நடராஜப்பெருமான் எழுந்தருளியுள்ள சிதம்பரத்திற்கு சென்று நடராஜப்பெருமானின் திருவருளை தமது புனித பணிக்காக வேண்டி நின்ற போது தில்லையிலே பஞ்ச கிருத்திய நடனத்தை புரியும் பெருமான் ***'உலகெலாம்'*** என அடியெடுத்து கொடுக்க சேக்கிழார் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்ட நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு திருதொண்டர் புராணம் என்னும் 'பெரிய புராணத்தை' உருவாக்கினார்.

***'இறைவரோர் தொண்டர் உள்ள தொடுக்கம், தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'*** என்பது ஔவையாரின் வாக்கு நினைப்பவர் மனம் கோயிலாக கொண்டவன் எம்பெருமான் இதனாலேயே அடியவரின் பெருமை ஆண்டவரின் பெருமையிலும் பார்க்க மிஞ்சி நிற்கின்றது.

இப்பெரிய புராணமானது திருமுறைகளில் 12ம் திருமுறையாக உள்ளது. முதற் 11 திருமுறைகளும் இறையின்பத்தின் நிலைமையை எடுத்து ஓதுவன. ஈற்றிலுள்ள 12ம் திருமுறையாகிய பெரிய புராணம் மாத்திரம் தான் இறையின்பத்தில் திளைத்த அடியார்களை பற்றி கூறுகின்றது.

***'காலையும், மாலையும் கை தொழுவார் மனம் ஆலயமாமே அற நெறியார்க்கே'*** எனும் திருமுறைக்கேற்ப அடியார்களின் உள்ளமே ஆண்டவனுக்குரிய இடமாகும். உண்மையில் வெப்பமானதாகிய சூரியனது கிரணத்தில் நின்றாலும் நிற்கலாம். அக்கிரணத்தைப் பெற்று வெப்பமாக விளங்கும் மணலின் மேல் நிற்க முடியாது. அதேபோன்று இறைவனது அருளாற்றலிலும் பார்க்க அவ்வருளை பெற்று நிற்கும் அடியவர்களின் அருளாற்றல் வியத்தற்குரியதாகும்.

எனவே இத்திருத்தொண்டர் புராணம் வாழ்நாள் முழுவதும் கொள்கை சார்ந்த நெறியோடு கொண்ட குறிகோளுக்காக உயிர்த்துறக்கவும் வல்ல 63 அடியார்களின் வாழ்க்கை திறத்தை எடுத்து கூறுகிறது. 'இறைவனால் அடியெடுத்து கொடுக்கப்பட்ட ***'உலகெலாம்'*** என்று தொடங்கி **'நின்ற தெங்கு நிலவி உலகெலாம்'** என்று பெரிய புராணத்தை முடிகிக்னறார் சேக்கிழார். இவ் உலகெலாம் என்னும் முதல் பாடலில் 63 எழுத்துக்கள் காணப்படுவதிலும் இக்காப்பியம் 63 அடியார்களில் வரலாற்றை விரித்தலும், ஏதோ ஒரு பொருத்தம் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. இது சேக்கிழாரின் திறனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்காட்டுகின்றது. இதேவேளை இவரின் முன் வாழ்ந்த நக்கீரரும் பின் வந்த கம்பரும் உலகம் என்ற சொல்லை முதலாக கொண்டுதான் காப்பியம் அமைத்தார்கள் என்பதும் நோக்கப்பாலது. இக்காப்பியத்தின் பல்வேறு மேன்மை கருதிதான் உமாபதி சிவம் தமிழின் மேலான நூல்களில் பெரிய புராணம் ஒன்று என குறிப்பிட்டார்.

இக்காப்பியமானது நாலாயிரத்து இருநூற்று எண்பத்தொரு பாடல்களைக் கொண்டது. இதில் ஏறக்குறை 14 இடங்களில் 'உலகெலாம்' என்பது எடுத்து கூறப்படுவது சிறப்பாகும். இப்பெரிய புராணமானது சைவ தமிழ் மக்களின் வாழ்வியலில் பல விதத்தில் பங்கு வகித்து கொண்டு இருக்கிறது. குறிப்பாக தமிழ் மொழியின் சிறப்பு, சைவ மக்கள் எவ்வாறு வாழ வேண்டும். சைவ தமிழ் மக்களின் திருமண முறை, தமிழர் பண்பாடு, சைவ மகளிரின் செயற்பாடு, திருவைந்தெழுத்தின் பெருமை, சைவர்களின் கலை சிறப்பு, அவர்களின் இசை சிறப்பு, சைவ அடியார்களின் வாழ்வியல், சமூதாய சேவைப்பாடுகள், உண்மையான பக்தி நெறியின் மேன்மை, இல்லறத்தானின் கடமை, உயிர்களிடம் அன்பு கொள்ள வேண்டிய நிலை, தொண்டு உள்ளத்தின் மேன்மை, சமத்துவப் பண்புகள், பொதுமைப் பண்புகள், இறையாண்மை நிலை, தெய்வீக காதல் சைவ சிந்தாந்தம் உட்பட பல விடயங்களை எங்கள் சமூகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளது.

சேக்கிழார் அருளிய இந்த மாபெரும் சமய, சமூக காப்பியத்தில் வரும் பாத்திரங்கள் எல்லாம் ஒரு காலத்தில் இந்த மண்ணில் உண்மையாக வாழ்ந்தவர்களை எடுத்துக் காட்டியுள்ளது. இதேவேளை சைவ சமயம் பற்றி எடுத்த புராணங்களில் பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், கந்த புராணம் ஆகிய மூன்றும் முக்கியமானவை. இவற்றுள் திருவிளையாடல் புராணம் இறைவன் திருவிளையாடல்களை மையமாக வைத்து ஆக்கப்பட்டது. கந்தபுராணம் கந்தனது தீவீரச் செயல்களை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் பெரிய புராணமோ திருத்தொண்டர்களின் அருள் வாழ்க்கையை மையமாக கொண்டதாக விளங்குகின்றது.

திருத்தொண்டர் புராணம் திருத்தொண்டர்களைத் தான் மையமாக கொண்டது என்பதை மிகத் தெளிவாக சேக்கிழார்

அளவு இல பெருமையர் ஆகிய
அளவு இலா அடியார் புகழ் கூறுகேள்
அளவு கூட உரைப்ப அரிது ஆயினும்
அளவு இவ் ஆசை தூப்ப அறைகுவேன்'

என கூறுகின்றார். பொதுவாக இங்கு குறிப்பிடும் சிவனடியார்கள் பல துன்பியல்களை வாழ்வில் எதிர்நோக்கினாலும் தாம் கொண்ட கொள்கைகளிலும் இறை நம்பிக்கையிலும் தளராது இருப்பதை தெளிவாக சேக்கிழார் காட்டியுள்ளார்.

பெரிய புராணத்தில் சிவபக்தி மிக்க அடியார்கள் தங்கள் பக்தி நிலையின் உச்ச தன்மையை அவர்களது வாழ்க்கை செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளனர். குறிப்பாக 'ஏனாதி நாயானார் தன்னையும் தன் தலையையும் கொடுத்தவர். கண்ணப்ப நாயனார்' தன் கண்களையே தோண்டி இறைவனுக்கு வைத்தவர். சிறுத்தொண்டர் நாயனார் தன் ஒரே மகனை அரிந்து கொடுத்தவர். இயற்பகை நாயனார் தன் மனைவியையே தாரை வார்த்து கொடுத்தவர். சண்டேசுவரர் தன் தந்தையின் காலை வெட்டி சாய்த்தவர். அமர்நீதி நாயனார் தன் மனைவி, மக்களையும், எல்லாவற்றையும் கொடுத்தவர் என பலவாறு செயற்கரிய செயலை அடியார்கள் மேற்கொண்டுள்ளதை எடுத்துக் காட்டலாம்.

சேக்கிழார் தமது பாடல்களில் சிவனடியார்களை 'சாதி' அடிப்படையில் சுட்டிக்காட்டினாலும் இச் 'சாதி' என்ற வரம்மை மீறி இறைவன் முன்னிலையில் அடியார்கள் யாவரும் சமன் என்பதை தெளிவாக காட்டியுள்ளார். ஏனெனில் சேக்கிழார் முதல் நூலாக கொண்ட திருத்தொண்டர் தொகையில் பிராமண குலத்தில் பிறந்த சுந்தரர் ஏனைய அடியார்களின் குலத்தை குறிப்பிட்டு இவர்களுக்கு தான் அடிமை என கூறுவதை மையமாக கொண்டு சமத்துவத்தை எடுத்துக் காட்ட பல வழிகளை கையாண்டுள்ளார்.

குறிப்பாக பிராமண குலத்தில் பிறந்த திருஞானசம்பந்தர் தம் தேவாரங்களுக்கு 'பண்' அமைப்பதற்காக தன்னுடன் திருநீலகண்டர் யாழ்பாண தம்பதிகளை அழைத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். இப்பாணர் குலத்தில் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரை 'ஐயர்' என சம்பந்தர் பல இடங்களில் அழைப்பதாகவும் காட்டியுள்ளார். இவ்வேளை சேக்கிழார் கிட்டத்தட்ட 22 இடங்களில் 'ஐயர்' என்ற சொல்லை பெரிய புராணத்தில் பயன்படுத்தி உள்ளார். இதில் 15 இடங்களில் இறைவனைப் பற்றி கூறுவதும், மிகுதி 7 இடங்களில் கண்ணப்பர், திருநாளைப்போவார் என்னும் நந்தனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆனவர்களை குறிப்பிடுகின்றார். இதனாலேயே இப்பெரிய புராணத்தை புரட்சிக் காப்பியம், சமூதாயக் காப்பியம் என்றெல்லாம் அழைக்கின்றனர்.

சேக்கிழார் தொண்டுள்ளம் கொண்ட பண்பாளரை எடுத்துக்காட்ட 'திருக்கூட்டச் சிறப்பு' என்னும் தலைப்பின் கீழ் தொண்டர்களின் தொண்டு எவ்வாறு அமைகின்றது என்பதை காட்டுகின்றார். இவ்வேளை இங்கு குறிப்பிட்ட சமத்துவப் பண்பை வெளிக்காட்ட முத்தீ வளர்க்கும் அந்தணர் திருநீலகண்டர் சிவலிங்கத்தின் மேல் சிலந்தி விழுந்ததை அவர் மனைவி ஊதி வெருட்டியதற்காக எச்சில் இறைவன் திருமேனியில் விழுந்திருக்கும் என்பதால் தனது மனைவியை தள்ளி வைத்தவர். இவ்வாறானவர் சம்பந்தப் பெருமானுடன் வந்த பாணர் குலத்தினரான திருநீலகண்ட யாழ்ப்பானரையும், அவர் மனைவியையும தாம் அன்றாடம் முத்தீ வளர்க்கும் வேள்விச்சாலை பக்கத்தில் தங்க இடம் வழங்கியதை காட்டுகின்றார். எக்குலத்தை சேர்ந்தவரும் இறைவன் முன்னிலையில் சைவ மக்கள் சமனாக பேண வேண்டும் என்பதை காட்டுகின்றது.

அத்தோடு சைவ தமிழ் மக்கள் வாழ்வியலில் நீதி எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும், உயிர்களிடம் எவ்வாறு அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதையும் மனுநீதிச் சோழன் தன் மகன் செலுத்திய தேரின் சில் பட்டு இறந்த பசுக் கன்று சார்பாக பசு ஆராட்சி மணியை அடித்து தமது துன்பத்தை வெளிப்படுத்தி கன்றின் இழப்புக்கு நீதி கோரி நின்ற போது பசுக்கன்று இறந்தமைக்கு பிராயச்சித்தம் உண்டு என அரசகுமாரனும், அமைச்சர்களும் அறிஞர்களும் விளக்கினாலும் 'கழுவாய்' என்பது மனிதர்கள் ஏற்றுக் கொண்டது. ஆனால் பசு ஏற்றுக் கொண்டதல்ல என்பதைக் காட்டி சைவத் தமிழ் மக்களின் நீதியான சிறப்பை விளக்கும் முகமாக தேர்க்காலில் மகனைக் கிடத்தி அவன் மேல் தேரை செலுத்தி பழந்தமிழர் பண்புகளில் ஒன்றான 'பிற உயிர்கள் படும் இன்னலை போக்க முயல்தலும், அது இயலாத நிலையில் அவ் இன்னலைத் தானும் ஏற்றுக் கொண்டு உழல்தலும்' செய்வதே ஒருவன் அறிவு பெற்ற தன் பயன் என்பது போன்று பிறரின் நோயைத் தன் நோய் போல் போற்றாதவன் மனிதப் பண்பு உடையவன் அல்லன் என்ற அறநெறியை காட்டுவதன் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் சேக்கிழார்.

சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்தில் சைவத் தமிழ் மக்கள் தன் வாழ்கையில் எவ்வாறான சொற்களை பயன்படுத்தல் வேண்டும் என்பதை காட்டியுள்ளார். குறிப்பாக இவர் 'நமசிவாய' என்ற திருவைஞ்தெழுத்தை குற்றமில்லாத மனம் உடைய மெய்யடியார்கள் ஓதி இறை இன்பம் பெற்றதை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். இதனை ஆனாய நாயனார், திலகவதியார், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தர், தண்டியடிகள், புகழ்ச்சோழ நாயனார், கழற்றறிவார் நாயனார் போன்றோர் வாழ்க்கையை காட்டி திருவைந்தெழுத்தின் மேன்மையை சைவத் தமிழ் மக்களுக்கு விளக்கியுள்ளார்.

சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் பயன்படுத்திய சொற்கள் மங்கல சொற்களாக அதாவது அமங்கல சொற்களை துன்பநிலை சூழலிலும் பயன்படுத்த முனையாது மங்கல சொற்கள் பயன்படுத்துவதன் மூலம் செய்தியை வெளியிடுகின்றார். இது பெரிய புராணத்தில் ஒரு சிறப்பம்சமாக உள்ளது. அத்தோடு சேக்கிழார் ஒரு நிறை மொழி மாந்தராக திகழ்ந்துள்ளார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

திருநாவுக்கரசர்ின் தொண்டரான அப்பூதி அடிகள் வீட்டில் திருநாவுக்கரசர் விருந்து உண்ண அமர்ந்த வேளை வாழை இலை வெட்ட சென்ற அப்பூதி அடிகளின் மூத்த மகன் அரவம் தீட்டி இறந்து விட இவரது உடலை திருநாவுக்கரசர் அறியா வண்ணம் அப்பூதி அடிகள் மறைத்து விட்டு உணவை பரிமாற முற்படுகின்றார். இவ்வேளை நாவுக்கரசர் இவரது மூத்த மகனுக்கு விபூதி பூச அழைக்க ***'இப்போது இங்கவன் உதவான்'*** என கூறி அவன் இங்கு பயன்பட இயலாது என்ற பொருளுடன் சேக்கிழார் காட்டுவது எவ்வாறு அமங்கல நிகழ்வை சிறப்பாக தெரிவித்தார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இபோன்று பாண்டிய நாட்டிற்கு பாண்டிமாதேவி மங்கயற்கரசியரின் அழைப்பின் பேரில் சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை சமணர்கள் எரிக்கும் நோக்குடன் அவர் தங்கி இருந்த மடத்திற்கு தீ இட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணத்தை தழுவி இருந்த பாண்டிய மன்னனை திருத்தும் நோக்கு கொண்ட சம்பந்தர் அப்போது பாடிய பதிகத்தை சுட்டிக்காட்டி ***'சைவர் வாழ் மடத்தை மணர்கள் இட்ட தீத்தழல் போய் பையவே சென்று பாண்டியற்காக'*** என்றார். காழிப்பிள்ளையார் என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

இதேபோன்று திருநீலகண்ட நாயனார் இறையடியார்களுக்கு திருவோடுகளை வழங்கும் பணியை மேற்கொண்டாலும் இவர் மகளீரில் பெரும் விருப்பு கொண்ட ஒரு காமுகராக, தீய ஒழுக்கம் கொண்டவராக விளங்கினார். ஆனால் இவ்வாறானவர் பற்றி கூறும் சேக்கிழார் இவரது செயலை இழிவான சொல்லால் கூறாது ***'இளமை மீதூர இன்பத் துறையினில் எளியர் ஆளார்'*** என்கின்றார்.

கண்ணப்பர் வாழ்வு பற்றி கூறும் சேக்கிழார் அவர் வாயில் கொண்டு வந்து விட்ட எச்சில் நீரை 'மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு' எனவும், ***'வளைத்த பொற் செருப்பால் மாற்றி வாயின் மஞ்சன நீர் தன்னை விளைத் அன்புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார்'*** என உயர்த்தி கூறுகின்றார்.

மெய்பொருள் நாயனாரை முத்தநாதன் வஞ்சமாக பொய் வேடம் தாங்கி கத்தியால் குத்தி கொன்ற செய்தியை 'கொலை' என கூறாது ***'தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய'*** என காட்டுகின்றார். இவ்வாறே ஏனாதி நாதநாயனார் திருநீறு பூசி வந்த பொய்யடியானாக ஆதி சூரனால் வஞ்சகமாக கொல்லப்பட்டதை ***'கொலை'*** என்று கூறாது ***'முன்னின்று பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்'*** என கூறுகின்றார். தண்டியடிகள் பார்வை இழந்தவராக இருப்பதை விளக்க இவரை குருடர் என அழையாது ***'கண் காணார்' 'அந்தமில்லா அறிவுடையார்'*** என கூறுகின்றார்.

சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் பெண்களையும் சிறப்பித்துள்ளார். இது சைவத் தமிழ் பெண்களின் பண்பை எடுத்துக்காட்டியுள்ளது. அதில் முக்கியமாக மங்கையற்கரசியர், திலகவதியார், காரைக்கால் அம்மையார், இசைஞானியார், திருநீலகண்டர் மனைவி ஆகியோர் பற்றி மிக சிறப்பாக குறிப்பிடுகின்றார்.

மங்கையற்கரசியரை ***'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்'*** எனவும், அதாவது மங்கையருள் ஒப்புயர்வற்றவர் என்பதும் எங்கள் தெய்வம் என்பதும் இவரால் எடுத்துக் காட்டப்பட்டது. அதுமட்டுமின்றி இவர் ***'தென்னர் குலப்பழி தீர்த்த'*** என சேக்கிழாரால் சிறப்பிக்கப்படுகின்றார்.

அதேபோன்று இறைவனால் ***'அம்மையே'*** என அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையாரை ***'வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்'*** என போற்றுகின்றார். ***'உற்பவித்து எழுந்து ஞானத்து ஒருமையில் உமைகோன் தன்னை'*** என காட்டி அம்மையாரிடம் சிவஞானம் உற்பவித்தெழுந்தது என குறிக்கின்றார்.
திலகவதியாரை சேக்கிழார் ***'தூண்டுதவ விளக்கு'*** என சிறப்பித்துள்ளார். இவ்வாறு பெண்களின் இல்லறம், துறவறம் போன்றவற்றை விளக்க சிறப்பான முறைகளை சேக்கிழார் கையாண்டுள்ளார்.

இதேபோன்று இளையான்குடி மாறநாயனார் மனைவி, அப்பூதி அடிகள் மனைவி, இயற்பகையார் மனைவி, குங்கிலிய கலைய நாயனார் மனைவி, சிறுத்தொண்டர் மனைவி, கலியநாயனார் மனைவி, கழற்சிங்கரின் மனைவி இவர்களையும் தமது காப்பியத்துள் காட்டி சைவத் தமிழ் மக்களின் இல்லறத்தாள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற செய்தியை சைவத் தமிழ் சமூகத்துக்கு வழங்கியுள்ளார்.

மேலும் சேக்கிழார் மங்கையர் மாண்பை எடுத்துக் காட்டுகையில் இசை ஞானியாரைக் ***'வேதியர் குலத்துள் தோன்றி, மேம்படு சடையனார்க்கு, ஏதமழல் கற்பின் வாழ்கை மனை இசை, ஞானியார் பால்'*** என்கின்றார். இவர் கற்பு நெறியொழகிய வாழ்வின் முறையார் என குறிப்பிடுகின்றார். திருநீலகண்ட நாயனார் மனைவியாரை குறிப்பிடும் பொழுது ***'மனைவியாரும் அருந்ததித் கற்பில் மிக்கார்'*** என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுகின்றார். இயற்கை நாயனார் மனைவியாரை குறிப்பிடும் பொழுது ***'தேற்றம் மருவிய தெய்வீகக் கற்பின் மனைக்கிழத்தியார்'*** என்கின்றார். மானக்கஞ்சுசாற நாயனார் மனைவியாரை குறிப்பிடும் பொழுது ***'மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக் கிழத்தி'*** என்று கூறுகின்றார்.

சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கையினை ***'பெருகு திரு மனையத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கை'*** என்றும் ***'அன்புமிக்க பெருங்கற்பின் அணங்கு திருவெண் காட்டம்மை'*** என்றும், ***'அரிய கற்பின் மனைவியார்'*** என்றும் புகழ்ந்துரைக்கின்றார்.

சிவனடியார்களின் இல்லற வாழ்வும், பக்தித் தொண்டும் செம்மையுறத் துணை நின்று மனதாலும் வாக்காலும், செயலாலும் செம்மை சிறக்க உழைத்தவர்கள் அவர் தம் மனைக்கு விளக்காகிய வாழ்க்கை துணைவியரே என்பதனை சேக்கிழார் யாண்டும் உணர்த்தக் காணலாம்.

மேலும் சேக்கிழார் அரசியல் அறம் பிறழாத தொனிமுறைகளைத் தம் காப்பியத்தின் ஊடாக விளக்கியுள்ளார். சைவத் தமிழ் மக்களின் வாழ்வியலில் அரசியல் அறத்தின் மேன்மையை காட்டி நிற்கின்றது. இவர் அநபாய சோழனைக் குறிப்பிடும் பொழுது

***'மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்***
***கண்ணும் ஆவியுமாம் பெருங் காவலான்'***

என குறிப்பிடுதவன் மூலம் அரசனானவன் மண்ணில் வாழும் உயிரினங்களுக்கு கண்ணாகவும், உயிராகவும் ஒளிர்கின்றான் என்று போற்றியுள்ளார். அத்தோடு அரசன் கடமை குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் வரும் ஐவகைப் பயமும் வராமற் காத்தலாகும் என குறிப்பிட்டுள்ளார். இந்த வகையில் அரசியல் அறம் பாடிய அறவோர் சேக்கிழார் என்பதை உணர முடிகின்றது.

சேக்கிழார் பெரிய புராணம் சைவத் தமிழ் மக்களின் வாழ்விற்கு வழிகாட்டும் சைவசித்தாந்த கருத்துக்களை உள்ளடக்கியதாக உள்ளதையும் அறிய முடிகின்றது. இவர் காலத்துக்கு முன் சமயாசாரியார்களின் பாடல்களும், திருமந்திரமும், ஞானமிர்த்தம் போன்ற சித்தாந்த சாத்திரங்களும் தோன்றியிருந்த போதிலும் சிந்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகளையும், சாதனம், பயன் முதலிய இயல்புகளையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களையும் குருலிங்க, சங்கம வழிபாட்டு முறைகளையும் மிகச் சிறப்பாக விளக்கிய பெருமை சேக்கிழார் அவர்களுக்கே உண்டு.

உயிரின் இயல்புகளையும், பசு, பாசம், ஞானங்களின் இயல்புகளையும், பதி ஞானத்தின் உயர்வையும், அணைந்தோர் தன்மையும், அடியார்களின் பெருமையையும், அவர்கள் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் தன்மையையும் இவரது நூல் தெளிவுற விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாலாயிரத்து இறுநூற்று எண்பத்தொரு பாடல்களையும் இரண்டு காண்டங்களையும், பதின்மூன்று சருக்கங்களையும், 63 தனி அடியார் வரலாறுகளையும், 9 தொகை அடியார் வரலாறுகளையும் கொண்டு 'மாக்கதை என சிறப்பிக்கப்படும் அடியார் வரலாற்றை சிறப்பாக அமைத்துள்ளார்.

சேக்கிழாரின் இப்பெரிய புராணம் கூறும் அடியார்களில் 13 வேளாளர்களும், 12 அந்தணர்களும், 6 முடியரசர்களும், மரபு இன்னது என்று தெரியாதவர் 6 பேர், 5 குறுநில மன்னர்கள், 5 வணிகர்கள், 4 ஆதிசைவர்கள், 2 இடையர் குலத்தோர், 10 ஏனைய குலத்தோர் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இயற்கை வருணனையும், சொல்லாட்சியும், உவமை அழகும், அணி நலன்களும், ஆங்காங்கே சேக்கிழார் பாடலில் இலாதிந்து காணப்படுகின்றது. இவர் ஒரு சொல்லையே இருமுறை கூறி ஒரு தனி அழகினை சொல்லில் புகுத்தித் தமிழ் மொழி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறப்பை எடுத்தக் காட்டுகின்றார். உதாரணமாக திருவாரூர்ச் சிறப்பினை செப்ப வந்த சேக்கிழார் பெருமான்.

***'சைவநெறி ஏழுலகும் பாலிக்குந் தன்மையினால் தெய்வநெறிச் சிவம் பெருக்குத் திருவாரூர் திருவாரூர்'*** என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வகையில் உலகங்கள் 14 என்பதற்கேற்ப பெரிய புராணத்தில் 14 இடங்களில் உலகெலாம் என எடுத்துக் கூறிய சேக்கிழார் பெரிய புராணமானது சைவத் தமிழ் மக்களின் வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டிய சகல வாழ்க்கை நெறிகளையும் அழகாக எடுத்துக் காட்டி உள்ளது.

சேக்கிழார் பெருமானுக்கு தனிப் புராணம் இயற்றினார் உமாபதி சிவாச்சாரியார். அத்தோடு மாதவச் சிவஞான சுவாமிகளும் 'எங்கள் பாக்கியப் பயன் சேக்கிழார் என்று போற்றினார். இவரை 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலய' என்றும் போற்றப்படுகின்றார்கள்.

திருத்தொண்டர் புராணத்தை இவ்வுலகிக்கு வழங்கிய சேக்கிழார் பெருமானை அநபாய சோழ சக்கரவர்த்தி யானையில் ஏற்றி மன்னனே கவரிவீசி அவருக்கு பெருமை சேர்த்தார். எனவே உண்மையான சைவ தமிழ் மக்கள் பெரிய புராணத்தின் சிறப்பினை உணர்ந்து அதனை பின் பற்றி வாழ்தல் அவசியமானதாக உள்ளது.

இது ஒரு சைவ சமயக் காப்பியம் என்பதற்கேற்ப சிவபெருமானின் அடையாளங்களையும், அருட்செயல்களையும், வீர நிகழ்வுகளையும் சேக்கிழார் தம் நூலுள் விரிவாக பதிவு செய்துள்ளார். மேலும் புராண வரலாற்று செய்திகளையும் குறிப்பிடுகின்றார்.

இதில் ஆதித்த சோழன் தில்லை அம்பலத்திற்கு பொன் வேய்ந்தமை, இமயமலையில் சோழன் புலி இலச்சினை பொறித்தமை, காஞ்சிபுரத்தைக் கரிகாற் பெருவளத்தான் புதுக்கியது. அகத்தியர் காவேரியை வரவழைத்தது. இலக்குமி திருவாரூரில் வழிபட்டது. உபமன்யு முனிவர் கண்ணனுக்கு சிவ தீட்சை செய்வித்தது, உமை அம்மை காஞ்சிபுரத்தில் சிவ பூசை செய்தது, இவர் காஞ்சியில் முப்பத்திரண்டு அறன்களை வளர்த்தது, சிவபூசை செய்து பரசுராமன் 'பரசு' ஆயுதம் பெற்றது போன்ற பல செய்திகள் இதில் இடம் பெறுகின்றது.

இப்பெரிய புராணமானது சைவத் தமிழ் மக்களின் வாழ்வில் பொக்கிசமாக போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

**சீனித்தம்பி யோகேஸ்வரன்,**
**(பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்டம்)**

**தலைவர்,**
**மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை,**
**புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை, இலங்கை.**
**0094776034559, 0094652228273**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணச் சமுதாய வாழ்க்கை
# பெரியபுராணத்தால் அறியலாகும் சமுதாயம்

**ஸ்ரீமத்.சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்**
*இணையதிபர், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் - 612 504*
*தென்னிந்தியா*

வானுறையும் தெய்வத்தள் வைக்கக்கப்படுதலுக்குரிய படிநிலையாக வையத்தள் வாழ்வாங்கு வாழவேண்டும். வாழ்வாங்கு வாழ்தல் எப்படி? என அறியத் தெய்வச் சேக்கிழாரின் பெரிய புராணத்தைக் கற்பவேண்டும். அத் தெய்விகக் காப்பியத்துள் அனைத்துவகை மக்களின் வாழ்வியலும் தெளிவாக்கப்பட்டுள்ளதுடன், ஒட்டுமொத்த சமுதாய நியதிகளும் காடசிப்படுத்துகின்றன. நீதிகளும் வரையறுத்துத் தரப்பட்டுள்ளன.

இந்த இப்பிறப்பில் ஏற்பட்டுள்ள உறவுகள், மன்னைய பல் பிறப்புகளில் தொடர்ந்து வந்தனவா என்ற வினா எழுப்பினால், அதற்கு "ஆதாரமில்லை" என்ற விடை வரும். ஆக உறவுகளின்மேல் வைக்கும் பற்று வயிர்த்தமானது என்பது புலப்படும். அந்நிலையே பற்றறற்றான் பற்றினைப் பற்றுவதே உலஇன்னல்களைப் பொருட்படுத்தாத உளப்பாங்கை உருவாக்கும்.

இன்பதுன்பங்களை ஒப்பக் கருதும் சமநிலை மெய்ப்பாடு அடியார்களுக்கு ஏற்படும்போது அதன் காரணத்தைச் சுய பரிசோதனையால் உணர்வார்கள். "இறைவரின் கட்டளை இன்றி எதுவும் நடப்பதில்லை. என் செயலாலே ஆவதொன்றில்லை" என்ற காரண உணர்வு பெற்றவர்களே செயற்கரும் செயல்கள் செய்யவல்ல பெரியர் ஆவர்.

இறைவர் இத்தகு பெரியவரகளை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த நிகழ்ச்சிகளின் தொகுப்பே பெரிய புராணம் ஆகும்.

குடும்ப நேர்த்தியை, மனைவி, மக்களின் ஒரு நெறிப்பட்ட சிந்தனையை உருவாக்க இயலாதவர்களால் வைராக்கியத்தை நிறைவேற்றிக்கொள்ளவும் சமுதாயத்திற்கு உதாரணமானவர்களாக உயரவும் முடியாது. குடும்ப நேர்த்தி மற்றும் மனைவி மக்களின் ஒரு நெறிப்பட்ட சிந்தனையை உருவாக்கி வென்றேறிய பலரைப் பெரிய புராணம் காட்டுகிறது. இளையான்குடி மாறனார், சிறுத்தொண்டர், அப்பூதியடிகள் போன்றொர் வரலாறுகளே இக் கருத்துக்குச் சான்றாகும்.

அரசு குடும்பங்கள் சமூகத் தொண்டுக்கெனவே ஒப்புக்கொடுக்கப்பட்டவை. அக்குடும்பத் தலைவனாகிய அரசன், மனைவி மக்களை மட்டுமன்றித் தன் நாட்டையே தன் நெறிக்குக்கொண்டுவரக் கடமைப்பட்டவன். அரசனே தன் நெறியை நன்னெறியாக வகுத்துக்கொள்ளாமற் போனால் மக்கட் சமுதாயம் அச்சம் காரணமாக அரசன் பக்கம் இருக்கக் கூடும். அந்நிலையில் அரசியும் சமுதாயத்தை நன்றெிப்படுத்தும் கடமையும் உரிமையும் உடையவள். ஆகையினால் அவள் அப்பணியைச் செய்யவேண்டும் எனக் கற்பிக்கிறது. சேக்கிழார் செந்தமிழ், இக் கருத்துக்குச் சாறு மங்கையற்சரசியாரின் மதிப்புறு அருள் வரலாறு.

காட்டில் சென்று தவமிருந்து மோட்சத்தைக் கைப்பற்றும் சுயநல அறயாமன்று துறவறம். தமக்கையார் தயவால் சிவம்பெருக்க பணிகள்செய்த அப்பரடிகளும் உறுப்பின்மை ஊனமன்று. அது உணர்த்திய ஆரூர்த் தண்டியடிகளும் போன்றோர் இக்கருத்துக்கு மேனிலைச் சான்றுகளா மேதினிக்கு உணர்த்தினர்.

தீயோரின் சமுதாய் விரோதப் பெருந்தீங்குகளைப் புறக்கணித்துப் போனால்தான் சாந்தம் எனப் பெரிய புராணம் கருத்துத் திணிப்புச் செய்வதில்லை. நாடு காத்தலுக்குப் போர்புரிய வேண்டும் எனவும் "தோற்றால் கழவேறுவேன்" என்பவர்களை மடத்திற்குத் தீவைத்த குற்றத்திற்காகத் தடதிருந்த தனிப்பெரும் மன ஆற்றலையும்கூட நம் தெய்வப் புலமைச் சேக்கிழார் மென்முறையில் அணுகி அறிவிக்கிறார்.

பன்னிரண்டாம் திருமுறையின் செய்திகை எல்லாம் பொருண் முறைப்படி வகுத்து நிரல் செய்து பார்த்தால் சங்கம வழிபாட்டின் மேன்மை, சைவத்தின் சால்பு முதலிய மையக் கருத்துகளுடைய அனைத்து அம்சங்கின் செய்திகளிலும் சமுதாய வாழ்வின் நேர்த்திகள், நெறிமுறைகள், கடமைகள் முதலிய யாவையும் போதிக்கப்பட்டுள்ளன என அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணமும் சைவ வாழ்வும்

**சமத்துவம்**

அடியாரை இறைவனாகக் கருதி, பெரியபுராணம், அவர்கள் மூலம் சமத்துவத்தை அறிவுறுத்துகிறது.

"அடியார் வழிபாடு ஆண்டவன் வழிபாடு"
நடமாடும் கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பகிர்வதற்கு ஆமோ – *திருமூலநாயனார்*

1. **கலிகம்பநாயனார்**
அடியார் யாரும் அமுது செய்ய வீடு வரும்போது அவர்களது பாதங்களுக்கு நீர் வார்த்து வரவேற்று வணங்குவார். அப்போது அவரது மனைவியார் தண்ணீர் கொண்டு வந்து பாதபூசை செய்யும்போது உதவி செய்து உபசரிப்பார். ஒரு நாள் இவர்களிடம் முன்பு பணிவுடை செய்தவர், ஆண்டவனின் அடியவராகி திருநீறும் கண்டிகையும் கொண்டு அமுது செய்ய வந்தார். பாதபூசைக்கு உதவ மனைவியார் மறுத்தார். அடியாரை பூசிக்காததால் கலிக்கம்பநாயனார் அன்பு மனைவியின் கையை உடனே துண்டித்தார். முன்னைய இழிந்த நிலையை மனத்தில் வைத்து அடியாராக வந்த பின்னரும் வழிபடாது உபசரிக்காதது தவறு என்பதே காரணமாகும்.

2. **சேரமான் பெருமான் நாயனார்**
அடியவராகி பின்னர் அரசனானவர். மகுடாபிசேகம் முடிந்த பின் யானைமீது ஏறி ஊர்வலம் வந்தார். அவ்வேளை உவர்மண் பொதி சுமந்து மழையால் நனைந்த வண்ணான் எதிர் வந்தான். அவனது உடம்பு பூராகவும் உவர் மண் கரைந்து திருநீறு போல் தோன்றியது. அரசன் இவர் சிவனடியார் என எண்ணி, யானையை விட்டிறங்கி அவனை தொழுதார். அவனோ தான் தாழ்ந்தவன் என்று அறிவிக்க அவன், அடியேன் வண்ணான் என்றான். அரசரோ தான் அவனிலும் தாழ்ந்தவன் என "அடியேனுக்கும் அடியேன் என்றான். வண்ணான் என்றாலும் சிவனடியாராகில் அரசனானாலும் வணங்க வேண்டும் என்ற சமத்துவமாகும்.

3. **சிவகாசி நாயனார்**
இறையாகம் செய்யும்போது இறைவன் சண்டாள ரூபத்தில் வர வழிபட்டார்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் தெய்வமே - *நாவுக்கரச நாயனார்*

புலையன் என்றாலும் சிவனுக்கு அடியாரென்றால் அவன் கடவுளே.

சேக்கிழார் அந்தணர், வேளாளர் மட்டுமின்றி நந்தனார் (புலையர்) கண்ணப் பநாயனார் (வேடுவர்) அதிபத்த நாயனார் (மீன் பிடிப்பவர்) திருநீலகண்டர் (குயவர்) திருமூலர் (இடையர்) திருநீலகண்டயாழ்ப்பானர் (பாணர்) இவர்களது வாழ்க்கை, மகிமைகளை கூறி வேற்றுமையில் ஒற்றுமை சமத்துவத்தை ஆணித்தரமாக அறிவுறுத்தியுள்ளார்.

யாதும் இறைவனுடையதே – பெற்ற கல்வி, செல்வம், மனைவி, மக்கள், யோகம், பாவம் யாவும் ஆண்டவன் அளித்ததே என்பது பெரியபுராணம்.

1.சிறுத்தொண்ட நாயனார்:
தொண்டர் முன் உடம்பை குறுகி அடக்கமாக வணங்கியதால் சிறுதொண்டர் என்ற பெயர். இறைவன் வைரவ சந்நியாசியால் இவர் வீடு சென்று "பிள்ளைக்கறி" கேட்பார். பேரானந்தம் கொண்டு தமது ஓரே மகனை மனைவியாரோடு சேர்ந்து கறி சமைத்து கொடுத்தார்.

கடந்த ஞானிகளும் கடப்பரோ
மக்கள் மேல் காதல்

அடியாரை இறைவனாகக் கருதி தன் பிள்ளையையே அர்ப்பணித்த அன்புதான் என்னே!

**2.மானக்கஞ்சார நாயனார்:**
வேளாள குலத்தில் பிறந்த இவர் பல வருடங்களில் பின் ஒரு மகளைப் பெற்றார். திருமண வயதை அவள் அடைந்தாள். ஏயர்கோன் கலிக்காமனைத் தெரிந்தெடுத்து அவர் குதிரைமேல் மாப்பிள்ளையாக வரும்போது, சிவபெருமான் மாவிரத முனிவராக சென்றார். மணமகள் வணங்கும்போது அவளது நீண்ட கருநாகம் போன்ற அழகிய தலைமயிரை தனது முப்புரிக்கு பஞ்சவடியாக கேட்டார். மனக்கஞ்சார நாயனார் ஒரு கணமும் தாமதியாது வாளை எடுத்து கூந்தலை வெட்டிக் கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.இயற்பகை நாயனார்:**
இயற்கைக்கு பகை- என்னுடையது என்ற உலக வழக்கத்திற்குப் பகையானவர். வணிக குலம் யாதும் சிவனடியாருக்கே என்று வாழ்ந்தவர். சிவபெருமான் இவரை சோதிக்க துர்த்தக (காம) வேடமணிந்து சென்றார். "எதையும் அடியாருக்கு கொடுப்பீரோ என்று கேட்டு அனுமதி பெற்று மனைவியாரை தரும்படி கேட்டார். அவர் அளித்தது மாத்திரமின்றி, காவல் சென்று இருவரும் ஊர் எல்லை காணும் வரை பாதுகாத்தார்.
இறைவன் இவர்களை அடியாராகச் சென்று சோதித்தது தொண்டர் பெருமையை பறை சாற்றத்தான் போலும்! தொண்டர் பெருமையை கூறவும் பெரிதே -ஔவையார்.
அன்பே சிவம்: சைவ வாழ்வியலில் அடி அத்திவாரமே அன்பு ஆகும்.

அன்பே சிவமாக அமர்ந்திருந்தாரே - திருமூலநாயனார் அதிக பக்தி (அன்பு) அரன் மீது கொண்டதால் அதிபத்த நாயனார் என்ற பெயர், நாகப்பட்டினத்து மீனவர், தான் பிடித்த மீன்களில் தலை சிறந்த மீனை இது சிவபெருமானுக்கு என்பது கூறி கடலில் விடுவார். பல நாட்களாக ஒரு மீனே கிடைத்தது. அதையும் "சிவனுக்கே" என கூறி கடலில் மீண்டும் விட்டார். இதனால் வறுமை வந்து வாட்டியது. ஒரு நாள் மிக அரிய உயர்வான, விலை கூடிய மீன் ஒன்று அகப்பட்டது. அதையும் இந்த அரிய மீன் அரனுக்கே எனக் கூறி கடலில் விட்டார். சிவன் மீனைக் கேட்டாரா? இல்லை. சிவனின் அன்பு மிகுதியால் தான் இவர் செய்தது. பின்னர் இறைவனால் பேரின்ப வாழ்வு பெற்றார்.

**கண்ணப்ப நாயனார்:**
கண்ணை இறைவனிடம் அப்பியதால் கண்ணப்பர். வேடர் குலம். திண்ணன் பெயர். முற்பிறப்பில் அருச்சுனன் ஆகப் பிறந்ததாகக் கூறுவர். வேடர் தலைவனாகிய நாகன் இவரது தந்தை. கன்னி வேட்டைக்கு செல்லும்போது ஒரு பண்டியை துரத்தி மலை மீதுள்ள குடுமித்தேவரைக் கண்டார். தன்னையறியாமலே அன்புருகி மகிழ்ச்சி விரைவுடன் சென்று சிவனைத் தழுவி உச்சி மோந்தார். பின்னர் பிரிந்துபோக மனமில்லாமல் போவதும் வருவதுமாகத் துடிதுடித்தார்.

சிவபெருமான் இவரது அன்பின் ஆழத்தை பூசை செய்யும் அந்தணருக்கு காட்ட தனது கண்ணிலிருந்து உதிரம் பெருகச் செய்தார். கண்ணுற்ற திண்ணர் மயங்கி விழுந்தார். மூலிகைகளை கொண்டு வந்தும் இரத்தம் நின்று பாடில்லை. உடனே அம்பால் தனது வலது கண்ணை எடுத்து அப்பினார். உடன் குருதி நின்றது. துள்ளிக்குதித்து மகிழ்வால் கூத்தாடினார். பின்னர் இடது கண்ணில் இரத்தம் வடிந்தது. இடது கண்ணை எடுக்கும்போது "நில்லு கண்ணப்ப""நில்லு கண்ணப்ப" என்ற ஒலி தடுத்தது. "கண்ணப்பா" என் வலத்தில் என்றும் மாறுபாடில்லாது நிற்பாய் என்று சிவபெருமான அருள்புரிந்தார்.
ஆதிசங்கர் அன்பின் ஆழத்தை இப்படிக் கூறினார்.

1. மார்க்கத்தில் தேய்ந்த பழங்செருப்பு சிவபெருமானுடைய புருவ நடுவில் சென்றது.
2. கொப்புளித்து உமிழ்ந்த நீர் அப்பரமனுக்கு சிறந்த அபிசேக நீராகியது.
3. சிறிது கடித்து எச்சில் செய்த புலால் துண்டு உயர்ந்த உணவாக ஆயிற்று
4. வேடன் பக்திசிரோன்மணியாக ஆனான்.

ஆகவே அன்பு பக்தி எதைதான் செய்யாது? வாரியார் மூன்று நாயன்மார்களை பட்டினத்தார் பாடலால் பாராட்டினார். ஒருவர் யாதும் இறைவனுடைய பாடலால் பாராட்டினார். ஒரவர் யாதும் இறைவனுடையதே என்ற சிறுத்தொண்டர். மற்றவர் அன்பே சிவமாகிய கண்ணப்பர் மூன்றாவதாக திரு நீலகண்டர்.

- சாவகச்சேரியூர் டாக்டர் க.கதிர்காமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Yoga a Holistic Science

Yoga has been practiced as a holistic science and art of healing since pre historic times. Thousands of years ago siddar Thirumoolar defined medicine and wrote on a palm leaf manuscript in his 8000 verses as follows:



மறுப்பதுடல் நோய் மருந்தெனல் சாலும்
மறுப்பதுள நோய் மருந்தெனல் சாலும்
மறுப்பதினி நோய் வாராதிருப்ப
மறுப்பது சாவை மருந்தென லாமே.

-திருமூலர் 8000

**"To cure diseases of the physical body is medicine**
**To cure diseases of the mind is medicine**
**To prevent the onslaught of diseases is medicine**
**To conquer death is medicine"**

-Thirumoolar- 8000

During the Palaeolithic and neo-lithic ages, when people were eating elsewhere raw flesh in caves, Thirumular who ate tasty nutritious vegetarian yogic diet according to siva yoga Siddhantham speaks about medicine treating diseases not only of the physical but also of the mind. This is a holistic approach. So yoga should be defined as "the holistic scientific art of perfect god and truth union."



Yoga is derived from the root **"YUJ"** which means to unite and the word "**YOKE"** came from the same root. The "**YOKE"** unites and joins a pair of oxen for ploughing and transport.

The most ancient Tamil Dravidian, yoga civilisation of India has yielded archaeological remains with wheels and drainage etc. Indicating that in those prehistoric times yoga, agriculture, transport, etc, were well developed in India. The home land of yoga.

There are thousands of traditions of yoga in the world today. The most ancient tradition is Siva yoga Siddhantham. It started with yogi Siva (Shivanath) teaching Kriya Kundalini Pranayam, the breathing techniques to Parvathi devi in the Amarnath Himalayas, Kashmir, India.

At Chidambaram the most important Saivite shrine, Nataraja the dancing Siva and lord of all the continents and the universe (Parameshwara), exhibits 108 advanced dancing asanas or poses. This marks the beginning of Hatha Yogam. "Ha" indicates pin gala nadi and "tha" represents ida nadi. When one attains Samadhi, the breathless state of communion with god, the Kundalini shakthi flowing in the ida and pingala nadis unites in yogic union and flows through the Chulumunai nadi. Kundalini shakthi in the mooladara chakra unites with lord siva (Siva-Natham, the divine sound) in the 1008 petal lotus. Then starts the thandava (divine dance) of siva and Kali. Let us all practise yoga ans dance in joy and excellent health!

In siva yoga Siddhantham everything is sacred **"FIVE"** There are five bodies five senses, sense elements and sense organs. Five syllables in the Ma-mantra **"Na Ma Si Va Ya"**

Five elements when the periodic table of modern chemistry talks about over 90 elements. There cannot be a contradiction. All the elements in the periodic table can be classified into five major


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

groups:

1 **Earth** (solid) (Uruvam=form)
2 **Water** (liquid) (Aruvam or formless)
3 **Gas** or air (Aruvam=formless)
4 **Fire** (neruppu) (luminous gas) (aruvam -uruvaam or formless form)
5 **Akasam** or sky or ether or energy or shakthi

One of the great goals of yoga is cleansing. Cleanliness is next to godliness. All the five elements can be used to clean the five bodies. How?

In yoga Siddhantham the physical body is called Annamaya Uruvam. Annam means food. It is called the food body. Food can be used to clean the physical body. By taking tasty (six tastes) yogic nutritious vegetarian food (not junk food) and herbal laxatives and Kriya Hatha yoga with asanas, mudrai and banda, the physical sbody can be cleansed of all toxins and tension which is the root cause of disease or rogam. Water can be used externally (bath) and internally to clean the physical body.


Yogi Ram Sunthar with his Guru Yogi S.A.A. Ramaiah

Thus started the yogic practises of taking a dip in the scared rivers of India including the Ganges, whose waters in the Himalayan region does not putrefy even after years of storage. The ritual of baptism came from India. The best way to cleanse with air is Pranayam which is defined as the scientific art of mastering the breath. Hundreds of pranayama have been developed by the siddhas. The most important is the Kriya Kundalini pranayam which is also called the nadi suddi pranayam.
The word nadi also refers to the narambu nadis or nerves of which there are billions in the human body. The most important nerves or nadis in the body are 72000. By practising pranayam, pranic energy flows through the nerves or nadis and cleanses them like an iron key glittering like silver when used daily and not rusting.
Practise pranayam daily, there are different ways of cleansing the body with fire. One of them is Kriya Jnayiru Vanakkam or the science of sun worship
Finally by practising five fold path of Babaji's Kriya Yoga with asanas sspranayam dhyanam (meditation) mantra and bhakthi, all the five bodies are bathed and cleansed by Akasam or cosmic energy leading to the descent of divine siva consciousness into all the five bodies which become alayams or shrines of immortality called Soruba Samadhi in yoga.



**The first step is Kriya Hatha yoga:** The siddhas talked about 8.4million asanas of which the most important ones are 17. Author practised for over 12-years before teaching to others. Yoga is the basis of all physical education activities. One can be successful in all sporting activities competitive and recreational by making yoga the basis of the same. Through yoga alone one can have integrated development of the human body in a holistic way dealing with the body as a whole all the five bodies and accepting all systems of healing modern and ancient.

What is physical education?, it is not only playing games but educating oneself physically. Yoga is an ideal system of physical education. It develops all organs and parts of the human body and restores the range of motion (ROM) in the different joints, badly lost by using furnitures in the name of civilisation. Let yoga blend with all the activities of daily living.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A number of advanced asanas are published to indicate the possible ROM which corrects the figures given in modern text books of kinesiology and physical therapy. These techniques have been practised in India for thousands of years without dislocation and injury. Go slow in practising them. Attending a yoga class is more important than reading a ton of books on yoga.

Babaji's yoga is called Kriya yoga consisting of practical yogic techniques. Some have stated that the word Kriya comes from the Kriya of Pathanjali's Raja yoga sutras. Once Babaji explained the word Kriya yoga comes from the Tamil verse of Eddukkudi Ramayana Valmiki.

**Ramayana Valmiki's sutras of wisdom verse—3**

அறிந்துகொள்ளு பூரகமே சரியை மார்க்கம்
அடங்குகின்ற கும்பகமே கிரியை மார்க்கம்
பிரிந்துவரும் ரேசகமே யோக மார்க்கம்
பிசகாமல் நின்றதுவே ஞான மார்க்கம்

Five senses of action. Five basic elements (panchcha-bhutas), Five angas (folds or steps in Panjanga Kriya Yoga). In ancient India the Tamil 18-yoga siddhas or masters of yoga had developed 64-sciences and arts of which the corner stone was yoga with all other 63-sciences and arts (which includes all the modern sciences). Complementing it. This includes: Rasanayam (Chemistry) and Rasavadham (Alchemy of Kaya Kalpam and Immortality).

## Babaji's Kriya Vaasi (Prana) Yoga

One of the meanings for the word "VAASI" is breath. Vaasi Yogam is therefore, in yogic terms Pranayama or the scientific art of mastering the breath. Breath is life. One can live without food or water for days but without breath one cannot live even a few minutes. Pranayama is the most important way of increasing oxygen in the system, especially with today's sedentary life style it can be easily practiced anywhere . The Siddhas developed breathing exercises to energize the system, to calm the mind for meditation by regulating the prana (life force) and to activate the Kundalini energy.

Prana or life energy is also known as Chi by the Chinese, Mana by the Polynesians, Orendo by the Amerindians and Od by the ancient Germans. Like electricity, Prana travels along pathways called nadis in the subtle or light body and is present in every cell of our body. Modern scientists are only just beginning to understand the different forms of energy within the microcosm and studies by a German researcher Dr Popp (1984) have demonstrated the presence of Bio-photon energy at a cellular level. Dr Popp's study was particularly aimed at showing how a high raw diet which is packed full of life force can change energy emissions at a cellular level thus giving a scientific slant to the saying "You are what you eat". A good supply of Pranic energy from both food and breath is therefore necessary to maintain a healthy life-style.

The great Siddha Roma Rishi in his works recorded that people were living to at least a hundred years of age . He also observed that these people were breathing 21,600 times daily– this is what the third and forth lines of the verse say. If 21,600 is divided by 24 then again by 60 it gives a respiration of 15 per minute. These centenarians were breathing at a rate of 15 respirations a minute which is very close to the figure of 18 respirations a minute which today is considered a good rate of breathing by modern medical standards.

"ஓம் என்ற கெட்ட புத்தி மாணா கேளே!
உலகத்தில் மானிடர்க்காம் ஆண்டு நூறே:
ஆம் என்றே இருபத்தோ ர் ஆயி ரத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறு நூறு சுவாசமல்லோ ஒரு நா ளைக்குப்
போம் என்று போனதனால் நான் கு றைந்து
போச்சு அது போ காவிட்டால் போவதில்லை:
தாமொன்று நினைக்கையிலே தெய்வ ம் ஒன்று
தான் நினைந்த தன்மையல்லோ விதிகள் தாமே"!

- ரோம ரிஷி ஞானம், 13ம் செய்யுள்.

Om entra ketta buddhi maana keley
Ulakathil manidarkkam aandu nurey
Aam entray irubathor aayirathodu
Arunuru suvasamello oru nalaikku
Pom entru ponathinal nal kurainthu
Pochuthu atu pokaviddal povathilai
Tham ontru nenaikkayile theivam ontru
Than ninaintha thanmai allo vithigal thame........

**Romarishi song of wisdom verse no.....13**

If a person breathes at the rate of 15 respirations per minute, his span of life is 100 years. As revealed by Babaji, the direct disciple of Agathiyar, the law of inverse proportion applies to the rate of breathing. It means: "Greater the rate of breathing smaller the span of life; Lesser the rate of breathing greater the span of life" Let us apply this mathematically. If the rate of breathing is 5 respirations per minute then the span of life should be 300 years. This is how Siddhas lived for hundreds of years. Then in the fifth and sixth lines Sage Roma says :

**"If it goes it goes; If it does not go it will not go."**

That is to say, if the respiration is 1 then the span of life is 1500 years. If a Yogi attains Samadhi, the breathless state of communion with God he will not die. This is called the state of physical immortality or soruba Samadhi in Tamil Siva Yoga Siddantham.

One must learn to breath slowly and deeply in order to reduce the rate of breathing from 18 breaths/minute to 15 breaths/minute to live a long and healthy life. To show one should breath 21,600 times per day, the siddar Thirumoolar adviced a construction of the kopurama in Chidamparam Nadarajar temple (Thillai) with 21,600 tiles. If one breaths 21,600 times per day ones 72,000 major nadis (psychic channels) will be purified. To show this 72000 nails used in the construction of this kopuram.

Proper breathing teaches one how to re-charge the body and to control the mental state by regulating the prana (life-force).

ஆநனவையவழெ (னாலயயெஅ)
Is defined as the scientific art of mastering the mind (manam), the third body of human existence. It is a vast science consisting of a series of techniques dealing with the different layers of the mind. Siddhas were adepts in this field far in advance of modem psychology and psychiatry. To master the mind first one has to clean it. To vacuum clean the mind the Serpent Siddha thousands of years back recorded on palm leaves or edus the following:--

**" ... summa irunthu Paraparam chairinthom .... "**
**--(Song of the Serpent Siddha. Verse No. 122) 4**

It means "Be still and reach God." The prophets of the Old Testament picked this up and said



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"Be still and know that I am God."** (Holy Bible, Pss. 46: 10)

TECHNIQUE:--Sit in a very comfortable position. "Greater the comfort more successful the meditation," says Patanjali in Sadhana Padam, verse #46. (Baba 1979; Vivekananda 1973) Close your eyes and be still. Dissociate from everything that comes into the mind.

**Babaji's Kriya Dhyanam Yoga (meditation)**

**Dhyanam:** means meditation. **Mastering the mind through various Dhyanam (meditation) techniques.** After completing the pranayama one should start with meditation. Without opening the eyes to keep the energy in. There are many forms of meditations but the most important one is the mind cleansing (summay-iru) means stay still, in any comfortable position. Cross your arms on your chest in sarppa (serphant) or Kundalini and Jnana or chin mudras



**Left index finger** must touch the middle of the left thumb, forming a square shape, called Jnana mudrai or chin mudrai, other three fingers on the left hand must be straight and stretched.

**Right index finger** should touch the tip of the right thumb, and form a round shape called sarppa (serphant) mudrai or Kundalini mudrai, other three fingers on the right hand should be straight and stretched Cross both arms on the chest only the three fingers (middle, ring and pinkie finger) on each hand must be visible to others. Thumbs and index fingers are hidden between the chest and arms.
Close your eyes holding this Mudrai and meditate. Do not allow any thoughts to come in your mind. This is called cleansing the mind or vacuum cleaning the mind. At the beginning thoughts will enter your mind. Try and disassociate with them. At the beginning you may find it difficult to concentrate but practice will make it perfect. It may take weeks, months or years to master this technique, but without mastering this technique one cannot advance further in any meditation. Yogi Siddhartha mastered this technique and attained NIRVANA and became Yogi Gowthama Buddha. This technique must be mastered before attempting any other techniques in meditation. Other techniques are mentioned in vol-2.

By practicing yoga one goes beyond human consciousness to super consciousness. There are seven levels of super consciousness. Corresponding to these seven levels there are seven chakras or lotuses in the vital body.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் தமிழ்

தமிழருவி த. சிவகுமாரன்

தமிழ் காப்பியப் போக்கில் எத்தனையோ எழில் மிக்க புலவர்களை நாம் கண்டு வந்துள்ளோம். ஒவ்வொருவரும் தமது தனித்துவ ஆற்றல்களால் தமிழை வளப்படுத்திச் சென்றுள்ளனர். காப்பியம் பாடியவர்களும், தனிப்பாடல்களாகப் பாடியவர்களும் இதற்குள் அடங்குவர்.

ஆனால் சமயம் சார்ந்து நூல் படைத்தவர்களுக்கு தனியே மொழி சார்ந்து நூல் படைத்தவர்களுக்கு உள்ள சுதந்திரம் இல்லை. ஏனெனில் சமயக் கட்டுப்பாடுகள் அதற்குக் காரணம். ஆனால் அதனுள்ளும் சிறப்பாக சமய எல்லையை மீறாமலும் தமிழின் எழில் குறையாமலும் காவியம் பாடியவர்கள் வெகு சிலர்தான். அவர்களுள் தலையாயவர் சேக்கிழார் பெருமான்.

"பக்திக் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியவர்" எனப் பெயர் பெற்றாலும் அவர் தமிழால் தான் அப்பெயரும் பெருமையும் வந்தடைந்தது. சைவத்தின் எல்லையைக் கடவாமலும் அதே வேளையில் லௌகீகக் காவியங்கள் பாடிய பலவர்களைப் போல் தமிழின் இலக்கியச் சுவை குறையாமலும் பாடிய ஒப்பற்ற பெரும் புலவர் சேக்கிழார்.

ஒரு சொல், ஒரு தொடர், இரண்டு அடிகள் நான்கு வரிகள் என அவரது தமிழ் நர்த்தனம் புரியும், அழகு கொஞ்சும். அது சேக்கிழார்க்கே கை வந்த கலை.

சுந்தரரும் பரவையாரும் திருவாரூர் திருத்தலத்தின் நிருத்த மண்டபத்தில் சந்தித்த போது இருவர் கண்களும் கருத்துக்களும் கலந்த காட்சி அற்புதமானது.

வெறும் இலக்கியமாகப் படைக்கும் ஒரு புலவனுக்கு அருமையான வர்ணணைக்குரிய இடம். தலைவனும் தலைவியும் சந்திக்கும் அந்தக் காட்சி எவ்வளவு அற்புதமாக பாடவல்ல வளமுடையது. சேக்கிழார் பாடுகிறார். எந்த ஒரு புலவனுக்கும் இணை குறையாது பாடுகிறார்.

ஆனால் பக்திச் சுவையோடு இச் சந்திப்பை பாடுகிறார். இப்பாடல்களில் என்ன விசேடம் என்றால், சுந்தரரும், பரவையும் சிந்திக்கும் எந்த ஒப்புவமைப் பொருள்களும் பூமியைச் சேர்ந்த வையல்ல, தெய்வங்களும் தேவலோகப் பொருட்களுமேதான். அதை ஒரு சக்தியாகப் பயன்படுத்தி அழகிய அடுக்கான எடுப்பான சொற்களில் அச் சந்திப்பை பாடிச் சிறப்பித்து விடுகிறார்.

சுந்தரர் நினைக்கிறார்:

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ, புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் பூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்று அதிசயித்தார்"

இப்போது பரவையார் எண்ணுகிறார்:

"முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ, பெருகொளியில்
தன்னேரில் மாரனோ? தார் மார்பின் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே என் மனந்திரித்த இவன் யாரோ என நினைந்தார்.

இருவருமே இது சிவனருளால்தான் என எண்ணச் செய்வதன் மூலம் பக்திச் சுவை கடவாமல் சேக்கிழார் தமிழ் துள்ளி விளையாடுவதை நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு சூழலில் ஆண்களின் இயல்பான ஆவலை "அதிசயித்தார்" என்ற சொல்லாலும் பெண்களின் அடக்கத்தை "நினைந்தார்" என்ற சொல்லாலும் குறிப்பாக உணர்த்தும் சேக்கிழார் தமிழ் நினைத்து மகிழத்தக்கது.

இன்னோர் இடம், இனிக்கும் தமிழால், சேக்கிழார் தமிழால் எழிலுற்றுத் திகழ்கிறது. சம்பந்தப்பெருமானை பாண்டிமாதேவியின் விருப்பத்தின் பேரில் மதிமந்திரி குலச் சிறையார் அரண்மனைக்கு அழைத்து வருகிறார்.

பிள்ளமைத் தோற்றம், பலறாவாயரின் குழந்தமை கண்டு மனம் பதறும் மங்கையற்கசரியின் மனநிலை யுணர்ந்த குலச்சிறையார், குறிப்பால் உணர்ந்து சம்பந்தர் பெருமை, வருகையின் சிறப்பு, இனி அதனால் எதிர்காலத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்னும் நம்பிக்கையை எல்லாம் பாண்டிமாதேவிக்கு உணர்த்துவார் போன்று உலகிற்கு சேக்கிழார் தமிழ் அழகுறத் தெரிவிக்கின்றது.

சொல்லழகு, பொருளழகு ஓசையழகு, மதியூக மந்திரிக்குரிய புலமை நயம் எல்லாம் தெளிக்கும் அற்புதமான பாடலிது.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்"

ஓங்கி ஒலித்து பாடினால் உள்ளம் நிறைகின்ற பாடல் இந் சேக்கிழார் தமிழ்ப் பாடல். சைவநெறி "நன்றியுள்ள நெறி" என்ற சிறப்பு, நன்றி கொன்றார்க்கு உய்வில்லை" என்ற வள்ளுவன் கருத்தைப் பிரதிபலிப்பது போல் "வேந்தனும் உய்ந்து" என்ற தன்மை இவையெல்லாவற்றையும் பாடிப் போகிற போக்கில் அப்படியே அன்றித் தெளித்துச் செல்கிறார் தன் தமிழால் சேக்கிழார். இப்படிப் பல பலவற்றை தேடியறிந்து சேக்கிழார் தமிழின் அழகினை சுவைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16வது சைவ மாநாடு

சிறப்புற

எமது நல்வாழ்த்துக்கள்

என்றென்றும் இறைபணியில்

**கைலாயபதி வாகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணமும் சைவசித்தாந்தமும்

**பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்,**
தலைவர் இந்து நாகரிகத்துறை,
இணைப்பாளர்,
சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கை நெறி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## அறிமுகம்



சைவத்திருமுறை பன்னிரண்டினுள் பன்னிரண்டாம் திருமுறையாகத் திகழும் பெரியபுராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் அருள் மொழித்தேவர் எனப்படும். தெய்வச் சேக்கிழாரால் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய முதல் சைவத் தமிழ்க்காப்பியமாகும். செயற்கரிய செயல்கள் செய்து சைவம் வளர்த்த நாயன்மார் அனைவரும் "பெரியர்" எனப்படுவர். இதனடிப்படையில், "பெரியர் புராணம்" என்பதே உலகில் "பெரியபுராணம்" என்று வழங்கப்படுகிறது. இந் நூல் இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுக்கப்பட்டு நாலாயிரத்து இருநூற்றைம்பது மூன்று விருத்தப்பாக்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள பெரியபுராண பதிப்புக்களில் மேலும் முப்பத்து மூன்று பாடல்கள் இடைச்செருகலாக இடம் பெற்றுள்ளன என்றும் ஒரு கருத்துண்டு.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்டதேவர், சிவஞானபோததினுள் "செம்மலர் நோன்றாள்..." எனத் தொடங்கும் பன்னிரண்டாம் நூற்பாவை அமைப்பதற்கு பெரியபுராணம் கூறும் சிவனடியார்களின் சித்தாந்த சைவ வாழ்வியற் செய்திகளே அடிப்படையெனலாம். தில்லை நடராஜரே அடியெடுத்துக் கொடுத்து எழுந்த பெரியபுராணத்துள் பொதிந்துள்ள பதி, பசு, பாசம் எனும் சைவசித்தாந்த முப்பொருட் கொள்கை பற்றி எடுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அறிவுக் கொள்கை

சைவசித்தாந்தத்தில் அறிவுக் கொள்கைக்குத் தனிச்சிறப்புண்டு. "சிவசித்சத்தி" எனப்படும் இறைவனின் அறிவாற்றல், "ஆன்மசித்சத்தி" எனப்படும் ஆன்மாவின் அறிவாற்றல் எனும் இரண்டும் சைவசித்தாந்த மெய்யியலில் சிறப்பிடம் பெறுகின்றது. இங்கு சிவசித்சத்தி அநாதியாகவே மலமற்ற தாயும், தானே எல்லாவற்றையும் அறிவதாகவும் உள்ளது. ஆனால் ஆன்மசித்சத்தி அநாதியாகவே மலமுடையதாக இருக்கின்ற அதே நேரம், தானாகவே எதையும் அறியாது சிவன் அறிவிக்க அறிந்து அறிவதாகவுள்ளது. சிவசித்சத்தி அறிவிக்க ஆன்ம சித்சக்தி அறியும் நிலையைக் காணும் உபகாரம், காட்டும் உபகாரம் என்று சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இதனையே சேக்கிழார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சிவஞானம் பெற்ற அருட்திறத்தைக் கூறும் போது,

> *"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
> *பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்*
> *உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ் ஞானம்*
> *தவமுதல்வர் சம்பந்தர் தாம் ணணர்ந்தார் ரந்நிலையில்"*
>
> (திருஞா.பு.70)

என்று கூறுகின்றார். இதனையே அருணந்தி சிவாசாரியரும்,

> *"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை*
> *கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கில் ஞானம்"*

என்று மொழிவர். கேட்டல், சிந்தித்தல் எனும் இரண்டும் நூல் பற்றிய அறிவாகையால் அவை அபரஞானம் என்றும், தெளிதல், நிட்டை கூடுதல் எனும் இரண்டும் நூல்பற்றாத அறிவாகையால் பரஞானம் என்றும் கூறப்படும். உவமையிலாக் கலைஞானம் (அபரஞானம்), உணர்வரிய மெய்ஞ்ஞானம் (பரஞானம்) என்று சேக்கிழார் பிரித்துக்காட்டிய படியே அருணந்தி சிவாச்சாரியரும் பிரித்து விளக்கியுள்ளமை ஒப்பு நோக்கற்பாலதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசித்சத்தி அறிவிக்க ஆன்ம சித்சத்தி அறிந்து வருவதாயினும் ஆன்ம சித்சத்தியின் சுதந்திரமான செயல் நிலையினை சிவபெருமானே கண்ணப்பநாயனார் பற்றிக் கூறுவதாகச் சேக்கிழார்,

***"அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்"***

(கண். பு. 157)
என மொழிவர்.

அறிவுக் கொள்கையில் காட்சி அறிவு என்பது ஒருவகை அறிவாகும். காட்சியறிவு என்பது கண்களால் கண்டு பெறுகின்ற அறிவை மட்டும் மன்றி ஐந்து புலன்களால் பெறும் அறிவுத் தொகுதியின் முழுமையைக் குறிக்கும். இங்கு ஆன்ம சித்சக்தியையே மிகவும் நுட்பமாகச் சேக்கிழார் "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்று மொழிந்துள்ளாரெனலாம்.

## இறைக் கொள்கை

சைவசித்தாந்தம் நிலைநிறுத்தும் உலகு, உயிர், இறை என்ற முப்பொருட் கொள்கையினையே, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனும் பெரியபுராண முதல் அடி சுட்டி நிற்கின்றது. இத்தொடர் இறைவனின் அருவ நிலையைக் குறிக்கின்றது. பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அறிய முடியாதவன் என்று சைவ சித்தாந்தம் கூறும் இறைவனின் சொரூப நிலையினையும் இவ்வடிகளில் கண்டு இன்புறலாம். இறைவன் உணர்தற் அரியவனாயினும் ஆன்மாக்களுக்கு அருள் புரியும் பொருட்டு இறைவன் கொள்ளும் இறைநிலை தடத்தநிலை எனப்படுகின்றது. இறைவனின் இந்த உருவவடிவ நிலையை, "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" எனும் இரண்டாம் வரி காட்டி நிற்கின்றது. சைவசித்தாந்தம் இறைவன் (நடராஜர்), ஐந்தொழில் செய்பவராக கூறுகின்றது. இதுவே "அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" எனும் மூன்றாமடியில் நுட்பமாக் கூறப்படுள்ளது. "அம்பலதாடுவான்" என்ற நடராஜ வடிவத்துள் சைவசித்தாந்த மந்திரமாக விளங்கும் திருவைந்தெழுத்தும் உருக்கரந்து நிற்பதாகக் கருதலாம். நடராஜ வடிவம் திருவைந்தெழுத்து என்பது சைவசித்தாந்த நிலைப்பாடாகும். இதில் வரும் "அலகில் சோதியன்" என்பது இறைவனுடைய அருவுருவத் திருமேனியைக் குறிக்கின்றது. சைவசித்தாந்த முத்தி "திருவடிசேர் முத்தி" எனப்படும். இதுவே நான்காம் வரியில் "மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" என்று மொழியப்பட்டுள்ளது. இவ்வாறு இறைவனே அடியெடுத்துக் கொடுத்தாகக் கூறப்படும் எழுபத்திரண்டு எழுத்துக்களுடன் கூடிய முதற் பாடலிலேயே சைவசித்தாந்த இறைக்கொள்கை சிறப்பிடம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகவுள்ளது.

சைவசித்தாந்தம் சிவலிங்கத்தை அருவுவத் திருமேனியாகக் குறிப்பிடுகின்றது. இது பெரியபுராணத்தில் நுட்பமாக,

***"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்***
***நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"***
(சாக்.பு.8)

என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் பெரியபுராணத்தில் வரும், ***"தன்னை யார்க்கும் அறிவரியான்"(பெ.பு. 1), "இன்ன தன்மையன் என்றறியாச் சிவன்"(பெ. பு. 23), "அருமறைமுறையிட்டு இன்னும் அறிதற் கரியின் (பெ.பு 192), "யாவருகளும் அறிவரிய இறைவன்" (பெ.பு. 2928), "அரியனுக்கு அரியான்"(பெ.பு. 1414)*** ஆகிய தொடர்களும் பாச பசு ஞானங்களால் சிவப்பரம் பொருளைக் காண முடியாதென்பதை சுட்டி நிற்கின்றன. இறைவன் பேரருள் உடையவன். அவன் கருணை வடிவாக விளங்குகின்றான. இது பெரிய புராணத்தில் ,

***"கருணையே உருவமாகி" (பெ.பு.351)***
***"அருட் கருணைத் திருவாளன்" (பெ.பு 2915)***
***"கருணை திருவடிவான சீரணங்கு சிவபெருமான்" (பெ.பு 1970)***

முதலிய தொடர்களால் விளக்கப்பட்டுள்ளது.

## உயிர்க் கொள்கை

உயிர்கள் பல என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். இதனையே பெரிய புராண முதற்பாடலின் முதலடி "உலகெலாம்" என்று நுட்பமாகச் சுட்டிநிற்கின்றது. இதில் வரும் "உலகு" என்பது "உயிர்களையும் நுட்பமாகக் குறித்து நிற்கின்றது. "உயிர் அழியாது" என்ற சைவசித்தாந்த உயிர்க் கொள்கையை நிலை நிறுத்தப்படுவதற்கு உயிர் நீர்தவர்களை உயிர்ப்பிக்கும் அற்புதச் செயல்கள் பல பெரிய புராணக் கதைகளில் பதிவாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசக் கொள்கை

சைவசித்தாந்தத்தில் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றும் பாசமென்றும், மலமென்றும், தளையென்றும் வழங்கப்படும்.

பெரியபுராணத்தில் "பாசம்" "மலம்" என்ற சொற்கள் பயில் நிலையில் உள்ளன. பெரிய புராணத்தில் "பாசம்" என்ற சொல் இருவினைகளைச் சுட்டி நிற்கின்றது. மலங்கள் மூன்று என்பது, ***"சாருமல மூன்றும்"*** (கண்ண. பு. 154), ***"பாச மும்மலக்கல்"*** (திரு நா.பு.12), ***"மும்மை மாமலங்களற வீடருடில்லை"*** (தடுத் கொ. பு. 238), ***"மும்மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப"*** (சிறுத். பு. 3699) என்று வருதலாலறியலாம்.

## வினைக் கொள்கை

சைவசித்தாந்தத்தில் கன்மக்கொள்கை எனப்படும் வினைக்கொள்கை தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. சித்தாந்த சைவ வினைக் கொள்கையில் நல்வினை தீவினைகளைச் செய்கின்ற உயிர்கள், அவ்வுயிர்களால் செய்யப்படும் நல்வினை, தீவினைகள், இவ்விருவினைகளின் காரணமாக உயிர்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள், உயர்கள் செய்த நல்வினை, தீவினை என்பவற்றின் பயன்களை அவற்றை செய்த உயிர்களே நுகரச் செய்யும் படி செய்யும் இறைவன் எனும் நான்கு அம்சங்கள் உள்ளடக்கப்பபட்டுள்ளன. இந்த நான்கும் ஒன்றோடு ஒன்று இணைந்து காரணகாரிய அடிப்படையில் விளங்குவது சித்தாந்த சைவ நெறிக்கேயுரிய தனிச்சிறப்பாகும். இச் சிறப்பு சாக்கிய நாயனார் புராணத்தில்,

> ***"செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்***
> ***மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே***
> ***இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என***
> ***உய்வகையாற் பொருள் சிவன் என்றருளாலே உணர்ந்தறிந்தார்"***
> ***(சாக்.பு.5)***

என வருதலால் அறியலாம் இக்கருத்தின் மூலம் சைவசித்தாந்த இறை இருப்பும், வினை உண்மையும் சேக்கிழாரால் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக் கருத்தினையே பிற்காலத்தில் உமாபதிச் சிவாசாரியர்,

> ***"செய்வானும் செய்வினையும் சேர்பயனுஞ் சேர்ப்வானும்***
> ***உய்வா னுளனென் றுணர்"*** ***(திருவ.பு.53)***

என்று உறுதி செய்துள்ளார்.

பெரிய புராணத்தில் வரும்,

| | |
|---|---|
| ***"வினையிரண்டும் சாருமல மூன்றும்"*** | (கண். பு 154) |
| ***"இருவினைப்பாச மும்மலக்கல்"*** | (திருநாவுக். பு. 129) |
| ***"பாசமாம் வினைப்பற்றுப்பான்"*** | (தடு.பு 152) |
| ***"இருவினைப்பாசம்"*** | (திருநா.பு. 129) |
| ***"பழவினைப்பாசம்"*** | (திருநா.பு. 145) |

ஆகிய குறிப்புகள், நல்வினை, தீவினை, மும்மலங்கள் பற்றிய சைவசித்தாந்த கருத்தியலைச் சுட்டி நிற்கின்றன

இங்கு பாசம் என்ற சொல்லால் இருவினைகள் சுட்டப்பட்டுள்ளன உயிர்கள் பல பிறவிகள் எடுப்பதற்கு வினையே காரணம் என்பதால் அதனையே சேக்கிழார் பாசம் என்கிறார்.

## மாயைக் கொள்கை

உலகத்துச் சடப்பொருள்களையும் உயிர்கள் சார்ந்துள்ள அனைத்து உடல்களையும் இறைவன் மாயையிலிருந்து தோற்றுவித்து ஒடுக்குகிறான் என்ற சைவசித்தாந்தக் கருத்து பெரியபுராணத்தில்,

> ***"மாயை யாக்கை" ( சண்.பு 4.53)***
> ***"மாயப் பொய்தகையும் உரு"*** (திருஞா. 4.32)

என்று பதிவாகியுள்ளது.

## முத்திக் கொள்கை

சிவனின் திருவடியைச் சேர்ந்து பேரின்பம் துய்த்தல் சைவசித்தாந்த முத்திக் கொள்கையின் தனிச்சிறப்பாகும். இத்தகைய திருவடி சேர் முத்தியைச் சேக்கிழார்,

> ***"நண்ணரிய சிவாநந்த ஞான வடி வேயாகி***
> ***அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அர (சு) அமர்ந்திருந்தார்"***
> (திரு. நா.பு.427) என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்"*** (காரை பு.60)
***"வீடு தரும் பர மன்கழல்"*** ***(தடு.பு.154)*** என்றும் கூறுகின்றார்.

உயிரானது "பூதம் முதல் நாதம்" வரையுள்ள முப்பத்தாறு தத்துவங்களைப் படிப்படியாக் கடந்து நிற்கும் நிலையில் சிவசக்தி ஆன்மாவில் பதியும் என்பது சைவசித்தாந்த முத்திப்படி நிலையின் தனிச்சிறப்பாகவுள்ளது. இதனைச் சேக்கிழார், கண்ணப்பநாயனார், காளத்திமலைமீது ஏறிச்சென்ற காட்சியைக் கூறுமிடத்து,

***"பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி***
***ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல"***
(கண்ண.பு .103)

என்று மொழிதலாலறியலாம். மெய்கண்ட தேவரும் சக்தியை "ஆணை" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றமை ஒப்பு நோக்கத்தக்கது.

## இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்

ஓர் உயிர் முத்திபெறப் பக்குமடையும் நிலையில் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்ற மூன்று நிலைகளும் ஒன்றோடொன்று இணைந்து நின்று செயற்படும் சிறப்பு சைவசித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் கூன்பாண்டியனுக்குத் திருநீறு பூசியதும் முன்னை வினை நீங்கி இருவினை ஒப்பு உடையவனாய் இறைவனை அறியும் தன்மையைப் பெற்றான் என்பது பெரிய புராணத்தில்,

***"தென்னவன் மாறன் தானும் சிரபுரத் தலைவர் தீண்டிப்***
***பொன்னவில் கொன்றை யார்தம் திருநீறு பூசப்பெற்று***
***முன்னைவல் வினையும் நீங்க முதல்வனை அறியும் தன்மை***
***துன்னினான் வினைகள் ஒத்து துலையென நிற்ற லாலே"***
(திருஞா.பு. 819)

என்று வருதலாலறியலாம், இப்பாடலில் வரும் "வினைகள் ஒத்து துலையெனநிற்றல்" இருவினை ஒப்பையும், "முன்னைவல்வினையும் நீங்க" மலபரிபாதத்தையும் "முதல்வனை அறியும் தன்மை" சத்திநிபாதத்தையும் சுட்டிநிற்பதாகக் கொள்ளலாம்.

## முத்திக்குரிய வழிகள்

சைவசித்தாந்தத்தில் உயிர்கள் இறைவனின் திருவடியாகிய முத்திப் பேற்றினை அடைவதற்குரிய வழிகளாக குருலிங்க சங்க வழிபாடும், முத்தியடைவதற்குரிய சாதனங்களாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் சைவ நாற்பாதங்களும் கூறப்பட்டுள்ளன. பெரியபுராணம் குறிப்பிடும் நாயன்மார் அனைவரும் குரு லிங்க சங்கமம் எனப்படும் முத்திற வழிபாட்டில் ஒன்றை மேற்கொண்டு முத்திப்பேறு பெற்றனரெனலாம்.

### குருவழிபாட்டின் மூலம் முத்தி பெற்றவர்கள்.

சுந்தர மூர்த்தி நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருமூல நாயனார், குலச்சிறை நாயனார், அப்பூதியடிகள் நாயனார், மங்கையர்க்கரசியார் முதலிய பன்னிருவர் குருவழிபாடு செய்து முத்தி பெற்றவர்களாவர்.

### சிவலிங்க வழிபாட்டின் மூலம் முத்தி பெற்றவர்கள்

ஆனாய நாயனார், மூர்த்தி நாயனார், கண்ணப்ப நாயனார், சண்டேஸ்வர நாயனார், சாக்கிய நாயனார் முதலிய முப்பதின்மர் சிவலிங்க வழிபாட்டின் மூலம் முத்தி பெற்றவர்களாவர்.

### சங்கம வழிபாட்டின் மூலம் முத்தி பெற்றவர்கள்

சக்தி நாயனார், திருநீலகண்ட நாயனார், இளையான் குடிமாறநாயனார், சிறுத் தொண்டநாயனார், இயற்பகை நாயனார் காரைக்காலம்மையார் முதலிய பத்தொன்பதின்மர் சங்கம (அடியார்) வழிபாட்டின் மூலம் முத்தி பெற்றவர்களாவர். பெரியபுராணம் கூறும் குருலிங்க சங்கம வழிபாட்டின் சிறப்பை அடிப்படையாகக் கொண்டே சித்தாந்த சாத்திரங்களில் இந்த முத்திற வழிபாடும் பதிவாகியுள்ளது. இது உண்மை விளக்கத்தில் திருவதிகை மனவாசகம் கடந்தாரால்,

***"குருலிங்க வேடம் எனக் கூறில் இவை கொண்டார்***
***கரு வொன்றி நில்லார்கள் காண்"*** (உண்மை விளக்கம், 51)

என்று மொழியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தி சாதனங்கள்

சைவசித்தாந்தம், முத்தி சாதனங்களாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளை குறிப்பிடுகின்றது. இவற்றுள் சரியை முதலிய மூன்றும் ஞானத்திற்கு வழியென்றும் ஞானம் ஒன்றே முத்திக்கு வழி என்பதும் சைவசித்தாந்த நிலைப்பாடாகும். இதனை கிரியை, யோகம் செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்'' என்று சிவஞான சித்தியார் கூறும் சைவசித்தாந்த முத்திக்குரிய வழிகளான இந் நால் வகை நெறிகளையே சேக்கிழார்,

***"நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியை யெல்லாம்***
***மலர்ந்த மொழித்திரு மூலதேவர்"*** (திருமூல. பு. 28)

என்று கூறுகின்றார். இம்முத்தி சாதனங்களே சைவசித்தாந்த அறவாழ்வுக்கும் அடிப்படையாகவுள்ளது.

சைவசித்தாந்தம் கூறும் தொண்டு நெறியைச் சிறப்பிக்கும் பெரிய புராணத்துள் சேக்கிழார், சைவசித்தாந்தக் கருத்துக்களை உணர்வு பூர்வமாகவும் தெளிவாகவும் நாயன்மார்களது வாழ்வியலோடு இணைத்துக் கூறியிருப்பது சேக்கிழார் சைவசித்தாந்தத்திற்குச் செய்த மிகப் பெரிய தொண்டு எனலாம். சேக்கிழார் சைவசித்தாந்தத்திற்குச் செய்த பெரும் தொண்டின் காரணமாகவே எட்டு சித்தாந்த சாத்திரங்களையும் அருளிய சைவசிகாமணி எனப்படும் உமாபதி சிவாசாரியர் என்பவர் "சேக்கிழார் நாயனார் புராணம்" , "திருத்தொண்டர் புராணசாரம்" எனும் நூல்களை இயற்றியுள்ளார். இந்நூல்களில் இவர் சேக்கிழார் திருவடிகளைத் துதித்திருப்பதோடு சைவசித்தாந்த சந்தானாச்சாரியர் மரபில் சேக்கிழார் அவதரித்தவர் என்பவதையும் கூறியுள்ளார். பெரியபுராணம் கூறும் சிவனடியார்கள் சித்தாந்த சைவச்சான்றோர், என்பதானாலேயே சிவஞான முனிவரும் "திருத்தொண்டர் திருநாமக் கோவை" எனும் நூலை அருளியுள்ளார். இவ்வாறாக உமாபதி சிவாச்சாரியர், சிவஞான முனிவர் என்போரால் பெருமைப்படுத்தப்பட்டுள்ள சிறப்பும் பெரிய புராணத்திற்குண்டு.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது சைவசித்தாந்த மெய்யியல் பற்றிய அறிவுக்கும், சித்தாந்த வாழ்வியலுக்கும் ஒரு கருவூலமாகப் பெரியபுராணம் விளங்குகின்றதெனலாம்.

**துணை நூல்கள்:-**

குமரகுருபரன் பிள்ளை, T.M., (ப.ஆ), ***சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம்***, பன்னிருதிருமுறைப் பதிப்புநிதி வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், 1964.

இராசமாணிக்கனார், மா., ***பெரியபுராண ஆராய்ச்சி***, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1960.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JR Print

www.jrprint.com

- experience of the power -

www.jrprint.com

30 YEARS EXPERIENCE IN THE PRINTING INDUSTRY

QUICK, QUALITY & AFFORDABLE SERVICE

- Arangetram Books
- Cake Boxes
- Bill Books, Invoices
- Leaflets
- Rich Cakes & Boxes
- Raffle Tickets
- Rubber Stamps
- Lamination
- Translation Services
- Birthday Cards
- Letter Heads
- Wedding Cards
- Short Eat Boxes
- Photocopying
- Compliment Slips
- Short eat Bags
- Gold Blocking
- Visiting Cards
- Colour Printing
- Invitation Cards
- Souvenirs & Invoices

Fax: 020 8521 3967
Mob: 07939 998 730
E-mail: jrprintuk@gmail.com

Contact for FREE Quotation

**0208 503 6643**

59 - 61, Hoe Street, Walthamstow, London E17 4QR

# JR Digitals

www.jrdigitals.com

- experience of the power -

www.jrdigitals.com

30 YEARS EXPERIENCE IN THE PRINTING INDUSTRY

QUICK, QUALITY & AFFORDABLE SERVICE

## High Quality Offset Printing

Flyers Leaflets Business Cards Wedding Invitations Books Magazines Souvenirs Receipt Books Labels Arangetram Books Cake Boxes & Many More...

## SignBoard Solutions

Vinyl Cut Signs | 3D Signs | LED Signs | Digital Boards

## Vehicle Wrapping & Signs

## Wide Format Printing

Full Colour
Any Size
at very lower rate

PVC Banner Printing + Frame

ANY WORK ANY SIZE

jrprintuk

ALL AT AN UNBELIEVABLE PRICE UNDER ONE ROOF

Fax: 020 8521 3967
Mob: 07939 998 730
E-mail: jrprintuk@gmail.com

Contact for FREE Quotation

**0208 503 6643**

59 - 61, Hoe Street, Walthamstow, London E17 4QR


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Pure Vegetarian

*Explore the Indian cuisine at*

## Taste of India

Specialised in Indian Cuisine

293-295, High Street North, Manor Park, London E12 6SL
Tel: 0208 472 9779 Website: www.restauranttasteofindia.co.uk
(Near Eastham Mahalakshmi Temple)





*Endless varieties of authentic Indian dishes to feast your taste buds.*

*Great ambiance that gives you the comfort and casual feel.*



- 340, High Street North, Manor Park, London E126PH. Tel. 0208 471 2122
- 87, Longbridge Road, Barking, Essex IG11 8TB. Tel. 0208 591 9291
- 41, Kumbeswarar South Street, Kumbakonam, 612001 Tamilnadu, INDIA. Tel. (0435) 243 1314


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Ragu Travels Ltd Ragu Estate Agents





*World Wide Travel Agent*

Air Tickets,
Transportation,
Travel Insurance
Visa Arrangements for India

R

Sale,
Lettings,
Mortgages
Constructions
Property Managment

**நம்பிக்கையான நாணயமான மற்றும்**
**தரமான சேவைக்கு இன்றே நாடுங்கள்**

**Ragu Travels on : 020 8586 2323 | 020 3490 9187 | Fax: 020 8490 9187**
**Fax : 020 3490 9187**

258 High Street North, Manor Park, London E12 6SB
Email: ragu_travel@hotmail.com | Web: www.ragutravel.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

member of
LANDMARK WHOLESALE
LONDON CHAMBER of COMMERCE AND INDUSTRY

THE FRIEND OF THE INDEPENDENT RETAILER
ABRA WHOLESALE LTD
ESTABLISHED 2003

THE SUNDAY TIMES FAST TRACK 100 2014 Virgin
THE SUNDAY TIMES INTERNATIONAL TRACK 200 2014 HSBC

# ABRA WHOLESALE LTD

## LONDON'S LEADING WHOLESALER & EXPORTER

**ALCOHOL • TOBACCO • GROCERY • CONFECTIONERY • SOFT DRINKS • TOILETRIES • HOUSEHOLD**

CHIVAS REGAL 12 · Budweiser · SMIRNOFF · pepsi · Coca-Cola
JACK DANIEL'S · BOOST · COURVOISIER · Lucozade · evian
McVITIE'S · Nestlé · Cadbury · Domestos · Kellogg's
Dove · AIR WICK · WRIGLEY'S · DURACELL · Dettol
BELL'S · PRINCES · HUGGIES · LISTERINE · Mars

# OPEN 7 DAYS A WEEK

**MON-FRI** 7.00AM - 8.00PM | **SAT** 7.00AM - 5.00PM
**SUN & BANK HOLIDAYS** 9.00AM - 4.00PM

5 PICKETTS LOCK LANE
EDMONTON
LONDON N9 0AS

**tel.:** +44 20 8887 9303
**fax.:** +44 20 8887 9303
**e-mail:** sales@abrawholesales.co.uk

www.abrawholesales.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Clayhall Osteopathic Health Clinic



**Are You in Pain ?**

**Headaches** | **Frozen shoulders** | **Arthritis**
**Back pain** | **Lower limb pains** | **Neck pain**
**Disc problems** | **Whiplash injuries** | **Tennis elbow**

Ms. S. Muralitharan BSc (Hons) Ost.Med
&
Associates
***REGISTERED OSTEOPATHS***
*(Practitioners available by appointment)*

NHS
REFERRALS ACCEPTED

**SPINAL HEALTH CHECK 25 % OFF**
**(Please Quote : OSTEO17)**

420 Clayhall Avenue, Ilford, IG5 0SH

020 8220 4254

www.clayhallosteopaths.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton | THISTLE HOTEL London Heathrow | Holiday Inn

உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனலக்ஷ்மி ஜூவலர்ஸ்

# THANALAKSHME

*Jewellers*

வைர தாலிக்கொடி முதல் மங்கையர் மனம்
கவர்ந்த தங்க நகைகளுக்கு



முறைப்படி பொன்னுருக்கி வைரத்
தாலிக்கொடி, மின்னல்கொடி
என்பன நியாயமான விலையில்
செய்து தரப்படும்.

**82 High Street**
**Barkingside**
**Essex IG6 2DJ**
**Tel: 020 8551 1153**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Lexcel
Practice Management Standard
Law Society Accredited

# S. SATHA & Co
## SOLICITORS
Estd. 1997

www.satha.co.uk

We are authorised by the Legal Service Commission to undertake the following work under the Legal Aid Scheme.



**Police Station Representation**
**Criminal Defence Services in Court**
**Prison Law**
**Asylum and Immigration Law**
**Employment Law**
**And other areas...**

The Law Society Accredited Criminal Litigation | The Law Society Accredited Immigration Law | The Law Society Accredited Family Law Advanced | Community Legal Service | Criminal Defence Service

## In an emergency call - 07956 288 671

This firm also undertakes privately funded work in areas of law as listed above which is in addition to the following areas:

**Commercial & Residential Conveyancing**
**Civil Litigation | Landlord & Tenant | Wills & Probate**

design : printwebonline.co.uk

**S. Satha & Co. Solicitors**
376-378 High Street North
Manor Park, London E12 6PH
Tel 020 8471 9484 DX 133012 UPTON PARK 2
Fax 020 8471 9485 Email info@satha.co.uk

*Expert Legal Services*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Sales
- Lettings
- Mortgages
- Maintenance

'Select your next move with us'



**Guaranteed Rent throughout London**

**In-house property maintenance team**

# 0208 470 1500

**288 High Street North**
**London, E12 6SA**

**www.select.gb.com**

London Landlord Accreditation Scheme

OFT Approved code

Gas Safe Register

NAPIT

ELECSA

rightmove.co.uk

Zoopla.co.uk
Your advantage in property

NICEIC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரமான தங்கத்துக்கு சிறந்த இடம்

# லட்சுமி ஜீவல்ர்ஸ்

276 High Street North

London E12 6SA

UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3440

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Param & Company

## Chartered Certified Accountants

### For Efficient Professional Service in

- Preparation of Accounts
- Auditing
- Taxation
- Corporate Finance
- Personal Financial Planning
- Business Acquisition
- VAT
- PAYE



**Tel: 020 8571 9594**

**Fax: 020 8571 9094**

First Floor, 44-50 The Broadway, Southall, Middlesex UB1 1QB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

## SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5 Chapel Road, Ealing, London, W13 9AE, UK Tel: 0044 208 810 0835 Fax: 0044 208 840 0485
Email: info@ammanealing.com Web: www.ammanealing.com


கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் ¼ பகுதி ஈழத்தில் அநாதரவாகும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - பதுளை | 8 | அம்மன் மகளீர் இல்லம் - அம்பாறை |
| 2 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - திருப்பழுகாமம் | 9 | சிவன் அருள் இல்லம் - மன்னார் |
| 3 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - செட்டிப்பாளையம் | 10 | சிறுவர் இல்லம் - ஊர்காவற்றுறை |
| 4 | திலகவதியார் இல்லம் - மட்டக்களப்பு | 11 | இந்து வித்தியாபிருத்திச் சங்கம் - யாழ்ப்பாணம் |
| 5 | யோகர் சுவாமி சிறுவர் இல்லம் - மட்டக்களப்பு | 12 | அன்பகம் - வவுனியா |
| 6 | விபுலானந்தர் இல்லம் - மட்டக்களப்பு | 13 | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் - வவுனியா |
| 7 | விபுலானந்தர் இல்லம் - அக்கரைப்பற்று | 14 | ஸ்ரீ சத்தியசாயி இல்லம் - வவுனியா |
| | | 15 | யோகசுவாமி சைவ மகளீர் இல்லம்- மட்டக்களப்பு |

மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்கள் பேருதவியினால் 500 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவவேண்டுமென விநயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த நிதியாண்டில் காக்கும் கரங்கள் திட்டத்திற்கு **£81,990.00** பவுண்களும் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்கு **£ 114,285.00** பவுண்களும் அனுப்பப்பட்டுள்ளன.

ஆலயம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை எமது ஆலயத்தினால் தாயகப்பணிக்கு **£1,624,315.55** பவுண்களும், 2012- சித்திரை முதல் **29,500.00** பவுண்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.























ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்!
அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!
அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம்.
அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!
அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்.!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Designed & Printed at JR Print, Tel : 0208 503 6643

# GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
# LONDON - UK













**SENSEI M. RAMATHAS**

TRAINED BY MICHAEL CALANDRA

**THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF**

## ISSHINRYU WORLD KARATE ASSOCIATION

**OKINAWA - JAPAN**

Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do

NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com

M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do

LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com

Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 பவுண் தங்கம் பரிசு*

SAGHANA JEWELLERS

ஷஹானாவின் 10 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு தங்கநகை சேமிப்புத்தில் இணைந்துகொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு 10 பவுண் தங்கம் வெல்வதற்கான அரிய சந்தர்ப்பம்

Wembley ஷஹானாவின் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பம்

இத்திட்டத்தில் இணைந்துகொள்ளும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுப்பொருட்களுடன் திட்டத்தின் முடிவில் தங்கச்சங்கிலி இலவசம்

"ஷஹானாவில சாரல் தூவல்லைங்க.... தங்கம் தூவுது..."

25.03.2015

10 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் விலைக்களிவு மற்றும் பரிசு பொருட்கள்

நன்றிகள்

10 வருடங்களாக எம்மோடு இணைந்திருந்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்

SAGHANA Jewellers

10th Years Anniversary Offer



facebook.com/saghanajewellers

Find us on: facebook

Wembley Branch - 11, Ealing Road, Wembley, London HA0 4AA. 020 8902 2030

East Ham Branch - 254, High Street North, East Ham, London E12 6SW. 020 8586 5861

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org